22. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல்.,	சார்புச் செயலாளர்
23. திரு. ஜி. அனிஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல்.,	சார்புச் செயலாளர்
24. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்ஸி., பி.எல்.,	சார்புச் செயலாளர்
25 திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ.,	சார்புச் செயலாளர்
26. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்.,	சார்புச் செயலாளர்
27. திரு. துரை சுந்தரராஜுலு, எம்.ஏ.,	தலைமை நிருபர்

28. திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., தலைமை நிருபர்

29. திரு. இரா. வெங்கடேசன், தலைமை நிருபர்
எம்.ஏ., எல்.எல்.பி., டி.காம்.,
ஜே.பி.ஆர்., டிஐஆர்பிஎம்.,

30. திரு. மு. ஆறுமுகப்பெருமாள், தலைமை நிருபர்
எம்.ஏ., பி.லிட்.,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1.	அண்ணாமலை, திரு. எஸ்.	.. ஆலந்தூர்
2.	அபரஞ்சி, திரு. பெ.	.. அரூர் (செ.வ.)
3.	அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ்.	.. மயிலாடுதுறை
4.	அப்பு நடேசன், திரு. இரா.	.. திருவட்டாறு
5.	அமர்நாத், திரு. ஓ.எஸ்.	.. மதுரை கிழக்கு
6.	அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு.	.. கன்னியாகுமரி
7.	அரங்கநாதன், திரு. ஆர். டி.	.. விருத்தாசலம்
8.	அரங்கநாயகம், டாக்டர் செ.	.. தொண்டாமுத்தூர்
9.	அர்ச்சுனன், திரு. க.	.. வீரபாண்டி
10.	அழகிரி, திரு. சு.	.. சிதம்பரம்
11.	அழகு திருநாவுக்கரசு, திரு.	.. ஒரத்தநாடு
12.	அறிவழகன், திரு. ஆ.	.. கிருஷ்ணராயபுரம் (செ. வ.)
13.	அன்பழகன், திரு. எஸ்.	.. நாமக்கல் (செ. வ.)
14.	ஆசைமணி, திரு. எஸ்.	.. குத்தாலம்
15.	ஆண்டி அம்பலம், திரு. எம்.	.. நத்தம்
16.	ஆண்டித் தேவர், திரு. எஸ்.	.. திருப்பரங்குன்றம்
17.	ஆரோக்கியசாமி, டாக்டர் ச.	.. திருச்சிராப்பள்ளி
18.	ஆறுமுகம், திரு. செ.	.. வானூர் (செ. வ.)
19.	ஆனந்தன், திரு. எம்.	.. உளுந்தூர்பேட்டை (செ. வ.)
20.	இந்திரகுமாரி, திருமதி இரா.	.. நாட்ராம்பள்ளி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

21. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ.	..	மேலூர்.
22. இராசாராமன், திரு. சோ.	..	பாபநாசம்
23. இராசாராம், திரு. க.	..	பனமரத்துப்பட்டி
24. இராதாகிருஷ்ணன், திரு. த. க.	..	திருமங்கலம்
25. இராமகிருஷ்ணன், டாக்டர் இ.	..	அச்சரப்பாக்கம் (செ. வ.)
26. இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர்.	..	திருவாடனை
27. இராமசுவாமி, திரு. சி.	..	சங்கராபுரம்
28. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர்.	..	கம்பம்
29. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர்.	..	சாத்தூர்
30. இராமச்சந்திரன், திரு. சு.	..	பண்ருட்டி
31. இராமச்சந்திரன், திரு. மா. சா. மா.	..	இளையாங்குடி
32. இராமதாஸ், திரு. எஸ். எஸ். ஆர்.	..	செஞ்சி
33. இராமநாதன், திரு. இராம.	..	கும்பகோணம்
34. இராம வீரப்பன், திரு.	..	காங்கேயம்
35. இராஜமன்னார், திரு. சு. சே.	..	ஒட்டப்பிடாரம் (செ. வ.)
36. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, திரு. கி.	..	திருத்தணி
37. இராஜேந்திரன், திரு. பி. வி.	..	வேதாரண்யம்
38. இல்தா பிரியகுமார், திருமதி	..	அரக்கோணம் (செ. வ.)
39. இளம்வழுதி, திரு.	..	எழும்பூர் (செ. வ.)
40. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி.	..	தாராபுரம் (செ. வ.)
41. ஈஸ்வரன், திரு. ஆர்.	..	வாசுதேவநல்லூர் (செ. வ.)
42. ஏகாம்பர ரெட்டி, திரு. எ.	..	பள்ளிப்பட்டு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

43. கண்ணப்பன், திரு. எஸ்.	..	திருப்பத்தூர்
44. கண்ணன், திரு. வே.	..	திருவண்ணாமலை
45. கந்தசாமி, திரு. கே.	..	தலைவாசல் (செ. வ.)
46. கருப்புசாமி, டாக்டர் எம்.	..	குன்னூர் (செ. வ.)
47. கலியபெருமாள், திரு. ப.	..	திருவையாறு
48. கலைச்செல்வி, திருமதி கே. எம்.	..	காட்பாடி
49. கவிநிலவு தர்மராஜ், திருமதி	..	மொடக்குறிச்சி
50. கற்பகம் இளங்கோ, திருமதி	..	காரைக்குடி
51. கனகவல்லி, திருமதி என்.	..	விளாத்திகுளம்
52. காஞ்சி பன்னீர்செல்வம், திரு.	..	உத்திரமேரூர்
53. காந்திராஜன், திரு. ச.	..	வேடசந்தூர்
54. காளன், திரு. கோ.	..	வில்லிவாக்கம்
55. காளிராஜன், டாக்டர் மு.	..	சமயநல்லூர் (செ. வ.)
56. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.	..	ஆயிரம்விளக்கு
57. கிருஷ்ணன், திரு. எஸ். எம்.	..	தாம்பரம்
58. கிருஷ்ணன், திரு. கு. ப.	..	ஸ்ரீரங்கம்
59. கிருஷ்ணன், திரு. சி.	..	ஓமலூர்
60. குப்பன், திரு. க.	..	திருவொற்றியூர்
61. குமரி அனந்தன், திரு.	..	சாத்தான்குளம்
62. குமாரதாஸ், டாக்டர் தே.	..	கிள்ளியூர்
63. குழந்தைவேலு, திரு. சி.	..	குளத்தூர் (செ. வ.)
64. கோடிமாரி, திரு. ஆர்.	..	நாகப்பட்டினம்
65. கோபாலகிருஷ்ணன், திரு. வே.	..	சங்கரநயினார்கோவில் (செ. வ.)
66. கோபால், டாக்டர் க.	..	நன்னிலம் (செ. வ.)

67. கோவிந்தராசு, திரு. மா.	..	ரிஷிவந்தியம்
68. சக்குபாய, திருமதி ரா.	..	கும்மிடிப்பூண்டி
69. சக்குபாய் தேவராஜ், திருமதி டி.	..	திருவள்ளூர்
70. சஞ்சய் ராமசாமி, திரு.	..	விருதுநகர்
71. சண்முகநாதன், திரு. எஸ்.	..	ஆலங்குடி
72. சண்முகம், திரு. எஸ். வி.	..	மதுரை மேற்கு
73. சத்தியமூர்த்தி, திரு. வ.	..	கடலாடி
74. சந்திரசேகர், திரு. வி. பி.	..	பொள்ளாச்சி
75. சம்பத், திரு. எ.	..	வாணியம்பாடி
76. சரஸ்வதி, திருமதி அ. தி.	..	சத்தியமங்கலம்
77. சரஸ்வதி, திருமதி ப.	..	கபிலர்மலை
78. சரோஜா, டாக்டர் வெ.	..	சங்கரி (செ.வ.)
79. சாத்தையா, திரு. தி.	..	இராஜபாளையம் (செ.வ.)
80. சாவித்திரி அம்மாள் திருமதி ஆர்.	..	முகையூர்
81. சிங்காரம், திரு. ஆர்.	..	பேராவூரணி
82 .சிங்காரம், திரு. கே.	..	மொரப்பூர்
83. சிங்கை கோவிந்தராசு, திரு.	..	சிங்காநல்லூர்
84. சியாமளா, திருமதி ரெ.	..	கோவில்பட்டி
85. சிவசுப்பிரமணியன், திரு. கு.	..	குறிஞ்சிப்பாடி
86. சிவபதி, திரு. என். ஆர்.	..	தொட்டியம்
87. சின்னசாமி, திரு. கா.	..	சேந்தமங்கலம் (ம. ப.)
88. சின்னசாமி, திரு. ம.	..	கரூர்
89. சின்னசாமி, திரு. வி. கே.	..	பவானிசாகர்
90. சின்னப்பன், திரு. கே. கே.	..	ஜெயங்கொண்டம்

91. சீனியம்மாள், டாக்டர் மு. .. அவினாசி (செ.வ.)

92. சீனிவாசன், திரு. ஆ .கு. .. பெரணமல்லூர்

93. சீனிவாசன், திரு. கு. .. மன்னார்குடி

94. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

95. சுந்தரசாமி, திரு. எம். .. கலசப்பாக்கம்

96. சுந்தரதாஸ், திரு. மா. .. விளவன்கோடு

97. சுந்தரம், திரு. எம். கே. .. தண்டராம்பட்டு

98. சுந்தரராஜ், டாக்டர் எஸ். .. பரமக்குடி (செ.வ.)

99. சுந்தரவேல், திரு. ஏ. கே. சி. .. திருப்பத்தூர்

100. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்

101. சுப்பிரமணியன், திரு. வ .மு. ... மானாமதுரை (செ.வ.)

102. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)

103. சுப்புரத்தினம், திரு. ஆ. .. பழனி (செ.வ.)

104. சுலோசனா, செல்வி எல். .. மேட்டுப்பாளையம்

105. சுவாமிநாதன், திரு. சி. .. புதுக்கோட்டை

106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. .. கோபிசெட்டி பாளையம்

107. செல்லக்குமார், டாக்டர் அ. .. அண்ணாநகர்

108. செல்லசாமி, திரு. ஏ. டி. .. ஒட்டன்சத்திரம்

109. செல்லதுரை, திரு. ஆ. .. திருச்செந்தூர்

110. செல்வகணபதி, திரு. டி. எம். .. திருச்செங்கோடு

111. செல்வராசன், திரு. அ. .. துறைமுகம்

112. செல்வராஜ், திரு. கே. .. கோயம்புத்தூர் மேற்கு

113. செழியன், திரு. தா. .. பெரம்பலூர் (செ. வ.)

114. சேகர், டாக்டர் எம் .பி. .. பெரம்பூர் (செ. வ.)

115.	சேகர், திரு. எம்.ஜி.	.. பாலக்கோடு
116.	சொக்கலிங்கம், திரு. பி.	.. மதுராந்தகம்
117.	சோமசுந்தரம், திரு. எஸ். டி.	.. தஞ்சாவூர்
118.	ஞானசேகரன், திரு. சி.	.. வேலூர்
119.	டேனியல்ராஜ், திரு. எஸ்.	.. ஸ்ரீவைகுண்டம்
120.	தங்கமுத்து, திரு. கு.	.. திருவோணம்
121.	தங்கராஜ், திரு. ஆர்.	.. ஆண்டிமடம்
122.	தங்கவேல், திரு. எம்.	.. முசிறி
123.	தண்டாயுதபாணி, திரு. வி.	.. குடியாத்தம்
124.	தமிழரசன், திரு. செ. கு.	.. வந்தவாசி (செ. வ.)
125.	தமிழரசு, திரு. வெ.	.. ஆத்தூர்
126.	தம்புசாமி, திரு. வே.	.. திருவாரூர் (செ. வ.)
127.	தருமலிங்கம், திரு. கி.	.. அணைக்கட்டு
128.	தர்மலிங்கம், திரு. பே.	.. பாளையங்கோட்டை
129.	தவசி, திரு. கே.	.. ஆண்டிப்பட்டி
130.	தனபால், திரு. ம.	.. திருப்போரூர் (செ. வ.)
131.	தாமரைக்கனி, திரு. இரா.	.. ஸ்ரீவில்லிபுத்தூர்
132.	தாமோதரன், திரு. எம். சி.	.. நெல்லிக்குப்பம்
133.	திருநாவுக்கரசு, திரு. எஸ்.	.. அறந்தாங்கி
134.	துரை, திரு. எஸ். எம்.	.. ஆத்தூர்
135.	துரை முருகன், திரு. கே .எஸ்.	.. பல்லடம்
136.	துரை ராமசாமி, திரு.	.. வெள்ளக்கோவில்
137.	தெய்வநாயகம், திரு. எ.	.. மதுரை மத்தி
138.	தென்னவன், திரு. மு.	.. இராமநாதபுரம்
139.	தேவராஜ், திரு. அ.	.. செய்யாறு

140. தேனி பன்னீர்செல்வம், திரு. .. போடிநாயக்கனூர்

141. நடேசன், திரு. மு. .. சேலம்-2

142. நடேசன் பால்ராஜ், திரு. வெ. .. நாங்குநேரி

143. நாகூர் மீரான், திரு. எஸ். .. கடையநல்லூர்

144. நிர்மலா, திருமதி பி. .. திண்டுக்கல்

145. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. .. தேனி

146. பஞ்சவர்ணம், திருமதி கே. .. வலங்கைமான் (செ. வ.)

147. பட்டாபிராமன், திரு. கா. ப. .. காஞ்சிபுரம்

148. பரந்தாமன், டாக்டர் ஜெ. .. பேரணாம்பட்டு (செ. வ.)

149. பரமசிவம், திரு. ஆர் .பி. .. சின்னசேலம்

150. பரமசிவன், திரு. ஏ. எம். .. சோழவந்தான்

151. பலராமன், திரு. உ. .. பூங்கா நகர்

152. பழனிசாமி, திரு. இரா. .. தாரமங்கலம்

153. பழனிசாமி, திரு. க. .. எடப்பாடி

154. பழனிசாமி, திரு. நா. சா. .. கிணத்துக்கடவு

155. பழனிசாமி, திரு. வெ. .. திருப்பூர்

156. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ. வ.)

157. பழனியம்மாள், திருமதி க. .. ராசிபுரம்

158. பன்னீர்செல்வம், திரு. என். .. திருவிடைமருதூர்

159. பன்னீர்செல்வம், திரு. சா. .. திண்டிவனம்

160. பன்னீர்செல்வம், திரு. ஜெ. .. திருநாவலூர்

161. பாண்டியம்மாள், திருமதி இரா. .. உசிலம்பட்டி

162. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை

163. பாலகங்காதரன், திரு. ஜெ.	..	சிவகாசி
164. பாலகிருஷ்ணன், திரு. சோ.	..	முதுகுளத்தூர்
165. பாலசுப்பிரமணியன், திரு. கி.	..	பட்டுக்கோட்டை
166. பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர்.	..	பொங்கலூர்
167. பாலன், திரு. எம்.கே.	..	சைதாப்பேட்டை
168. பாலையா, திரு. ஆ.	..	குளச்சல்
169. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ்.	..	தென்காசி
170. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா.	..	சேரன்மகாதேவி
171. புரட்சிமணி, திரு. ச.	..	மங்களூர் (செ. வ.)
172. புருஷோத்தமன், டாக்டர் வெ.	..	பெண்ணாகரம்
173. பூராசாமி, திரு. எம்.	..	பூம்புகார்
174. பெரியசாமி, திரு. வே.	..	அந்தியூர் (செ. வ.)
175. பெரியவீரன், திரு. எம்.	..	பெரியகுளம்
176. பெருமாள், திரு. செ.	..	ஏற்காடு (ம. ப.)
177. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ்.	..	நிலக்கோட்டை (செ. வ.)
178. பொன்னுசாமி, திரு. பேராசிரியர் க.	..	மருங்காபுரி
179. பொன்னுசாமி, திரு. பெ.	..	தருமபுரி
180. பொன்னுவேலு, திரு. ஏ.தா.	..	வரகூர் (செ.வ.)
181. போளூர் வரதன், திரு.	..	ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.)
182. மணிமேகலை, டாக்டர் சு.	..	அரியலூர்
183. மணிமேகலை, திருமதி வி. ஜி.	..	அருப்புக்கோட்டை
184. மணிவாசகம், திரு. கே. பி.	..	உடுமலைப்பேட்டை
185. மதுசூதனன். திரு. இ.	..	டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர்
186. மரியம் உல் ஆசியா, திருமதி கே.	..	அரவக்குறிச்சி

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

187. மல்லிகா, செல்வி கோ.	..	புவனகிரி
188. மனோகரன், திரு. கே. ஏ.	..	ஓசூர்
189. மாணிக்கம், திரு. சி.	..	ஈரோடு
190. மாலா, டாக்டர் ஜி. ஆர்.	..	திருச்சிராப்பள்ளி-2
191. முத்துசாமி, திரு. சு.	..	பவானி
192. முத்தையா, திரு. இரா.	..	சேடப்பட்டி
193. முருகானந்தம், திரு. கே. ஆர்.	..	சிவகங்கை
194. முருகையா பாண்டியன், திரு. ஆர்.	..	அம்பாசமுத்திரம்
195. முனிரத்தினம், திரு. ஏ. எம்.	..	சோளிங்கர்
196. முனிவெங்கடப்பன், திரு. கே.	..	கிருஷ்ணகிரி
197. முனுசாமி, திரு. கா. பூ.	..	காவேரிப்பட்டினம்
198. முஹமது ஆசிப், திரு.	..	திருவல்லிக்கேணி
199. மூர்த்தி, திரு. து.	..	சீர்காழி (செ. வ.)
200. மோகனன், திரு. கோவி. எஸ்.	..	இராணிப்பேட்டை
201. மோசஸ், டாக்டர் எம்.	..	நாகர்கோவில்
202. ரகுபதி, திரு. சே.	..	திருமயம்
203. ரங்கநாதன், திரு. ப.	..	புரசைவாக்கம்
204. ரத்தினவேல், திரு. த.	..	திருவெறும்பூர்
205. ரமணி நல்லதம்பி, திருமதி	..	ராதாபுரம்
206. ரமேஷ், திரு. வி. பி. ஆர்.	..	தூத்துக்குடி
207. ரவிக்குமார், திரு. ஏ.	..	பொன்னேரி (செ. வ.)
208. ரவிச்சந்திரன், திரு. வி.	..	உப்பிலியாபுரம் (ம. ப.)
209. ராமசுப்பு, திரு. எஸ். எஸ்.	..	ஆலங்குளம்
210. ராஜூ, திரு. எச். எம்.	..	உதகமண்டலம்

[1994 ஏப்ரல் 30

211. ராஜு, திரு. கே. ஆர்.	..	கூடலூர்
212. ராஜு, திரு. கே. பி.	..	பேரூர்
213. ராஜேந்திரன், திரு. என். ஆர்	..	காட்டுமன்னார் கோவில் (செ. வ.)
214. லட்சுமணன், திரு. வி. கே.	..	கோயம்புத்தூர் கிழக்கு
215. லாரன்ஸ், திரு. கு.	..	பத்மநாபபுரம்
216. லோகாம்பாள், திருமதி ஜெ.	..	லால்குடி
217. வரதராஜன், திரு. செ. து.	..	செங்கல்பட்டு
218. விசுவநாதன், திரு. ஜி.	..	ஆற்காடு
219. வீரபாண்டியன், டாக்டர் பெ.	..	செங்கம் (செ. வ.)
220. வெங்கடராம ரெட்டி, திரு. மு.	..	தளி
221. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ்.	..	கடலூர்
222. வேடியப்பன், திரு. தா.	..	போளூர்
223. வேலையா, திரு. டி.	..	திருநெல்வேலி
224. ஜனார்தனன், திரு. தே.	..	விழுப்புரம்
225. ஜானகிராமன், திரு. கோ.	..	மேல்மலையனூர்
226. ஜீனத் சர்புதீன், திருமதி	..	சேப்பாக்கம்
227. ஜெயக்குமார், திரு. எஸ்.	..	தியாகராய நகர்
228. ஜெயக்குமார், திரு. டி.	..	ராயபுரம்
229. ஜெயராமன், திரு. எஸ். ஆர்.	..	சேலம்--1
230. ஜெயலலிதா, டாக்டர் ஜெ.	..	பர்கூர்
231. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர்	..	ஆரணி
232. ஸ்ரீதரன், டாக்டர் அ.	..	வால்பாறை (செ. வ.)

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

233. (வெற்றிடம்) .. பெருந்துறை

234. (வெற்றிடம்) .. மயிலாப்பூர்

235. பிட்ரிக்ஸ் டி'சோசா, டாக்டர் .. நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

கிருஷ்ணமூர்த்தி, திரு. ஆர். .. தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 17, பவ - திருவள்ளுவர் ஆண்டு 2025

1994, ஏப்ரல் 30, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 11.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்'

ஒருவர் செல்வம் பெற்றதனால் பெறும் பயன் என்னவென்றால் அவர் தன் சுற்றத்தால் கூட்டுணர்வோடு சூழப்படுமாறு அவர்களைத் தழுவிக் கொண்டு வாழ்தலே ஆகும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுகுறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

1. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரதாஸ் அவர்கள், (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், நீங்கள் கொடுத்தது இன்று வராது என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் 10.20 மணிக்குத் தான் கொடுத்திருக்கிறீர்கள். திங்கட்கிழமை அதை எடுத்துக் கொள்ளலாம்.

[1994 ஏப்ரல் 30

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவுப் பொருள் கொண்டு செல்வதில் இருக்கிற இடையூறு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரதாஸ் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் உணவுப் பொருள் கொண்டு செல்வதில் இருக்கிற இடையூறு பற்றிய ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று என்னுடைய அனுமதியைக் கோரி உள்ளார். நான் அவருக்கு அனுமதிவழங்கியுள்ளேன். அந்தப் பிரச்சினையைச் சுருக்கமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இந்திய நாட்டிலே ஒரே 'ஃபுட் ஜோனாக, சிங்கிள் ஃபுட் ஜோனாக' இருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும், எங்கே பார்த்தாலும் செக் போஸ்ட். போட்டு அரிசி கொண்டு போக முடியாத நிலைமை இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் போல கோயம்புத்தூர் மாவட்டம் இருக்கிறது, மதுரை மாவட்டம் இருக்கிறது. இவை கேரள எல்லை பகுதியில் இருக்கின்றன. ஆனால் அங்கேயெல்லாம் இந்தப் பிரச்சினை இல்லை. ஆனால் எங்களுடைய நேஷனல் ஹைவேஸ் நாகர்கோயில்-திருவனந்தபுரத்திற்கு இடையே 3 செக் போஸ்ட் இருக்கின்றன. சுங்கான்கடை, குழித்துறை, களியக்காவிளை, அதைப் போல என்னுடைய தொகுதியில் பார்த்தால் 30 செக் போஸ்ட். எங்கே பார்த்தாலும் செக் போஸ்ட். கேட்டால் லெவி செக் போஸ்ட் என்று சொல்கிறார்கள். எதற்கு வைத்தார்கள் என்று எங்களுக்கே தெரியாது. செக் போஸ்ட் போட்டு அங்கே அரிசி கொண்டு போக முடியாத நிலை. அரிசி விலை அதிகமாக ஏறிக்கொண்டே இருக்கிறது. இப்போது புதிய டங்கல் திட்டத்தின்படி தஞ்சாவூரில் விவசாயம் செய்கிற விவசாயிக்கு அமெரிக்காவில் அரிசி விற்க அதிகாரம் இருக்கிறது. ஆனால் இங்கே நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்கிற பொருள்களை நம்முடைய மாநிலத்தில் கொண்டு போக முடியாது. நம்முடைய ஸ்டேட்டுக்குள்ளேயே கொண்டு போக முடியாது என்று சொன்னால், மிகவும் சங்கடமான நிலை. ஏனென்றால் கேரளாவிலிருந்து ஒரு சில வரைட்டிஸ் அரிசி இங்கே வருகிறது. ஆனால் நம்முடைய அரிசியை, எங்கள் மாவட்டத்தில்—விளவன்கோடு தாலுக்கா பார்டர் என்று வைத்துக் கொள்வோம். கல்குளம் தாலுக்கா பார்டர் இல்லை. சுங்கான்கடை தாண்டி தான் கல்குளம் தாலுக்கா வருகிறது. அதற்குள்ளேயே செக் போஸ்ட்.. அதிகாரிகள் சொல்லக் கூடும், எல்லா அரிசியையும் கேரளாவுக்கு கொண்டு போய்

1994 ஏப்ரல் 30] [திரு. மா. சுந்தரதாஸ்]

விடுவார்கள் என்று. என்னுடைய தொகுதி கேரளா பார்டரில் இருக்கிறது. ஆனால் கல்குளம் தாலுக்கா என்று சொல்வது. நாகர்கோயிலுக்குள்ளே அங்கே செக்போஸ்ட். இது தேவையா? சுங்கான்கடை என்று சொல்வது நாகர்கோயில் லிமிட்டிற்குள்ளே. அங்கே பெரிய செக் போஸ்ட் வைத்திருக்கிறார்கள். இதனால் அரிசியை—எங்கேயும் கொண்டு போக முடியாத நிலை இருக்கிறது.

மேலும் அரிசி விற்க வேண்டுமென்று லைசென்ஸ் வேண்டுமென்றால், யாருக்கும் அந்த லைசென்சே கொடுப்பதில்லை. ஆனால் எல்லா மாவட்டத்திலும் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டால், கொடுக்கக்கூடாது, அரிசி விற்பது ஹோல்சேலாக தேவையில்லை என்கிறார்கள். தேவைப்பட்டு கேட்டாலும் கொடுப்பதில்லை. ஆகவே, அரிசியை அந்த அளவுக்கு நேரடியாகக் கொண்டு போக முடியாது, செக் போஸ்ட் இருக்கிறது. லைசென்ஸ் வழங்கி அரிசி கொடுக்கச் சொன்னால் லைசென்ஸ் கொடுப்பதே இல்லை. சென்ற 3, 4 வருடங்களாக லைசென்சே இல்லை. ஆகவே, இது எந்த மாவட்டத்திலும் இல்லாத ஒரு பிரச்சினையாக எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது. நான் என்ன நினைக்கிறேன் என்றால், அதிகாரிகள், ரெவின்யூ ,ஸ்டாப் அவர்களுடைய புரமோஷனுக்காகச் செய்தார்கள் என்று கூட சொல்லிக் கொண்டிருந்தார்கள். அங்கே இருக்கிற அதிகாரிகளை மாவட்ட கலெக்டரே செக் போஸ்டிலே போட்டு, அங்கே டெபுடி தாசில்தார், தாசில்தாரைப் போட்டு நடத்திக் கொண்டிருக்கலாம். தயவுசெய்து என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், எல்லா மாவட்டத்தையும் போல எங்கள் மாவட்டத்திலும், அரிசி கொண்டு போக அனுமதி வழங்க வேண்டும். அரிசி விற்பதற்கான லைசென்ஸ் கேட்டால் கொடுக்க வேண்டும். கடைக்காரர்கள் லைசென்ஸ் கேட்டாலும் லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அந்த அளவுக்கு எங்களுடைய மாவட்டத்தில், எல்லா இடங்களிலும், அரிசி மக்களுக்கு கிடைக்கிற வகையில் செய்வதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு அமைச்சர்.

* மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.சுந்தரதாஸ் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரம் அரசாங்கம் சில கடுமையான நிபந்தனைகளை விதித்து, சாவடிகளை எல்லாம் வைத்து பொது மக்களுடைய அரிசி கொண்டு செல்கிற, நெல் கொண்டு செல்கிற போக்குவரத்தைத் தடை செய்கிறார்கள், அதனால் பொது மக்களுக்குப் பாதகம் விளைகிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

[திரு. இராம வீரப்பன்] [1994 ஏப்ரல் 30

நான் முதலில் அதைத் திட்டவட்டமாக மறுக்க விரும்புகிறேன். பொது மக்களுக்கு எந்தப் பாதகமும் இதனால் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா முழுவதும் ஒரே உணவு மண்டலமாக இருக்கிறது, ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாத்திரம் ஏன் இந்த கட்டுப்பாடு என்று அவர்கள் கேட்டார்கள். அதிலேயும் அவர் தன்னுடைய கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தியா முழுவதும் ஒரே உணவு மண்டலம் என்று அறிவித்திருந்தாலும், ஆங்காங்கே சில மாநில அரசுகள் தங்களுடைய மக்களுடைய நலனை முன்னிட்டு, தங்களுடைய மக்களுடைய தேவைகளைக் கருத்திற்கொண்டு, சில நெறிமுறைகளை, கட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டு தான் இருக்கிறார்கள். மிக அதிகமாக நெல் விளைகிற ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு அவ்வளவு சுலபமாக நெல்லோ அரிசியோ வர முடியாது. ஆந்திர அரசும் சில கட்டுப்பாடுகளை விதித்து, அவர்கள் அனுமதித்தால்தான் தமிழகத்திற்கு நெல்லோ அரிசியோ வர இயலும்.

முற்பகல் 11.35

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒரு பற்றாக்குறை மாநிலம், இப்போதுதான், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு மிகச் சிறந்த முயற்சிகளை, விஞ்ஞான அடிப்படையிலே ஆய்வுகளை எல்லாம் மேற்கொண்டு, நம்முடைய வேளாண்மைத்துறை மிகப் பெரிய முன்னேற்றத்தைக் கண்டுகொண்டு, விளைச்சலை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறது. இயற்கையும் ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறது. என்றாலும் இன்னும் நம்முடைய தேவைக்குப் போதுமான நெல்லை, நாம் பெற முடியாமல்தான் இருக்கிறோம். ஆகவே, தமிழ்நாட்டு மக்களுக்கு அரிசி எவ்வளவு தேவையோ, அதைப் பாதுகாத்து, சேமித்து, சேகரித்துக் கொடுக்கவேண்டிய கடமையும் கட்டாயமும் நம்முடைய அரசுக்கு இருக்கிறது. அதேநேரத்தில், இங்கே உற்பத்தியாகிற நெல்லோ, அரிசியோ, பக்கத்திலே அதிகமாக தேவைப்படுகிற கேரள மாநிலத்திற்கு நாம் அனுப்பிவிட்டால், இங்கே விலை உயர்ந்துவிடும். நம்முடைய அரசுக்கு இருக்கிற மிகச் சிறந்த பெருமையும், வெற்றியும், இந்த உணவுப் பொருட்களுடைய விலையைக் கட்டுப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான். அதுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கிடைத்து இருக்கிற மாபெரும் வெற்றியாகும்.

ஆகவேதான், சென்ற ஆண்டிலேகூட, மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்குப் பிறகு, யாருமே துணிந்து எடுக்க முடியாத ஒரு முடிவை அவர்கள்

1994 ஏப்ரல் 30] [திரு. இராம. வீரப்பன்]

மேற்கொண்டு, தமிழகத்திற்கு உள்ளே இந்த நெல், அரிசி, போக்குவரத்துக்கு இருந்த கட்டுப்பாடுகளை எல்லாம் தளர்த்தி, எந்த மாவட்டத்திற்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம் என்ற மிகப் புரட்சிகரமான ஒரு திட்டத்தை அறிவித்து, அதிலேயும் இன்றைக்கு வெற்றியைக் கண்டு இருக்கிறோம். ஆகவே, இவ்வளவு வெற்றியைப் பெற்றுக்கொண்டிருக்கிற சூழ்நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்திலே மாத்திரம் ஏன் இந்தக் கட்டுப்பாடுகளை ஓரளவிற்கு வைத்திருக்கிறோம் என்பதை நான் விளக்க விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து பக்கத்திலிருக்கிற கேரள மாநிலத்திற்கு அதிகமாக, கட்டுப்பாடுகளை மீறிய அளவிலே வியாபாரிகள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன், பொதுமக்கள் அல்ல - வியாபாரிகள், அவர்கள் இங்கேயிருந்து நெல்லையோ அரிசியையோ கொண்டுபோகிற முயற்சியிலே ஈடுபடுகிறார்கள். ஆகவேதான் தடுக்கிற முயற்சியை நம்முடைய மாநில எல்லையிலே மாத்திரம் வைத்து பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள் சொல்கிற விளரங்கோடு, கல்குளம் இந்த இரண்டு தாலுக்காக்களில், நம்முடைய கேரள எல்லையையொட்டி விளவங்கோடு இருக்கிறது, அதையொட்டி, கல்குளம் இருக்கிறது. அங்கே மாத்திரம் இந்த கோட்டா சிஸ்டம் வைத்திருக்கிறார்கள். நீண்டநாட்களாக இருந்து வருகிறது. அங்கே மாத்திரம் இந்தச் சில்லரை வியாபாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களாலே வழங்கப்படுகிற இந்த கோட்டாக் கார்டுகளை வைத்து, 5 குவிண்டால் ஒரு நேரத்திலே வாங்கி கொண்டு போகலாம் என்பதற்காகத்தான் அங்கே வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு தாலுக்காக்களுக்கு மாத்திரம் தான். அரிசியை இந்த கோட்டா கார்டுகள் மூலம் கொண்டு போகிறார்களா என்பதைப் பரிசோதிப்பதற்குத்தான் இந்த செக்-போஸ்ட்... இன்னும் கூடச் சொல்கிறேன். நாம் ஒன்றும் கேரளாவிற்குப் போவதைத் தடுப்பதுகூட இல்லை. யார் வேண்டுமானாலும் கொண்டு போகலாம். ஆனால் ஆந்திரா என்ன திட்டத்தை வைத்திருக்கிறதோ, அதே திட்டத்தை நாமும் வைத்திருக்கிறோம். அப்படிக் கொண்டு போகிற வியாபாரிகள், அவர்கள் எவ்வளவு நெல்லோ அரிசியோ கொண்டு போகிறார்களோ, அந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு நம்முடைய விலையிலே லெவியைக் கொடுத்துவிட்டால், அந்த அளவிற்குக் கொண்டு போகலாம். அதிலே ஒன்றும் தடையில்லை. ஆனால், இந்த 2 தாலுக்காக்களிலே மாத்திரம் கொஞ்சம் கண்காணிப்போடு இருக்கவேண்டியிருக்கிறது. ஒரு புள்ளிவிவரத்தைத் தருகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே மொத்தம்

[திரு. இராம வீரப்பன்] [1994 ஏப்ரல் 30

4 தாலுக்காக்கள். இந்த 4 தாலுக்காக்களிலே மொத்த சில்லரை வியாபாரிகள் 1,052 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு தாலுக்காக்களிலே மாத்திரம் 738 சில்லரை வியாபாரிகள் இருக்கிறார்கள். மக்கள் தொகை மற்ற இரண்டு தாலுக்காக்களிலே தான் அதிகம். இந்த இரண்டு தாலுக்காக்களிலே குறைவு. 70 சதவீதம் சில்லரை வியாபாரிகள் இந்த இரண்டு தாலுக்காக்களிலே இருக்கிறார்கள் என்றால், எதற்காக இருக்கிறார்கள் என்பதை அரசுப் புரிந்துகொண்டுதான் நடவடிக்கையை எடுத்துக் கொண்டு வருகிறது. ஆகவே, இங்கே இருக்கிற நெல்லோ, அரிசியோ, நம்முடைய மக்களுக்குப் போதாமல், பற்றாக்குறையாக இருக்கிறபோது, பக்கத்திலே கொள்ளை லாபம் கருதி கடத்திக் கொண்டு போகிற வியாபாரிகளைத் தடுப்பதற்காகத்தான் இந்த லெவி கட்டுப்பாடு முறையை வைத்திருக்கிறோம்.

முற்பகல் 11.40

அதனாலேதான் லெவி போஸ்ட், செக்போஸ்ட் என்று அதற்குப் பெயர். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கருத்துக்கள் எல்லாம் சென்ற ஆண்டு இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அவர்கள் இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்டுப்பாட்டினை இப்போது மாநிலம் முழுவதும் தளர்த்தியதற்குப் பிறகு இந்த மாவட்டத்திற்குள்ளே மாத்திரம், இன்னும் கடுமையாக இருக்க வேண்டுமா? அதையும் இன்னும் கொஞ்சம் தளர்த்த முடியுமா? இந்த செக் போஸ்டுகளை எல்லாம் இன்னும் கொஞ்சம் தள்ளி-அங்கே கோதையாறு வருகிறது. அந்தக் கோதையாறைத் தாண்டி அவ்வளவு சுலபமாக போகமுடியாது. பாலம் இருக்கிறது. 4, 5 பாலங்களுக்கு அப்பால் அதிலே நம்முடைய கல்குளம் தாலுக்காகூட விடுபடலாம். விளவங்கோடு தாலுக்கா அதைத் தாண்டியிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிகளிலே மாத்திரம் கொஞ்சம் கடுமையான கண்காணிப்பை வைத்துக்கொண்டு, மற்ற பகுதிகளிலே இதைக் குறைத்துக் கொள்ளமுடியுமா என்பதை ஆராயவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கேட்டிருக்கிறார்கள். உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைத் துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், யாரும் மாநிலம் முழுவதும் அரிசி வியாபாரம் செய்வதற்கு உரிமம் பெற்றுத்தான் ஆகவேண்டும். சில்லரை வியாபாரியோ, மொத்த வியாபாரியோ உரிமம் பெற்றுத்தான் ஆகவேண்டும். அந்த முறைதான் இங்கே இருக்கிறது. இங்கு சிறப்பான சூழ்நிலையைக்

1994 ஏப்ரல் 30] [திரு. இராம வீரப்பன்]

கருதி, நாம் கட்டுப்பாட்டினை கொஞ்சம் அதிகமாக வைத்துக்கொண்டிருக்கிறோம். அதைத் தளர்த்தி நியாயமான வியாபாரிகளுக்கு, தவறு செய்யாத வியாபாரிகளுக்கு, சங்கடங்கள் வராமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நம்முடைய உணவுத் துறையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். உரிமம் வழங்குவது 4, 5 ஆண்டுகளாகவே சில்லரை வியாபாரிகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு தாலுக்காக்களில் மாத்திரம், 70 சதவீதம் அந்த எல்லையிலே இருக்கிற தாலுக்காவில் இருக்கிறார்கள். மக்கள் குறைவாக உள்ள தாலுக்காக்களில் எதற்கு? அதைத்தான் அரசாங்கம் ஆராய்கிறது. கண்ணை மூடிக்கொண்டு எந்த உத்தரவும் வழங்கிவிட முடியாது. மக்களுக்கு அரிசி கிடைக்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால் அங்கேயிருந்து சிலவகை அரிசி இங்கே வருகிறது. இங்கேயிருந்து சில வகை அரிசி போகிறது என்கிறீர்கள். சாதாரண மக்கள் வாங்குகிற—நாம் 3 ½ ரூபாய்க்கு கொடுக்கிறோமே, டி.கே.எம். 9, சி.ஆர். 1009 அந்த அரிசிக்குதான் அங்கே கிராக்கி. 5, 7, 8 ரூபாய்க்கு விற்கிற அரிசி அங்கேயிருந்து இங்கே வருகிறது. ஆகவே இந்தச் சாதாரண ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகிற அரிசியை நாம் எங்காவது கண்ணைமூடிக் கொண்டு நீ போ என்று அனுப்பிவிட்டு இங்கேயிருக்கின்ற மக்களுக்கு அந்த அரிசி இல்லை என்று சொல்கிற சூழ்நிலைக்கு அரசாங்கம் தன்னை ஆளாக்கிக் கொள்ளமுடியாது. ஆகவே குமரி மாவட்டத்திலுள்ள மக்களுக்கு எந்த விதமான பாதகமும் வராது. எப்போதும் வரவில்லை. எந்த நெருக்கடியும் இல்லை. அரிசித் தட்டுப்பாடும் இல்லை. மிகத் தாராளமாக அரிசி கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதிகமான அரிசி கிடைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் கஷ்டமென்றால் வியாபாரிகளுக்கு, நல்ல வியாபாரிகளுக்கு, நியாயமான வியாபாரிகளுக்கு அல்ல. இந்த அரிசியை வியாபாரத்தின் பெயராலே கடத்திக்கொண்டு போய் அதிகமான விலைக்கு லாபத்திற்கு விற்கவேண்டுமென்று முயல்கிற வியாபாரிகளுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. காவல் இருந்தால் சிலருக்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனாலும் அரசு பரிசீலனை செய்து, இன்னும் இந்தக் கட்டுப்பாட்டினைக் கொஞ்சம் குறைக்கமுடியுமா, தளர்த்தமுடியுமா? மாநிலம் முழுவதும் சுதந்திரமாக ஏற்படுத்திவிட்ட பிறகு, இந்த கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சில்லரை விற்பனைக் கடைகளை அனுமதிக்கமுடியுமா என்பதைப் பரிசீலிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதையும் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவிலே எந்தச் சங்கடங்களை

குறைக்கமுடியுமோ, நியாயமான வியாபாரிகளுக்கு, அதைக் குறைக்க அரசு முயலும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல், தம்மம்பட்டி பகுதிகளில் ஜவ்வரிசித் தொழிற்சாலைகளின் கழிவுநீர் நதிகளில் கலப்பதால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. கந்தசாமி, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவார். திரு. கே. கந்தசாமி.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தலைவாசல் பகுதிகளில் உள்ள ஜவ்வரிசித் தொழிற்சாலைகளின் கழிவுநீர் வசிஷ்டா நதியிலும், தம்மம்பட்டி பகுதிகளில் உள்ள ஜவ்வரிசி தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுவேதா நதியிலும் கலந்து பொதுமக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகியுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, தலைவாசல் பகுதியில் 10 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. அத்தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு 153.5 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுகின்றன. இத்தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீரானது, அருகிலுள்ள சிறு ஓடையின் வழியாக, சர்வாய் ஏரியை அடைந்து இறுதியில் வசிஷ்டா நதியில் கலக்கின்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குறைக்கமுடியுமோ, நியாயமான வியாபாரிகளுக்கு, அதைக் குறைக்க அரசு முயலும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல், தம்மம்பட்டி பகுதிகளில் ஜவ்வரிசித் தொழிற்சாலைகளின் கழிவுநீர் நதிகளில் கலப்பதால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. கந்தசாமி, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவார். திரு. கே. கந்தசாமி.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சேலம் மாவட்டம், தலைவாசல் பகுதிகளில் உள்ள ஜவ்வரிசித் தொழிற்சாலைகளின் கழிவுநீர் வசிஷ்டா நதியிலும், தம்மம்பட்டி பகுதிகளில் உள்ள ஜவ்வரிசி தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுவேதா நதியிலும் கலந்து பொதுமக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகியுள்ளது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, தலைவாசல் பகுதியில் 10 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. அத்தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு 153.5 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுகின்றன. இத்தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீரானது, அருகிலுள்ள சிறு ஓடையின் வழியாக, சர்வாய் ஏரியை அடைந்து இறுதியில் வசிஷ்டா நதியில் கலக்கின்றது.

1994 ஏப்ரல் 30] *[திரு. ம. சின்னசாமி]*

2. ஆத்தூர் தாலுகா, தம்மம்பட்டி பகுதியில் அமைந்துள்ள 9 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு 162 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுகின்றன. அத்தொழிற்சாலைகளுள் 6 தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது, நேரடியாக சுவேதா நதியில் கலக்கின்றது. மற்ற 3 தொழிற்சாலைகளிலிருந்து கழிவுநீர் ஓடையில் வெளியேற்றப்பட்டு சுவேதா நதியைச் சென்றடைகின்றது.

3. மேற்குறிப்பிட்ட அனைத்து தொழிற்சாலைகளும், 1974-ஆம் ஆண்டு நீர் (மாசுதடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி வாரியத்தின் இசைவாணை கேட்டு விண்ணபித்திருந்தன. அந்த தொழிற்சாலைகள், தொழிற்சாலைக்கழிவு நீரை வாரியம் நிர்ணயித்துள்ள அளவுகட்கு ஏற்ப சுத்திகரிப்பு செய்வதற்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் வாரியம் அத்தொழிற்சாலைகட்கு இசைவாணை அளித்தது.

4. 18-2-1994 மற்றும் 21-3-1994 ஆகிய நாட்களில், ஜவ்வரிசி தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் மற்றும், ஆத்தூர் ஜவ்வரிசி தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்கண்ட தொழிற்சாலைகள், தொழிற்சாலைக்கழிவு நீரை தொழிற்சாலைகளின் வளாகத்திலிருந்து வெளியேற்றுவதை நிறுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளன. மேலும், தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய தனித்தனியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அல்லது பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும்படியும், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகளின் சொந்த நிலங்களில் பாசனத்திற்காக பயன்படுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

5. தலைவாசல் மற்றும் தம்மம்பட்டி பகுதிகளிலுள்ள ஜவ்வரிசி தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒப்புக்கொண்டுள்ளனர். மேலும், 31-5-1994-க்குள் இதற்கான ஒரு நிறுவனம் அமைப்பதற்கும் மற்றும் ஒவ்வொரு தொழிற்சாலையிடமிருந்தும் பங்குத்தொகையின் முதல் தவணையாக ரூபாய் 5,000/- கட்டவும் சம்மதித்துள்ளனர்.

6. சேலத்திலுள்ள ஜவ்வரிசித் தொழிற்சாலைகளை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கேட்டுக்கொண்டது. அதன்படி 73 ஜவ்வரிசித் தொழிற்சாலைகள் ஒன்று சேர்ந்து சேலம் சாகோ எஃப்ளூயென்ட் ட்ரீட்மென்ட் லிமிட்டெட்

என்ற நிறுவனத்தை அமைத்துள்ளன. பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பது, இயக்குவது மற்றும் பராமரிப்பது ஆகியவற்றுக்கு இந்த நிறுவனமே பொறுப்பு ஆகும். இந்த நிறுவனம் ரூபாய் 3.75 இலட்சம் பங்குத் தொகையாக வசூலித்துள்ளது. இந்தப் பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான கருத்துருவை தயாரிக்குமாறு இந்த நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

7. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியின் முன்னேற்றத்தினைத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முனைப்புடன் கண்காணித்து வருகின்றது.

8. இந்தப் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவி இயக்கும்பொழுது, ஜவ்வரிசித் தொழிற்சாலைகளின் கழிவுநீரால் வசிஷ்டா நதியிலும், சுவேதா நதியிலும் மாசு ஏற்படுவது தடுக்கப்படும்.

முற்பகல் 11.45

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே தலைவாசல் பகுதியில் 10 தொழிற்சாலைகளின் கழிவுநீர் வசிஷ்டா நதியிலும், தம்மம்பட்டிப் பகுதியில் 9 தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுவேதா நதியிலும் கலப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கழிவு நீர் கலப்பதன் காரணமாக அந்தப்பகுதியில் ஏறத்தாழ 20 கிராமங்களில் குடிநீர் பாதிக்கப்படுகிறது. பொது மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிறார்கள். அதைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுக்கா தலைவாசல் பகுதியில் 10 ஜவ்வரிசி தொழிற்சாலைகளிலிருந்து நாள் ஒன்றுக்கு 153.5 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவு நீரை அந்த ஆலைகள் வெளியேற்றுகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரானது அருகிலுள்ள சிறு ஓடைகளின் வழியாக சர்வாய் ஏரியை அடைந்து இறுதியில் வசிஷ்டா நதியில் கலக்கிறது. ஆத்தூர் தாலுக்கா தம்மம்பட்டி பகுதியில் அமைந்துள்ள 9 ஜவ்வரிசி தொழிற்சாலைகள் நாள் ஒன்றுக்கு 162 கிலோ லிட்டர் தொழிற்சாலை கழிவு நீரை வெளியேற்றுகின்றன. அத் தொழிற்சாலைகளுள் 6 தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரானது நேரடியாக சுவேதா நதியில் கலக்கிறது. மற்ற 3 தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், ஓடையின் மூலம்

1994 ஏப்ரல் 30] [திரு. ம. சின்னசாமி]

சுவேதா நதியில் கலக்கிறது. இந்தப் பாதிப்பின் காரணமாக 18-2-1994 மற்றும் 21-3-1994 ஆகிய நாட்களில் ஜவ்வரிசி தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் மற்றும் ஆத்தூர் ஜவ்வரிசி தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்கண்ட தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை தொழிற்சாலைகளின் வளாகத்திலிருந்து வெளியேற்றுவதை நிறுத்தவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மேலும் தொழிற்சாலை கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய தனித் தனியாக கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதே போல தலைவாசல் தம்மம்பட்டி பகுதியில் ஜவ்வரிசி தொழிற்சாலைகளுடைய உரிமையாளர்கள் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஒப்புக் கொண்டுள்ளார்கள். மேலும் 31-5-1994-க்குள் இதற்கான ஒரு நிறுவனம் அமைப்பதற்கும் மற்றும் ஒவ்வொரு தொழிற்சாலைகளிலிருந்தும் பங்கு தொகையாக முதல் தவணையாக ரூ. 5000/- கட்டவும் சம்மதித்துள்ளார்கள். அதேபோல சேலத்திலுள்ள ஜவ்வரிசி தொழிற்சாலைகள் பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்குமாறு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கேட்டுக்கொண்டது. அதன்படி 73 ஜவ்வரிசி தொழிற்சாலை அதிபர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து சேலம் சாகோ எஃப்ளுயென்ட் ட்ரீட்மென்ட் லிமிட்டெட் என்ற நிறுவனத்தை அமைத்துள்ளார்கள். பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைக்கவும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். அவர்கள் அதை உடனடியாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். அதற்கான பணிகளை மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது. விரைவில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 மாதத்திற்கு முன்பு அந்தப் பகுதியில் உள்ள 8 கிராமத்தைச் சேர்ந்த பொது மக்கள் அந்த 8 தொழிற்சாலைகளின் மீது குறிப்பிட்டு என்னிடம் மனுக்கள் கொடுத்தார்கள். அந்த மனுக்களை நான் மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் 8 தொழிற்சாலைகள் மீதும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எனக்கு பதிலும் அனுப்பியிருக்கிறார்கள். என்ன மாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் எல்லாம் உடனடியாக ஒரு காமன் எஃப்ளுயென்ட் ட்ரீட்மென்ட் பிளான்ட் போடவேண்டும் என்று அறிவுறுத்தப்

பட்டுள்ளார்கள். உடனடியாக அந்த ஆலைகளையெல்லாம் மூடிவிட்டால் தொழில் பாதிக்கும், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அப்போது நம்முடைய மாண்புமிகு கந்தசாமி அவர்கள்கூட பரிந்துரை செய்கிற நிலைமையெல்லாம் ஏற்படும். எனவே இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு விரைந்து அவர்கள் 'காமன் ஃப்ளுயன்ட் டிரீட்மென்ட் பிளான்ட்' அமைக்க வேண்டும் என்று மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மீண்டும் அது குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது அந்த பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கின்ற பணியில் அவர்களோடு சேர்ந்து, மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்த ஆலை அதிபர்கள் அவர்களோடு சேர்ந்து இணைப்பாக செயல்பட்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) மதுரை டி.வி.எஸ். ரப்பர் ஆலை கழிவுப் பொருட்கள் மற்றும் புகை சுற்றுப் புறச்சூழலைப் பாதிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் மு. காளிராஜன், மற்றும் திரு. ஓ. எஸ். அமர்நாத் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் மு. காளிராஜன் இருக்கையில் இல்லை. திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் உள்ள டி.வி.எஸ். ரப்பர் ஆலையிலிருந்து வெளியே வரும் கழிவுப் பொருட்கள் மற்றும் புகை, அப்பகுதியின் சுற்றுப்புற சூழ்நிலையைப் பாதித்துள்ளது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், ரப்பர் பிரிவு மற்றும் திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், டயர் சர்வீஸ் பிரிவு ஆகிய தொழிற்சாலைகள் மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், கோச்சடை கிராமத்தில் அமைந்துள்ளது.

பட்டுள்ளார்கள். உடனடியாக அந்த ஆலைகளையெல்லாம் மூடிவிட்டால் தொழில் பாதிக்கும், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அப்போது நம்முடைய மாண்புமிகு கந்தசாமி அவர்கள்கூட பரிந்துரை செய்கிற நிலைமையெல்லாம் ஏற்படும். எனவே இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு விரைந்து அவர்கள் 'காமன் ஃப்ளுயன்ட் டிரீட்மென்ட் பிளான்ட்' அமைக்க வேண்டும் என்று மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். மீண்டும் அது குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது அந்த பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கின்ற பணியில் அவர்களோடு சேர்ந்து, மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்த ஆலை அதிபர்கள் அவர்களோடு சேர்ந்து இணைப்பாக செயல்பட்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) மதுரை டி.வி.எஸ். ரப்பர் ஆலை கழிவுப் பொருட்கள் மற்றும் புகை சுற்றுப் புறச்சூழலைப் பாதிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் மு. காளிராஜன், மற்றும் திரு. ஓ. எஸ். அமர்நாத் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் மு. காளிராஜன் இருக்கையில் இல்லை. திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் உள்ள டி.வி.எஸ். ரப்பர் ஆலையிலிருந்து வெளியே வரும் கழிவுப் பொருட்கள் மற்றும் புகை, அப்பகுதியின் சுற்றுப்புற சூழ்நிலையைப் பாதித்துள்ளது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், ரப்பர் பிரிவு மற்றும் திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், டயர் சர்வீஸ் பிரிவு ஆகிய தொழிற்சாலைகள் மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், கோச்சடை கிராமத்தில் அமைந்துள்ளது.

1994 ஏப்ரல் 30] [திரு. ம. சின்னசாமி]

1. திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ரீஸ் லிமிடெட், ரப்பர் பிரிவு:-

இந்தத் தொழிற்சாலை கீழ்க்கண்டவற்றைத் தயாரிக்கின்றது:-

(1) கோமல் பிளாக் டயர்	மாதத்திற்கு 2,800 மெட்ரிக் டன்
(2) இயந்திர ரப்பர் பொருள்	
(3) உலோகம் சம்பந்தப்பட்டவற்றிற்கான ரப்பர்	மாதத்திற்கு 730 மெட்ரிக் டன்
(4) ரப்பர் கவர் மற்றும் பை	
(5) ரப்பர் பேக்	மாதத்திற்கு 60 மெட்ரிக் டன்

கார்பன் பிளாக், ரப்பர், ஸிங்க் ஆக்ஸைடு, சல்பர், பில்லர்ஸ், பாண்டிங் ஏஜெண்ட்ஸ் மற்றும் ஸ்டீரிக் அமிலம் ஆகியன மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. தயாரிக்கும் முறை பின்வருமாறு: மூலப்பொருட்களை அரைத்தல், அச்சில் வார்த்தல், வல்கனைசிங் செய்தல், ஆறவைத்தல், குளிர்வித்தல், சீர்செய்தல் ஆகியனவாகும்.

இந்தத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 3.5 கிலோ லிட்டர் வடிகால் கழிவுநிரையும், 15 கிலோ லிட்டர் உணவக கழிவுநீரையும் 35 கிலோ லிட்டர் தொழிற்சாலை கழிவுநீரையும் வெளியேற்றுகின்றது. வடிகால் கழிவுநீரை சுத்திகரிக்க இந்தத் தொழிற்சாலை நச்சுத் தடைத்தொட்டியை அமைத்துள்ளது. அதிலிருந்து நிரம்பி வழியும் கழிவுநீர் உணவக கழிவுநீருடன் கலக்கப்பட்டு, சேகரிக்கும் தொட்டி, காற்றேற்று தொட்டி, மணல் வடிகட்டி மூலமாக சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீர் தொழிற்சாலையின் சொந்த நிலத்தில் தோட்ட விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. கொதிகலனிலிருந்து வரும் கழிவுநீர் மற்றும் குளிர்விக்கப்பயன்படுத்திய நீர் ஆகியன சேகரிக்கும் தொட்டி, தெளிவிப்பான மற்றும் மணல் வடிகட்டி ஆகியவை மூலம் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட இந்தக் கழிவுநீர் மாநகராட்சியின் திறந்தவெளி வடிகாலில் வெளியேற்றப்படுகிறது. 3-3-1994 அன்று வடிகால் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரின் மாதிரிகள் ஆகியன சேகரிக்கப்பட்டன. அவற்றின் பகுப்பாய்வு அறிக்கையின்படி மாசுக்களின் அளவு கீழே கண்டவாறு வாரியம் நிர்ணயித்துள்ள அளவுகளைவிடக்குறைவாக இருந்தது அறியப்பட்டது.

அளவுகள்	பகுப்பாய்வு அறிக்கையின்படியான அளவு.		வாரியம் நிர்ணயித்துள்ள அளவு.
	வடிகால் கழிவுநீர்.	தொழிற்சாலைக் கழிவு நீர்.	
(1)	(2)	(3)	(4)
பி. எச் (PH)	8.31	8.4	5.5 முதல் 9 வரை
மொத்தமிதக்கும் திடப்பொருட்கள்	30 மி.கி/ லிட்டர்	10 மி.கி/ லிட்டர்	100 மி.கி./லி
மொத்த கரைந்துள்ள திடப்பொருட்கள்	1,848 மி.கி/ லிட்டர்	1,134 மி.கி/ லிட்டர்	2,100 மி.கி/லி
பயோகெமிக்கல் ஆக்ஸிஜன் டிமாண்ட்	22 மி.கி/ லிட்டர்	3 மி.கி/ லிட்டர்	30 மி.கி/லி
கெமிக்கல் ஆக்ஸிஜன் டிமாண்ட்	103 மி.கி/ லிட்டர்	138 மி.கி/ லிட்டர்	250 மி.கி/லி

இந்தத் தொழிற்சாலையில் கீழ்க்கண்ட பிரிவுகளிலிருந்து வாயுக் கழிவுகள் வெளியேறுகின்றன:-

1.	நிலக்கரியில் இயங்கும் கொதிகலன் (மணிக்கு 5 டன்)	1
2.	எண்ணெயில் இயங்கும் கொதிகலன் (மணிக்கு 2 டன் ஒவ்வொன்றுக்கும்)	2
3.	டீசல் ஜெனரேட்டர் (மின் ஆக்சி)	
	160 கெ.வி.ஏ	2
	300 கெ.வி.ஏ	1
	120 கெ.வி.ஏ	3
	110 கெ.வி.ஏ	1

மணிக்கு 5 டன் அளவான கொதிகலனுக்கு 18 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கியும் மணிக்கு 2 டன் அளவான கொதிகலனுக்கு 12 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கியும், மின் ஆக்கி ஒவ்வொன்றுடனும் 3.6 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கியும் பொருத்தப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 30] [திரு. ம. சின்னசாமி]

19-8-1993 அன்று சுற்றுப்புற காற்றின் தர நிர்ணயம் செய்வதற்கான ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வறிக்கையின்படி மாசுக்களின் அளவு கீழ்க்கண்டவாறு வாரியம் நிர்ணயித்துள்ள அளவுகளைவிட குறைவாக இருந்தது அறியப்பட்டது.

	ஆய்வறிக்கையின்படி கண்டறியப்பட்ட அளவு	வாரியம் நிர்ணயித்துள்ள அளவு
காற்றில் மிதக்கும் நுண்துகள்கள்	93-186 மி.கி / க.மீ	200 மி.கி. / க.மீ.
சல்பர் டை ஆக்ஸைடு	8.6 மி.கி / க.மீ	80 மி.கி. / க.மீ.
ஆக்ஸைட்ஸ் ஆஃப் நைட்ரஜன்	9-59 மி.கி / க.மீ	80 மி.கி. / க.மீ.

இந்தத் தொழிற்சாலைக்கு நீர் மற்றும் காற்று சட்டங்களின் கீழ் 31-3-1994 முடிய வாரியத்தின் இசைவாணை வழங்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் சுந்தரம் இண்டஸ்ரீஸ் லிமிடெட், டயர் சர்வீஸ் பிரிவு:-

இந்நிறுவனமானது மாதம் ஒன்றுக்கு 1,415 ரப்பர் சக்கரத்தைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் நாளொன்றுக்கு 0.5 கி.லிட்டர் வடிகால் கழிவுநிரையும், 0.5 கிலோலிட்டர் தொழிற்சாலைக் கழிவுநீரையும் வெளியேற்றுகின்றது. இத்தொழிற்சாலையின் செய்முறைகள் வருமாறு: பழைய டயர்களை ஆய்வுக்கு உட்படுத்துதல், மெருகேற்றுதல், பழுதுபார்த்தல், பூச்சிடுதல், மாதிரி அச்சிலிட்டு வார்த்தல், குளிரவைத்தல் பின்னர் வெளி அனுப்புதல்.

வடிகால் கழிவு நீரானது நச்சுத்தடைத் தொட்டி வழியாக தடைநீக்கம் செய்யப்பட்டு, வழிந்தோடும் கழிவுநீரானது, ரப்பர் பிரிவில் உள்ள வடிகால் கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் மூலம் சுத்திகரிக்கப்படுகின்றது. தொழிற்சாலைக் கழிவு நீரானது, சூரிய ஒளியினால் ஆவியாக்கப்படும் கொதிகலத்தட்டத்தினுள் வெளியேற்றப்படுகின்றது.

இந்தத் தொழிற்சாலையானது ஆரம்ப காலத்தில் ரப்பர் கழிவுகளை எரிபொருளாகப் பயன்படுத்தி வந்தது. அருகிலுள்ள குடியிருப்புகளில்

[திரு. ம. சின்னசாமி] [1994 ஏப்ரல் 30

இருந்து காற்று மாசு குறித்த புகார்கள் பெறப்பட்டமையால், இந்நிறுவனமானது வாரியத்தால், ரப்பர் கழிவுகளை எரிபொருட்களாகப் பயன்படுத்த வேண்டாம் என்றும் தகுந்த காற்று மாசுத்தடுப்பு சாதனங்களை பொருத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது. இதன்படி இந்நிறுவனம் பழைய ரப்பர் கழிவுகளை எரிபொருட்களாகப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டது. இந்நிறுவனமானது தனது 29-3-1994 நாளைய கடிதத்தில், தூசிகளின் கழிவினைக் கட்டுப்படுத்த நீரினைச் சிறு துகள்களாக தெளிக்கும் அமைபினை (Sprinkler System) அமைக்கவிருப்பதாகவும், இது குறித்த வேலைகள் மே மாதம், முதல் வாரத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும் என்று தெரிவித்துள்ளது.

இத்தொழிற்சாலையின் நடவடிக்கைகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முனைப்புடன் கண்காணித்து வருகின்றது.

முற்பகல் 11-50

திரு. ஓ. எஸ். அமர்நாத்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் தெற்கு வட்டம் கோச்சடை கிராமத்தில் அமைந்துள்ள ரப்பர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கோமல் பிளாக் டயர் இயந்திர ரப்பர் பொருட்கள் மற்றும் உலோகம் சம்பந்தப்பட்ட ரப்பர் பொருட்கள் ரப்பர் பேக் போன்றவை தயாரித்து வருகின்றன. இதிலே நாள் ஒன்றுக்கு 3.5 கிலோ லிட்டர் வடிகால் கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது என்றும் 15 கிலோ லிட்டர் உணவு கழிவுநீர் வெளியேற்றப்படுவதாகவும் 35 கிலோலிட்டர் தொழிற்சாலை கழிவுநீர் வெளியேற்றப்படுவதாகவும் இங்கே விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாசு கட்டுப்பாடு வாரியத்தில் அனுமதிக்கப்பட்ட காற்றில் மிதக்கும் இந்த துகள்கள் 200 கன மீட்டர் என்றும் இங்கே அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே இந்த டி.வி.எஸ். ரப்பர் தொழிற்சாலையிலிருந்து அந்த ஆய்வின்படி 186 கன மீட்டர் காற்றில் மிதக்கும் துகள்கள் வெளியேற்றப்படுகின்றது. ஆகவே கிட்டத்தட்ட 14 கனமீட்டர் தான் அரசு சொன்ன வாரியம் அனுமதித்திருந்த அளவுக்கும் இதற்கும் வித்தியாசப்படுகிறது. எனவே, அந்தப் பகுதி ரப்பர் இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிக்கும்போது ஒரு தொழிற்சாலைப் பகுதியாக மக்கள் இல்லாத பகுதியாகத்தான் இருந்தது. ஆனால் இன்றைக்கு அது குடியிருப்புப் பகுதியாக மாறி, அதிகமான வீடுகள் உள்ள குடியிருப்புப் பகுதியாக இருக்கிறது; இந்த நேரத்திலே காற்றிலே மிதக்கும் துகள்கள் அந்த வீடுகளில் உள்ள சுவற்றிலோ அல்லது வீடுகளில் இருக்கும் பொருட்களிலோ படிந்து விடுகிறது. ஒரு வாகனத்தை அல்லது ஒரு காரை

1994 ஏப்ரல் 30] [திரு. ஓ. எஸ். அமர்நாத்]

இரவு நேரத்தில் வெளியே நிறுத்திவிட்டு மறுநாள் காலையில் பார்த்தால் அந்த காரினுடைய கலர் மாறுகின்ற அளவுக்கு இந்த காற்றில் மிதக்கும் துகள்கள் அந்த காரிலே படிகின்றன. பள்ளிப் பிள்ளைகள் கூட மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனாலே நிலத்தடியில் உள்ள நீரின் தன்மையும் மாறுகிறது. இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து 186 கன மீட்டர் அளவுக்கு வரும் காற்றில் மிதக்கும் துகள்களை அகற்றுகின்ற அளவுக்கு வேறு ஏதெனும் மாற்று வழியினை அந்த நிர்வாகம் அமைத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-3-1994 அன்று மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் மாதிரி எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டதில் அதில் மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த அளவை விட மாசுகளின் அளவு குறைவாக இருக்கிறது என்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அதைப்போலவே 19-8-1993 அன்று சுற்றுப்புற காற்றின் தர நிர்ணயம் செய்வதற்கான ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கையின்படி மாசுகளின் அளவு வாரியம் நிர்ணயித்துள்ள அளவைவிட குறைவாக இருந்தது என்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது மதுரையிலே இருக்கின்ற அந்த வாரியத்தினுடைய அதிகாரிகள் செய்திருக்கிறார்கள். ஆகவே நான் மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அதிகாரிகளுக்கு சென்னையிலே தலைமையகத்திலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு ஒரு அறிவுரை வழங்கியிருக்கிறேன். உடனடியாக தலைமையகத்திலிருந்து சென்று மறு ஆய்வு செய்து மறு பகுப்பாய்வு செய்து அதைத் துல்லியமாக கண்டுபிடிக்க வேண்டும் என்று நான் கேட்டிருக்கிறேன். அப்படி செய்கின்றபோது அதனுடைய உண்மையான அறிக்கை வரும். அப்பொழுதும் மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணித்துள்ள அளவுக்கு அதிகமாக இருந்தால் அந்த ஆலையின் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: தலைவர் அவர்களே, ஆரம்ப காலத்திலே இந்த ரப்பர் பேக்டரியிலே இருக்கின்ற கழிவுகளைத்தான் எரிபொருளாகப் பயன்படுத்தி வந்தார்கள். பின்னால் அந்தப் பகுதியினுடைய, குடியிருப்புப் பகுதியினுடைய மக்கள் வந்து புகார் செய்ததை வைத்துக் கொண்டு அங்கே மாசு தடுப்பினுடைய சாதனம் பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டும் இன்றைக்கும் அது பயன்படுத்தாத நிலைதான் இருக்கிறது. அது வெளியிடுகின்ற அந்த காற்றில் மிதக்கும் துகள்கள்

[திரு. ஓ. எஸ். அமர்நாத்] [1994 ஏப்ரல் 30

அந்தப் பகுதியிலே பெரும் கொடிய நோய்களுக்குக் காரணமாகவும் மற்றும் நிலத்தடி நீர் மற்றும் எல்லா இயற்கை சாதனங்களுக்கும் இடையூறாக இருப்பதைக் கணக்கில் வைத்துக்கொண்டு அங்கே ஸ்ப்ரிங்க்ளர் சிஸ்டம் என்ற ஒரு சிஸ்டம் அமைக்க இருப்பதாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அந்த ஸ்பிரிங்க்ளர் ஸிஸ்டத்திற்கு, அரசுக்கு நிர்வாகம் மனு போட்டு அதை கேட்டிருக்கிறதா? அந்த ஸ்ப்ரிங்க்ளர் ஸிஸ்டம் பணி மே மாதத்தில் முடிவடைவதாகச் சொல்லியிருந்தார்கள். மே மாதம் முடிவாகும் தருவாயில் இருந்தாலும் முடியவில்லை என்றாலும் அதற்கு, ஸ்பிரிங்க்ளர் ஸிஸ்டம் வேலை முடியும்வரை தற்காலிகமாக ஏதேனும் நடவடிக்கையை நிர்வாகம் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல இந்தத் தொழிற் சாலையானது ஆரம்ப காலத்தில் கழிவுகளை எரிபொருளாகப் பயன்படுத்தி வந்தது. அருகிலுள்ள குடியிருப்புகளிலிருந்து காற்று மாசு குறித்து புகார் பெறப்பட்ட காரணத்தால் இந்த நிறுவனமானது ரப்பர் கழிவுகளை எரிபொருட்களாகப் பயன்படுத்தக்கூடாது என்றும், தகுந்த காற்று மாசு தடுப்பு சாதனங்களைப் பொருத்துமாறும் வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டது. இதன்படி இந்த நிறுவனமானது பழைய ரப்பர் கழிவுகளை எரிபொருளாகப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டது. இந்த நிறுவனம் தனது 29-3-1994 தேதியிட்ட கடிதத்தில் தூசிகளின் கழிவுகளைக் கட்டுப்படுத்த நீரினை சிறு துகள்களாகத் தெளிக்கும் அமைப்பினை— அதாவது ஸ்பிரிங்க்ளர் சிஸ்டம் அமைக்க இருப்பதாகவும் இது குறித்து வேலைகள் மே மாதம் முதல் வாரத்தில் முடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்போது நாம் மே மாதத்தில் நாளை முதல் மே மாதத்தில்—இருக்கப்போகிறோம். அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் அதை முடிக்காவிட்டால் அந்த ஆலைக்கு ரெனீவல் கொடுக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 30]

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், உரிமைக் குழுவின் தலைவர்.

(மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தினகரன்' நாளிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைகள் பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 168 முதல் 172 வரையிலான 5 அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1993-94-ஆம் ஆண்டிற்கான உறுதி மொழிக் குழுவின் பதினான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்

பேரவைத் தலைவரால் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை வெளியிட்டது பற்றியும், பேரவைத் தலைவர் ஒரு முன்னறிவிப்பினை அனுமதிக்காததற்கு முன்னரே எவரும் அதுகுறித்து வெளியிடக்கூடாது என்ற விதியை மீறியது பற்றியும் 'தினகரன்' நாளிதழ் மீதான உரிமைப்பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், உரிமைக் குழுவின் தலைவர்.

(மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தினகரன்' நாளிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைகள் பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 168 முதல் 172 வரையிலான 5 அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1993-94-ஆம் ஆண்டிற்கான உறுதி மொழிக் குழுவின் பதினான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்

பேரவைத் தலைவரால் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை வெளியிட்டது பற்றியும், பேரவைத் தலைவர் ஒரு முன்னறிவிப்பினை அனுமதிக்காததற்கு முன்னரே எவரும் அதுகுறித்து வெளியிடக்கூடாது என்ற விதியை மீறியது பற்றியும் 'தினகரன்' நாளிதழ் மீதான உரிமைப்பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை.

1994 ஏப்ரல் 30]

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், உரிமைக் குழுவின் தலைவர்.

(மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தினகரன்' நாளிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைகள் பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 168 முதல் 172 வரையிலான 5 அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1993-94-ஆம் ஆண்டிற்கான உறுதி மொழிக் குழுவின் பதினான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்

பேரவைத் தலைவரால் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை வெளியிட்டது பற்றியும், பேரவைத் தலைவர் ஒரு முன்னறிவிப்பினை அனுமதிக்காததற்கு முன்னரே எவரும் அதுகுறித்து வெளியிடக்கூடாது என்ற விதியை மீறியது பற்றியும் 'தினகரன்' நாளிதழ் மீதான உரிமைப்பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை.

1994 ஏப்ரல் 30]

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், உரிமைக் குழுவின் தலைவர்.

(மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தினகரன்' நாளிதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினைகள் பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 168 முதல் 172 வரையிலான 5 அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1993-94-ஆம் ஆண்டிற்கான உறுதி மொழிக் குழுவின் பதினான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்

பேரவைத் தலைவரால் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை வெளியிட்டது பற்றியும், பேரவைத் தலைவர் ஒரு முன்னறிவிப்பினை அனுமதிக்காததற்கு முன்னரே எவரும் அதுகுறித்து வெளியிடக்கூடாது என்ற விதியை மீறியது பற்றியும் 'தினகரன்' நாளிதழ் மீதான உரிமைப்பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

****மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற 'தினகரன்' நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229 (ஆ)-ன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மேற்படி அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்டமன்றப் பேரவையின் விதி 229 (ஈ)-ன்படி இப்பேரவை இசைந்து ஏற்றுக் கொள்கிறது" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

1994 ஏப்ரல் 30] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்டு பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினை பற்றிய இந்தத் தீர்மானத்தின்படி திரு. ஆ. முத்துப்பாண்டியன் என்பவரை உடனடியாகக் கைது செய்து, ஒரு வார சாதாரண தண்டனை நிறைவேற்றுமாறு என்னுடைய வாரண்டை உடனடியாகக் காவல் துறைக்கு இப்பேரவையின் ஒப்புதலோடு அனுப்பி வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

6. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23-கூட்டுறவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994–95ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. கோரிக்கை எண் 23, கூட்டுறவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு பற்றிய 23—ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.58,15,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1666, திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,15,05,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1705, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகை காயிதே-மில்லத் மாவட்டம், திருவாரூர் வட்டம், மாங்குடி கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து திருக்கராவாசலில் அலுவலகம்

1994 ஏப்ரல் 30] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்டு பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினை பற்றிய இந்தத் தீர்மானத்தின்படி திரு. ஆ. முத்துப்பாண்டியன் என்பவரை உடனடியாகக் கைது செய்து, ஒரு வார சாதாரண தண்டனை நிறைவேற்றுமாறு என்னுடைய வாரண்டை உடனடியாகக் காவல் துறைக்கு இப்பேரவையின் ஒப்புதலோடு அனுப்பி வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

6. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 23-கூட்டுறவு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1994–95ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. கோரிக்கை எண் 23, கூட்டுறவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு பற்றிய 23—ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.58,15,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1666, திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,15,05,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1705, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகை காயிதே-மில்லத் மாவட்டம், திருவாரூர் வட்டம், மாங்குடி கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரித்து திருக்கராவாசலில் அலுவலகம்

அமைத்து செயல்படுத்துவது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 58,15,05,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1667, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தலை நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,15,05,000/-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்".

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவையில் அரசுக் கொறடாவாக இருந்து பணியாற்றி எனக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்த மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் முதன்முதலாக தன்னுடைய கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையை விவாதத்திற்காகப் பேரவைமுன் வைக்க வந்திருக்கிறார்கள். பேரவை உறுப்பினர்களோடு இங்கே இணைந்து என்னுடைய பாராட்டையும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு, பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஒலிக்கப்பட்ட கையொலிகளையும் அளிக்கப்பட்ட வாழ்த்துரைகளையும் நான் வணங்குகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குக் காணிக்கையாக்குகின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு

வழங்கப்பட்டுள்ளன. தமிழிலே இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பை@ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அதனை அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின்மீதும் கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தக்க கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், இறுதியில் என்னுடைய பதிலுரையையும், அரசு எடுக்கக் கருதியுள்ள முடிவுகளையும் நான் இந்த அவையில் அளிப்பேன் என்பதைச் சொல்லி, அவசியம் ஏற்பட்டாலன்றி, மாண்புமிகு உறுப்பினர்கள் உரையாற்றுகின்ற போது இடையிடையே பதில் சொல்வதை நான் தவிர்த்து உறுப்பினர்களின் ஐயப்பாடுகளுக்கு இறுதியிலே பதில் அளிப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, இன்று சனிக்கிழமை. பல உறுப்பினர்கள் மாலை நேரம் விரைவில் பேரவை நடவடிக்கைகளை முடித்து ஊருக்குப் போக வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இரண்டு, மூன்று நாட்களாக தினசரி இரவு 10 மணி வரையிலேயும் பேரவையை நடத்தி இருக்கின்றோம். அது பாராட்டத்தக்க அம்சம்தான். ஆனால் இன்று எல்லோரும் ஊருக்குப் போக வேண்டும் என்கிற காரணத்தால் மாலை 6 அல்லது 6½ மணிக்குள் முடித்தால்தான் சிறப்பாக இருக்கும். அதை மனதிலே கொண்டு, காலையில் இருந்தே, நேரத்தின் அருமை கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசக் கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கூட்டுறவு மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக உங்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவு இயக்கம்--இந்த நாட்டை, ஒரு வறட்சி மிகுந்த, வறுமை மிகுந்த இந்த நாட்டை ஒரு வளப்படுத்திய நாடாக்கி, குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், சிறந்த, வளம் மிக்க ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியது கூட்டுறவு என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. 1955-க்குப் பிறகு நம்முடைய

@ 181 முதல் 250 வரையிலான பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

ஒப்பற்றத் தலைவர் காமராஜர் அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராக வந்த பிறகு கூட்டுறவுத் துறைக்கு மிக விரிவாக, மிகச் சிறப்பாக, பல உருவங்களைக் கொடுத்தார்கள். அதற்கு முன்பு ஒரே ஒரு மாநிலக் கூட்டுறவுப் பதிவாளர்தான் இருந்தார்கள். தலைவர் காமராஜர் முதலமைச்சராக வந்த பிறகு, ஒவ்வொரு பகுதி பகுதியாக கூட்டுறவுப் பதிவாளர்களுக்கு, மாநில அளவிற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து, கூட்டுறவுத் துறையை முழுமையாக, சிறந்த ஒரு துறையாக ஆக்கவேண்டும் என்கின்ற உயர்ந்த நோக்கத்தோடு அதனைச் செயல்படுத்தினார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவு இயக்கம் என்பதே பொது மக்களுடைய இயக்கமாகும். அந்தப் பொது மக்களுடைய இயக்கத்திற்கு இன்று தேர்தல் இல்லாது, கடந்த மூன்று ஆண்டுகளாக, தேர்தலே இல்லாமல் அதிகாரிகளை வைத்து கூட்டுறவு இயக்கத்தை நாம் நடத்திக்கொண்டு இருக்கிறோம். இந்த நாட்டிற்கே மிகப் பெரிய பாவத்தை நாம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் கூறாமல் இருக்க முடியாது. அதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு காரணம் சொல்லுவார்கள். கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருந்த நேரத்தில், பலர் வழக்கு மன்றத்திற்குச் சென்று விட்டார்கள். வழக்கு இருக்கிறது, ஆகவே, எங்களால் தேர்தலை நடத்த முடியவில்லை என்று சொல்லுவார்கள். இதற்காகத்தான் நம்முடைய மத்திய அரசு, மாதிரி கூட்டுறவுச் சட்டம் என்று ஒரு சட்டத்தை இயற்றி அதை நம்முடைய ஆலோசனைக்காகவும், நம்முடைய மாநில அரசுகளின் ஒப்புதலுக்காகவும் அனுப்பி வைத்தார்கள். அது என்ன ஆயிற்று என்று இங்கே விளக்கப்படவில்லை. வழக்கு இருக்கிறது என்பதற்காக கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தாமல் இருக்கக் கூடாது என்கின்ற உயர்ந்த நோக்கத்தோடு மத்திய அரசு அனுப்பிய அந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை இப்பொழுதாவது உடனடியாக அமல்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த வேண்டுமென்று முதலில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நம்முடைய நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் இன்று பொதுமக்களை நேரடியாகச் சென்று சந்திக்கின்ற ஒரு நல்ல வாய்ப்பு நமக்கு இருக்கிறது. உதாரணமாக, இன்று நியாயவிலைக் கடைகள் மூலம்தான் எல்லாப் பொருட்களும் கிடைக்கின்ற அளவிற்கு பொதுமக்கள்

மத்தியிலேயும், நியாய விலைக் கடைகள் மூலம் வாங்க வேண்டும் என்கின்ற உணர்வும் இப்பொழுது அதிகமாக ஏற்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 5,000 நியாய விலைக் கடைகள் - 5,000 கூட்டுறவுச் சங்கங்கள் இன்று தமிழகத்திலே இருக்கின்றன. அந்த 5,000 கூட்டுறவுச் சங்கங்களும் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் 13,000 பஞ்சாயத்துக்களுக்கு, 5,000 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம் நம்முடைய அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து, கிட்டத்தட்ட மூன்று நான்கு கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் ஒவ்வொரு சங்கமும் வருகின்ற அளவில் அதனைச் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மிக விரிந்து பரந்து கிடக்கின்ற இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்கு நேரடியான பயன்கள் கிடைப்பது மிகச் சிரமமாக இருக்கிறது.

நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில் நியாய விலைக் கடைகளுக்கு, நம்முடைய நியாயமான பொருள்கள் இருக்கின்றனவே, அரிசி, மண்ணெண்ணெய், சீனி போன்றவற்றையெல்லாம் ஓரளவிற்கு நம்முடைய அதிகாரிகள்—மாவட்ட ஆட்சித் தலைவருடைய பொறுப்பிலே இருக்கின்றவர்கள் நியாய விலைக் கடைகளின் அளவிற்குக் கொண்டு சென்று விடுகிறார்கள். ஆனால் நியாய விலைக் கடைகளிலேதான் அது நியாயமாக நடைபெறவில்லை என்கின்ற குற்றச்சாட்டை இங்கு நான் சுமத்த விரும்புகிறேன். காரணம், அங்கே இருக்கின்ற ஊழியர்கள் பொறுப்பாக நடந்து கொள்வது இல்லை. அதன்காரணமாக, ஏழை எளிய மக்களுக்கு நியாயமான பொருள் கிடைப்பது மிகச் சிரமமாக இருக்கிறது. உதாரணமாக, நம்முடைய மத்திய அரசு கொடுக்கின்ற சலுகைகளோடு இந்த மாநில அரசு கொடுக்கின்ற சலுகைகளையும் சேர்த்து மிகக் குறைந்த விலைக்கு நாம் இன்று அரிசி, மண்ணெண்ணெய், சீனி போன்றவைகளையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், கிராமங்களிலே போய்க் கேட்டால் அதெல்லாம் முறையாகக் கொடுக்கப்படவில்லை என்று கிராம மக்கள் சொல்கிறார்கள். எவ்வளவு அளவு கொடுக்க வேண்டுமோ அந்த அளவும் கொடுக்கப்படுவது இல்லை. இதையெல்லாம் இன்னும் கொஞ்சம் மிகக் கவனமாகச் செய்து, நம்முடைய நாட்டில் நியாய விலைக் கடைகளை மட்டும் மிகத் திறமையாக நாம் செய்து விட்டோம் என்று சொன்னால் மக்களுக்கு நாம் செய்கின்ற நல்ல காரியம் வேறு ஒன்றுமே தேவையில்லை என்கின்ற அளவிற்கு மக்கள் திருப்தி அடைவார்கள்.

அதோடு இப்பொழுது நம்முடைய மத்திய அரசு ஐ.ஆர்.டி.பி. என்ற ஒரு திட்டத்தை ஏழை எளிய மக்களுக்காக விரிவுபடுத்தியிருக்கிறார்கள். நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த 1991 ஆம் ஆண்டு என்ன ஐ.ஆர்.டி.பி. திட்டம் கொடுத்தார்களோ அதைப்போல இரண்டு மடங்கு இப்பொழுது ஐ.ஆர்.டி.பி., வந்து கொண்டிருக்கிறது.

உதாரணமாக என்னுடைய முதுகுளத்தூர் தொகுதியை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், 1991 ஆம் ஆண்டு முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 250 ஐ.ஆர்.டி.பி. கடன்கள் கொடுத்தார்கள். இன்று அது 500 ஐ.ஆர்.டி.பி., ஆக மாறியிருக்கிறது. அந்த அளவிற்கு நம்முடைய மத்திய அரசாங்கம் தாராளமாக ஏழை எளிய மக்களுடைய திட்டத்திற்காக அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-10

அதேபோல, அரிசன மக்களுக்காக—தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 'தாட்கோ' திட்டத்தில் கணிசமான பணம் கொடுக்கிறார்கள். இந்தப் பணம் தாட்கோ என்பது 50 சதவீதம் மானியமாக ஏழை எளிய நம்முடைய தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கொடுக்கப்படுகிறது. அதேபோல ஐ.ஆர்.டி.பி. என்பது மூன்று பங்கு மானியமாக நம்முடைய ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக 8 ஆயிரம் ரூபாய் இப்போது கடன் என்று சொன்னால், அதில் 3 ஆயிரம் ரூபாய் மானியம் போக, 5 ஆயிரம் ரூபாய் கடன் பெறவேண்டும். அந்தக் கடனை நம்முடைய வங்கிகளிலேதான் பெற வேண்டும். இப்போது நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று சொன்னால், எல்லா வங்கி அதிகாரிகளையும் அழைத்து, ஒவ்வொரு வங்கியும் இவ்வளவு கடன் கொடுக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால், கடனை, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்குவதில்லை என்பது ஒரு பெரிய குற்றச்சாட்டு. அதற்கு, தேசியமயமாக்கப்பட்ட வங்கி அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், கடன் வாங்க வருபவர்கள் அந்தக் கடனைத் திரும்பச் செலுத்தக்கூடிய அளவுக்கு முழுமையான தகுதியுடையவர்கள்தானா என்று கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கிறது; இரண்டாவது, கொடுத்த கடனைத் திரும்ப வசூலிப்பது என்பது எங்களால் முடியவில்லை; காரணம், அந்த அளவுக்கு ஆள் பலம் இல்லை; நாங்கள் சென்று, கிராமம் கிராமமாக அந்தக் கடனை எல்லாம் திரும்ப வாங்குகிற சூழ்நிலை எங்களுக்கு இல்லை; ஆகவே, அந்தக் கடன் கொடுப்பதே எங்களுக்குச் சிரமமாக இருக்கிறது; அதைத் திரும்ப வசூல் செய்வதும் சிரமமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது ஒரு

நியாயமான காரணம் என்று நான் கருதுகிறேன். ஆகவே, நம்முடைய ஐ.ஆர்.டி.பி., 'தாட்கோ' போன்ற துறைகளில் வருகிற அந்த மானியத்தையெல்லாம் நம்முடைய கூட்டுறவு வங்கியே பொறுப்பேற்று, கூட்டுறவு வங்கிகள் மூலமாக முழுமையாக அந்தக் கடனைக் கொடுக்க வேண்டும். அவர்களால் திருப்பி வசூல் செய்யவும் முடியும். அந்த முறையிலே, நம்முடைய கிராமக் கூட்டுறவுத் தொடக்க வங்கிகள், அந்தக் கடன்கள் அனைத்தையும், இவைகளே பொறுப்பேற்று, நூற்றுக்கு நூறு பொறுப்பேற்று, கடனைக் கொடுத்துத் திரும்ப வசூலிக்க வேண்டும். கடன் கொடுப்பதிலேகூட, இப்போது ஒரு மிகப்பெரிய உண்மையை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொன்னால், நான் ஒரு வங்கி அதிகாரியைப் பார்த்து, ஒருவருக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். அவர், நாளைக்கு வரச் சொல்லுங்கள் என்று சொன்னார். மறுநாளைக்கே கடன் கொடுத்து விட்டார். அந்தக் கடனை வாங்கியவர் என்ன செய்தார் என்று சொன்னால், அந்தத் தவணைக் காலம் முடிவதற்குள்ளாகவே வட்டியோடு அதனைத் திருப்பிக் கொடுத்து விட்டார். அதற்கு அவர் என்ன காரணம் சொல்கிறார் என்றால், என்னிடம் ஒரு நயாபைசாகூட இலஞ்சலாவண்யம் இல்லாமல் கொடுத்த அதிகாரிக்கு நான் நன்றி சொல்ல வேண்டும் அல்லவா என்று சொன்னார்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

* மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கிற 'தாட்கோ' கடன் தகுதியைப் பற்றிச் சொன்னார். அந்த மக்களுக்குத் தகுதியின் காரணமாகத்தான் 'மார்ஜின் அமவுன்ட்' கொடுக்கிறார்கள். சப்சிடியும், மார்ஜின் அமவுண்டும் வங்கிக்குச் சென்று விடுகிறது. அதன் பிறகுகூட, அவர்கள் ஆய்வு செய்து, கடனைக் கொடுப்பதில்லை. அந்த மக்களுக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அந்த மக்களுடைய தகுதியை உயர்த்துவதற்கு வேண்டியே 'மார்ஜின் அமவுண்ட்' டைக் கொடுத்து விடுகிறோம். ஆனால், அவர்கள் 'மார்ஜின் அமவுன்ட்' டை வாங்கி வைத்துக் கொண்டு, பல மாதங்களாக, ஆண்டுக் கணக்கில் வைத்துக் கொண்டு, கேட்டால், உங்களுக்குக் கடன் இல்லை என்று சொல்கிற நிலைமையை உறுப்பினர் கவனிக்க வேண்டும்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்காக நான் வக்காலத்து வாங்கிப் பேசவில்லை. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் இருக்கிற அதிகாரிகள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். ஒரு வங்கியிலே 3 பேர் அல்லது 4 பேர்கூட இல்லை; அவர்கள் இந்தக் கடன் கொடுப்பதும், அதைத் திரும்ப வசூல் செய்வதும் அவர்களால் முடியாது என்ற காரணத்தினால்தான் மறுக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். ஆனால், நம்முடைய கூட்டுறவு வங்கி என்பது, இன்று பரவலாக கிராமம், கிராமமாக இருக்கிற...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி. கடனைப் பொறுத்தவரையில், மிகவும் சுணக்கமாக இருக்கின்றன என்பதுதான் உண்மை. இன்றைக்குக் கூட்டுறவுத் துறையிலே இருக்கிற வங்கிகள் கொடுக்கிற அந்த உதவிக்கும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கொடுக்கிற அந்த உதவிக்கும் வித்தியாசம் பார்க்கிறபோது, கூட்டுறவு வங்கிகள் அதிகமாகக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் அந்தக் கடனைத் திரும்பப் பெறமுடியவில்லை என்று சொல்வது சரியான குற்றச்சாட்டு அல்ல. காரணம், இன்றைக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இருக்கிற எக்ஸ்டென்ஷன் ஆபிஸரும் சரி, ரூரல் வெல்பேர் ஆபிஸரும் சரி, அந்தக் கடனை வசூல் செய்வதற்கு வங்கி அதிகாரிகளுக்கு அனைத்து உதவிகளையும் இன்றைக்குத் தமிழகத்திலே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே நேரடியாகச் சென்று, அந்த வங்கிகளிலே இருந்து பெறப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்துகிற, அந்தத் தவணைத் தொகையைத் திருப்பிச் செலுத்துகிற ஒரு கட்டாயத்தை உருவாக்கி இருக்கிறார்கள். ஆகவே, அத்தகைய வங்கிகளிலிருந்து எங்களால் வாங்க முடியவில்லை; பணத்தைப் பெற முடியவில்லை என்று சொல்வது முறையாக இருக்காது.

பிற்பகல் 12-15

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய

மாவட்டந்தோறும் வங்கி அதிகாரிகளோடு கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், அந்தக் கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும் போகிறேன். அங்கே இருக்கிற அந்தக் கோரிக்கைகளை அவர்கள் சொல்கிறார்கள். அப்பொழுது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது போல், மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவு போடுகிறார்கள். பி.டி.ஓ. அங்கு சென்று வசூல் செய்ய வேண்டும், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்களே தவிர, எந்த அதிகாரிகளும்-நம்முடைய அதிகாரிகள் இந்த வசூலுக்குப் போவதில்லை. போக முடியாது .அவரவர்களுக்கு ஏராளமான வேலைகள் இருக்கின்றன. இந்த வசூல் வேலைகளுக்கு அவர்களால் செல்ல முடியாது. ஆகவே, முழுமையாக நம்முடைய கூட்டுறவு வங்கிகள் இந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் கடன் கொடுக்கிறபோது சாதாரணமான ஆட்களிடம் கொடுத்து கொடுக்கச் சொல்லக் கூடாது. 500 ரூபாய், 1000 ரூபாய் சம்பளம் வாங்குகின்ற அதிகாரிகளிடத்திலே, 8000 ரூபாய் கடன் கொடுங்கள் என்று சொன்னால் அதிலே கொஞ்சம் சுரண்டலாம் என்ற எண்ணம்தான் வரும். ஆகவே, கடன் கொடுக்கின்றபோது கூடுமானவரை நம்முடைய பெரிய அதிகாரிகள் அங்கே சென்று கொடுக்கலாம். அதையே ஒரு விழாவாக நடத்திக் கொடுக்கலாம். நம்முடைய ஏழை எளிய மக்களுக்குக் கடன் போய்ச் சேருகின்றபோது ஒரு நயா பைசாகூட எடுக்காமல் அவர்கள் கையில் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் திருப்பிக் கொடுப்பார்கள். அந்தச் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் நிறைய நகைக் கடன்கள் கொடுக்கின்றன. அந்தக் கூட்டுறவு வங்கிகளுடைய கட்டிடங்கள், அதனுடைய அமைப்புகள் எல்லாம் நகைகளையெல்லாம் அங்கே வைத்துப் பாதுகாக்க முடியுமா என்கிற ஒரு பயங்கரமான சூழ்நிலை இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறது. பல இடங்களிலே நகைகளே இருக்கின்றதா, இல்லையா என்கிற சந்தேகம்கூட இன்றைக்குப் பலருக்கு ஏற்படுகிறது. உதாரணமாக கடலாடித் தொகுதியில் கீழச்சிறுபோது என்ற ஒரு கிராமத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் இருந்த கூட்டுறவுச் செயலாளர் திடீரென்று ஒரு நாள் மதுரையில் இருக்கிற ஒரு ஓட்டலில் தற்கொலை செய்து கொண்டார் என்ற ஒரு செய்தி வந்தது. அவர் என்ன எழுதி வைத்திருக்கிறார் என்றால், ** என்று எழுதி வைத்துவிட்டு செத்துப்போய்விட்டார். இது ஒரு உதாரணம்தான் நான் சொல்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இந்தமாதிரி எத்தனையோ இடங்களிலே நடந்திருக்கலாம். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வங்கியினுடைய செயலாளர், அவர் மதுரையில் தங்கியிருக்கும்போது தற்கொலை செய்துகொண்டு விட்டார் என்பது அதிகாரபூர்வ உண்மை. ஆனால், அவர் ஏதோ ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறார். அந்தக் கடிதத்தில் சில விவரங்கள் இருக்கின்றன என்றத் தகவலைச் சொல்லியிருக்கிறார். அது சரியாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன். இது புலன்விசாரணையில் இருக்கிறது. இப்பொழுது அந்த வழக்கு விசாரணையில் இருந்து கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தில் இருக்கிறது. நீதிமன்றத்தில் இருக்கிற அந்தக் கடிதம் எந்த அளவிற்கு உண்மை என்பது நிரூபிக்க முடியாது. ஏனென்று கேட்டால் அது வழக்கைப் பாதிக்கக்கூடிய ஒன்றாகும். ஆகவே, அந்தக் கடிதம் பற்றிச் சொன்ன வாசகங்களை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கடிதத்தினுடைய நகலையோ அல்லது கடிதத்தை நான் படித்துப் பார்த்தேன், பொறுப்பேற்கிறேன் என்று சொன்னால் அனுமதிக்கலாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளில் வைக்கப்படுகின்ற நகைகள் எல்லாம், அதிலே பெருமளவுக்கு ஏதோ களவு போவதாகவும், களவு போக முயற்சிகள் நடப்பதாகவும், நகைகளே இருக்கின்றனவா என்கிற ஐயப்பாடு மக்களிடையே ஏற்படுவதாகவும் மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது சொன்னார். நான் என்னுடைய இந்த மானியக் கோரிக்கைக்கு பதில் அளிக்கின்றபோது, அதற்காக இந்த அரசு என்னென்ன திட்டங்கள் எடுத்திருக்கிறது என்பதை விரிவாகச் சொல்ல இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வீடு கட்டும் சங்கம் என்பது இப்பொழுது....

1994 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் சொன்னதில் அந்தக் கடிதத்தில் ** எல்லாம் வேண்டாம். அவர் கடிதம் எழுதிவிட்டுச் மறைந்துவிட்டார் என்று வேண்டுமானால் ஆதாரம் எதுவும் இல்லாமல் சொல்லலாம். அதிலுள்ள விஷயங்கள் என்ன என்பதைக் குறிப்பிட வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடு கட்டும் சங்கங்கள் இன்று ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு சங்கம் இருக்கிறது. இப்பொழுது கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏராளமாக வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறோம். அதேபோல, மீனவ சமுதாய மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறோம். மற்றபடி ஏழை எளிய மற்ற மக்களுக்கெல்லாம் 12 ஆயிரம் ரூபாய், முன்பு 8 ஆயிரம் இருந்தது, இப்பொழுது 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறீர்கள் மானியத்தோடு. இதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தி 25 ஆயிரம் ரூபாய் வரைக்கும் கொடுத்து கிராமங்களில் ஏராளமான வீடுகள் கட்டுகின்ற திட்டத்தை நிங்கள் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காரணம் நம்முடைய அன்னை இந்திரா காந்தி அவர்கள் இந்த நாட்டில் இருக்கிற ஒவ்வொரு ஏழையும் ஒரு நல்ல வீட்டில் குடியிருக்க வேண்டுமென்று கனவு கண்டார்கள். அந்தக் கனவு நனவாகிற வகையில் வீடு கட்டுவதற்கு ஏராளமாகப் பணம் கொடுத்து வீடு கட்டுகின்ற திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அதேபோல் மலைஜாதி மக்களுக்காக ஏராளமாகக் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி அதற்காக நம்முடைய அரசு ஏராளமாக மானியம் கொடுக்கிறார்கள். குறைந்த வட்டியில் கடன் கொடுக்கிறார்கள். நாங்கள் எல்லாம் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தோம். சென்ற ஆண்டு நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில்—அப்போது அவர்கள் சாதாரண சட்டமன்ற உறுப்பினராகத்தான் இருந்தார்—சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது பல பகுதிகளில் சொன்னார்கள். நாங்கள் எடுக்கின்ற தேன், சாம்பிராணி போன்ற பொருட்களை எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களில் குறைந்த விலையில் வாங்கிக்கொண்டு வயிற்றில் அடிக்கிறார்கள், இதைக் கேட்கக்கூடாதா என்று சொன்னார்கள். ஆகவே இதற்கெல்லாம் நம்முடைய

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் ஒரு நிம்மதியை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோல் நம்முடைய கூட்டுறவுத் துறையில் பல சிறப்பான செயல்களை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும். அமைச்சர் அவர்கள் புதிதாக வந்திருக்கிறார்கள். நல்ல விவரமான அமைச்சர் என்று சபாநாயகர் அவர்களே பாராட்டினார்கள். ஆகவே அந்த அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையில் பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. பாப்பா சந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போற்றுவோர் போற்றினாலும், பொறாமைக் கண் கொண்டு தூற்றுவோர் தூற்றினாலும் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற துணிவான கொள்கையோடு 6 கோடி தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்காகவே தினந்தோறும் அயராது திட்டம் தீட்டி பாடுபட்டுவரும் எங்கள் வாழ்வின் கலங்கரை விளக்கமும், தன் கருத்தை எவருக்கும் எதற்கும் அஞ்சாது எடுத்தியம்பும் சிங்கநிகர் தலைவியாம் நீங்கள் ஆட்சி செய்கிற காலத்தில் நாங்கள் வாழ்கிறோம் என்ற பெருமையோடு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி இருக்கும் திசை நோக்கி வணங்கி எனது உரையைத் துவங்குகிறேன்.

கூட்டுறவுத் துறை என்பது ஒரு மிகப் பெரிய துறை. ஒரு சாதாரண துறையாகத் தெரிந்தாலும் கூட்டுறவு என்பது நாட்டு மக்கள் அத்தனை பேரையும் ஈடுபடுத்திக்கொண்டிருக்கிற துறை. எப்படி என்றால் ஏழை எளிய விவசாயிகளுக்குக் கடன் வழங்குகிறார்கள். இங்கே சொல்லப்பட்டது போல் ஆதிதிராவிடர்களுக்குத் தாட்கோ மூலம் கடன் வழங்குகிறார்கள். அதுபோல் பொதுவினியோகத் துறையிலும் பல்வேறு மக்களுக்கு நல்லமுறையில் வழங்கப்படுகிற முறை இருக்கிறது. தொழிலாளர் தோழர்களுக்கும் கூட்டுறவுத் துறை உதவுகிறது. அதேபோன்று சாப்பாட்டுத் துறையில்கூட கூட்டுறவுப் பண்டகசாலை என்று வைத்துக்கொண்டு, அங்காடிகளை வைத்துக்கொண்டு இருக்கிற துறையாக இது இருக்கிறது. ஆகவே தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை மக்களும் ஒட்டுமொத்தமாக கூட்டுறவுத் துறையில் அங்கம் வகிக்கின்ற நிலை இருக்கிறது. அப்பேற்பட்ட துறை ஒரு காலத்தில் நலிவுற்ற நேரத்தில்தான் இயற்கைச் சீற்றத்தாலும்,

வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் தங்கள் கடன்களைக் கட்ட முடியாத நேரத்தில்தான் மறைந்த தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள் அந்தக் காலகட்டத்தில் 150 கோடி ரூபாய் அளவுக்கு கடனைத் தள்ளுபடி செய்து இந்தத் துறை மறுமலர்ச்சி அடையச் செய்தார்கள். அப்படிச் செய்து விவசாயிகள் வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைத்தார்கள். அதன்பிறகு இரண்டாண்டுகள் கழித்து அந்தச் சங்கங்களிலே கடன் பெற்றவர்களுக்கு உதவுகிறோம் என்று, அதாவது 1989 ஆம் ஆண்டில் ஜனதா அரசும், திராவிட முன்னேற்றக் கழக அரசும் ஒரு உண்மைக்கு மாறான விளம்பரத்தைத் தந்தார்கள். கூட்டுறவு வங்கியாக இருந்தாலும் சரி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கியாக இருந்தாலும் சரி ரூபாய் 10000 கடன் தள்ளுபடி என்று சொன்னார்கள். ஆசை யாரை விட்டது என்ற அளவுக்கு அத்தனை விவசாயிகளும், கூட்டுறவுச் சங்கமானாலும் சரி, தேசியமயமாக்கப்பட்ட வங்கியானாலும் சரி கடன் பெற்றவர்கள் எல்லாம் ஏதோ கடன் தள்ளுபடி வரும், வரும் என்ற அளவில் இரண்டாண்டுக்காலம் காத்திருந்தார்கள். அப்படி இரண்டாண்டுக் காலம் ஆகியும் வரவில்லை. கடைசிக் கட்டத்தில் ஒரு அறிவிப்பைச் சொன்னார்கள். 1986—க்கு முன்பு கடன் பெற்றிருந்தால் அந்தக் கடனிலே பாக்கி இருந்தால் 10,000 ரூபாய் தள்ளுபடி என்று சொன்னதன்பேரில் யாருக்கும் அந்தப் பயன் கிட்டவில்லை. காரணம் புரட்சித் தலைவர் அறிவித்த அறிவிப்பின்படி 1986-க்கு முன்பிருந்த கடன்கள் எல்லாம் தீர்க்கப்பட்டுவிட்டன. ஆகவே இந்தக் கடன் பாக்கி இருந்தவர்கள், இந்தத் தவறு காரணமாக அபராத வட்டியில் சிக்கித் தவித்தார்கள். ஆனால் இன்றைக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு இந்த மாமன்றத்தில் ஒரு அறிவிப்பைச் சொன்னார்கள். இந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு இருந்தாலும்கூட கடன் தள்ளுபடி செய்யக்கூடாது என்று நபார்ட் வங்கி கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு ஒரு அறிவிப்பை அறிவித்தார்கள். அதாவது 65 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு போனஸாக அறிவித்து அந்தக் கடனை தள்ளுபடி செய்தார்கள். அன்று இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனைபேரும் பாராட்டினார்கள்.

பிற்பகல் 12-25

ஆகவே, இதுபோன்று இந்தத் துறையைச் சிறக்கச் செய்திருக்கிறார்கள். இன்று குறுகிய காலக்கடன்களுக்காக நமது அரசு கிட்டத்தட்ட 320 கோடி ரூபாயையும், மத்திய காலக் கடன்களுக்காக 55 கோடி ரூபாயையும் ஒதுக்கி இருக்கிறார்கள். இது, இதுவரையில் நடைபெறாத ஒரு

சாதனையாகும். இதற்கு முன் கடன் கொடுப்பதிலே குறியீட்டை எட்ட முடியாத நிலை இருந்தது. சென்ற ஆண்டு குறியீட்டை எட்டியிருக்கிறார்கள். அதற்குமேலும் இந்த ஆண்டு கொடுக்க வேண்டுமென்று, நம்முடைய அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த முயற்சி வெற்றி அடைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இந்தக் கடன் கொடுப்பதில் 'கம்யூனல் ரொட்டேசன்' என்று சொல்வார்களே அதுபோன்று, ஆதிதிராவிடர்கள், சீர்மரபினர்கள் என்று கடன் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள். ஆகவே அவர்கள் ஆதிதிராவிடர்கள் மேலும், சீர்மரபினர்மேலும் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று புரிகிறது. இதிலே குறுகிய காலக் கடனாக 13% மத்திய காலக் கடனாக 24% ஒதுக்கியிருக்கிறார்கள் என்று அறிகிறேன். ஆகவே இந்தக் கடன்கள் ஏழை எளிய மக்களுக்கும், சீர்மரபினர்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் மிகவும் பயன்படும். அதுபோல வியாபார மேம்பாட்டுத் திட்டத்திற்காக 3755 வங்கிகள் மூலம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது ஒரு முக்கியமான நோக்கமாகும். இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் தெரியும், நகர்ப் புறங்களிலே இருக்கின்றவர்கள் என்றாலும் சரி, கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்கள் என்றாலும் சரி, வியாபாரம் செய்வதற்காக கடன் பெறும்போது அதிகமான வட்டிக்கு கடன் பெறுகிறார்கள். அந்த வட்டியே அவர்களை சாப்பிட்டு விடுகிறது. ஈட்டிக்காரர்கள் என்று சொல்வார்களே, அந்த ஈட்டிக்காரர்களிடமிருந்து கடன் வாங்கவேண்டிய அவசியம் தற்போது அவர்களுக்கு இல்லாமல் போகிறது. எனவே வங்கிகள் மூலமாக அந்தக் கடன்களைக் கொடுக்கச் செய்திருப்பதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களையும், இந்தத் துறை அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே இன்னொரு சிறப்பு அம்சம் என்னவென்றால் கிராமப்புறங்களில் இருக்கும் பெண்களுக்கென்று ரூ.500– கடன் கொடுப்பதற்கு, அதுவும் வட்டியில்லாக் கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது எவ்வளவு சீரிய சிந்தனை என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் உணர வேண்டும். கிராமப்புறங்களிலே இருப்பவர்களுக்குத் தெரியும். இந்த வட்டியில்லாக் கடனைக் கொண்டு அவர்கள் காய்கறிகளை வாங்கி விற்பதற்கும், பழங்களை வாங்கி விற்பதற்கும், சிறு தொழில்களாக சந்தை அங்காடிகளுக்கு எடுத்துச் செல்வதற்கும் இந்தக் கடன் அவர்களுக்கு எவ்வளவு உதவியாக இருக்கும் என்று நீங்கள் அறியவேண்டும். இதையும் அவர்களுடைய சீரிய சிந்தனையில் ஏற்று பெண்களுக்காக அளித்திருக்கிறார்கள். இதுபோன்று சென்ற ஆண்டு 2000 பேர்களுக்குத் தந்திருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை மேலும் விரிவுபடுத்தி இன்னும் அதிகமாகத்

1994 ஏப்ரல் 30] [திரு. அ. பாப்பா சுந்தரம்]

தரவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோல் நிலவள வங்கிகள் மூலமாக கடன் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே வியாபாரிகளுக்கும் கடன் கொடுக்கிறார்கள். விவசாயிகளுக்கும் நிறைய கொடுக்கிறார்கள். இருந்தாலும் இதிலே ஒரு சின்ன இடர்பாடு இருக்கிறது. அது என்னவென்றால் கிணறுகளுக்கு டிஸ்டன்ஸ் வைத்திருக்கிறார்கள். 600 அடி என்று ஒரு கொள்கை வைத்திருக்கிறார்கள். நம்முடைய விவசாயிகள் 2, 3 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் என்ற காரணத்தால் 500 அடிகள் கொண்ட அதிகமான கிணறுகள்தான் தமிழ்நாட்டில் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதை சற்றுத் தளர்த்தி, இந்த முறையைத் தளர்த்தி விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவி செய்ய வேண்டும். அதோடு இன்னொரு அறிவிப்பையும் செய்திருக்கிறார்கள். இந்தியாவில் வேறு எங்காவது இருக்கிறதா என்று தெரியாது. நமது மாநிலத்தில் மிக முக்கியமான அறிவிப்பு அது. பொய்த்துப்போன கிணறுகளுக்கு கடனை தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்றால் அது வரவேற்கத்தக்க அம்சமாகும். இது விவசாயிகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்றை அமைச்சர் அவர்களுக்கு சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். அதாவது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் நகைகளின் பேரில் கடன் கொடுக்கும்போது ரூ.7500 வரை கடன் பெறுபவர்களுக்கு 10 ½% வட்டியும், ரூ.7500/- முதல் 10000/- வரை கடன் பெறுபவர்களுக்கு 12% வட்டியும், ரூ.10000/-க்கு மேல் கடன் பெறுபவர்களுக்கு 15% வட்டி என்றும் அறிவித்திருக்கிறார்கள். நமது வங்கிகளில் அத்தனைக்கும் 15% வட்டி என்று சொல்லி இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுக் கடன் தொகையை தனியாருக்கு ரூ.40,000 என்று உயர்த்தியிருக்கிறார்கள். அப்படி உயர்த்தியதற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு அந்த கடன்களிலே ரூ.20000/- வரை 12½% வட்டியும் ரூ.20000/- க்கு மேல், 15% வட்டியும் என்று விவசாயிகளுக்கு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று என்னுடைய கோரிக்கையாக இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல் விவசாய தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் நலிவு அடையாமல் இருப்பதற்கு என்னுடைய சிறிய யோசனையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் 33 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இந்த சர்க்கரை ஆலைகளுக்கான கடன்களை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்குகின்றன. கூட்டுறவு வங்கிகளும் தரவேண்டுமென்று நீங்கள் சொல்லி இருந்தாலும்கூட அங்கே வேலை செய்யக்கூடிய ஆட்கள்/பணியாளர்கள் இல்லாத

காரணத்தால் அந்த வங்கிகளால் கடன் தர இயலவில்லை. காரணம் கரும்பு ஆலைகளுக்கு சப்ளை செய்கின்றபோது 100 கோடி ரூபாய் வரை கடன் பெறுகின்ற விவசாயிகள் பல்வேறு சர்க்கரை ஆலைப் பகுதிகளிலே இருக்கிறார்கள். ஆகவே சர்க்கரை ஆலைப் பகுதிகளிலே இருக்கின்ற வங்கிகளுக்கு நீங்கள் உத்தரவிட்டு சில பணியாளர்களை நியமித்து அந்த விவசாயிகளுக்கு கடன் தரவேண்டும்.

பிற்பகல் 12-30

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அது போல தந்தால் அந்த சர்க்கரை ஆலையிலே இருந்தே நேரடியாகக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பணம் வந்து சேரும். அப்போது நமது கடன்களைப் பிடித்துக்கொண்டு மிச்சத்தை நாம் விவசாயிகளுக்குத் தரலாம். ஆகவே அந்த வகையிலே நாம் வசூல் செய்வதற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்து விளங்குவதற்கும் இது ஒரு அரிய பெரிய சாதனையாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மருதூர் உழவர் சேவை கூட்டுறவுச்சங்கம் ஒன்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அந்த வங்கியிலே சில தில்லுமுல்லுகள் ஏற்பட்டு, அங்கே இருக்கின்ற சில அதிகாரிகளும், அன்று அங்கே பொறுப்பில் இருந்த தலைவர் அவர்களும் சில மோசடிகள் செய்த காரணத்திற்காக அந்த வங்கி இன்னும் திறம்பட செயல்படாமல் இருக்கிறது. அது 10 குக்கிராமங்களை உள்ளடக்கிய ஒரு வங்கி. அந்த வங்கி செயல்படுவதற்கு யார் தவறு செய்தார்களோ அவர்மேல் நடவடிக்கை எடுத்து அவரை நீக்கிவிட்டு அந்த வங்கி திறம்பட செயல்பட உதவிடவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, விவசாயி தன் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு விவசாய விளைச்சல் நிலம் இருக்கவேண்டும். அந்த விளைச்சல் நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அங்கே நலிவுற்றிருக்கிற காலமாக இருக்கிறது. அங்கே வாரிகளை எல்லாம் சரி செய்து, வடிகால்களையெல்லாம் சரி செய்து அந்தக் குளித்தலைப் பகுதியிலே சரி செய்து தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, குளித்தலையிலே பிற்பட்டோர் மாணவர்கள் விடுதியில்லை. அதையும் தாங்கள் ஏற்பாடு செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இங்கே இந்த மானியத்திலே பேச அழைத்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அன்போடு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தம்புசாமி. நீங்கள் சரியாக 5 நிமிடங்களிலே பேசி முடித்துவிடவேண்டும். நீங்கள் எல்லா டிமான்டிலேயும் நிறையப் பேசிக்கொண்டே இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு அதிக நேரம் கொடுத்திருக்கிறோம்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற சங்கங்கள் கிட்டத்தட்டப் பார்த்தால் நஷ்டத்திலே இயங்குகின்ற சங்கம்தான் அதிகமாக கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி தொடர்ந்து நஷ்டம் ஏற்படுவதற்கு முன்னாலேயே அந்த நிறுவனத்தை சீர் அமைப்பதற்கு கொஞ்சம் கடுமையாக முயற்சியை மேற்கொண்டால் இவ்வளவு பெரிய நஷ்டத்தை நாம் ஏற்க வேண்டியதில்லை. கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு வரக்கூடிய லாபத்தை விட நஷ்டம்தான் அதிகக் கணக்கில் போய்க்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலைமை இருக்கிறது. இது அந்த நிர்வாகம், அந்த நிர்வாகம் செயல்படுகிற விதம் அந்த நிர்வாகத்திலே அனுசரிக்கக்கூடிய நடைமுறைகள் இதையெல்லாம் சரிப்படுத்துகிறபோது, இதையெல்லாம் ஓர் ஆய்வு செய்து இந்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகிறபோதுதான் இது எதிர்காலத்திலே லாபத்திலே இயங்குவதற்கான சூழ்நிலைமை உருவாகமுடியும். என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

புதிய பொருளாதார அடிப்படையிலே, அந்த மக்களுக்கு ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்படுத்துகின்ற இந்தச் சூழ்நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள்தான் கைகொடுக்கக்கூடிய ஒரு ஸ்தாபனமாக தமிழகத்திலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பது கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் நிர்வாகத்தைச் சீரமைக்கவேண்டும். ஒழுங்கு படுத்த வேண்டும். விரைவாக அரசு தலையிடுகிறபோதுதான் இவ்வளவு பெரிய நஷ்டத்தை நாம் தடுத்து நிறுத்தமுடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு ஒரு அடிப்படையான காரணம் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு அமைப்பு இல்லாததேயாகும் அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பு இருக்குமேயானால் ஓரளவுக்கு அதைக் குறைத்திருக்கமுடியும். முழுமையான நஷ்டத்திலே இருந்து மீண்டிருக்கமுடியும் என்று சொல்லவில்லை. ஆனால் ஓரளவுக்கு அதைச் சரி கட்டமுடியும். இவ்வளவு பெரிய நஷ்டத்தை எதிர்நோக்கவேண்டிய ஒரு சூழ்நிலைமை இருக்காது என்று கருதுகிறேன். ஆகவே விரைவாக தேர்தல் நடத்துவதற்கு அரசு முயற்சி எடுக்கவேண்டும்.

இப்போது கோர்ட்டிலே தடையாணை இருக்கிறது என்றுகூட சொல்லலாம். ஆனால் கோர்ட்டிலே இருக்கக்கூடிய தடையாணையை வேகமாக நீக்க, வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்காக, நம் தரப்பிலே முயற்சி பண்ணி அந்த தடையை வேகமாக எடுக்க வைத்து அந்தத் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தேர்தல் என்று வருகிறபோது, அந்தத் தேர்தலிலே முழுமையாக நிலச்சுவான்தார்கள், குத்தகைதாரர்கள், சாகுபடியாளர்கள் இவர்கள் அனைவரையும் அங்கத்தினர்களாகச் சேர்ப்பதற்கு கட்டாயப் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏதோ ஒரு பகுதியிலே ஒரு லிஸ்ட் கொடுப்பதும், அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்வதும், இன்னொருவர் ஒரு லிஸ்ட் கொடுப்பதும், அப்படியெல்லாம் சூழ்நிலைமைகள் உருவாகக்கூடாது.

அனைத்து விவசாயிகளையும், சிறு நிலச்சொந்தக்காரர்களாக இருந்தாலும், அவர்கள் குத்தகைதாரர்களாக இருந்தாலும், அவர்களை எல்லாம் முழுமையாக அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே அங்கத்தினர்களாகக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் முழுமையும் சேர்க்கப்படவேண்டும்.

அதே மாதிரி ஒவ்வொரு தொழில்வரியாக, அந்தந்த தொழிலிலே ஈடுபட்டவர்களைத்தான் அங்கத்தினர்களாக ஆக்குவது என்று இருக்கவேண்டும். உதாரணமாக சொல்கிறேன். ஒரு சைக்கிள் கடைக்காரரை கொண்டுபோய் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே உறுப்பினராகச் சேர்ப்பது; இன்னொருவிதமான தொழிலை செய்பவரை இன்னொரு கூட்டுறவு வங்கியிலே உறுப்பினராகச் சேர்ப்பது தவிர்க்கப்படவேண்டும். எந்தெந்தத் தொழிலில் யார் யார் ஈடுபட்டிருக்கிறார்களோ அவர்களை அந்த அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினராகப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சம்பந்தம் இல்லாதவர்களை எல்லாம் இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே இணைக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

முன்னாலே, தேர்தலுக்கு முன்னாலே அங்கத்தினர்களை பதிவு செய்கிறபொழுது சர்வக்கட்சிக் குழுக்களை அமைத்து அதன்மூலம் அங்கத்தினர்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் யார் கொடுத்தாலும், கொடுக்காமல் இருந்தாலும், அதிலே பதிவு செய்தாலும், பதிவு செய்யாமல் இருந்தாலும், அதிகாரிகளுடைய விருப்பத்திற்கு பதிவு செய்வது என்பது நமக்கு

எதிர்காலத்திலே ஒரு தவறான சூழ்நிலைமையை உருவாக்குவதற்கு வாய்ப்பு அளிக்கும். அந்தவகையிலே அதைச் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்தலுக்கு முன்னாலே வாக்காளர்களை நீக்குவது, இப்பொழுது சென்ற தேர்தலுக்கு முன்னாலே பார்த்தோம் என்று சொன்னால், தொடர்ந்து வாக்காளர்கள் எல்லாம் நீக்கப்பட்டிருக்கிறார்கள். உண்மையிலே ஓட்டு உரிமை உடையவர்கள்கூட நீக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தமாதிரி நிலைமைகள் இருக்கக்கூடாது. அவர்களை தேர்தலுக்கு முன்னால் நீக்கக் கூடாது. நீக்க வேண்டிய அவசியம் ஏற்படுமானால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த நிர்வாகக் குழு வந்த பிறகு அதில் யார் யாரை நீக்க வேண்டும், யார் யாரை வைத்திருக்க வேண்டுமென்று அது முடிவு எடுக்கட்டும். அந்த சுதந்திரம் அதற்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது இரண்டு, மூன்று வினாடிகளுக்கு முன்னாலேதான் ஒரு கருத்தை அவரே எடுத்துச் சொன்னார் எந்த எந்தத் தொழிலிலே யார் யார் இருக்கிறார்களோ, அந்தந்தத் தொழிலிலே இருப்பவர்களைத்தான் அந்தந்தச் சங்கங்களிலே உறுப்பினர்களாக ஆக்கப்பட வேண்டும் என்று.

பொதுவாக, வேறு தொழிலில் இருப்பவர்களை வேறு சங்கங்களில் உறுப்பினர்களாக ஆக்கியிருக்கிற அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கின்ற நேரத்தில் கொடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பட்டியலில் இருந்து சில பேரை தேர்தலுக்கு முன்னாலே நீக்கியிருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்லுகின்றபோது, அந்தத் தொழிலுக்கே சம்பந்தம் இல்லாத உறுப்பினர்களை ஒரு சொசைட்டியிலே, ஒரு சங்கத்திலே உறுப்பினர்களாக ஆக்கியிருக்கிறார்கள் என்றால் அவர்களை நீக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அவர்கள் தேர்தலுக்குப் பின்னாலே நீக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அது ஜனநாயக முறையே அல்ல. எந்தெந்தத் தொழிலிலே யார் யார் இருக்கிறார்களோ அவர்கள் அந்தச் சங்கங்களிலே ஈடுபட்டு, அந்தத் தேர்தலை நடத்தினால்தான் அது ஜனநாயக முறைப்படி, எந்தக் காரணத்திற்காக அந்தச் சங்கம் உருவாக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் காரணத்தை பூர்த்தி செய்யும் என்கின்ற அந்தக் கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிலிலே சம்பந்தம் இல்லாதவர்கள் இன்னொரு தொழில் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக இருப்பவர்களை

நீக்குவதிலே எனக்குக் கருத்து வித்தியாசம் கிடையாது. அதே தொழிலில் இருக்கக்கூடிய, அதே சங்கத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் பெரும்பகுதியினர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். வேண்டுமென்றால்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தக் காரணம் உயர் நீதிமன்றத்திலேயும், உச்ச நீதிமன்றத்திலேயும் சொல்லப்பட்டு இருக்கின்ற பல காரணங்களிலே அதுவும் ஒரு காரணமாக இருக்கிற காரணத்தினால் அதைப்பற்றி அவையிலே விவாதிக்கத் தேவையில்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் பாக்கி இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு ஓட்டுப் போடும் உரிமையை மறுக்கக் கூடாது. அவர்களுக்குக் கடன் பாக்கி இருக்கலாம். கூடுதல், குறைவு இருக்கலாம். ஆனால், ஓட்டுப் போடக்கூடிய உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பிறகு ஒரு தேர்தலுக்குப் பிறகு . இன்னொரு நிர்வாக இயக்குநரைத் திணிக்கக் கூடாது. அப்படித் தொடர்ந்து திணிப்பதனால் பல்வேறு பிரச்சினைகள் அதில் வருகிறது. முன்னால் தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக இருக்க வேண்டுமே தவிர தேர்தலுக்குப் பிறகு வெளியில் இருந்து எந்த ஒரு நபரையும் அதிலே திணிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, விற்பனைச் சங்கங்களிலே பார்த்தால் நஷ்டம் வந்திருக்கிறது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மார்க்கெட் நிலவரப்படி பொருள்களைக் கொள்முதல் செய்ய வேண்டும். ஒரு டெண்டர் மூலம் கொள்முதல் செய்வதன் மூலம் ஒரு நேரத்திலே அந்தப் பொருளைக் கொடுக்கக்கூடிய முதலாளிகள் ஒரு 10 பேரே சேர்ந்து அளிக்கிறபோது கொஞ்சம் கொஞ்சம் குறைத்து போட்டுவிட்டு, அந்தப் பொருளை வினியோகிக்கிறபோது, 10 பேரும் சேர்ந்து கொடுக்கிற ஒரு நிலைமை இந்த டெண்டர் முறையிலே இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்காக அவ்வப்போது மார்க்கெட் நிலவரம் என்ன நிலைமையில் இருக்கிறதோ அந்த மார்க்கெட் நிலவரத்திலே அந்தப் பொருளை வாங்கிச் சேமித்து எதிர்காலத்திலே அதை வினியோகித்தால் தான் ஒரு நட்டத்தைப் பாதுகாப்பதற்கான நிலைமையை உருவாக்க முடியும். அதுபோல, கடன் வாங்கக் கூடியவர்களில்

உண்மையிலே நலிந்தவர்கள் யார் என்று ஆய்வு செய்து கடன் வழங்கப்பட வேண்டும். யாருக்கோ, சிபாரிசு செய்பவர்களுக்கு கடன் வழங்குகிற நிலைமை என்பது எதிர்காலத்திலே மாற்றப்பட வேண்டும். இப்பொழுது வங்கியின் மூலம் ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்கப்படுகிறது. அதனால் அதற்கு நிறைய, பல கோடிக்கணக்கான ரூபாய்கள், மானியங்கள் இதர வங்கிகளுக்கு கொடுக்கப்படுகின்றன. நம்முடைய கூட்டுறவு வங்கியின் மூலம், அந்தக் கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதன்மூலம் அதிலே கிடைக்கிற மானியத் தொகை நமக்கு அதிகரிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

பிற்பகல் 12-40

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகுதி அடிப்படையிலே சிலரைச் சேர்க்க வேண்டுமென்றும், சிலரைச் சேர்க்கக்கூடாது என்றும் சொல்லுகிறார்கள். கூட்டுறவுத் துறையிலேயும் சரி, வேறு எந்தத் துறையிலேயும் சரி, தேர்தல்கள் வந்தால் தகுதியின் அடிப்படையிலே தவிர, பெண்கள், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் இருக்க வேண்டுமென்றும் ஒரு வழிமுறை வைத்திருக்கிறார்கள். கோவாப்ஷன் முறையிலும் வரலாமென்று வைத்திருக்கிறார்கள். அந்த முறை தேவையில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தம்புசாமி, முறையாக ஒரு சொசைட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு, மற்ற அங்கத்தினர்களைத் திணிக்கக்கூடாது என்று நீங்கள் சொன்னீர்கள். அதற்கு பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் கேட்கிறார்கள். கோஆப்ஷன் முறையில், ஷெட்யூல்ட் கேஸ்ட், பெண்கள் இவர்களுக்கு 30% வரவில்லை என்று சொன்னால், டைரக்டர்களாகப் போடலாம். அப்படிப் போடக்கூடாது என்று நீங்கள் கருதுகிறீர்களா என்று அவர் கேட்கிறார்.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தேர்தல்களில் அவரவர்களுக்கு என்று விகிதாச்சாரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த விகிதாச்சார அடிப்படையிலேயே உறுப்பினர்களை தேர்தலிலே நிறுத்தி, வெற்றி பெற வைக்க வேண்டுமென்பதுதான் நான் சொல்வது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி, அவர் கேட்பது, அந்தக் குறிப்பிட்ட சதவிகிதம் அளவுக்கு வரவில்லை என்று சொன்னால், கோஆப்ஷனில் போடுவதை நீங்கள் எதிர்க்கிறீர்களா என்று கேட்கிறார்.

திரு. வே. தம்புசாமி : அதை நான் எதிர்க்கவில்லை. முன்னாலேயே சதவிகித அடிப்படையிலே நிறுத்தி, வெற்றி பெற வைக்க வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் சாகுபடி முறைகள் என்பது மாற்றப்படுகிறது. குறிப்பாக மழையை நம்பி சாகுபடி செய்ய வேண்டியிருக்கிறது. தண்ணீர் கிடைத்தவுடன் சாகுபடி செய்ய வேண்டியிருக்கிறது. கோடை சாகுபடியைக்கூட விதைப்பு முறை சாகுபடியாகச் செய்யவேண்டியிருக்கிறது. அப்படி சாகுபடி முறையிலே மாறுதல் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், கடன்கள் வழங்குவதிலும் மாறுதல்களை ஏற்படுத்த வேண்டும். ஆனால் தண்ணீர் வரும்போது, அவசரமாக நடும்போது, அவர்களுக்குக் கடன் கிடைக்கவில்லை, உரம் கிடைக்கவில்லை. நடவு வேலை முடிந்த பிறகு, அந்தக் கடன் கிடைப்பதால் வேறு வேலைகளுக்குச் செலவு செய்ய வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டு, எந்த நோக்கத்திற்காக அந்தக் கடன் பெறப்படுகிறதோ அந்த நோக்கத்திற்குப் பயன்படாமல் போகிற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே அவ்வப்போது காலமறிந்து கடன் வழங்கும் முறைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணி அடிக்கப்பெற்றது)*

அடுத்து பழைய கடன் பாக்கி என்ற பெயரிலே கூட்டுறவுச் சங்கக் கடனாக இருந்தாலும், வீடு கட்டும் சங்கக் கடனாக இருந்தாலும், நில அடமானச் சங்கக் கடனாக இருந்தாலும், என்ஜின் வாங்கிய கடனாக இருந்தாலும், விவசாயக் கடனாக இருந்தாலும் நீண்டகாலமாக பாக்கி வைத்து, அந்த பாக்கியை வசூல் செய்ய எடுக்கும் நடவடிக்கைக்கு இருக்கிற கடனைவிட கூடுதலாகச் செலவாகிறது. அதனால் அந்தக் கடன் முழுமையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறு விவசாயிகள், ஆதிதிராவிட பழங்குடி மக்கள், பின்தங்கியவர்கள் எல்லாம் வீடு கட்டக் கடன் வாங்கியிருக்கிறார்கள். அதுவும் அவர்கள் வாங்கிய கடனைவிட இரு மடங்கு உயர்ந்து, இன்றைக்கு ஜப்தி நடவடிக்கைக்கான நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. இதையும் தள்ளுபடி செய்ய வேண்டும். அதேமாதிரி எல். டி. பாங்கில் கொடுத்துள்ள கடன். சிறு விவசாயிகளுக்கு, அரை ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு என்ஜின் வாங்கக் கடன் வழங்கப் பட்டிருக்கிறது. இது இன்றைக்கு ஒன்றேகால் மடங்கு உயர்ந்திருக்கிறது. அதையும் தள்ளுபடி செய்வதற்கு அமைச்சரவர்கள்

நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த வருஷம் வேளாண்மைக் கடன் என்பதில், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அங்கே வெள்ளம், புயலால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் கடனையும் தள்ளுபடி செய்து, விவசாயிகளுக்கு எதிர்காலத்திலே ஒரு வாழ்வை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகள் விரும்புகிற உரம் வழங்கப்பட வேண்டும். எங்கள் மாவட்டத்திலே விவசாயிகள் அதிகமாக விரும்புவது சூப்பர் உரம்தான். இன்றைக்கு அது கிடைக்கவில்லை. கோடை புழுதி உழுகிறபோது, சூப்பர் போட்டு உழுது, மழை பெய்த பிறகு பயிராக்குகிறார்கள். தண்ணீரை வைத்துக் கொண்டுதான் உரம் போட வேண்டியிருக்கிறது. அந்த முறையிலே சூப்பர் அதிகமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அடுத்து மாங்குடி கூட்டுறவுச் சங்கம் ஏறத்தாழ 12 கிலோமீட்டர் தூரத்திலே இருப்பதால், விவசாயிகள் அவ்வளவு தூரம் வந்து அந்தச் சங்கத்தோடு தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே மாங்குடி சங்கத்தை இரண்டாகப் பிரித்து, திருக்கடைவாசலில் ஒரு கூட்டுறவுச் சங்கமும், மாங்குடியிலே ஒரு கூட்டுறவுச் சங்கமும் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல கொரடாச்சேரி கூட்டுறவுச் சங்கத்தினுடைய அலுவலகம் இன்றைக்கு இடிந்து கீழே விழும் நிலையில் இருக்கிறது. விரைவாக அதைப் புதிதாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏறத்தாழ 4 வருடங்களுக்கு முன்பு 37,000 ரூபாயில் கட்ட அனுமதி கொடுக்காததால், இன்றைக்கு 1½ இலட்சம் ரூபாய் அளவுக்கு அது வந்து சேர்ந்திருக்கிறது. ஆகவே அதை விரைவாகக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, ஆதமங்கலம் கூட்டுறவுச் சங்கத்தை இரண்டாகப் பிரித்து கிள்ளுகுடியில் ஒன்றும், ஆதமங்கலத்தில் ஒன்றும் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

அதேநேரத்திலே இன்னொரு விஷயம். உரக்கூடமும் உர அலுவலகமும் ஒரே கட்டிடத்தில் இயங்குகிறது. அப்படி இருப்பதால் அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே உர சேமிப்புக் கூடங்களும், உரம் வழங்கும் அலுவலகமும் தனித்தனியாக இருக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வகையிலே எதிர்காலத்திலே கூட்டுறவுப் பணிகள் இருக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பிறகு கூட்டுறவு அங்காடிகள் இருக்கின்றன. கிராமப்புறத்திலே கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கடைகள் இருக்கின்றன. ஏறத்தாழ 5, 6 கிலோமீட்டர் தூரம் கூட இருக்கின்றன. உதாரணமாக திருவாரூர் தொகுதியில் கீவளூர் ஒன்றியத்திலே உள்ள 119. அனக்குடி பஞ்சாயத்தில், அனக்குடியில் பசிக்கிறவளியில் அந்த கூட்டுறவுக் கடை இருக்கிறது. ஆனால் சுந்தரபாண்டியிலிருந்து போகவேண்டுமென்றால் 5 கிலோ மீட்டர் போகவேண்டியிருக்கிறது. அதுபோன்ற தூரமாக இருக்கிற இடங்களைப் பார்த்து, எல்லையை வரையறுத்து, தூரமாக இருக்கிற இடங்களுக்கு வேறு ஒரு கடையை ஏற்பாடு செய்து, அல்லது வாரத்திற்கு 2 முறை வேறு இடத்திலிருந்து அவர்கள் டெபுடேஷன் முறையில் வந்து பொருள்கள் வினியோகம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அந்த வகையிலே கூட்டுறவு ஸ்தாபனங்கள் எதிர்காலத்தில் சிறப்பாக அமைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கேட்டு, இதிலே கருத்துக் கூறுவதற்கு அனுமதித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி அ. தி. சரஸ்வதி.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு ஐந்து நிமிடங்கள் தாங்கள் சேர்த்துக் கொடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு சகாப்தம். காலத்தின் நெடிய வரலாறு. உலகப் பெண்கள் வரலாற்றில் புரட்சித்தலைவி அவர்கள் ஒளி மிகுந்த அத்தியாயம். தமிழக வரலாற்றில் தங்கக் கிரீடம். தமிழக வரலாற்றில் தலைசிறந்த பெண் கவிஞர்களைக் கண்டிருக்கிறோம்-அவ்வையார், காக்கை பாடினியார் போல. தலைசிறந்த குடும்பத் தலைவியைக் கண்டிருக்கிறோம் - வள்ளுவர் கண்ட வாசுகியைப் போல. தலைசிறந்த பக்தியாளர்களைக் கண்டிருக்கிறோம் - காரைக்கால் அம்மையார், திலகவதி அம்மையார், ஆண்டாளைப்போல. ஆனால் தலைமைப் பண்பு மிக்க ஒரு அரசியல் தலைவியை, தலைசிறந்த ராஜதந்திரியை கடந்த 2500 ஆண்டு கால தமிழக வரலாற்றில் (மேஜையைத் தட்டும் ஒலி) முதன்முதலாக நாம் புரட்சித்தலைவி அவர்களைத்தான் காண்கிறோம்.

ஓர் அரசும் அமைச்சும் எவ்வாறு இருக்கவேண்டும், அரசின் தனிக்குணங்கள் என்னென்ன என்று வள்ளுவர் கனவு கண்டிருக்கிறார்.

தன் கால நிலைக்கேற்ப வள்ளுவர் கூட ஒரு ஆண் மகனைத்தான் அரசனாகக் கண்டாரே அன்றி, பெண்ணரசியைக் கற்பனை செய்யவில்லை. ஒருவேளை வள்ளுவர் இன்றிருந்தால் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியைக் கண்டு, அவர்களின் சிந்தனையைக் கண்டு, புதிய குறள் தொடுத்திருப்பார். புதிய பொருட்பால் நமக்குக் கிடைத்திருக்கும். அந்த அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் புதிய வரலாறு படைத்து வருகிறார்கள். காலம் சிலரைத் தலைவராக உயர்த்துகிறது. காலத்தை சில தலைவர்கள் உருவாக்குகிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தை உருவாக்கும் தலைவி. அவர்களால் இந்த காலக்கட்டம் பெருமை கொள்கிறதேயன்றி, இந்த காங்கிரஸ் இயக்கத்தால் பெருமைப்படவில்லை. முதலில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் காங்கிரஸ் கட்சி பெருமையடைகிறது. காலத்தின், தமிழ்த்தாயின் தவப்பயனாய் காலத்தின் தேவையறிந்து தலைமைப் பொறுப்பை ஏற்றவர்தான் நம் புரட்சித் தலைவி அவர்கள் ஆவார்கள். இந்த யுகத்தின் தலைசிறந்த எடுத்துக்காட்டாய், பெண்மணியாய், விளங்கும் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு புதுயுகத்தையே உருவாக்கும் மகத்தான பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். தமிழக வரலாறு மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு முன் எப்படி இருந்தது, பின் எப்படி இருக்கிறது என்று வரலாற்று அறிஞர்கள் இனி கால நிர்ணயம் செய்வார்கள். ஆனால் காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாண்புமிகு இதயதெய்வத்தின் வரலாற்றைப் பார்க்க நேரம் இல்லாமையால், நமது சட்டசபை நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். சேர, சோழ, பாண்டியர் காலம், சாளுக்கியர், பல்லவர் காலம், நாயக்கர் காலம் என்றுதான் நாம் தமிழக வரலாற்றை இதுவரையில் கண்டிருக்கிறோம். ஆனால் இப்போதுதான் நாம் முதன்முதலாக மாண்புமிகு புரட்சித் தலைவி காலம் என்று அவரது திருப்பெயரில் ஒரு முத்திரைக் காலத்தைப் பார்க்கிறோம். இந்த மாபெரும் வெற்றி, அவர் தனது அயராத உழைப்பால் தானே ஈட்டிக்கொண்டது. அதில் எள்முனை அளவும் இன்னொருவர் உரிமை கொண்டாட முடியாது. அந்த ஒளிவிளக்கின் முன்னே நாம் எல்லாம் மின்மினிப் பூச்சிகள். அந்த நந்தாவிளக்கு இந்த நாட்டு நலனுக்காக, எங்கள் வாழ்நாளைத் தம் வாழ்நாளாகத் தொண்டுபுரிய எல்லாம் வல்ல பன்னாரி அம்மனை வணங்கி இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையில் பேச விழைகிறேன்.

இந்த மானியத்தில் பேசமுற்படுமுன் ஒரு சிறந்த சட்டம் தெரிந்த வல்லுநரை, நமது கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களை, இந்தத் துறைக்கு அளித்த, நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதன்முதலில் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 12-50

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மகாத்மா காந்தி அவர்கள், கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் கூட்டுறவு மூலம் உயரும் என்று சொன்னார்கள். ஆனால், இன்று நம்மை எல்லாம் வாழவைக்கும் இதய தெய்வத்தின் பொற்கால ஆட்சியில்தான் மகாத்மா காந்தி அவர்களின் கனவு, கூட்டுறவுத் துறை மூலம் இன்று நனவாக்கப்படுகிறது. அது, இந்த காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியமாட்டேன் என்கிறது. விவசாய மக்களின் நல்வாழ்வு சந்தோஷமாக இருப்பதே கூட்டுறவால் தான்.

மத்திய கூட்டுறவு வங்கியில் மகளிர் கிளைகள் துவக்கப்பட்டுள்ளன. பெரியார் மாவட்டத்தில்கூட மகளிர் கிளை துவக்கப்பட்டுள்ளது. அதற்காக முதன் முதலில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். தமிழகத்தில் 14 மகளிர் மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் நிறுவப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. முதன் முதலில் மகளிர் கூட்டுறவு வங்கியை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறுவி இருக்கிறார்கள். மேலும் 7 கிளைகள் நிறுவப்படும் என அரசு அறிவித்துள்ளது. எனது தொகுதி சத்தியமங்கலத்திலும் மகளிர் கூட்டுறவு வங்கி நிறுவ வேண்டுமென அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவுச் சங்கங்களிலும், மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் இந்த அரசு பெண்கள் நலனில் அக்கறைகொண்டு அதிகாரிகளை அதிகமாக நியமிக்க வேண்டும் என அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் விதிகளின்படி வழங்கப்படும் அந்தத் தொகைகளை குறுகிய காலக் கடனாக கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளின் மூலம் இன்றியமையாப் பொருட்களை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஏழை எளிய மக்களுக்கு விநியோகித்து வருகிறது. நியாய விலைக் கடைகளில் விநியோகம் செய்யப்படும் பொருட்களில் பல முறைகேடுகளும் நடந்து வருகிறது. காலதாமதமும் ஏற்படுகிறது. எனவே, அனைத்துப் பொருட்களையும் எந்த நேரமும் சென்று பொது மக்கள் வாங்கும் அளவுக்கு—கோதுமை, மண்ணெண்ணெய், பாமாயில், சர்க்கரை, அரிசி ஆகியவற்றை எந்தநேரமும் கூலித் தொழிலாளர்கள் சென்று வாங்கும் அளவுக்கு அமைச்சர் அவர்கள்

நியாய விலைக் கடைகளில் ஏற்பாடு செய்ய வேண்டும். சில இடங்களில் பெண்கள் கூட்டம் அதிகமாக இருக்கிறது. அவர்கள் வேலைகளுக்கு எல்லாம் செல்ல வேண்டியிருக்கிற காரணத்தால், அந்த கூட்டங்களைத் தவிர்க்க டெய்லி வேஜஸ் - தினக் கூலி அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும். அப்போதுதான் பொது மக்களுக்கு பிரச்சினை இல்லாமல், அவர்கள் தொழிலும் பாதிக்காமல் இருக்க ஒரு வாய்ப்பு ஏற்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 2 நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். நீங்கள் வந்துவிட்டதால் 5 நிமிடம் சேர்த்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, நான் வந்ததற்குப் பிறகு 2 நிமிடம்.

திருமதி அ. தி. சரஸ்வதி : கூட்டுறவுச் சங்கங்களில் செக்ரட்டரிகளை டிரான்ஸ்பர் பண்ணவே இல்லை. ஐ.ஏ.எஸ்., ஐ.எஃப்.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற அதிகாரிகள் எல்லாம் மாற்றப்படுகிற இந்தக் காலத்தில்-எம்.எல்.ஏ. க்கள் கூட அடுத்த தொகுதியில் நின்று, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரலை நீட்டினால், அந்த திசையில் யார் நின்றாலும் வெற்றி வாகை சூடும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில், கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் செக்ரடரிகளை மாற்ற முடியாதது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து நம்முடைய முதல்வர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, செக்ரடரிகளை மாற்றும்படி ஒரு ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்குமே வேண்டப்பட்ட ஒரு செய்திதான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பன்னீர்செல்வம், உங்கள் இருக்கைக்குப் போங்கள். அமைச்சர், உறுப்பினர்கள் பேசுவதைக் கேட்பதற்காக அமர்ந்து இருக்கிறார்.

திருமதி அ. தி. சரஸ்வதி : காலம் காலமாக விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனக்குத் தெரிந்த மட்டிலும், கடந்த மூன்று ஆண்டுகளாகத்தான் நல்ல மழை பெய்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக மழையே இல்லாமல் இருந்தது. நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில்தான் மழை பூமாரி பொழிகிறது. ஆறு, குளம், டேம் எல்லாம் நிரம்பி வழிகிறது. எங்கு பார்த்தாலும் தண்ணீர் ஆறாகப் பெருகி ஓடுகிறது. விவசாயிகளின் வாழ்க்கையில் இனிமேல்தான் அவர்கள் வாழ்வு ஒளி பெறும்.

விவசாயிகள் பெரும்பாலும் கூட்டுறவு வங்கிகளை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன்களை திருப்பித் தர முடியாத சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அதைத் திருப்பித் தரக் கூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. அவர்களுடைய சூழ்நிலை எப்படி இருக்கிறது என்றால், கிணற்றில் தண்ணீர் இருக்கும்போது விவசாயம் செய்கிறார்கள்; கிணற்றில் தண்ணீர் வற்றிய பிறகு, அவர்கள் தங்களுடைய சொந்த உடைமைகளை, நகைகளை, நிலங்களை அடமானம் வைத்துவிட்டு - ஒரு லட்சம் மதிப்புள்ள நிலம் இருந்தால், அதை 10 ஆயிரத்துக்கு அடமானம் வைத்தால், அந்த 10 ஆயிரத்தைக் கூட அவர்கள் திருப்பிக் கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கின்றார்கள். எனவே, அவர்களுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் கெடுபிடி வசூல் செய்யக் கூடாது. மேலும் 6 மாத காலத்திற்காவது அவகாசம் கொடுத்து, தவணை முறையில் கடன்களை வசூலிப்பதற்கு அமைச்சர் அவர்கள் உத்திரவு பிறப்பிக்க வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டில் 18 பழம்பெரும் கூட்டுறவு சங்கங்கள்-74 ஆயிரத்து 851 உறுப்பினர்களைக் கொண்ட சொசைட்டிகள் செயல்பட்டு வருகின்றன. சத்தியமங்கலத்தில் மலைவாழ் மக்கள் 2500 பேர்களை உறுப்பினர்களாகக் கொண்ட சொசைட்டி இயங்கிவருகிறது. ஒரு தனி அலுவலரால் இந்த சொசைட்டியில் இன்று 50 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மத்திய கூட்டுறவு வங்கிக்கு 30 லட்சம் ரூபாய் கட்டப்பட வேண்டும். இந்த அளவுக்கு வந்து, இந்த சொசைட்டி மூடும் தருவாயில் இப்போது உள்ளது. அதைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் பல முறை சொல்லி இருக்கிறேன். அவர்களும் ஏற்பாடு செய்யப்படும் என்று கூறினார்கள். அந்த அதிகாரி மாற்றப்பட்டதற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். வருகிற காலத்தில் இப்படிப்பட்ட தனி அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

மேலும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பொற்கால ஆட்சியில் தான் பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. மண்டல இணைப் பதிவாளர், மற்றும் இணைப்பதிவாளர் (பொது வினியோகத் திட்டம்) தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் அலுவலர்களைக் கொண்டு கூட்டுறவு நியாய விலைக் கடைகளை திடீர் ஆய்வு செய்ய டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் ஒரு சிறப்பு பறக்கும்படை அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு புரட்சித்தலைவி அவர்களின் பாதம்தொட்டு

நன்றி தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் ஏற்படும் விற்பனையாளர்களின் காலியிடங்களை நிரப்புவதற்கு மாவட்டந்தோறும் ஒரு மாவட்ட தேர்வுக் குழு அமைக்க புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது. அந்தக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர், மலைவாழ் மக்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரையை முடித்துவிடலாம்.

திருமதி அ. தி. சரஸ்வதி : அரிசன மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசு பல சலுகைகளை வழங்கியுள்ளது. அதற்கு புரட்சித்தலைவி அவர்களின் பாதம்தொட்டு வணங்கி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல பொருளாதாரத்தில் நலிவுற்ற, பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கும், விவசாய கூலித் தொழிலாளர்களுக்கும் அந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். ஏனென்றால் விவசாயிகள் கடந்த 10 ஆண்டு காலமாக மழையின்மை காரணமாக அவர்கள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். நமது இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தான், அவர்கள் ஓரளவுக்காவது வாழ்வில் நிம்மதியாகத் தொழில் செய்ய முடிகிறது. இந்த மாமன்றத்தில் உள்ள அனைவரும் விவசாயிகளைப் பற்றி நன்கு உணர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்களாக இருக்கிறார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரையை முடித்து விடலாம். (குறுக்கீடு) கடைசியாக ஒன்று சொல்லி முடியுங்கள்.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்கள் மீது தனி கவனம் செலுத்தி விவசாயத்திற்கு ஒரு தொழில் ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டு, தொகுதி பற்றி சின்ன கோரிக்கை.(மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடம் இல்லை. ஒரு கோரிக்கை மட்டும் சொல்லுங்கள்.

திருமதி. அ. தி. சரஸ்வதி : சத்தியமங்கலம் பகுதியில் காவலர் குடியிருப்புகள் கட்டப்படாமல் இருக்கின்றன. ஆசனூர், தாளவாடி,கடம்பூர், பங்களாபுதூர் ஆகிய பகுதிகளில் தமிழக முதல்வர், எங்களை வாழ வைக்கும் தெய்வத்தாய் அவர்கள் காவலர் குடியிருப்புகளை கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தீயணைப்பு நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு புரட்சித்தலைவி அவர்கள் அறிவித்த திட்டத்தில் தீயணைப்பு நிலையத்திற்கும் நிதியொதுக்கி செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு, போக்குவரத்திலே என்னுடைய தொகுதி..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போக்குவரத்துத் துறை அமைச்சர் உங்கள் மாவட்ட அமைச்சர்தான். நீங்கள் சொல்வதை எல்லாம் செய்வார், போதும், உட்காருங்கள்.

திருமதி அ. தி. சரஸ்வதி : எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. மாணிக்கம்.

திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95 ஆண்டு கூட்டுறவு மானியக் கோரிக்கையில் பேரவையில் பேசுகிற வாய்ப்பை வழங்கிய தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்கிறபோதே வரலாறு படைக்கும் தன்னிகரில்லாத தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர், 6-1/2 கோடி தமிழர்களின் இதயங்களில் தெய்வமாக வீற்றிருக்கிற, தரணியெல்லாம் போற்றும், தாய் உள்ளம் கொண்ட தங்கத் தலைவி, ஆயிரம் ஆயிரம் சோதனைகள் வந்தாலும், அவைகளை எல்லாம் தூள் தூளாக்கிவிட்டு புதிய பொற்காலம் படைக்கும் பொன்மனத் தலைவி, கொலைப் பட்டியலில் தன்னுடைய பெயர் வந்தபோதும், என் உயிர் போனாலும் பரவாயில்லை, நாடு அமைதிப் பூங்காவாக மாற வேண்டும் என்பதற்காக விடுதலைப்புலிகளை ஒடஓட விரட்டிய (மேசையைத் தட்டும் ஒலி) புறநானூற்றின் புரட்சித்தாய், நியாயங்களை குழிதோண்டிப் புதைக்கும் சில அரசியல் குள்ள நரிகள், அரசியல் சட்டத்தில் உள்ள 356-வது பிரிவை காட்டி அச்சுறுத்திய போதும், நான் மக்களை சந்திக்கிறேன் என்றுகூறி, மக்கள் சக்தி படைத்த ஒரே தலைவி, மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

கூட்டுறவே நாட்டுயர்வு, தனி மரம் தோப்பாகாது, தங்கம் செய்யாததை சங்கம் செய்யும் என்பார்கள். அதற்கிணங்க தமிழகத்தில் கடந்த 3

ஆண்டுகால புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் கூட்டுறவு இயக்கம் புதிய வேகம் கொண்டு கிராமங்களில் நல்ல வளர்ச்சியை அடைந்திருக்கிறது. கூட்டுறவுச் சங்கம் மூலம் வேளாண் கடன் வழங்குதல், கைத்தறி உற்பத்தி, பால் உற்பத்தி, இடுபொருள்கள் வழங்குதல், நுகர்வோர் பணிகள், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு கடன் வழங்குதல், ஆடு வளர்த்தல், கோழிப் பண்ணை அமைத்தல், மீன் வளர்த்தல், கிராமங்களில், நகரங்களில் வீடுகளைக் கட்டுவதற்கு கடன் வழங்குதல் போன்ற பணிகள் நடைபெறுகின்றன.

பிற்பகல் 1-00

கிராம அளவிலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட அளவிலே மத்தியக் கூட்டுறவு வங்கி, மாநில அளவிலே தலைமைக் கூட்டுறவு வங்கி என்று 3 அடுக்குகளைக் கொண்டதாகும். இவைகளின் மூலம் குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன், நீண்டகாலக் கடன் என்று கடன்கள் பயன்தாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மாநிலத்தில் 4,655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் கிராமங்களிலே சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன. இவைகளின் மூலம் இன்றைக்கு தமிழகத்திலே விவசாயத்திலே பசுமைப் புரட்சி நிலவுவதைப் பார்க்கிறோம்.

தமிழகத்திலே உள்ள 20,912 நியாய விலைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு அத்தியாவசியமான பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த நியாய விலைக் கடைகள் எல்லாம் பெரும்பாலும் வாடகைக் கட்டிடத்தில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாணிக்கம், 5 நிமிடத்தில் முடித்து விடலாமா? 5 நிமிடத்திலே பேசி முடிப்பதாக இருந்தால் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. சி. மாணிக்கம் : நியாயவிலைக் கடைகள் எல்லாம் பெரும்பாலும் வாடகைக் கட்டிடத்தில் உள்ளன. இந்த ஆண்டு ஒருகடை கட்டுவதற்கு ரூ.1.25 லட்சம் வீதம், 25 கடைகள் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதை மனதாரப் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுகள் நாட்டில் தொடர்ந்து முதல் இடத்தைப் பெற்று வருவதைப் பாராட்டுகிறேன். மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் ஒருமைப்பாட்டின் இலக்கணமாக திகழும் முதல்வராகவும், நாடு போற்றும் முதல்வராகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். டாக்டர் அம்பேத்கார் மதிக்கப்படுகிறார். இன்று

அம்பேத்காருடைய சிலையை சென்னையிலே புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அம்பேத்கார் பிறந்த மாநிலத்திலே அவர் படித்த பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்காருடைய பெயரை வைக்க முடியவில்லை. ஆனால் தமிழகத்திலே, அம்பேத்காருடைய பெயரிலே போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அம்பேத்கார் பெயரிலே மணி மண்டபம் ஒன்றை 6 கோடி செலவில் உருவாக்கி வருகிறார்கள்.

இன்றைக்கு இந்திய நாட்டினுடைய முன்னாள் பிரதமர் ராஜுவ் காந்தி மதிக்கப்படுகிறார். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மதிக்கப்படுகிறார்கள். பண்டித நேரு அவர்கள் மதிக்கப்படுகிறார்கள். மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மதிக்கப்படுகிறார்கள். பெருந்தலைவர் காமராஜர் மதிக்கப்படுகிறார், அவர் பெயரிலே ஒரு மாவட்டம் இருக்கிறது. பசும்பொன் தேவர் மதிக்கப்படுகிறார், கவிஞர் கண்ணதாசன் மதிக்கப்படுகிறார், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மதிக்கப்படுகிறார். ராமசாமி படையாச்சியார் மதிக்கப்படுகிறார், அவருடைய பெயரிலே ஒரு மாவட்டம். இஸ்லாமியத் தலைவர் காயிதே மில்லத் அவர்கள் மதிக்கப்படுகிறார்கள். கொங்கு மண்டலத்திலே பிறந்து சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்ட தீரன் சின்னமலை பெயரில் போக்குவரத்துக் கழகம், ஆண்டுதோறும் அவருடைய பெயரிலே அரசு விழா. அருட்பெரும் ஜோதி வள்ளலார் மதிக்கப்படுகிறார். இப்படி நாட்டுக்கு உழைத்தவர்கள் எல்லாம் மதிக்கப்படுகிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்திலும் நாட்டுக்காக பாடுபட்ட நல்லவர்களை, தியாகிகளை மதிக்கிற அரசு இருக்கிறதா என்றால், இல்லை.

எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.கழகம் என்ற பெயரை வைத்துக் கொண்டு, ஒரு கும்பல் கடந்த வாரம் ஈரோட்டிலே, மறைந்த, இயற்கையோடு இயற்கையாகிவிட்ட, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையை வைக்க நகராட்சி அனுமதி வழங்கவில்லை, நெடுஞ்சாலைத்துறை அனுமதி வழங்கவில்லை. அனுமதி இல்லாமல் சிலையை வைக்க முற்பட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி இந்த அவையிலே பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பதில் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நீங்கள் அதற்குள்ளே அதிகமாகப் போகவேண்டியதில்லை. கூட்டுறவுத் துறை பற்றிப் பேசுங்கள். இதைப்பற்றி நீங்கள் சொல்கிற விளக்கத்தை எல்லாம் முதலமைச்சரே இந்த அவையிலே சொல்லிப் பதிவாகி இருக்கிறது.

1994 ஏப்ரல் 30]

திரு. சி. மாணிக்கம் : 1972 ஆம் ஆண்டு கருணாநிதி, தமிழகத்தின் முதல்வராக இருந்தார்கள். அன்றைக்கு விலைவாசி விஷம் போல் ஏறியது. அன்றைக்கு ஏழை எளியவர்கள் எல்லாம் அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் அவதிப்பட்டார்கள். வாங்குகின்ற சக்தியை இழந்து தவித்தனர். குடிநீர் கிடைக்கவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் நிலவியது. அப்போதுதான், இதய தெய்வம், எம்.ஜி.ஆர். அவர்கள் கருணாநிதியைப் பார்த்துக் கணக்கு கேட்டார்கள். 1971 தேர்தலிலே நான் கிராமங்களிலே உள்ள பட்டிதொட்டிகளுக்கு எல்லாம் சென்று, மக்களைச் சந்தித்து, வாக்குகள் கேட்டேன், இந்த ஆட்சியை அமைத்தேன், ஆனால், இன்றைக்கு மக்கள் எல்லாம் வாங்குகின்ற சக்தியை இழந்து தவிக்கிற நேரத்தில், நீங்கள் கணக்கு காட்ட வேண்டும் என்று சொன்ன நேரத்திலே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கட்சியிலேயிருந்து கருணாநிதி தூக்கியெறிந்தார். பிறகுதான் தமிழக மக்கள் புரட்சித்தலைவர் அவர்களை ஏற்றுக்கொண்டார்கள். அப்படிப்பட்ட எம்.ஜி.ஆர். அவர்கள், இந்த மண்ணிலிருந்து மறையும் வரையில், கருணாநிதியை தீய சக்தியாகவே கருதி வந்தார்கள். அந்தக் கருணாநிதியோடு சேர்ந்து கொண்டு, திருநாவுக்கரசு அவர்கள், நட்பு வைத்து இருப்பதோடு, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியை சிதைப்பதற்கு இன்றைக்கு சதி வேலை புரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர், எம்.ஜி.ஆருடைய சிலையை வைக்க அருகதையற்றவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பிரச்சினை இங்கே பேசியாகி விட்டது. நீங்கள் சொல்கிற எல்லாக் கருத்துக்களையும் முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள்.

திரு. சி. மாணிக்கம் : இன்றைக்கு அவர்கள் எல்லாம் கூறுகிறார்கள். எம்.ஜி.ஆரை இந்த ஆட்சியாளர்கள் எல்லாம் மறந்துவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னாலே எம்.ஜி.ஆருடைய பெயரிலே ஒரு மாவட்டத்தை உருவாக்கினார்கள். அவர் பெயராலே ஒரு போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கினார்கள். இந்தியாவிலே எங்கும் இல்லாத அளவிற்கு ரூ. 2 1/4 கோடி செலவில் புரட்சித் தலைவருக்கு நினைவாலயத்தை உருவாக்கினார்கள். எம்.ஜி.ஆரின் திருவுருவப் படத்தை இம்மாமன்றத்தில் வைத்தார்கள். தமிழகத்தினுடைய ஏழைக் குழந்தைகள் சாப்பிடுகின்ற உணவுத் திட்டத்திற்கு ...(குறுக்கீடு)

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் 3.30 மணிக்கு உங்களுடைய உரையைத் தொடரலாம். கூட்டுறவு பற்றி ஏதாவது பேசுங்கள்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் பேரவையின் முன் அனுமதியோடு இப்போது முடிவுற்று. பேரவை, மீண்டும் மாலை 3.30 மணிக்குக் கூடும்

3.30 மணிக்கு உறுப்பினர்கள் தவறாது இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றையதினம் இரண்டு நிமிடம் கோரம் இல்லாத காரணத்தால் 3.32 மணிக்குதான் பேரவையைத் தொடங்கினோம். அதையே இன்றைக்கு சில பத்திரிகைகள் பெரியதாக்கி எழுதியிருப்பதை உறுப்பினர்கள் கூர்ந்து கவனிப்பார்களேயானால், எந்த அளவிற்குத் தாமதம் இல்லாமல் அந்தக் குறித்த நேரத்தில் உறுப்பினர்கள் வரவேண்டுமென்று வெளியிலே இருக்கிறவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அதை மனதிலே கொண்டு, எந்த வகையிலேயும் பேரவை சிலநேரங்களில் கோரம் இல்லாத காரணத்தால் கூட முடியாமல் போயிற்று என்கிற நிலைமை இல்லாத அளவிற்கு உறுப்பினர்கள் கடமை உணர்வோடு, குறிப்பிட்ட நேரத்தில் வருவதைத் தங்கள் கடமையாகக் கொள்ள வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரவை மீண்டும் மாலை 3.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 3-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் மாலை 3.30 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுகோள் விடுத்ததற்கு பலன் இருந்திருக்கிறது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் தொடர்ச்சி. திரு. சி. மாணிக்கம், தன் விவாதத்தைத் தொடரலாம், கூட்டுறவு பற்றி.

திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாலையும் 1994-95 ஆம் ஆண்டின் கூட்டுறவு மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலே எத்தனையோ முதல்வர்கள் இருந்தாலும்கூட நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஈடுஇணையற்ற செல்வாக்கைப் பெற்றவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய புரட்சித் தலைவி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையை ஒவ்வொரு மாவட்டத்திலேயும் வைக்க வேண்டும் என்று கழகத்தினர்களுக்கு ஒரு ஆண்டுக்கு முன்னாலேயே கட்டளை இட்டார்.

1994 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூட்டுறவைப் பற்றிப் பேசுங்கள் என்று சொன்னேன். அல்லது உங்கள் தொகுதியிலே, உங்கள் தொகுதி சம்பந்தமாக ஏதாவது அவைக்குச் சொல்ல வேண்டும் என்றால் சொல்லுங்கள்.

திரு. சி. மாணிக்கம் : இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியிலே தேவையானவற்றைக் கூற ஆசைப்படுகிறேன். ஈரோட்டிலே குற்றவியல் நீதிமன்ற புதிய கட்டிடம் வரும் நிதி ஆண்டிலாவது அமைத்துத் தரவேண்டும் என்று பேரவைத் தலைவர் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். ஈரோடு ஊராட்சி ஒன்றியத்தில் 8 நகர பஞ்சாயத்துக்களும் 12 கிராமப் பஞ்சாயத்துக்களும் இருக்கின்றன. அதிலே சூரியம்பாளையம் பேரூராட்சியிலே உள்ள தோல் தொழிற்சாலையிலிருந்து வரும் கழிவு நீர் அங்கே இருக்கிற தண்ணீரை எல்லாம் பாதித்திருக்கிறது. அங்கே பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதற்கு, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் இந்த ஆண்டில் அப்பணிகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வரும் நிதி ஆண்டில் ஈரோடு நகருக்கு அருகிலே உள்ள 12 ஊராட்சிகளுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ரோட்டிலிருந்து பெரும்பள்ளம் ஓடை வரை மழைநீர் வடிகால்கள் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஈரோடு நகராட்சியில் மிக முக்கியமான சாலை சந்திப்பாகிய அரசு மருத்துவமனை மேட்டூர் ரோடு சந்திப்பு மிக குறுகலாக உள்ளது. அந்த தனியாரிடமிருந்து நிலத்தினை வாங்கி விரிவு படுத்திக் கொடுக்க ரூ.30 லட்சம் செலவாகும் என்று நெடுஞ்சாலை துறையினர் தெரிவித்ததை ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிந்தாமணி கூட்டுறவு கடை ஒரு வாடகை கட்டிடத்தில் இருக்கிறது. அது மிக மோசமாக இருக்கிறது. அதற்கு சொந்த கட்டிடம் கட்டித் தர வேண்டும் பெரியார் மாவட்டத்தில் பெருந்துறை தொகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்க இருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை மனமாரப் பாராட்டுகிறார்கள் பெரியார் மாவட்ட மக்கள். அதேபோல ஈரோடு தொகுதியில் 40 கோடி ரூபாயில் 100 அரிசன இளைஞர்களுக்கு சணல் பின்னலாடை தொழில் புரிவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள், அதையும் மனமார பாராட்டுகிறேன். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தந்தை பெரியாருக்கு வைக்கத்தில் சிலை நிறுவியிருக்கிறார்கள். பெரியார் எந்த கொள்கைக்காக உழைத்தாரோ

அந்த இட ஒதுக்கீட்டுக் காள்கையை நிலை நிறுத்த 69 சதவீத இட ஒதுக்கீட்டினைக் குறித்து தீர்மானத்தை சட்டமன்றத்திலே நிறைவேற்றினார்கள். தொட்டில் குழந்தை திட்டத்தினை குறித்து அன்னை தெரசா அவர்களே முதல்வரைப் பாராட்டியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டை சென்னையிலே நடத்திக் காட்டினார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மதுரையிலே உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டினார்கள். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நடத்தப்போகும் உலகத் தமிழ் மாநாடு - எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதை வெறும் முழக்கமாக மட்டும் வைக்காமல் அது அரசினுடைய இயக்கமாக நடக்கப் போவதைக் காட்டப்போகிறது. இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்தைக் கூற வாய்ப்புக் கொடுத்த பேரவைத்தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 3-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. திரு. எம். தங்கவேல், இருக்கையில் இல்லை. திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன் : தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய காவல் தெய்வம், எங்களுடைய இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன். 1994 ஆம் ஆண்டு கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு மறுபடியும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த அளவில், உலகத்தைப் பொறுத்த அளவில் கூட்டுறவே நாட்டுயர்வு என்ற முது மொழிக்கிணங்க தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் கூட்டுறவுத்துறை நாட்டின் முன்னேற்றம் ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு செயல்படுகிறது என்றால் மிகையாகாது. இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் 27,341 கூட்டுறவுச் சங்கங்கள் விவசாய வளர்ச்சியிலும், நுகர்வோர் நலன் காத்தலிலும், விற்பனைப் பெருக்கத்திலும், சிறுதொழில் வளர்ச்சியிலும், பால் பெருக்கத்திலும், கைத்தறிப் பொருள் உற்பத்தியிலும், ஊரக தொழில்களிலும் பணியாற்றி தனியார்த் துறைக்கும் பொதுத் துறைக்கும் சம நிலையில் செயல்பட்டு தமிழக மக்களின் நலன் காக்கின்ற ஒரு முன்னோடித் துறையாக கூட்டுறவுத் துறை விளங்கி வருகிறது என்றால் அது மிகையாகாது. இன்றைக்கு தமிழகத்தில் கூட்டுறவுத்துறை பதிவாளர்கள் கட்டுப்பாட்டில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்த ஆண்டு

வியாபாரத் தொகை 6252 கோடி என்பது நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மாட்சிமையையும் நிரூபிக்கிறது என்றால் மிகையாகாது. 1993-94-ல் வேளாண்மைத் துறைக்கு குறுகிய காலக் கடன் 350 கோடி ஒதுக்கியிருந்த கூட்டுறவுத் துறை 1994-95-ஆம் ஆண்டு மானிய கோரிக்கையில் 370 கோடியாக உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்கது ஆகும். நடுத்தரக்காலக் கடன் 50 கோடியிலிருந்து இன்றையதினம் 1994-95 ஆம் ஆண்டுக்கு 55 கோடியாக உயர்த்தியிருப்பதை வரவேற்கிறேன். நகையீட்டுக் கடன் 1185.71 கோடியிலிருந்து 1994-95-ல் 1300 கோடியாக உயர்த்தியிருப்பதை வரவேற்கிறேன். மொத்தத்தில் 1993-94-ல் உத்தேச மதிப்பீடு 1400 கோடியாக இருந்ததை இன்றைக்கு 1550 கோடியாக உயர்த்தியிருப்பதிலிருந்து டாக்டர் புரட்சித் தலைவி அரசு இந்த நாட்டின் விவசாயப் பெருங்குடி மக்களுடைய வளர்ச்சியின்பால் கொண்டுள்ள ஈடுபாடு தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. 1994-95 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் தீ மற்றும் திருடர்கள் அணுக முடியாத அளவுக்கு பாதுகாப்பாக வைப்பதற்கான இரும்புப் பெட்டகங்கள் 150 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்க ரூ.30 இலட்சம் ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். விற்பனை நடவடிக்கையை மேம்படுத்தும் பொருட்டு விற்பனை கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி 1994-95 ஆம் ஆண்டு 8.60 இலட்சம் ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். வேளாண்மை கூட்டுறவு வழங்கு சங்கங்களில் பணிபுரிகின்ற செயலாளர்கள் இன்றைக்கு தமிழகத்தில் உள்ள அடித்தள மக்களோடு, கீழே இருக்கின்ற மக்களோடு நெருங்கிப் பழகுகின்ற அளவுக்கு அந்த சங்கச் செயலாளர்கள் 40, 50 ஆண்டுக் காலம் ஒரே ஊரிலே பணியாற்றுகின்ற காரணத்தினால் அவர்கள் அந்தச் சங்கங்களிலே பணி புரிவதை விடுத்து இன்றைக்கு ஒருசிலர் அரசியல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய பொறுப்பினை ஒரு ட்ரான்ஸ்பரபுள் போஸ்டாக அவர்களுடைய பணியை மாற்றம் செய்யத்தக்கதாக அமைவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலவள வங்கி மூலம் இன்றைக்கு ஆழ்குழாய்க் கிணறுகள் வெட்டப்படுகின்றன. நிலத்தடி நீரை மேலே கொண்டு வருவதற்கான கிணறுகள் வெட்டப்படுகின்றன. அப்படி வெட்டப்படுகின்றபோது அதற்கு நிர்ணயித்திருக்கின்ற விதிமுறைகளைப் பார்க்கின்றபோது நிலத்தடி நீரினுடைய தன்மை எந்த அளவுக்கு கீழே இருக்கிறதோ, அந்த நிலத்தடி நீர் எந்த அளவுக்கு ஆழமாக இருக்கிறதோ அந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு அதற்கு லோன்களை வழங்க வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 3-40

இப்போது நிலவள வங்கியில் நாம் கடன் பெறுகின்றபோது ஒரு போர் வெல் போடவேண்டுமென்றால் அதற்கு 300 அடிக்கு 40 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுப்பதற்கில்லை என்ற கருத்து சொல்லுகிறார்கள். சிலயிடங்களில் அங்கே போர் வெல் போடுகின்றபோது 300 அடி, 900 அடிக்கு கீழே தான் நிலத்தடி நீர் கிடைக்கிறது. அப்படி கிடைக்கின்றபோது 300 அடிக்குத் தான் கடன் வழங்கப்படும் என்றால் அந்த 800 அடிக்கு கீழே நீர் கிடைக்கின்ற இடங்களில் அங்கே இருக்கின்ற விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தால் அந்த அளவுக்கு கடனை உயர்த்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையை இங்கே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் நீடாமங்கலம் ஒன்றிய நிலவள வங்கியின் மூலம் போர் வெல் போடுகின்ற திட்டம் இந்த ஆண்டு சேர்க்கப்படவில்லை என்று கூறுகிறார்கள். இங்கே மன்னார்குடி பகுதியைப் பொறுத்தவரையில், மன்னார்குடி, கோட்டூர், ஒரத்தநாடு போன்ற பகுதிகளுக்கு போர் வெல் போடுவதற்கு நிலவள வங்கி கடன் வழங்கும்போது நீடாமங்கலம் ஒன்றியம் மட்டும் அதிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதையும் இந்த ஆண்டு சேர்த்து கடன் வழங்குவதற்குண்டான நிலையில் அதைச் சேர்க்கவேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில் நாகை-காயிதே மில்லத் மாவட்டம் பிரிக்கப்பட்டு 1 1/2 ஆண்டுக்கு மேல் ஆகியும் இங்கே கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு மாற்றப்படும் என்று சென்ற ஆண்டு இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியின் பெயரில் இங்கே அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுகாறும் அந்த கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி நாகைக்கு மாற்றுவதற்கான செயல்பாடுகள் விரைவாக அங்கே நடைபெறுவதாகத் தெரியவில்லை. உடனடியாக நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இராம. இராமநாதன் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்?

திரு. இராம. இராமநாதன் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

1994 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், அவர் உட்கார்ந்தால்தான். (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டரா; சரி. பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்றால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவேன்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களின் வளர்ச்சியினை பொருட்டுத் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சை மாவட்டத்தை, தஞ்சை மாவட்டம் என்றும், நாகை-காயிதே மில்லத் மாவட்டம் என்றும் பிரித்தார்கள். தஞ்சையில் இருக்கின்ற மத்தியக் கூட்டுறவு வங்கி தஞ்சையினுடைய அந்த ஏரியாக்களுக்கும், கும்பகோணத்தில் இருக்கின்ற அந்தப் பகுதியில் இருக்கின்ற அனைத்து ஏரியாக்களுக்கும் இன்றைக்கு அதனுடைய செயல்பாடுகள் இருந்து வருகின்றன. புதிதாக துவங்கப்பட்டிருக்கின்ற நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலே தனியாக மத்தியக் கூட்டுறவு வங்கி துவக்கவேண்டுமென்ற கோரிக்கையை நானும் அன்றைக்கு வைத்திருக்கிறேன். எனவே, கும்பகோணத்தில் இருக்கின்ற மத்திய கூட்டுறவு வங்கி...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர். (சிரிப்பு) இதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் ? (குறுக்கீடு) அதுதான் சொன்னேன், கிளாரிபிகேஷன் என்று சொல்லலாம்; இதில் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் ?

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஸ்ட்ரெயிட்டாகச் சொல்லுவது தான் பாயிண்ட் ஆப் ஆர்டர். கும்பகோணத்திலே இருக்கவேண்டும் என்பது உங்களுக்கு எண்ணம். அவர் அதை எடுத்து எங்களுக்கு நாகை மாவட்டத்திற்குக் கொடுங்கள் மன்னார்குடிக்குக் கொடுங்கள் என்று கேட்கிறார், இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை, உட்காருங்கள்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அவர் திரும்பவும் சொல்லுவார்; நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன் என்று சொல்லுவார்கள். அது அமைச்சரைப் பொறுத்தது அல்லவா, ஏதோ நீங்களே அமைச்சராகி விடக்கூடாது. உட்காருங்கள் (குறுக்கீடு) நீங்கள் கும்பகோணத்தில் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறீர்கள். அவர் எங்களுக்கு வேண்டும் என்று சொல்லுகிறார், உட்காருங்கள்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கி என்ற முறையில் இங்கே நான் நாகை–காயிதே மில்லத் மாவட்டத்திற்கு கேட்ட கூட்டுறவு வங்கி கும்பகோணத்தில் இருந்து மாற்றப்படும் என்று ஏற்கெனவே இதே சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அது இன்றுவரை செயலாக்கப்படவில்லை என்று தான் நான் கூறுகிறேனே தவிர இப்போது நான் ஏதோ கும்பகோணத்திலிருந்து மாற்றச் சொல்லி இங்கு கோரிக்கை வைக்கவில்லை. ஏற்கனவே மாற்றுவதற்கு உத்திரவு இடப்பட்டிருக்கிறது. அதில் ஏன் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை? உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதற்காகத் தான் நான் என்னுடைய கோரிக்கையை வைக்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு மாவட்டத்திற்கு ஒரு மகளிர் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மயிலாடுதுறையில் மகளிர் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்கப்படுவதற்கான இடம் பார்க்கப்பட்டு அங்கே இடம் கிடைக்காத சூழ்நிலையில் மன்னார்குடியில் நாங்கள் இடம் தருவதற்கு தயாராக இருக்கின்ற காரணத்தால் மன்னார்குடியில் அந்த மகளிர் கூட்டுறவு வங்கியை ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் சார்பாக தஞ்சை மண்டல கூட்டுறவு விற்பனை இணையம் மன்னார்குடியை தலைநகராகக் கொண்டு அங்கே நடைபெற்று வந்தது. ஆனால் அதை திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்திற்கு மாற்றுவதற்கு 1993 ஆம் ஆண்டில் ஏற்பாடுகள் நடைபெற்று மறுபடியும் அதை மன்னார்குடியில் இயங்கவேண்டும் என்ற நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே மண்டல அலுவலகம் முதற்கொண்டு பல்வேறு அதிகாரிகளும் இன்றையதினம் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். போகின்ற சூழ்நிலையைப் பார்த்தால், ஒவ்வொரு அதிகாரிகளாக அங்கேயிருந்து மாற்றி கடைசியாக, அலுவலகத்தையும் எடுத்து விடுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகுமோ என்ற அச்சம் என்னுடைய தொகுதி மக்களுக்கு ஏற்படுகின்ற காரணத்தினால் 'டேன்பெஃட்' அலுவலகம் மன்னார்குடியிலே முழுமையாகச் செயல்படுவதற்கு அதிகாரிகளை மறுபடியும் நியமித்து அது முழுமையுடன் செயல்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 3-45

அதேபோன்று, நிலவள வங்கிகளைப் பொறுத்த அளவில், இன்றைக்கு எந்த அடிப்படையில், ஒரு வட்டத்திற்கு ஒரு நிலவள வங்கியா? அல்லது ஒரு ஒன்றியத்திற்கு ஒரு நிலவள வங்கியா என்கின்ற நார்ம்ஸை பார்க்கின்றபொழுது எப்படி இருக்கிறது என்ற நிலைமையிலே ஒன்றியத்திற்கு ஒரு நிலவள வங்கியை ஆரம்பித்தால் இன்றைக்கு தமிழக விவசாயிகளுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அது மிகவும் பெரிய உதவி செய்ததாக இருக்கும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் மன்னார்குடியைப் பொறுத்த அளவிலே, மன்னார்குடியிலே இப்போது ஒரு நிலவள வங்கி செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அந்த நிலவள வங்கி உள்ள ஏரியாவில் நீடாமங்கலம் ஒன்றியம், மன்னார்குடி ஒன்றியம், மன்னார்குடி நகரம், கோட்டூர் ஒன்றியம் ஆகிய மூன்று ஒன்றியங்களுக்கும் ஒரு நகரத்திற்கும்-தற்போது கூத்தாநல்லூர் நகராட்சி ஆக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினால், இரண்டு நகராட்சிகளுக்கும் ஒரு ஒன்றியத்திற்கும் ஒரு நிலவள வங்கி அங்கே இயங்கிக்கொண்டு இருக்கிறது. அதேபோல, பட்டுக்கோட்டை நிலவள வங்கி, பட்டுக்கோட்டை ஒன்றியம், மதுக்கூர் ஒன்றியம், திருவோணம் ஒன்றியம், ஒரத்தநாடு ஒன்றியம் என்ற 4 ஒன்றியங்களுக்கு ஒரு நிலவள வங்கி இருக்கின்ற காரணத்தினால் அங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், தங்களுடைய கோரிக்கைகளை வைத்து இலகுவாக பயன்களைப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகின்ற காரணத்தினாலே அங்கே ஒரு ஒன்றியத்திற்கு ஒரு நிலவள வங்கி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மன்னார்குடியிலே இருக்கின்ற நிலவள வங்கியைப் பொறுத்த அளவிலே வடுவூரிலே ஒரு நிலவள வங்கி ஏற்கெனவே இயங்கி வந்ததை மாற்றி, அதைக் கலைத்து விட்டு மன்னார்குடியிலேயே அதை இணைத்து, இன்றையதினம் நடைபெற்று வருகிறது. ஆகவே, ஒரு ஒன்றியத்திற்கு ஒரு நிலவள வங்கியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆழ்குழாய்க் கிணறுகள், போர்வெல் போன்றவற்றை பொறுத்த அளவில், விவசாயிகள் நிலத்தடி நீரைப் பெரிதும் நம்பியிருக்கின்ற காரணத்தினால் இன்றைக்கு காவிரி நீர் தஞ்சை மாவட்டத்திற்கும், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கும் வருகின்ற நிலைமை எந்த அளவுக்கு இருக்கிறது என்பது, இன்றைக்கு தமிழகத்தினுடைய காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய இன்னுயிரைப் பணயம் வைத்துப் போராடி இன்றைக்கு காவிரி நீரைப் பெற்று தருவதற்குப் போராட்டத்தை நடத்தியிருந்தாலும், இன்றைக்குப் பல கமிட்டிகள்

அமைக்கப்பட்டு இருந்தாலும், அந்த நீர் நமக்கு எப்போது கிடைக்கும் என்கின்ற நிலைமையில் தஞ்சை விவசாயிகளும், நாகை-காயிதே மில்லத் விவசாயிகளும் ஏங்கித் தவிக்கின்ற நிலைமையிலேதான் இருக்கின்றோம். ஆகவே, இங்கே இருக்கின்ற நிலவள வங்கிகள் மூலமாக, இங்கே ஆழ்குழாய்க் கிணறுகள் போடுவதற்கு கடன்கள் வழங்குவதைப்போல கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் ஆழ்குழாய்க் கிணறுகள் போடுவதற்கு, ஆழ்குழாய் போர்வெல் போடுவதற்குக் கடன்களை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, குருங்குளம் சர்க்கரை ஆலையில் திறக்க வேண்டிய தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய கிளை நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை உடனடியாகத் திறக்க ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சீனிவாசன், இன்னும் ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் மன்னார்குடி தொகுதியில் மகளிர் உயர்நிலைப் பள்ளி பல்லாண்டு காலமாக கட்டிட வசதி இல்லாமல் அங்கே படிக்கின்ற மாணவிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகும் நிலையில் கீற்றுக் கொட்டகையிலே தங்கிப் படிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அதற்கு ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இங்கே, மன்னார்குடி பகுதியிலே, கீழப்பாலம் என்ற ஒரு பாலம், பாமினி ஆற்றின் குறுக்கே மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுக்காலமாக இந்தக் கீழப்பாலத்தைப் புதிதாகக் கட்டித் தர வேண்டும் என்கிற என்னுடைய கோரிக்கையை இந்த சட்டமன்றத்திலே நான் வைத்து இருக்கிறேன். அந்தக் கீழப்பாலத்தை தாண்டிச் செல்கின்றபொழுது— திருவாரூர், திருத்துறைப்பூண்டி, பெருகவாழ்ந்தான், வேதாரண்யம் போன்ற பகுதிகளுக்கு அந்த ஒரு பாலத்தைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். இன்றைக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால், அந்தப் பாலமும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் அதனை உடனடியாக மாற்றி, புதுப்பாலம் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். மன்னார்குடி, பெருகவாழ்ந்தான் சாலை மிகவும் பழுதடைந்த

நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் அதனை அகலப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலை—இன்றையதினம் என்னுடைய தொகுதியிலே பல ஆண்டுக்காலமாக நடைபெற்று வந்த அந்த சர்க்கரை ஆலை இன்றைக்கு மாற்றப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருப்பதாக அறிகிறேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக்கொள்வது, இங்கே இருக்கின்ற மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அந்த வடபாதிமங்கலத்திலுள்ள சர்க்கரை ஆலை எக்காரணம் கொண்டும், என்னுடைய தொகுதியிலிருந்து, வடபாதிமங்கலத்திலிருந்து வேறு பகுதிக்கு மாறிச் செல்லாத அளவிற்கு, அதற்கான உத்தரவினை வழங்க வேண்டுமென்று இங்கே நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 3-50

மன்னார்குடி-நீடாமங்கலம் சாலை அகலப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

கோபாலசமுத்திரம் நடுநிலைப்பள்ளிக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையிலே, எந்த நேரமும் இடிந்து விழுகின்ற நிலைமையிலே இருக்கிறது. அதனைச் செப்பனிட்டுத் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு இது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரேயொரு இது என்று சொல்லிக்கொண்டு, பேசிக்கொண்டே இருக்கிறீர்களே!

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குத் தமிழகத்திலுள்ள ஆலயங்களெல்லாம் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்கின்ற எண்ணத்தில் பல்வேறு காரியங்களை, திருப்பணிகள் செய்து வருகின்ற வேளையிலே மன்னார்குடி இராஜகோபால சுவாமி திருக்கோயிலில், இன்றைக்குத் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு, அங்கே கும்பாபிஷேகம் இன்னும் ஒரு வருட காலத்தில் நடத்திக் காட்ட வேண்டும் என்ற நிலைமையிலே வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் ஆறு மாதத்திலே அந்தத் திருப்பணியை நடத்திக் காட்டுவோம் என்கின்ற நிலைமையை அங்கு வரும்பொழுது தெரிவித்தார்கள். ஆகவே இன்றைக்கு அங்கே திருப்பணி நடைபெறுவதற்கான வேலைகளுக்கு அங்கே டெண்டர் விடப்பட்டு, அதற்கான ஒப்புதலுக்காகக் கோப்புகள் தலைமையகத்துக்கு

வந்திருக்கின்றன. உடனடியாக அந்தக் கோப்புகளை மறுபடியும் அங்கே அனுப்பி வேலைகளைத் துவங்குவதற்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளை வைத்து, நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா.சா. பழனிசாமி, இருக்கையில் இல்லை. திரு. எம். பூராசாமி, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, இது முடிந்தது. நான் கூப்பிடும் பொழுது தாங்கள் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) அடுத்து வைண்டிங் அப்-க்கு வந்துவிட்டார். (குறுக்கீடு) சரி, பழனிசாமி, நீங்கள் கூப்பிட்ட நேரத்தில் இல்லாததற்காக இரண்டு நிமிடங்கள் குறைத்துக் கொள்ள வேண்டும். அந்த வகையிலே நீங்கள் பேசி முடிக்கலாம். (சிரிப்பு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுத் துறை மீது என்னுடைய கருத்துக்களை நான் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள், 1904 ஆம் ஆண்டு தொடங்கிய - இயற்றப்பட்டிருக்கின்ற நெசவுத் தொழிலாளர்கள் அமைத்திருக்கிற அதை நினைவுகூர்ந்து, அதன்மூலமாக இந்தியாவில் இதுபோன்ற கூட்டுறவு அமைப்புகளை உருவாக்க வேண்டுமென்பதற்காக இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே இந்தக் கூட்டுறவு அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால், இந்தியாவிலேயே பல்வேறு மாநிலங்களில் சிறப்பான முறையிலே இந்தக் கூட்டுறவு அமைப்பு செயல்படாமல் நலிவுற்று நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் ஒரு சிறந்த முறையிலே - சிறப்பான முறையில் இன்றையதினத்திலே விவசாயிகளுடைய, மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு இந்தக் கூட்டுறவு அமைப்பு இருக்கிறது என்று சொன்னால் அதை மறுப்பதற்கில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இருந்தாலும்கூட கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கந்துவட்டிக்காரர்களுடைய பிடியிலிருந்து விவசாயிகள் விடுவிக்கப்பட்டு நாணயச் சங்கம் மூலமாகக் கடன்களைப் பெற்றுத் தனது உணவு தானிய உற்பத்தி செய்வதற்கு, வியாபாரம் செய்வதற்கு இந்த அமைப்புகள் மிகப் பெரிய உறுதுணையாக இன்றையதினத்திலே வளர்ந்திருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, கூட்டுறவு நாணயச் சங்கம் என்பது, ஏதோ அரசாங்கத்தினுடைய சங்கமாக நான் நினைக்கவில்லை. நாட்டு மக்களுடைய நலனுக்கான சங்கமாக அந்தச் சங்கத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமையில் நாம் இருந்து கொண்டு வந்திருக்கிறோம்.

அதோடுமட்டுமல்ல, இன்றைக்கு விவசாயிகளுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில், சாதாரணமாகச் சில ஏழை எளியவர்கள் கடன்களைப் பெற்று வியாபாரங்களைச் செய்கின்ற பல்வேறு தொழில்களுக்கு, அதேபோன்று உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள்— பல்வேறு தானியங்களுக்குக்கூட அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கக்கூடிய விதத்தில், நிர்ணயம் செய்யக்கூடிய விதத்தில், அதேபோன்று இதிலே வியாபார இடைத்தரகர்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, நேர்மையான விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் கூட்டுறவு அமைப்புகளை, மேலும் மேலும் பாதுகாக்கக்கூடிய கடமை நம்முடைய அரசுக்கு உண்டு. அந்தவகையிலேதான் கூட்டுறவு அமைப்பு சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னால் ஒரு ஜனநாயக அமைப்பு என்பதை இதிலே இணைக்க வேண்டும். காரணம் என்னவென்று சொன்னால், தனி அதிகாரி மூலமாகவே அந்த நிர்வாகம் நடைபெற்றது என்று சொன்னால் இதிலே ஏற்படக்கூடிய தவறுகளை நம்மாலே - அமைச்சராலே கண்டறிந்து கொள்ள முடியாது. அரசாங்கமும் இதைக் கண்டுகொள்ள வேண்டும் என்பது, செயல்படுவது என்பது கஷ்டமாக இருக்கும். ஏனென்றால், இதற்கு அமைச்சர்களை மட்டும் நாம் குற்றம் சொல்ல முடியாது. எந்த அளவுக்கு அதிகாரிகள் பெரும் விழிப்போடு இதிலே செயல்படுகிறார்களோ, தேசிய கடமையோடு செயல்படுகிறார்களோ, அந்த அளவுக்குத்தான் கூட்டுறவு அமைப்பு என்பதைச் செம்மையாக நடத்த முடியும்.

பிற்பகல் 3-55

அந்த அளவுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இதில் அங்கம் பெற வேண்டும். காலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், பல்வேறு உறுப்பினர்களும் பேசுகிறபோது சொன்னார்கள்; கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். கோர்ட்டிலே இருக்கிற வழக்கை நாம் காரணம் காட்டி, அதன் மூலமாக இந்தத் தேர்தலை நாம் ஒத்திப் போடமுடியாது. தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கு தனி அதிகாரிகள் அமைப்பிலே செயல்படுகிற கூட்டுறவு அமைப்புகளுக்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், சில

கூட்டுறவு வங்கிகள் சிறப்பாக செயல்பட முடியாத நிலையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, கூட்டுறவு வங்கிகள், ஆதிதிராவிடர்களுக்கு வட்டியில்லாத கடனை, ரூ. 250-ஐ, அதையும் ஒரு ஆண்டுக்கு ரூ. 250 வீதம் வழங்க வேண்டுமென்று இன்றைய தினத்திலே அறிவித்திருக்கிறீர்கள். இதை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். இது ஒரு நல்ல திட்டம். ஆனால், இந்தத் திட்டத்திலே, கூட்டுறவு வங்கிகளிலே, அதை எப்படிக் கட்டப்போகிறார்கள்? இப்போது ஏற்கெனவே நிலம் வைத்திருக்கிற குத்தகை விவசாயிகூட, கூட்டுறவு வங்கிகளிலே கடன் பெற வேண்டுமென்று சொன்னால், இரண்டு பேர்கள் 'ஜாமீன்' போட வேண்டியிருக்கிறது. அதிலே ஒருவர் பணம் கட்டவில்லை என்று சொன்னால், அவர் அடுத்த தடவை பணம் பெற முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அதை எப்படிக் கட்டப்போகிறார்கள்; எந்த அடிப்படையில் கட்டப்போகிறார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. மேலும், அதை கூட்டுறவிலே மெம்பர்களாக இருக்கக்கூடியவர்களுக்கு அளிக்கப் போகிறீர்களா; இல்லை, கூட்டுறவிலே மெம்பரே இல்லாதவர்களுக்கு-ஆதிதிராவிடர்களுக்கு கடன் வழங்கப் போகிறீர்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் தன் பதிலுரையிலே அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 200 பேர்களுக்கு 20 இலட்சம் ஒதுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் இதிலே சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்றுதான் நகர வங்கியிலும் கூட, 2 ஆயிரம் ஆதிதிராவிடர்களுக்கு 500 வீதம் பணம், ஆண்டுக்கு ரூ. 100 வட்டியில்லாத கடன் கொடுக்கக்கூடிய திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதற்கு ரூ. 9.50 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இது வரவேற்கத்தக்கது. இதுவும் அதைப் போலத்தான். எந்த அளவுக்குக் கொடுக்கப்படுகிறது; எந்த அளவுக்குப் பயன்படப் போகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பின்னர் அறிவிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

அதேபோல், இன்றைக்கு கூட்டுறவு அங்காடிகளிலே காலியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். நிறைய இடங்களில், உடனடியாகப் பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கு கூட்டுறவுப் பணியாளர் காலியிடங்கள் இருக்கின்றன. அதை உடனடியாக நிரப்புவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடுமையான புயல் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கிற மாவட்டம். வேளாண்மையும் முழுமையாக பாதிக்கப்

பட்டிருக்கிறது. நீங்கள் கொடுத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட நாங்கள் திருப்பிக் கட்டமுடியாத பணங்களைப் பற்றி இருக்கிறது. ஏற்கெனவே இருந்த பல அரசுகள், மரியாதைக்குரிய முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள், அதற்கு முன்னால் இருந்த முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அதுபோன்று நம்முடைய அம்மையார் அவர்கள் வந்த பின்னாலும்கூட, அநேகமாக உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே, நீண்டகால கடன்களை நீங்கள் தள்ளுபடி செய்வதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதேபோல் இந்த ஆண்டும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, நீங்கள் கூட்டுறவுக் கடன் சம்பந்தமாக, அவற்றை எங்களுக்கு முழுமையாகத் தள்ளுபடி செய்யாவிட்டாலும்கூட, பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்வதற்கு நீங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல ரெவின்யூப் ரெவின்யூ துறையிலிருந்து நீர் வரி, நில வரிகளை இன்றைக்கு முழுமையாக ரத்து செய்திருக்கிறார்கள். நான் கேட்பது அந்தக் கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும். இல்லையென்றால், அப்படி கூட்டுறவுச் சங்கம் மூலமாக தள்ளுபடி செய்யாவிட்டாலும், விவசாயிகள் அந்தக் கடனைப் பெறுகிறபோது வேளாண்மையிலே 'இன்சூரன்ஸ்' என்ற பெயரால், கூட்டுறவுத் துறையில் பணம் பிடிக்கப்பட்டிருக்கிறது. எல்லா விவசாயிகளுக்கும் பணம் பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆக, அந்த இன்சூரன்ஸ் தொகையையாவது வாங்கி, அதற்கு ஈடாக எங்களை அந்தக் கடனிலிருந்து விடுவிப்பதற்கு அரசாங்கம்தான் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நீங்கள்தான் அதற்கு பொறுப்பாக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இன்னொன்றையும் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்குக் கூட்டுறவு அமைப்பு மீது மக்கள் சில இடங்களில் நம்பிக்கை இழந்து வருகிறார்கள். அதற்கு அமைச்சர் பொறுப்பு என்று நாம் சொல்ல முடியாது. அப்படி நான் இந்த அவையிலே சொல்லிவிட்டாலும், அதுபோன்ற தவறு செய்யக்கூடிய அதிகாரிகளை திருத்துவது என்பது, ஒழுங்குபடுத்துவது என்பது முடியாத காரியம். நாகை மாவட்டத்திலே, பொறையார் என்கிற கூட்டுறவு அமைப்பிலே, ஒரு அதிகாரி 10 இலட்சம் ரூபாய் மோசடி செய்திருக்கிறார். அந்த அதிகாரி மீது நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று பல்வேறு கூட்டுறவு அமைப்புகளையும் நீங்கள் கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஜி. பழனிசாமி] [1994 ஏப்ரல் 30

நிறைய கூட்டுறவுச் சங்கங்களில் இன்றைக்கு நகைகளை அடகு வைத்து நாங்கள் கடனை வாங்குகிறோம். அப்படி நகைகளை அடகு வைத்து, கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்கி, விவசாயம் செய்கிறபோது – இன்றைக்கு நம்முடைய கொள்கைக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது; நகைகளைக் களவு போகாமல் பாதுகாப்பதற்கு, அதற்காக நல்ல பெட்டிகளை வாங்குவதற்கு கூட்டுறவுகளுக்கு பணம் வழங்குவதாக அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது; நான் அதிலேகூட ஒன்றைப் பார்த்தேன்; (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டை கூட்டுறவு வங்கியில் விவசாயி ஒருவர் அடகு வைத்திருந்த நகைகளை திரும்ப மீட்டுக்கொண்டு வீட்டிலே போய் பார்க்கின்றபோது, அந்த நகைகள் கவரிங் நகைகளாக மாறியிருந்தன. ஆகவே, இதன் மீது திறனாய்வு செய்யப்பட வேண்டும். பல இடங்களிலே கூட்டுறவுச் சங்கங்களில் பல முறைகேடுகள் நடக்குமோ என்கிற அச்சம் விவசாயிகள் மத்தியிலே இருக்கிறது. நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு என்ன அடிப்படையான காரணம் என்று சொன்னால், 5, 6 சங்கங்களுக்கு ஒரு தனி அதிகாரி இருப்பதனாலே எல்லா இடங்களையும் அவரால் கண்காணிக்க முடியவில்லை. ஆக இரண்டு, மூன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு தனி அதிகாரியை நீங்கள் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது குறித்து உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு அறிக்கை ஒன்றை ஏற்கெனவே தாக்கல் செய்திருக்கிறது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. இன்றையதினத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்த உடனடியாக முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். அதற்குப் பின்னாலேதான் இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அநேகமாக கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற பல அதிகாரிகள், இதை விரும்பாத சுயநலமான சில அதிகாரிகள் இருக்கிறார்கள். இதை எப்படியாவது, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களிடம் ஒப்படைத்து விடக்கூடாது என்பதற்காக இருக்கக்கூடிய அதிகாரிகளும் இருக்கிறார்கள். அதையெல்லாம் களைய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

பிற்பகல் 4-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி, அழைக்கின்றபோது இல்லாத காரணத்தினால் இரண்டு நிமிடம் குறைத்துக்கொள்ள வேண்டும்.

1994 ஏப்ரல் 30]

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களை முன்வைக்க வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமங்களுடைய ஜனநாயகத்திற்கு அடித்தளமாக எப்படி ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றதோ, அதைப்போல கிராமப் பொருளாதாரத்தினுடைய அடித்தளமாக இருப்பது கூட்டுறவு ஸ்தாபனங்கள். தனிப்பட்ட நபரிடம் கடன் பெற்று விவசாயிகள் கடன் கட்ட இயலாத சூழ்நிலையிருந்த காலத்திலே விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும், விவசாயத் தொழிலை மேன்மை அடையச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலே கூட்டுறவு வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு அதிலே விவசாயிகளை உறுப்பினர்களாக்கி, கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக வேளாண்மைத் தொழிலை மேன்மை அடையச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு அந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களிலே 72 இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒரு மாபெரும் ஸ்தாபனமாக கூட்டுறவு ஸ்தாபனங்கள் வளர்ந்திருக்கின்றன. 72 இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருந்தாலும்கூட, இன்றைக்கும் 15 இலட்சம் பேர்தான் அதிலே கடன் பெறுபவர்களாக இருக்கிறார்கள். 20 சதவீதம் பேரே கடன் பெறுகின்ற நிலையிருக்கிறது. ஒரு காலத்திலே தனிப்பட்ட நபரிடம் விவசாயிகள் கடன்பெற்று, அந்தக் கடனை திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டபோது, அதற்கு அரசாங்கம் கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவந்து விவசாயிகளைப் பாதுகாத்தது. ஆனால், இன்றைக்கு அரசாங்கத்தினுடைய ஒரு அங்கமான கூட்டுறவு ஸ்தாபனங்களிலே கடன் பெற்று விவசாயிகள் திருப்பிச் செலுத்த இயலாத நேரத்தில், நிலவரி வசூல் சட்டத்தின் மூலமாக ஜப்தி போன்ற நடவடிக்கைகளை இன்று அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். பல்வேறு காலக்கட்டங்களிலே அரசாங்கம் கடன் சலுகை செய்திருந்தாலும்கூட இன்றைக்கும் வறட்சி காரணமாகவும், பல்வேறு வேளாண்மை நஷ்டத்தின் காரணமாகவும் விவசாயிகள் கடன் கட்ட இயலாத நிலை இன்றைக்கும் ஒரு சிலருக்கு இருந்துகொண்டிருக்கிறது. கடனைக் கட்டக்கூடாது என்ற மனோபாவம் பெரும்பாலான விவசாயிகள் மத்தியிலே இல்லை. கடனைக் கட்ட இயலாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. அந்தவகையிலே கடன் கட்ட இயலாத பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகள் மீது அதுபோன்ற நடவடிக்கையை நம்முடைய அரசு நேரிடையாக எடுக்க வேண்டாமென இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு வங்கிகள் மறுநிதி பெறவேண்டுமென்றால், நிலவள வங்கி 60 சதவீதம் கடன் கட்டினாலும் மற்ற கூட்டுறவு வங்கிகள் 40 சதவீதம் செலுத்தினாலும் மறுநிதி பெறுகின்ற தகுதியைப் பெறுகின்றன. அதேபோல, விவசாயிகள் 40 சதவீதம் கடனைக் கட்டினால் மீண்டும் அவர்களுக்கு அந்தக் கடனைப் பெறுகின்ற தகுதியைக் கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளின் பங்குத் தொகை பல ஆண்டுகாலமாக வட்டியில்லாமல் இருக்கிறது. அவர்களுடைய பங்குத் தொகைக்கு ஆயுளுக்கும் வட்டி இல்லாமலே இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பங்குத் தொகைக்கு, அந்த விவசாயிகளுக்கு, அந்த நபர்களுக்கு வட்டி கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-05

அடுத்து பயிர் ஈட்டுறுதித் திட்டம் ஒரு விவசாயிக்கு 10 ஆயிரத்திற்கு மிகாமல்தான் கொடுக்கப்படுகிறது. அந்தப் பயிர் ஈட்டுறுதித் திட்டமும் நெல், கோதுமை, சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் என இப்படி அதிகமாக வேளாண்மை முதலீடு செய்யாத பயிர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு அதிகமாக முதலீடு செய்து அதிகமாக இழப்பு உண்டாக்கும் பருத்தி, மஞ்சள், வாழை, கரும்பு போன்ற பயிர்களுக்கு அந்த இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்பட வேண்டும். இந்த இழப்பீடு கூட கடன் காப்புறுதித் திட்டமாக இருக்கிறதே அல்லாமல் விவசாயிக்கு ஏற்படுகிற பயிர் காப்புறுதித் திட்டமாக இல்லை. அவர்கள் பயிருக்கு எவ்வளவு முதலீடு செய்திருக்கிறார்களோ அந்த அளவுக்குக் காப்புறுதித் திட்டத்தைக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உடன் கடன் வழங்கும் திட்டம். அதாவது பச்சை வண்ண அட்டை கொடுக்கிற திட்டம். இன்றைக்கு நல்ல முறையில் 2.3 இலட்சம் கடன்தாரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இன்றைக்கு இந்த 2.3 இலட்சம் கடன்தாரர்கள் உடனுக்குடன் கடனைக் கட்டிவிடுகிற சூழ்நிலையும் இன்றைக்கு ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறபோது விவசாயிகள் மத்தியில் கடனைக் கட்ட முடிந்தால் உடனடியாகக் கட்டுகிற அந்த மனோபாவம் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

25-8-92-ல் மத்திய அரசு சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் போன்ற உரங்களை டீ-கண்ட்ரோல் செய்கிறபோது அதனுடைய விலைகள் அதிகமாக உயர்ந்தன. அதற்குப் பிறகு மீண்டும் 1-10-92-ல் டீ.ஏ.பி. பொட்டாஷ் டன் ஒன்றுக்கு ஆயிரம் வீதமும், கலப்புரங்களுக்கு டன் ஒன்றுக்கு 340 முதல்

999 வரையும் சலுகைகள் வழங்கப்பட்டன. ஆனால் அந்த ஆண்டில் விவசாயிகள் கடன் பெற்று அந்தக் கடனுக்கு இந்த உரங்களைப் பெற்ற காலத்தில் அந்தப் பழைய விலையில்தான் விற்றார்கள். புதிய விலை அறிவிக்கப்பட்டபோது அவர்களுக்கு அவர்களுடைய கடன்பேரில் அந்தக் குறைந்த தொகை வரவு வைக்கப்படவில்லை. பல வங்கிகளில் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் உடுமலை வட்டம் செல்லப்பன்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியினுடைய செயலாளர் பல பினாமி பெயரில் கடன்களைக் கொடுத்த காரணத்தால் பல விவசாயிகள் கடன் பெறாமலே கடன் பெற்றதாக பட்டியல் போடப்பட்டு ஜப்தி போன்ற நடவடிக்கை எல்லாம் வந்திருக்கிறது. அந்த வங்கியின் செயலாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்.

அதேபோல் தாராபுரம் வட்டத்தில் சின்னக்காம்பாளையம் வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பினாமி கடன் பிரச்சினையால் விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வங்கியின் செயலாளர் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தாலும், அவர்கள் மீது இருக்கின்ற கடனைப் பொறுத்தவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறது. அப்படி தவறான நடவடிக்கைகளின் மூலமாக பொய்யாக அவர்கள் பெற்றதாக உள்ள அந்தக் கடனைத் தள்ளுபடி செய்யவேண்டும். அந்த வங்கியின் செயலாளர் மீது நடவடிக்கை எடுத்து அந்தக் கடனை வசூலிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே கோவை மாவட்டத்தில் பல்லடம் வட்டத்தில் கள்ளிவேறுபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் என்ற சங்கத்தில் செயலாளராக இருப்பவர் பல முறைகேடுகளைச் செய்து, ஒரு சிறந்த வங்கியாக இருக்கவேண்டிய அந்த வங்கியை இன்றைக்கு நல்ல முறையில் நடக்க முடியாமல் செய்துகொண்டு இருக்கிறார். அப்படிப்பட்ட அந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் செயலாளர் தொடர்ந்து அந்த வங்கியிலே இருந்துகொண்டிருக்கிற காரணத்தால் தொடர்ந்து பல தவறுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிச் செயலாளர்களை பல்வேறு வங்கிகளுக்கு மாற்றுவதற்கு கூட்டுறவுத் துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக ஒரு சட்டம் கொண்டுவ்ரவேண்டும். அந்தச் செயலாளர்களே வங்கியின் தலைவர்களை உருவாக்குகின்ற அளவுக்கு இன்றைக்கு வலிமை பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லி எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பூராசாமி, பேசவே முடியவில்லை என்று அவ்வளவு வருத்தப்படுகிறீர்களே, ஏன் நான் கூப்பிடுகிறபோது வந்து இங்கே இருப்பதில்லை. பேசுவதற்கு உங்கள் பெயர் இருக்கிறபோது 3.30 மணிக்கு வந்திருக்கவேண்டுமா இல்லையா? அந்தமாதிரி பெயர் கொடுத்தவர்கள் பேரவை கூடுகிற நேரத்தில் சரியாக வந்து இருக்கவேண்டும். திரு. பூராசாமி, சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் என்னைப் பேச அனுமதித்த தங்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமான்றத்தில் என்னை உறுப்பினராக ஆக்கிய தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி எனது உரையை நான் தொடங்குகிறேன்.

பிற்பகல் 4-10

கூட்டுறவே நாட்டுயர்வு என்று நாம் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்தக் கூட்டுறவில் தஞ்சையிலிருந்து நாகப்பட்டினம் பிரிந்த பிறகு கும்பகோணம் மத்திய வங்கி இன்னும் நாகை காயிதே மில்லத் மாவட்டத்திற்கென பிரிக்காமல் இருக்கிறது. இதை உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே பிரிக்க வேண்டுமாய் அன்போடு நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதுபோல பூம்புகார் தொகுதிக்கு தனியாக நிலவள வங்கி இல்லை. அது மயிலாடுதுறையில் இருக்கிறது. ஆகவே செம்பனார்கோயிலில் ஒரு நிலவள வங்கி அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் வேண்டுகோளாக வைக்கின்றேன். அதுபோல் பூம்புகார் தொகுதியில் மீனவப் பெருங்குடி மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே கார்டுகளின் எண்ணிக்கை வித்யாசம் பார்க்காமல், 16 ஊராட்சிகள் இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு தனித்தனியாக ரேசன் கடைகள் திறக்க வேண்டுமாய் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதுபோல் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் கூட்டுறவு அமைப்புகளில் அதிகமான பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதால் அங்கே போதுமான வசூல் நடக்காமல் இருக்கிறது. ஆகவே காலியிடங்களை உடனடியாக நிரப்பவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் அநேக ரேசன் கடைகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள் இல்லை. அவைகளுக்கு உடனடியாக இந்த ஆண்டுக்குள்ளாக சொந்தக் கட்டிடங்கள் கட்டித்தர வேண்டுமாய் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு

கேட்டுக்கொள்கிறேன். அதுபோல நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில் தேவையான இடங்கள் இருக்கின்றன, அங்கே கட்டிடங்கள் கட்டுவதற்குப் போதுமான இடவசதி இருக்கிறது. நாங்கள் அதை இலவசமாகத் தரத் தயாராக இருக்கின்றோம். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே கட்டிடங்கள் கட்ட இந்த ஆண்டிலேயே முயற்சி செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். அங்கே போதுமான ரேசன் கடைகள் திறக்கப்படவில்லை. இன்னும் குறிப்பிட்ட சில இடங்கள் அங்கே இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான கருத்துருக்களை அனுப்பி ரேசன் கடைகளை திறக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அதுபோல் என்னுடைய சொந்தத் தொகுதியான பூம்புகார் பெரிய தொகுதியாகும். தமிழ்நாட்டிலே பெரிய ஊராட்சி ஒன்றியமாக செம்பனார் கோயில் ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. 68 ஊராட்சிகளை அடக்கிய ஒன்றியமாக இருக்கிறது. ஆகவே அதை இரண்டாகப் பிரித்து, பொறையாரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு ஊராட்சி ஒன்றியம் அமைக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவியை நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். பூம்புகார் தொகுதி கடைமடையான தொகுதி அங்கே கால்வாய்களும், வாய்க்கால்களும் இருக்கின்றன. அவைகளை ஊராட்சிகள் செப்பனிடவேண்டும். அதுபோல் அங்கே ஆற்றுப் பாசனமும், நீர்தேக்கமும் இருக்கின்றன. அவைகளை எல்லாம் பொதுப்பணித் துறை செப்பனிடவேண்டுமாய் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பூம்புகார் தொகுதி ஒரு பசுமையான தொகுதி, அங்கே அதிகமான திருக்கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களை பராமரிப்பது குறித்து அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே பார்வையிட்டு விரைவில் திருப்பணிகளைச் செய்ய வேண்டுமாய் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோல் நாகை காயிதேமில்லத் மாவட்டத்தில் சிவன் கோயில், கிருத்துவக் கோயில், முகமதியர் கோயில்கள் இருக்கின்றன. சரியாக பாதை வசதிகள் இல்லை. ஆகவே நல்ல மெயின் ரோடுகளைப் போட்டுத் தர ஏற்பாடுகளை செய்து தருமாறு நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதுபோல் சோழர்கள் நகரான பூம்புகாரில் சித்திரை முழுநிலவு விழா எப்போதும் வருடாவருடம் கொண்டாடப்படுகிறது. அந்தச் சுற்றுலா மையத்திற்கு தனியாக ஒரு பேருந்து விடவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதைப்போல் தரங்கம்பாடியில் டேனிஷ் கோட்டை இருக்கிறது. பழையதாக இருக்கின்ற அந்தக் கோட்டையைப் புதுப்பித்து

சுற்றுலா ஸ்தலமாக மாற்ற இருக்கிறார்கள். அதையும் விரைவில் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். மேலும் பூம்புகாரில் கண்ணகி சிலை கீழே விழும் அபாய நிலையில் இருக்கிறது. ஆகவே அதை உடனடியாக செப்பனிட்டு அந்தச் சிலையை சீரமைத்துத் தரவேண்டுமாய் அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். பூம்புகார் தொகுதி ஒரு தொன்மையான இடமாகும். அங்கே இளங்கோவடிகள் வாழ்ந்திருக்கிறார்கள். கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை போன்றவர்கள் வாழ்ந்த ஊர். ஆகவே என்னுடைய பூம்புகார் தொகுதிக்கு அனைத்து வசதிகளும் செய்து தரவேண்டுமாய் நான் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 4-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடு கிராமங்களில் வாழ்கிறது என்று காந்தி அடிகள் சொன்னார்கள். நம்முடைய கிராமங்கள் விவசாயத்தையே பெரும்பாலும் நம்பியிருக்கிறது. கிராமங்களுடைய பொருளாதாரம், அரசியல், செவ்வனே இருக்கவேண்டும் என்று சொன்னால், அதற்கு அடிப்படையான நிறுவனங்கள் ஒன்று ஊராட்சி, மற்றொன்று கூட்டுறவு நிறுவனங்கள், ஆக இந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் தான் கிராமங்களுடைய முன்னேற்றத்திற்கு அடிகோலியாக இருக்கிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏராளமாக இருக்கின்றன. கூட்டுறவு அதிகாரிகள் இருக்கின்றார்கள். நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவு இயக்கம் தான் இல்லை. சங்கமும் அதிகாரிகளும் இருந்து இயக்கம் இல்லை என்று சொன்னால் அது மக்களுக்கு என்ன பயனை அளிக்கும் என்பதை எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் தலைவர்களை மையமாக வைத்து வளர்ந்த இயக்கம். ஒரு நாச்சிமுத்து முதலியார், சேலம் மணி கவுண்டர், வாகீசம் பிள்ளை, நடேசன், டி.என். பழனிசாமி, டி.ஏ. ராமன் செட்டியார் என்று தமிழ்நாட்டிலே இருக்கின்ற, மிகப் பெரிய தன்னலமற்ற ஈரோடு சென்னியப்ப கவுண்டர் போன்ற, தன்னலமற்ற கூட்டுறவாளர்களை மையமாக வைத்துத்தான் தமிழ் நாட்டிலே கூட்டுறவு இயக்கம் வளர்ந்தது.

ஆனால் இன்றைக்கு கூட்டுறவு இயக்கத்திலே மாதிரி கூட்டுறவுச் சட்டத்தைக் கொண்டு வரலாம் என்று எண்ணுகிறபோது, அதைப் பற்றி பரிசீலிப்பதற்குக்கூட தகுந்த கூட்டுறவாளர்கள் அழைக்கப்படவில்லை. அதிகாரிகளிடம் தான் அது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு மாதிரி கூட்டுறவுச் சட்டத்திலே அதிகாரிகளுடைய தலையீட்டைக் குறைக்கவேண்டும். பதிவாளர் என்பவர் பதிவு மட்டும் தான் செய்யவேண்டுமென்று சொல்லும் அளவுக்கு அதிகாரிகளுடைய ஆதிக்கத்தை, ஆதிக்கம் அல்ல தலையீட்டை குறைக்கவேண்டும் என்று அந்தச் சட்டம் சொல்கிறபோது, அதே அதிகாரிகளிடத்திலே மாதிரி கூட்டுறவுச் சட்டத்தைப் பற்றி அபிப்பிராயம் கேட்டால் என்ன சொல்வார்கள்? இன்றைக்குக் கூட்டுறவுத் துறையைப் பொறுத்த மட்டில் ஒரு விடுமுறைக் காலம் என்றே சொல்லலாம். பல்வேறு பிரச்சினைகளை ஆராய நமக்கு வாய்ப்பு இருக்கிறது. இன்று இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்திற்காக ஒரு கருத்தரங்கை நடத்தி அந்த கருத்தரங்கு மூலமாக அந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்தினுடைய நன்மை தீமைகளை நரம் அலசிப் பார்க்கலாம்.

இன்னொன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே தகுதியில்லாதவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் உறுப்பினர்களாக. அந்த உறுப்பினர்களைப் பட்டியலிலேயிருந்து நீக்கலாம். இதுபோன்ற பல காரியங்களைச் செய்வதற்கு இன்று ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே என்றைக்கேனும் ஒரு நாளைக்கு நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கிறபோது, கூட்டுறவுத் தேர்தல் வந்தேதான் தீரும். இது வருவதற்கு முன்னாக இந்தக் காரியங்களை நாம் செய்து முடிப்பதற்கு நமக்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல, கூட்டுறவுச் சங்கத்திலே தரகர்கள் தான் கடந்த காலத்திலே பொறுப்பெடுத்து மிக நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு கூட்டுறவுத் துறை இல்லாத காரணத்தினாலே அகில இந்திய ரீதியாக நடைபெறுகின்ற பல்வேறு மகாநாடுகளுக்கு இங்கே இருந்து சிறந்த கூட்டுறவாளர்கள் செல்லமுடியவில்லை. அந்த மகாநாடுகளுக்கு அதிகாரிகள் செல்லமுடியாது. கூட்டுறவாளர்கள் தான் செல்லமுடியும். தலைவர் தான் செல்லமுடியும். ஆனால் அப்படி இல்லாத நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம்.

இந்தியாவிலே மிகப் பெரிய கூட்டுறவு நிறுவனம், இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம் இஃப்கோ. அந்த இஃப்கோ நிறுவனத்திலே இன்று

வரை தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் தலைவராக வர இயலவில்லை. தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரதிநிதியாகக்கூடப் போக முடியவில்லை என்பதை எண்ணிப்பார்க்கிறபோது நான் மிக வேதனைப்படக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வேளை அந்த இஃப்கோ நிறுவனத்திலே பங்கு இருந்திருக்கும் என்று சொன்னால் தமிழ்நாட்டிலே இருந்து பிரதிநிதிகள் அங்கே சென்றிருக்கமுடியும் என்று சொன்னால், கண்டிப்பாக கல்லோரைப் போல, கண்ட்லாவைப்போல, புல்பூரைப் போல நாமும் நரிமணத்திலே அந்த வாயுவைப் பயன்படுத்தி மிகப் பெரிய உரத் தொழிற்சாலையை உருவாக்கியிருக்கமுடியும். ஆக கூட்டுறவுத் தேர்தல் நடைபெறாததனாலே ஏற்பட்ட தீமைகள் இவை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 4-20

நான் சான்றாகச் சொல்வேன், ஒரு முறை நம்முடைய முன்னாள் பதிவாளர் சுயம்பிரகாசம் அவர்களிடத்திலே பேசிக்கொண்டிருந்தபொழுது அவர் அங்கு வந்து இருந்த தலைவர்களைப் பார்த்துச் சொன்னார். You have grown inspite of us என்று, நாங்கள் இல்லாவிட்டாலும்கூட உங்களுடைய முயற்சியினாலே You have grown inspite of us என்று சொன்னார்கள். எங்களால் அல்ல, நீங்களாக வளர்ந்து இருக்கிறீர்கள். நாங்கள் தடை விதித்தாலும்கூட மீறி வளர்ந்து இருக்கிறீர்கள் என்று மிகத் தெளிவாகச் சொன்னார்கள். ஆக, அந்தத் தலைமை இருந்தால்தான், இன்றைக்கு ஆண்டுகள் பலவாக தமிழகத்தில் கூட்டுறவுத் தேர்தல்கள் நடைபெறாமல் இருந்தாலும்கூட இன்றைக்கு அந்தத் தலைவர்கள் வந்து இந்தக் கூட்டுறவு இயக்கத்திற்கு ஒரு புதிய மறுமலர்ச்சியை உண்டாக்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இன்றைக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்-நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலமாக கூட்டுறவுக் கல்வி வளர்க்கப்படுவதாகவும், ஆராய்ச்சிகள் செய்வதாகவும் சொல்லப்படுகிறது. நான் அமைச்சர் அவர்களிடத்திலே பணிவன்போடு தெரிந்துகொள்ள விரும்புகிறேன், இந்த தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் என்ன ஆராய்ச்சி செய்திருக்கிறது இதுவரையில். அதை அவர்கள் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

இலன்ட் கிரவுண்டிலே இந்த ஒன்றியத்திற்காக ஒரு கட்டிடம் இருக்கிறது. ஏதோ பழைய காலத்திலே கூட்டுறவாளர்கள் வந்தால் அங்கே தங்குவார்கள். இன்றைக்கு அந்தக் கட்டிடம் கூட பழுதடைந்து போயிருக்கிறது. இன்றைக்கு

அதற்குப் பதிலாக, கூட்டுறவு ஒன்றியத்திற்காக, நாளைக்கு கூட்டுறவுத் தேர்தல் நடக்கும், கூட்டுறவாளர்கள் வருவார்கள் அப்படி வருகிறபொழுது அவர்கள் தங்குவதற்காக இப்பொழுதிலிருந்தே முயற்சி செய்து ஒரு விடுதி ஒன்று கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். தி.மு.க. ஆட்சியிலே தேர்தல் நடந்து கொஞ்ச காலம் சிலபேர் தலைவர்களாக இருந்தார்கள். ஆனால், தேர்தல்முறை அவ்வளவு கேவலமாக இருந்தது. யார் வேண்டுமானாலும் உறுப்பினர்களாக ஆகலாம். 100 ரூபாய் கட்ட வேண்டிய இடத்திலே 10 ரூபாய் இருந்தால் உறுப்பினராகலாம். நுழைவுப் பதிவேட்டிலே கையெழுத்து போட வேண்டியதில்லை. சப்ஸ்கிரிப்சன் ரெசிப்டில் கையெழுத்தே போட வேண்டியதில்லை. ஆக, எப்படியாவது தலைவராகலாம் என்ற நிலை அன்றைக்கு இருந்தது. அதுமட்டுமல்ல, அன்று நடைபெற்ற ஒரு கொடுமை என்ன என்று சொன்னால், சில சங்கங்களில், தி.மு.க. உறுப்பினர்கள் தலைவர்களான பின்னாலே, பல ஆண்டுகளாக பணியாளர்களுக்கு கொடுக்கப்படாமல் இருந்த சம்பள உயர்வை ஒட்டுமொத்தமாகக் கொடுத்து அந்தப் பணத்திலே இருந்து தி.மு.க. உறுப்பினர்களும், பணியாளர்களும் பங்கு போட்டுக்கொண்டார்கள். இந்த அளவுக்கு அது நடைபெற்றது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும் இதுபோன்று எங்கும் இனிமேல் நடைபெறாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்த கூட்டுறவுத் தேர்தலில் பங்குகொள்கின்ற உறுப்பினர்களுக்கு புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். அப்படி வழங்கினால்தான் இங்கே ஆள் மாறாட்டம் செய்வது தடுக்கப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் பல கூட்டுறவுச் சங்கங்களில் நல்ல பொருள்களை உற்பத்தி செய்கின்றார்கள். ஆனால், அந்தப் பொருள்களை வாங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்களே கூட தயாராக இல்லை. சான்றாக, நான் சொல்வேன், துடியலூரில் ஒரு சிறந்த கூட்டுறவு நிறுவனம், துடியலூர் கூட்டுறவு சேவா நிறுவனம். அந்த நிறுவனம் இந்தியாவிலே முதன் முதலாக தரமான சான்றிதழ் பெற்ற விதைகளை உற்பத்தி செய்கிறது. ஆனால், அந்த விதைகளை வாங்குவதற்கு எல்லா கூட்டுறவுச் சங்கங்களும் ஒத்துழைக்காததன் காரணமாக அந்த நிறுவனம் அந்த விதை தயாரிப்பை ஏறத்தாழ நிறுத்திவிடும் அளவுக்கு நிலை ஏற்படும் என்பதை நான் இங்கே கவலையோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவேதான் கூட்டுறவுக்குள் கூட்டுறவு. கோவாப்பரேசன் அமங் கோவாப்பரேட்டிவ்ஸ். அது இல்லையென்று

சொன்னால், எதிர்காலத்தில் கூட்டுறவு வளர்வதற்கே வாய்ப்பு கிடையாது. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் உரத்தை உற்பத்தி செய்கின்றன, பூச்சி மருந்தை உற்பத்தி செய்கின்றன. ஆனால், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களே வாங்கி ஆதரிக்கவில்லை என்று சொன்னால் எப்படி அந்தச் சங்கம் வளரும்? இதைக் கண்டிப்பாக நாம் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கூட்டுறவுச் சங்கங்களிலே பல ஆண்டுகளாக தேர்தல் நடத்தாததன் காரணமாக பொதுக் குழு கூட்டப்படவில்லை. பொதுக் குழு கூட்டப்படாததன் காரணமாக தணிக்கைச் சான்றிதழ் கிடைக்கவில்லை. தணிக்கைச் சான்றிதழ் கிடைக்காததன் காரணமாக உறுப்பினர்களுக்கு டிவிடன்ட் கிடைக்கவில்லை.

பிற்பகல் 4-25

அதுமட்டுல்ல, அங்கே பணி செய்கிற பணியாளர்களுக்குக் குறைந்தபட்ச போனஸ்தான் கிடைத்தது. உரிய போனசை வழங்குவதற்கு வழியில்லாமல் போய்விட்டது. எனவே கூட்டுறவுத் தேர்தல் சரிவர நடக்காததால் இந்த அளவுக்குப் பொது மக்களும், பணியாளர்களும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, பல கூட்டுறவுச் சங்கங்கள் வரவு செலவுக் கணக்கை ஒவ்வொரு ஆண்டும் அங்கீகரிக்காமல், 2, 3 ஆண்டுகளுக்குச் சேர்த்து அங்கீகாரம் வாங்குகின்றன. ஆண்டுதோறும் அங்கீகரிக்க வேண்டிய வரவு செலவுக் கணக்கு, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒட்டுமொத்தமாக அங்கீகாரம் பெற்று, அந்த அடிப்படையிலே செயலாற்றி வருகின்றன என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நீண்ட நாட்களுக்குப் பிறகு பஞ்சாயத்துத் தேர்தல் நடைபெறப் போகிறது. கண்டிப்பாக நடைபெறும். இதில் சந்தேகமில்லை. இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு பஞ்சாயத்து ராஜ் சட்டம் ஆதாரமாக இருக்கிறது. எப்படி அதற்காக ஒரு தேர்தல் கமிஷன் இருக்கிறதோ, அதைப்போல கூட்டுறவுத் தேர்தலுக்கும் ஒரு தேர்தல் கமிஷன் நியமிக்கப்பட்டால் கண்டிப்பாக இந்தத் தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் நிச்சயமாக நடைபெறும் என்று நம்புகிறேன். எனவே கூட்டுறவுத் தேர்தலுக்கு ஒரு தேர்தல் கமிஷனை நியமிக்க வேண்டுமென்று எனது கருத்தாக இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களின் செயலாளர்களை மாற்ற வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார்கள். நானும் அதே கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் செயலாளர்கள் நீண்டகாலமாக அங்கே இருப்பதன் காரணமாக பல்வேறு தவறுகள் நிகழ்ந்துவிடுகின்றன. அவர்களை மாற்றுவதற்கு வகை செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, பிரிக்கப்படாத தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை, கும்பகோணம் இரண்டுக்கும் சேர்த்து இரண்டு மத்திய கூட்டுறவு வங்கிகள் இருந்தன. இன்றைக்கு நாகை-காயிதே மில்லத் மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னாலே, அதற்குப் புதிதாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய சொந்தச் செய்திகளைத்தான் எப்போதும் சொல்வீர்கள் என்று நான் நம்பிக் கொண்டிருக்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: ஆகவே கூட்டுறவாளர்கள் நலன் குறித்து நாகையிலே புதிதாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கி துவங்க வேண்டும். இரண்டு வங்கி என்பதற்குப் பதிலாக, 3 வங்கிகளாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் 3 வங்கிகளாகப் பிரிக்கலாமென்று சொன்னார்கள். ஏரியா ஆப் ஆப்பரேஷனைப் பொறுத்தவரையில் கும்பகோணத்தில் இருக்கிற மத்திய கூட்டுறவு வங்கியின்கீழ் நாகை–காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் வருகின்றன. நாகை–காயிதே மில்லத் மாவட்டத்தைப் பிரித்துவிட்டால், கும்பகோணம் தொகுதி மட்டும் தான் மிஞ்சும் என்பதாலும், 3 வங்கிகளை அமைப்பதற்கு முடியாது என்பதற்கு அரசிடம் உள்ள நிதிநிலைமையைக் காரணம் சொல்லுவார்கள். அப்படி அமைத்தால் பரவாயில்லை. அதை வரவேற்கிறோம். இல்லை என்றால் எங்களுக்கு அறிவிக்கப்பட்ட வங்கியை உடனடியாகத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இராமநாதன், நீங்கள் கொடுத்த செய்தியை நீங்களே சொல்லுங்கள். வி.கே. லட்சுமணன், நீங்கள் உட்காருங்கள். உங்களுடைய பணியைக் கொஞ்சம் அவர் குறைத்துவிடுவார்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல நாகை காயிதே மில்லத் மாவட்டத்திலே புதிதாக வங்கி துவங்க வேண்டுமென்ற கோரிக்கையை நானும் வைத்திருக்கிறேன். அவர் சொன்னதுபோல் கும்பகோணம் நகரம் மட்டும் அதில் சேர்ந்தது அல்ல. வலங்கைமான் இருக்கிறது, அம்மாப்பேட்டை இருக்கிறது, கும்பகோணம் இருக்கிறது, பாபநாசம் இருக்கிறது, ஒன்றியங்கள் இருக்கின்றன. இவைகள் அனைத்தும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் ஏரியா ஆப் ஆப்பரேஷனில்தான் வருகின்றன. எனவே கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய அந்தப் பெயரும், கட்டிடமும் மாற்றப்படாமல், அந்த வங்கி அங்கே இருக்க வேண்டும். நாகை காயிதே மில்லத் மாவட்டத்திற்கு நாகப்பட்டினம் மத்திய கூட்டுறவு வங்கி என்கின்ற அந்த வங்கியைத் துவங்குவதற்கான பணிகளைத் துவங்க வேண்டும். கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியை மாற்ற வேண்டாமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் கனிவான கவனத்திற்கும், தக்க நடவடிக்கைக்கும் கொணர்ந்து, அங்கே மாற்றுவதிலேதான் பிரச்சினையே தவிர.....

பிற்பகல் 4-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சீனிவாசனுடைய கோரிக்கை அது. நாகை காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய முழுப் பகுதியும் அதனுடைய area of operation ஆக இருக்கலாம்... (குறுக்கீடு)

திரு. இராம. இராமநாதன்: முழுப் பகுதியையும் 'நாகப்பட்டினம் மத்திய கூட்டுறவு வங்கி' என்று தொடங்கி இருக்கவேண்டுமே தவிர......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பகுதி அதிலும் வருகிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) சரி. திரு. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டங்கல் திட்டம் நிறைவேற்றப்படுகிறபோது, வளர்ச்சி அடைந்த நாடுகளிலே அவர்கள் இதுவரை கொடுத்து வந்திருக்கிற, விவசாயிகளுக்கு கொடுத்துவந்த அதிகப்படியான மானியத்தைக் குறைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். அப்படி குறைக்கிறபோது அங்கே இருக்கிற விவசாயப் பொருட்களுக்கு விலை ஏறுவதோடு, நம்முடைய நாட்டிலே இருந்து விவசாயப் பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு அதிக வாய்ப்பு கிடைக்கும். எனவே, அதைக் கருத்திலே கொண்டு நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் agro-based industries என்பதை பெருமளவில் ஆரம்பிப்பதற்கு முயற்சி

செய்தால் அது பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பயிர் இன்சூரன்சைப் பொறுத்தமட்டில், ஒரு சில தானியங்களுக்கு மட்டும்தான் பயிர் இன்சூரன்ஸ் அளிப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே சொல்லப்பட்டதைப் போல, மிக முக்கியமான பருத்தி பயிருக்கு பயிர் இன்சூரன்ஸ் கொடுக்கப்படவேண்டும். அது மட்டுமல்லாமல் இன்சூரன்ஸ் பிரிமியத்தை வெகுவாகக் குறைக்கவேண்டும். பல சமயங்களில் நாம் கொடுக்கிற இழப்பீட்டுத் தொகையானது பிரிமியத்தைவிடக் குறைவாக இருக்கிறது. எனவே அதைக் கருத்திலே கொண்டு பிரிமியத் தொகையைக் குறைக்கவேண்டும். மற்ற பயிர்களுக்கும் இந்த இன்சூரன்ஸ் தொகையை விரிவுபடுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்றோர்கள், சான்றோர்கள், அறிவு மேதைகள், அரசியல் விற்பன்னர்கள், தமிழகத்தின் நலன்காத்த நல்லோர் இவர்கள் போன்றோர் அமர்ந்திருந்து இந்திய நாட்டு வரலாற்றிலே தனியிடத்தைப் பெற்றுள்ள இந்த மாபெரும் மண்டபத்தில், கடல் கண்ணுக்கு அடங்காத காட்சி, மணல் எண்ணுக்கு அடங்காத மாட்சி என்பதைப் போல, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குப் பின்னால் (மேசையைத் தட்டும் ஒலி) காக்கியுடை அணியாத சிப்பாய்களைப் போல அணிவகுத்து, பீடுநடைபோடும் கோடானுகோடி நன்றியுள்ள தொண்டர்களைக் கொண்டுள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிமட்டத் தொண்டனாக என்னையும் ஏற்று, கழக வழக்கறிஞர் பிரிவுச் செயலாளராக, கழக ஆட்சிமன்றக் குழு உறுப்பினராக, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த மண்ணில் சட்டமன்ற உறுப்பினராக அடையாளம் காட்டி, புரட்சித் தலைவி அமர்ந்துள்ள இந்த அவையில் அரசு தலைமைக் கொறடாவாகவும் தொண்டு செய்யும் வாய்ப்பைத் தந்து, இன்று நாட்டின் முதுகெலும்பு போன்ற கூட்டுறவுத் துறையில் அமைச்சர் பொறுப்பையும் தந்து, யார் என்று தெரியாத என்னை இன்று ஊர் நின்று பார்க்க அருளாசி வழங்கி, நான் தினமும் வலம்வரும் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற திருக்கோயிலில், தமிழகத்தின் ஐந்தே முக்கால் கோடி மக்களை

மட்டுமல்லாமல், கல்லினுள் தேரையையும், கருப்பையினுள் உயிரையும் காத்துநிற்கும் கண் முன்னால் இன்னாளில் காணுகின்ற காக்கும் கடவுள், காலத்தை வென்ற திருக்குறளின் வாழ்வு, மாசற்ற வெள்ளை உள்ளம், மனித குலத்தின் மங்காத தமிழ் மறை (மேசையைத் தட்டும் ஒலி), தமிழகம் செய்த புண்ணியத்தால் வந்துதித்த புரட்சித் தலைவி அவர்களே, தாங்கள் இருககும் திசைநோக்கி மண்டியிட்டு வணங்கி, தங்கள் அருளாசியுடன் இந்த 23 ஆம் எண் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின் மீது என் பதிலுரையைத் துவங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு என்பது ஒரு அரசின் கொள்கையோ அல்லது இலட்சியமோ மட்டுமல்ல; அது மனித சமுதாயத்தின் தார்மீகப் பிணைப்பு; நல்லுணர்வுகளின் சங்கமம், Each for All; All for Each ஒவ்வொருவரும் எல்லோருக்காக; எல்லோரும் ஒவ்வொருவருக்காக. இதுதான் கூட்டுறவின் ஒட்டுமொத்த சித்தாந்தம்.

``Co-operation is the powerful instrument without which, nothing can be achieved in man's life."—கூட்டுறவு என்பது மனித வாழ்வின் மிகச் சக்தி வாய்ந்த சாதனம். அஃதில்லாமல் மனித வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியாது." இந்த வாசகம், தடுமாறுகின்ற தலைவர்கள், தடம் மாறுகின்ற தலைவர்கள், இடம் மாறுகின்ற தலைவர்கள் என்று முரண்பட்டுக் கிடக்கின்ற தலைவர்களின் கூட்டத்தில் இலட்சிய நோக்கத்தோடு, நாட்டுக்கு நலம் பயக்கவேண்டும் என்ற ஒரே கொள்கையோடு ஆட்சி நடத்தும் தமிழக முதல்வர் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிந்தனையில் உதிர்ந்த சிறப்பு மலர்.

பிற்பகல் 4-35

பேரறிஞர் பெருந்தகை அண்ணா கூட அடிக்கடி அழகு தமிழில் சொல்லுவார்; "தம்பி, கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்று. இதன் மூலம் கூட்டுறவின் இலக்கணத்தையே, இலக்கியத்தையே நாட்டு மக்களுக்கு உணர்த்தினார்.

"கரைச் சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பேரெதிர்ப்பால், பகையால், வஞ்சத்தால்
உண்மைதான் ஊமை ஆமோ?"

என்ற தத்துவத்தின் இலக்கணமாகத் திகழும் புரட்சித் தலைவி அவர்கள், "ஒரு கை தட்டினால் சத்தம் வராது; இரு கைகளின் கூட்டுறவே ஓசை எழுச்சி" என்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஊர் கூடி அல்லவா தேர் இழுக்க வேண்டும். இது தமிழகத்தில் பண்டைக் காலத்திலிருந்தே வழக்கில் இருக்கும் பழமொழி.

"கூடித் தொழில் செய்தோர் கொள்ளை லாபம் பெற்றார்:
வாடிடும் பேதத்தால் வாய்ப்பதுண்டோ, தோழர்களே!
நாடிய ஒரு தொழில், நாட்டார் பலர் சேர்ந்தால்
கேடில்லை, நன்மை கிடைக்குமன்றோ, தோழர்களே!
சிறுமுதலால் லாபம் சிறிதாகும்; ஆயிரம்பேர்
உறுமுதலால் லாபம் உயருமன்றோ தோழர்களே!
கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் இன்றுவரை
மூடிய தொழிற்சாலை முக்கோடி தோழர்களே!
கூடைமுறம் கட்டுநரும், கூடித் தொழில் செய்யின்
தேடிவரும் லாபம் சிறப்புவரும் தோழர்களே!"

என்று கூட்டுறவுக் கொள்கை முழக்கம் செய்தார் பாவேந்தர் பாரதிதாசன்.

உண்மையை மறைத்து நரம்பில்லாத நாக்கினால் வரம்பில்லாமல் வசைபாடும் நயவஞ்சகர்களுக்கு நெருப்புப் பிழம்பாய்த் திகழும் தமிழகத்தின் முதல்வர் அவர்கள் 7.2.1994 அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், "எங்களுடைய கொள்கைகளிலும், லட்சியங்களிலும் எங்களுக்கு கிட்டப் பார்வையும் இல்லை; தூரப் பார்வையும் இல்லை. தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் விரைந்து முன்னேற்ற வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வைதான் உண்டு" என்றார்கள். அந்த தொலைநோக்குப் பார்வைக்கு அடித்தளம் அமைப்பது கூட்டுறவுத் துறை.

இந்தியப் பெருநாட்டிலேயே கூட்டுறவுத் துறையில் முன்னணியில் நிற்பது இன்றைய தமிழகம்தான். வளர்த்த கடா மார்பிலே பாயும் என்ற நன்றி கொன்ற இன்றைய அரசியல் உலகில் குறிப்பாக தமிழ்நாட்டு அரசியலில் தன்னுடைய அபூர்வ அறிவாற்றலை அறிந்து, தன்னை அரசியலில் வளர்த்து ஆளாக்கிய, தன் அரசியல் ஆசான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது திருப்பெயரால் போக்குவரத்துக் கழகம்,

அவர் பெயரால் சத்துணவுத் திட்டம், அவருக்கு உலகம் வியக்கும் நினைவிடம்-இல்லை, இல்லை, நினைவாலயம். தலைநகரில் அவரது உருவச் சிலை. இந்த மாமன்றத்திலே அவரது திருவுருவப்படம்; அதுவும் அண்ணாவைப் பின்பற்றிச் செல்வதைப்போல.

இவைகள் மட்டும் போதாது என்று, அந்த மாமனிதர் பெயரால் இன்று இந்த மாமன்றத்தில் சமூக நீதி காக்கும் வீராங்கனையாகக் காட்சியளிக்கும் புரட்சித் தலைவி அவர்களால் திருப்பெயரிடப்பட்ட செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில்தான்,

(அ) 1904 ஆம் ஆண்டில் திரூர் என்ற சிறு கிராமத்தில் முதன் முதலில் கிராமக் கூட்டுறவு கடன் வங்கி (Credit Co-operative Rural Bank) உருவாக்கப்பட்டது என்பது தமிழகத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க நிகழ்ச்சி.

(ஆ) அதேபோல் 1904 ஆம் ஆண்டில் முதன் முதலில் சென்னை நகரில் டி.யு.சி.எஸ். என்று அழைக்கப்படும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கமும் உருவானது.

(இ) இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் கூட்டுறவுத் துறை பல முன்னோடி சாதனைகளை நிகழ்த்தி இருக்கிறது.

(ஈ) 8.10.1904 ஆம் ஆண்டு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில்தான் பெரிய காஞ்சிபுரம் நகர கூட்டுறவு வங்கி என்ற முதல் நகர கூட்டுறவு வங்கி அமைக்கப்பட்டது.

(உ) அப்படியே தலைமைக் கூட்டுறவு வங்கி என்பது, தமிழகத்திலேயே சென்னையில்தான் 1905 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

(ஊ) 19.10.1905-ல் சென்னை மத்திய நகர வங்கி அமைக்கப்பட்டது.

(எ) 1913-ல் முதல் மத்திய கூட்டுறவு வங்கி மதுரையில் அமைக்கப்பட்டது.

(ஏ) அனைத்திற்கும் மேலாக கூட்டுறவாளர்களின் முதல் மாநாடு 1909 ஆம் ஆண்டில் அன்றைய செங்கல்பட்டு மாவட்டமும் இன்றைய செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில், கல்வி வள்ளல் பச்சையப்பன் பள்ளியில் நடைபெற்றது என்பது பெருமைக்குரிய ஒரு வரலாற்றுச் செய்தியாகும்.

(ஐ) முதல் கூட்டுறவு அச்சகம், 'சென்னை கூட்டுறவு அச்சகம்' என்ற பெயரில் 1919 ஆம் ஆண்டில் சென்னையில் அமைக்கப்பட்டது.

பராக்கிரமத்தால், படைபலத்தால், பக்க பலத்தால் இராவணன் வந்தான், இராமபிரானை நோக்கி வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும் நாரத முனிவர்க்கேற்ப நயம்பட உரைத்த நாவும், தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும் வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான் (மேசையைத் தட்டும் ஒலி) திரும்பிய இராவணனை தோல்வியால், தலைகுனிந்து நிலம் பார்க்கச் செய்த இராமச்சந்திரனின் பெண் வடிவம் பூண்டு தாய்க் கோலத்தில் தனி அரசியாக நின்று இன்று தமிழகத்தை ஆட்சி செய்யும் தனிப் பெரும் முதலமைச்சர் அவர்கள், இதுவரை உலக ஜனநாயக அரசியல் வரலாற்றில் எங்கும் கண்டிராத, ஆனால், எவரும் பிரமிக்கத்தக்க வகையில் தமிழக மக்களின் ஏகோபித்த நல்லாதரவுடனும், ஆசியுடனும் 24.7.1991 அன்று முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னால், கூட்டுறவுத் துறையில் அரிய பெரிய பல திட்டங்களை தமிழகத்துக்குத் தந்து, அளப்பரிய சாதனைகள் கூட்டுறவில் படைத்து, உலக அரங்கிற்கே ஒரு ஒப்பற்ற வழிகாட்டியாகத் திகழ்கிறார்கள் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள்.

பிற்பகல் 4-40

புதிய புரட்சிகரமான தொழில் கொள்கையை உருவாக்கி தமிழகத்தில் தொழில் வளத்தைப் பெருக்கவும், வேளாண்மை வளத்தைப் பெருக்கவும், ஏழை எளியோர் வாழ்வில் வசதியற்றோர் ஆகியோரிடம் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடச் செய்ய புரட்சித் தலைவி அவர்களின் அயராத உழைப்பு தமிழகத்துக்கே ஒரு அரிய படைப்பாய் கடந்த ஆயிரம் நாட்களில் திகழ்வதைப் போற்றி பாராட்டாதவர் எவரும் இல்லை. புரட்சித் தலைவி அவர்கள் எடுக்கின்ற திட்டங்கள் அனைத்தும், தமிழக மக்களுக்கு நிரந்தரமான வாழ்வு அளிக்கும் வகையில், வறுமையை விரட்டி, வளமான வாழ்வை உருவாக்கி இந்திய உப கண்டத்திற்கே வழிகாட்டியாகவும் இன்றைக்கு திகழ்ந்து வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் 1984 ஆம் ஆண்டு ஜூலையில் இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராஜர் ஆகிய மூன்று மாவட்டங்களாகப் பிரித்துப் பல ஆண்டுகளாக மத்திய கூட்டுறவு வங்கிகள் புதிய மாவட்டங்களுக்கு உருவாக்கப்படாத நிலையில், ஆட்சித் துறையில் பல அதிசயங்களை நிகழ்த்தி வரும் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியின்கீழ் 2.9.1993-ல் காமராஜர்,

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய இரண்டு மாவட்டங்களும் தனித்தனியே மத்திய கூட்டுறவு வங்கிகள் உருவாக்கப்பட்டு, விவசாயிகளுக்குத் திறம்பட இன்றையதினம் சேவை புரிந்து வருகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மாவட்ட கூட்டுறவு வங்கிகள் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டுமென, 'எதையும் நன்றே செய், அதையும் இன்றே செய்' என்ற கருத்தினை ஆழமாகக் கொண்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரைக்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) வெகுவிரைவில் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களிலும், மத்திய கூட்டுறவு வங்கிகள் தோற்றுவிக்கப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் விவசாயிகட்கு 1991-92-ல் குறுகிய காலக் கடனாக ரூ.278.52 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.44.71 கோடியும், நீண்ட காலக் கடனாக ரூ.41.71 கோடியும், நகைக் கடனாக ரூ.843.70 கோடியும் வழங்கப்பட்டது.

1992-93-ல் குறுகிய காலக் கடனாக ரூ.340.86 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.45.75 கோடியும், நீண்ட காலக் கடனாக ரூ.64.21 கோடியும், நகைக் கடனாக ரூ.1,080.28 கோடியும் வழங்கப்பட்டது.

1993-94-ல் குறுகிய காலக் கடனாக ரூ.439.54 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.52.65 கோடியும், நீண்டகாலக் கடனாக ரூ.112.70 கோடியும், நகைக் கடனாக ரூ.1,363.00 கோடியும் வழங்கப்பட்டுள்ளது என்பது இந்த நாடு அறிந்த செய்தியாகும்.

"எதிலும் முன்னேற்றம், எங்கும் முன்னேற்றம்" என்று ஆட்சி நடத்தும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆற்றல்மிகு ஆட்சியில் 1994-95-ல் குறுகிய காலக் கடனாக ரூ.370.00 கோடி இலக்காக இருந்தாலும், திறன்மிக்க இவ்வாட்சியில், ரூ.450.00 கோடி அளவிற்கு வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய காலக் கடனாக ரூ. 55 கோடியும், நீண்ட காலக் கடனாக ரூ.53 கோடியும், நகைக் கடனாக ரூ.1,300 கோடியும் நடப்பு நிதியாண்டில் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒட்டு முறையில் நம்பிக்கை இழந்தவர்கள், வேட்டு முறையில் கலகம் நடத்தலாமா என்று வேவு பார்த்துக் கொண்டிருப்பவர்கள், மக்களை

நம்பாமல், மனுக்களை நம்பிக் கொண்டிருப்பவர்கள் தலைகுனியும் வகையில், 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்ற அண்ணாவின் மணிமொழிக்கேற்ப அரசு நடத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியில்தான் கூட்டுறவுத் துறையில் கடன் வழங்கும் முறையை எளிதாக்கவும், கடன் தவணை தவறிய உறுப்பினர்களுக்கு பயிர்க் கடன்களை துரிதமாக வழங்கி உறுதிப்படுத்தியும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் உடனடியாக கடன் வழங்கும் திட்டம் என்ற 'பச்சை வண்ண அட்டை முறை' அறிவிக்கப்பட்டு, வேகமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதனால், வேளாண் பெருங்குடி மக்கள் இன்று மகிழ்ச்சிக் கடலில் திளைக்கின்றார்கள் என்பதை நான் இந்தப் பேரவையில் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திய வேளாண் பெருங்குடி மக்களுக்கு அவர்கள் கேட்கும் புதிய கடன்களை உரிய காலத்தில் பச்சை வண்ண அட்டையைக் காட்டிய மாத்திரத்தில் உடனடியாக வழங்குகின்ற இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெற்று வரும் விவசாயிகளின் எண்ணிக்கை அளவிட முடியாது.

இத்திட்டத்தின் கீழ் 1992-93-ல் 1,24.607 பேர்களுக்கு ரூ.57.75 கோடியும், 1993-94-ல் 2,95,426 பேர்களுக்கு ரூ.167.74 கோடியும் வள்ளலின் வாரிசின் ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-45

1994-95-ல், 3,50,000 பேர்களுக்கு ரூ. 175.00 கோடி இந்த பச்சை வண்ண அட்டை திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயி கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்களைத் திரும்பிச் செலுத்துவதில், தமிழ்நாட்டில் வெகுவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது, மத்திய கூட்டுறவு வங்கிகளில், 1991-92 ஆம் ஆண்டில் கடன் வசூல் நிலுவை 34.6 விழுக்காடாக இருந்தது, 1992-93 ஆம் ஆண்டில் 23.9 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் கடன் வசூல் நிலுவை 1991-92ல் 41.04 விழுக்காடு நிலுவையில் இருந்தது. 1992-93ல் கடன் வசூல் நிலுவை 31.08 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது. இதுகூட தமிழக தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் விருப்பப்படி கடன் பெற்றவர்கள்

தாமாக முன்வந்து திருப்பிச் செலுத்தியது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைத்தான் 'நபார்டு' எனப்படும் விவசாய வளர்ச்சி மற்றும் ஊரக மேம்பாட்டு தேசிய வங்கியின் தலைவர் திரு. கோட்டையா அவர்கள், 5-4-1994-ல் சென்னைக்கு வருகை தந்தபொழுது அவர் சொன்னார்— " States such as Tamil Nadu has logged good performance in advances and recovery rates even without elected bodies " அதாவது விவசாயிகளுக்கு கடன்கள் வழங்குவதிலும் சரி, கொடுத்த கடனைத் திரும்பி வசூல் செய்வதிலும் சரி, கூட்டுறவுச் சங்கங்களில் மக்களாட்சி நிர்வாகம் இல்லாத நிலையிலும்கூட தமிழ்நாட்டின் செயல்திறன் பாராட்டுதற்குரியது என திட்டவட்டமாக அறிவித்துச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இதுபோலவே, அண்மையில் தமிழகம் வந்த அண்டையிலுள்ள ஆந்திர கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், கர்நாடக கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் மனம் திறந்து தமிழக முதல்வரையும், தமிழகத்தினுடைய கூட்டுறவுத் துறையையும், பாராட்டிச் சென்றார்கள்.

பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தாத விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மீண்டும் புதிய கடன்களை வழங்க இயலாத நிலை இருந்த நிலையை மாற்றி, மக்களை மக்களாக நினைத்துக் கொண்டு வம்புரைகளை, வசைமாரிகளைப் பொழிந்து கொண்டிருக்கும் வகையற்றோர் மத்தியில் எதையும் தாங்கும் இதயத்தோடு பீடுநடை போடும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) போனஸ் திட்டம் என்கிற ஒரு புதிய திட்டத்தை அவர்களுக்கே உரித்தான அறிவு சூட்சமத்தைப் பயன்படுத்திக் கொண்டு வந்தார்கள். தவணை வட்டி, அபராத வட்டி ஆகியவைகளை தள்ளுபடி செய்ததன் மூலமாக 58.73 கோடி ரூபாயை போனசாக வழங்கி சுமார் 4.48 லட்சம் விவசாயிகள் பலன் பெற்று இருக்கிறார்கள்.

நலிந்த பிரிவினருக்குக் கடன் வசதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிமுறைகளின்படி வழங்கப்படுகின்ற மொத்த குறுகிய காலக் கடன்களை 20 விழுக்காடு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது 5 ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நஞ்சை அல்லது புஞ்சை நிலத்தை வைத்திருப்பவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களரல் கடன் வழங்கப்பட வேண்டும் என்கிற அரிய திட்டத்தை இந்த நாட்டிற்கு அறிவித்த தமிழக முதலமைச்சர் அவர்கள், வாழ்வில் நலிந்தவர்களுக்கு எல்லாம் வாழ்வு அளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏன் என்றால், இந்த நாடு உணரும், இந்த நாட்டு மக்கள் உணர்வார்கள்.

அந்த வகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், தமிழகத்திலுள்ள நலிந்த பிரிவினர்களுக்கு, குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடனாக, 1992-93-ல் ரூ.251.91 கோடியும், 1993-94-ல் ரூ.320.50 கோடியும் வழங்கியுள்ளது. இதைப்போலவே, 1994-95-ல் ரூ.353.50 கோடி வழங்கப்பட இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு மாத்திரம் குறுகிய காலக்கடன் 1992-93ஆம் ஆண்டில் ரூ.34.54 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.11.26 கோடியும், 1993-94-ல் குறுகிய காலக் கடனாக ரூ.44.54 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.13.00 கோடியும் வழங்கப்பட்டு இருக்கிறது. 1994-95-ல் குறுகிய காலக் கடனாக ரூ.58.50 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.13.20 கோடியும் வழங்கப்பட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதிதிராவிட வகுப்பினரின் குடும்பத்தில் ஒருவரைத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக ஆக்கும் நோக்கத்துடன் புரட்சித் தலைவியின் அரசு 1991-92 ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிட விவசாயிகளை அதிக அளவில் கூட்டுறவில் சேர்க்கும் திட்டம் தீட்டி, ஒவ்வொரு ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த நபர் ஒருவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர்வதற்கு பங்குத் தொகை ரூ.100 அரசு மானியமாக வழங்கி வருகிறது.

பிற்பகல் 4-50

இதுவரை இத்தகைய புரட்சிகரமான திட்டத்தில் தமிழகத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 85,032 ஆதிதிராவிட பெருங்குடி மக்கள் உறுப்பினராகச் சேர்ந்து இருக்கிறார்கள். இந்த வகையில், 1991-92-ல் ரூ. 20 இலட்சமும், 1992-93-ல் ரூ.20 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு வட்டியில்லாக் கடனாக ரூ. 250 வழங்கி அவர்களின் பங்குத் தொகையைப் பெருக்கி, கடன் பெற இவ்வரசால் வாய்ப்பளிக்கப்படுகிறது. இந்த வகையில் 1993-94-ல் 8000 பேருக்கு ரூ.20 இலட்சம் புரட்சித் தலைவியின் அரசு வழங்கியுள்ளது.

1994-95ஆம் ஆண்டில் மேலும் 8000 பேருக்கு ரூ.20 இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்க புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேவையின் அடிப்படையில் சிறு வியாபாரங்கள்:

சிறு வியாபாரங்களில் ஈடுட்டுள்ளவர்களுக்கு உதவிபுரிய அதிகபட்சமாக ரூ. 500 வரை தேவையின் அடிப்படையில் கடன் வழங்கும் திட்டத்தில் 1992-93ல் மொத்தம் 56,200 பேருக்கு ரூ.18.42 கோடியும், 1993-94-ல் மொத்தம் 38,893 பேருக்கு ரூ.4 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. அதில் பெண்கட்கு மட்டும் 1992-93-ல் 23,248 பேருக்கு ரூ.3.74 கோடியும், 1993-94-ல் 24,417 பேருக்கு ரூ.2.18 கோடியும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

1994-95-ல் இக்கடன் திட்டத்தில் அதிகபட்சத் தொகையாக ரூ. 500-லிருந்து ரூ. 750 வரை உயர்த்தி நபர் ஒன்றுக்கு கடன் வழங்க, புரட்சித் தலைவி அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் நகர்ப்புறங்களில் 129 நகரக் கூட்டுறவு வங்கிகள் பாங்கோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த 129 நகரக் கூட்டுறவு வங்கிகளில் 1991-92-ல் ரூ.410.86 கோடி பல்வேறு கடன்களையும், ரூ.284.15 கோடி நகைக் கடனையும், 1992-93-ல் ரூ.451.81 கோடி பல்வேறு கடன்களையும், ரூ.317.58 கோடி நகைக் கடன்களையும், 1993-94-ல் ரூ.480.97 கோடி பல்வேறு கடன்களையும், ரூ.367.36 கோடி நகைக் கடன்களையும் வழங்கியுள்ளது.

1994-95-ல் நகைக் கடன் ரூ.350.00 கோடியும், பண்ணை சாராத் தொழில் கடன் ரூ.20.00 கோடியும், வழக்கம்போல பல்வேறு வகையான கடன்களையும் வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

மத்திய கூட்டுறவு வங்கியில் பெண்கள் கிளைகள்:

பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க, மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் ஒரு கிளையும், மத்திய கூட்டுறவு வங்கிகளில் 16 கிளைகளும் தற்பொழுது பெண்களால் நடத்தப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) 1994-95ஆம் ஆண்டில் 5 மத்திய கூட்டுறவு வங்கிகளில் பெண்களால் நடத்தப்படும் கிளைகள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணைக்கேற்ப கன்னியாகுமரியில்

வடசேரி, கும்பகோணத்தில் கொறநாடு, திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் திண்டுக்கல் என்.ஜி.ஓ. காலனி, நெற்களஞ்சியமான தஞ்சாா் மற்றும் காஞ்சிபுரம் நகரத்திலும் உருவாக்கப்பட இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொது விநியோகத் திட்டம்:

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்டமானது 126 இலட்சம் குடும்ப அட்டைதாரா்களுக்கு 75 முதன்மைச் சங்கங்கள் மூலமாகவும் மற்றும் 4,915 இணைப்புச் சங்கங்கள் வழியாகவும், 20,912 நியாய விலைக் கடைகள் மூலமும் செயல்படுத்தப்படுகிறது.

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.75 கோடி அளவிற்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சா்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் பாமாயில் விநியோகம் செய்யப்படுகின்றது. இதில், நகா்ப்புறம் மற்றும் புறநகா்ப் பகுதிகளில் 4,384 நியாயவிலைக் கடைகளும், கிராமப் புறங்களில் 16,528 நியாயவிலைக் கடைகளும் இயங்கி வருகின்றன.

இந்தியாவில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சில்லறை வியாபாரம் செய்யும் அமைப்பை பெருமளவில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-55

1992-93ஆம் ஆண்டில் ரூ.901.43 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்களும், 1993-94ஆம் ஆண்டில் ரூ.902.23 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்களும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. நியாயவிலைக் கடைகளில் உள்ள குறைகளையும் சிக்கல்களையும் தீா்க்கும் வண்ணம் அனைத்து மாவட்ட மற்றும் வட்டங்களில் நியாயவிலைக் கடையளவில் கண்காணிப்புக் குழுக்களும் மாவட்ட அளவில் மாவட்ட நுகா்வோா் பாதுகாப்புக் குழுவும் சேவை புரிகின்றன. கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் செயல்பாட்டில் குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் காணப்படுமாயின், இது தொடா்பான புகாா்களை முறையே மாவட்டங்களில் உள்ள வட்ட வழங்கல் அலுவலா்களிடமும், சென்னை நகரமாயின், சென்னையில் உள்ள உதவி ஆணையாளா்களிடமும் விழிப்புக் கமிட்டி உறுப்பினா்கள் தெரிவிக்க வேண்டும்.

விழிப்புக் குழுக்களின் உறுப்பினர்கள், சம்மந்தப்பட்ட எல்லைக்குள் உள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளினால் பெறப்படும் அத்தியாவசியப் பொருட்கள் குறிப்பிட்டுள்ள தரத்தில் உள்ளனவா என சரி பார்க்கலாம். அவ்வாறு இல்லையெனில் அவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லலாம். மேலும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கட்டுப்பாட்டுப் பொருட்களின் அளவு முழுவதும் வந்து சேர்ந்திருக்கின்றனவா என்பதையும் சரி பார்க்க வேண்டும். இது பற்றி மண்டல இணைப் பதிவாளர்களின் கீழ் பணிபுரியும் அலுவலர்களைக் கொண்டு நியாய விலைக் கடைகளை திடீர் ஆய்வு செய்ய 'சிறப்புப் பறக்கும் படைகள்' அமைக்கப்பட்டு செயல் புரிந்து வருகின்றன.

மலைப் பகுதிகளில் நடமாடும் நியாயவிலைக் கடைகள்:

மலைப் பகுதிகள் மற்றும் அணுக முடியாத இடங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மலைவாழ் மக்களின் மேன்மைக்காக நடமாடும் நியாயவிலைக் கடைகளை நடத்திடக் கண்டு உந்துகள் வாங்க அரசு நிதியுதவி செய்து வருகிறது. 18 கூட்டுறவுச் சங்கங்களுக்கு 19 கூண்டு உந்துகள் வாங்க ரூ.59.50 இலட்சங்கள் இதுவரை அரசு ஒப்பளித்துள்ளது. இக்கூண்டு உந்துகள் மலைப்பகுதி மற்றும் மலைவாழ் பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் நடமாடும் நியாய விலைக் கடைகளாக செயல்பட்டு வருகின்றன. நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு குறைவாக சம்பளம் தருவதால்தான் தவறுகள் நடந்து வருகின்றன என்று சொல்லப்படுகின்ற நிலைமையை மாற்ற டாக்டர் புரட்சி தலைவியின் அரசு தீர்க்கமாக ஆராய்ந்து 1.3.1992 முதல் ரூ.350லிருந்து ரூ.500 ஆக உயர்த்தியும், 1.3.1993ல் மேலும் ரூ. 100 உயர்த்தி ஒவ்வொருவருக்கும் சம்பளம் ரூ. 600 ஆக உயர்த்திக் கொடுக்கப்பட்டது. அதுவும் 1.4.94 முதல் ரூ.750/- ஆக டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 25 மாதங்களில் ரூ. 400 என்ற அளவில் ஊதிய உயர்வு கொடுக்கும் வகையில் கூட்டுறவுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 5 கோடி அளவில் கூடுதல் செலவாகிறது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தவிர கருணைத் தொகையாக இந்த ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் பொங்கலுக்கு ரூ. 200 வழங்கி உத்திரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கூட்டுறவுத் துறையில் தொழில் பயிற்சி நிலையங்கள்:

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணைக்கேற்ப தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்களில் துணி வெட்டுதல் மற்றும் தையற்கலை ஆடை தயாரிக்கும் கலை, கணிப்பொறி பயிற்சி, மின்சாரப் பணியாளர், ஆகிய பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. இப்பயிற்சி நிலையங்களில் பயிலுகின்ற மாணவர்களுக்கு இலவசமாக தங்கும் வசதியும், இலவசமாகப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த நான்கு பயிற்சி வகுப்புகளிலும் 1993-94 ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டையில் 111 மாணவர்களும், பர்கூரில் 111 மாணவர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நடப்பாண்டில் இதே முறையில் பயிற்சி நடைபெறவிருக்கிறது என்பதையும் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதன் மூலமாக சுயவேலை வாய்ப்புப் பெருக்கத் திட்டத்திலும் புரட்சித் தலைவி ஆட்சி பெரும் பங்கு ஆற்றியிருக்கிறது எனப் பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ளலாம். இந்தப் பயிற்சிக் கேந்திரங்களை நடத்துவதற்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.150.00 இலட்சம் வழங்கிட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான செலவினங்களுக்காக ரூ.125.00 இலட்சம் குவிப்பு நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை முதலீடு செய்யும் வகையில் கிடைக்கின்ற வட்டித் தொகையைக் கொண்டு இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. பர்கூரில் உருவாக்கப்பட்டுள்ள பயிற்சி நிலையத்திற்கு 5 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி ரூ.70 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டுகின்ற பணியும் தொடங்கி முடியும் தருவாயில் இருக்கிறது என்பதையும் இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 5- 00

கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளிலுள்ள குறைகளைக் கேட்டு அந்தக் குறைகளை உடனடியாகப் போக்குவதற்காக மாவட்ட அளவில் ஒரு குறை கேட்கும் அமைப்பு ஒன்றினை உருவாக்க மாண்புமிக்க முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளதையொட்டி, அதற்குரிய அரசு ஆணை வெளியிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரில் தொழிற்கடன் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டு வாழ்வில் நலிவுற்றோருக்குத் தொழில்

TRUTH ALONE TRIUMPHS

தொடங்குவதற்காக நகரக் கூட்டுறவு வங்கியின் மூலம் கடன் மிக எளிதில் கிடைக்க வழிவகை காணப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 1992-93ல் 1,42,447 பேருக்கு ரூ.68.23 கோடியும் 1993-94ல் 1,89,492 பேருக்கு ரூ.83.72 கோடியும் கடன் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

நடப்பு நிதியாண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் 2 இலட்சம் பேருக்கு தொழில் தொடங்குவதற்கு கடன் வழங்கப்பட இருக்கிறது. இதில் 1992-93ல் 62,980 பெண்களுக்கு ரூ.23.05 கோடியும் 1993-94ல் 1,00,707 பெண்களுக்கு ரூ.38.67 கோடியும் தொழில் தொடங்கக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

'லேம்ப்' எனப்படும் மலைவாழ் மக்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் தற்போது 18 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (லேம்ப் சொஸைட்டீஸ்) 75,754 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. தற்போது இந்தச் சங்கம் வட்டியில்லாக் கடன்களை பழங்குடியினர் மேம்பாட்டிற்கு வழங்கி வருகின்றது. புரட்சித் தலைவியின் அரசு 1991-92ல் ரூ.91.50 இலட்சம், 1992-93ல் ரூ.78.28 இலட்சம், 1993-94ல் ரூ.79.11 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. 1994-95ல் ரூ.78.99 லட்சம் மானியம் வழங்க உத்தேசித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலம் முழுவதும் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தங்களுடைய உறுப்பினர்களுக்கு விவசாய விளைபொருட்களை நியாயமான முறையில் விற்பனை செய்ய உதவியுள்ளது. 1991-92ல் ரூ.325.39 கோடி, 1992-93ல் ரூ.389.48 கோடி, 1993-94ல் ரூ.428.32 கோடி மதிப்புள்ள விவசாய விளைபொருட்களை விற்பனை செய்யவும் தகுந்த நடவடிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அவர்களுடைய அறிவுரைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு 1992-93ல் ரூ.168.04 கோடி, 1992-93ல் ரூ.194.64 கோடி, 1993-94ல் ரூ.169.63 கோடி மதிப்புள்ள வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு மூலம் 1991-92ல் ரூ.1267.35 கோடி, 1992-93ல் ரூ.1236.10 கோடி, 1993-94ல் ரூ.1400.10 கோடி மதிப்புள்ள நுகர்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டப் பணிகள் காமராசர் மாவட்டம், தென்னாற்காடு–வள்ளலார் மாவட்டம் மற்றும் விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம் உட்பட கடந்த சில

ஆண்டுகளாய் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் காமராசர் மாவட்டத்தில் ரூ.862.51 லட்சம் மதிப்பீட்டிலும், தென்னாற்காடு—வள்ளலார் மற்றும் விழுப்புரம்—இராமசாமி படையாச்சியார் மாவட்டங்களில் ரூ.1508.07 இலட்சம் மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் திருவண்ணாமலை-சம்புவராயர், தர்மபுரி மாவட்டங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்பதையும் படிப்படியாக இத்திட்டம் இராமநாதபுரம், பெரியார், புதுக்கோட்டை, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் ஒன்பது கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் மூலம் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் தத்துவமும் வரலாறும், கூட்டுறவுச் சட்டம், கூட்டுறவுத் தணிக்கை, கூட்டுறவுக் கணக்கியல், கூட்டுறவு வங்கியியல், கூட்டுறவு மேலாண்மை, கூட்டுறவுக் கடன், கடனற்ற கூட்டுறவுச் சங்கங்கள், ஆகிய எட்டு பாடங்களைப் பட்டயப் பயிற்சிக்கும், அஞ்சல்வழிப் பயிற்சிக்கும் கற்பிக்கப்பட்டு வருகிறது. 1992-93-ல் 3000 பேர் கூட்டுறவு பட்டயப் பயிற்சிக்கும், 3336 பேர் அஞ்சல் வழிக் கூட்டுறவுப் பயிற்சிக்கும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். 1993-94 ஆம் ஆண்டில் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியினை அதிக அளவில் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பெறுகின்ற வகையில் 4336 பேர் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்கும், 5274 பேர் அஞ்சல் வழி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக்கும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 5- 05

பள்ளிப் பருவத்திலேயே வளர்ந்துவரும் இளைய தலைமுறையினர் அனைத்துத் துறைகளிலும் அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அக்கறை கொண்டவர்கள் என்பதை நாடு அறியும். மாணவப் பருவத்திலேயே கூட்டுறவு பற்றிய அடிப்படை கருத்துக்களைக் கற்பிக்கவேண்டும் என்ற அடிப்படையில் திருச்சி வானொலி மூலம் 15.1.1994 முதல் 31.3.1994 வரை கூட்டுறவுப் பாடம் கற்பிக்கப்பட்டது.

14,000 மாணவர்கள் இப்பாடத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டார்கள். 12 பாடங்கள் பற்றி தினமும் 5 முதல் 7 நிமிடம் வரை நடத்தப்பட்டது.

பாடம் முடிந்த பின்னர் தேர்வு நடத்தப்பட இருக்கிறது. வானொலி மூலம் கேள்விகள் ஒலிபரப்பப்பட்டு அஞ்சல் மூலம் பெறப்பட்ட 28 தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு பரிசு வழங்கப்படும். 1994-95 ஆம்

ஆண்டில் இத்திட்டத்தை மற்ற வானொலி நிலையங்கள் மூலமும் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது.

'இம்ப்காப்ஸ்' எனப்படும் இந்திய மருத்துவர்கள் கூட்டுறவு மருந்து செய் நிலையம் மற்றும் பண்டகசாலை சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவ முறையில் இயற்கை மருந்துகளை தயாரித்து வழங்கி வருகிறார்கள். 1944 ஆம் ஆண்டில் சென்னையில் நிறுவப்பட்ட இந்தக் கூட்டுறவுச் சங்கம் சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவத் துறையில் பதிவுபெற்ற மருத்துவர்கள் 9,836 பேர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அவர்களுடைய தேவைக்கேற்ப மருந்துகளைச் செய்து வழங்கி வருகிறது. ஆரம்ப காலத்தில் சுமார் ரூ.20,000/-க்கு விற்பனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறபோது நீங்கள் அங்கே இருந்து ஊரகத் தொழில் துறை அமைச்சரோடு பேசுகிறபோது அவருடைய கவனம் சிதற வாய்ப்புண்டு.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் போகிற வேகத்தைப் பார்த்தால் நாம் எல்லோரும் எழுந்து போனால்கூட அவர் பேசிக் கொண்டே இருப்பார் போல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்காகத்தான் உங்களுக்கு சில சக்தி மிக்க சித்த வைத்திய மருந்துகளை எல்லாம் கொடுத்து வைத்துவிட்டுத்தான் பேசிக் கொண்டிருக்கிறார். எந்த வகையிலும் உங்களுக்குச் சோர்வு இருக்காது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி கவுல் அண்டு ஷக்தரைப் பற்றிப் பேசுபவர், ஆகவே, நிதானமாகத்தான் எதிலும் செல்வார்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பக் காலத்தில் சுமார் 20 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்து வந்த இந்தச் சங்கத்தில் கடந்த ஆண்டில் 4.40 கோடி மதிப்பளவில் விற்பனை ஆகியிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சங்கத்தில்தான் உலகத்திலேயே யாரும் கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு எப்படிப்பட்ட மருத்துவ விஞ்ஞானிகள் இருந்தாலும்கூட இன்றையதினம் 'எய்ட்ஸ்' நோய்க்கு

மருந்துகள் கண்டுபிடிக்க முடியவில்லை, கண்டுபிடிக்கப்படவில்லை என்கின்ற அந்த நிலையில்கூட இன்றையதினம் தமிழகத்தில் இருக்கின்ற அந்த சித்த பழங்கால நூல்கள் மூலமாக, சித்தர்கள் எல்லாம் எழுதி வைத்திருந்த அந்த கட்டுரைகள் மற்ற கருத்துக் கோவைகளை எல்லாம் எடுத்து வைத்து புதிய மருந்துகளை கண்டுபிடித்திருக்கிறார்கள். இங்கே தயாரிக்கப்படுகின்ற அந்த 'எய்ட்ஸ்' நோய் மருந்துகள் அயல் நாடுகளுக்கும் ஏற்றமதி ஆகிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

திரு. வி. கே. சின்னசாமி: **

பிற்பகல் 5-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தெரிவித்ததிலே இருந்து இப்போது மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது வரையிலேயும் இருந்தால் சிரமங்கள் அதிகமாகும் என்று சொல்கின்ற காரணத்தால், எல்லாம் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டு இருப்பதால், அதைப்பற்றி நான் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் சொன்னதெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கிறது.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைப்பற்றிப் பேசவில்லை. 'எய்ட்ஸ்' நோய் இருப்பவர்களுக்கு இங்கே இன்றைக்கு நான் சொன்ன அந்தக் கருத்துக்கள் மூலம், யுனானி, சித்த வைத்தியத்தின் மூலம், 'எய்ட்ஸ்' நோய்க்காக மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னேன்.**

கூட்டுறவுத் துறையில் மற்றும் கூட்டுறவுத் .துறையைச் சார்ந்த நிறுவனங்கள் அனைத்துக்குமான கட்டுமானப் பணிகளுக்கென பிரத்யேகமாக மாநிலம் முழுமைக்கும் கண்காணிப்புப் பொறியாளர் (கட்டுமானம்) நியமிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு கட்டிடங்கள் கட்டும் பணிகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆணைக்கு ஏற்ப மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 1991-92-ல் 121 வேலைகள் ரூபாய் 6.92 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றன. 1992-93-ல் 140 வேலைகள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

6.38 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றன. இவற்றில் 139 வேலைகள் முடிவுற்றன. 1993-94-ல் 120 வேலைகள் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 1994-95 ஆம் வருடத்தில் 150 வேலைகள் ரூபாய் 7.20 கோடி மதிப்பீட்டில் நடைபெற இருக்கின்றன என்பதை நான் இங்கே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அநேகமாக, வெட்டுத் தீர்மானங்களிலே பெருமளவுக்கு இன்றையதினம் தமிழ்நாட்டில் கூட்டுறவுத் தேர்தல் நடைபெறவில்லை என்றும், கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டிடங்கள் தேவை என்றும், கூட்டுறவுச் சங்கங்களுக்காக, மத்திய அமைச்சகம் ஒரு மாதிரிச் சட்டத்தை அமைத்து `Model Code' - அனுப்பி இருக்கிறார்கள். அதனுடைய நிலைமை என்ன என்பதைப் பற்றியும், பயிர் இன்சூரன்ஸ் திட்டங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். கூட்டுறவுத் தேர்தலைப் பொறுத்தமட்டில் நான் பலமுறை இந்த அவையிலே மிக விளக்கமாக, விரிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறேன். கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் இன்றையதினம் இந்த அரசால் நடத்த முடியாமல் இருக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து இருக்கிறார்கள். என்றாலும்கூட, அதற்கான விளக்கங்களை நான் மீண்டும் ஒரு முறை அவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுச் சங்கத் தேர்தல் என்பதைப் பொறுத்தவரையில், அதாவது அந்தக் காலத்திலே கதையிலே சொல்லுவார்கள். அது நடந்ததோ அல்லது நடக்காததோ எனக்குத் தெரியாது. நந்தனாரைப் பொறுத்தமட்டிலே நடராசனை வணங்கத்தான் விரும்புகிறார். ஆனால் இடையிலே ஒன்று இருக்கிறதே 'நந்தி' அந்த நந்தி விலகினால் தானே நந்தன் நடராசனைப் பார்க்க முடியும். இந்த அரசைப்பொறுத்தமட்டிலே, கூட்டுறவுத் தேர்தல்களை நடத்த நிச்சயமாக எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறது. ஆனால் நீதி மன்றத்தினுடைய தடை ஆணை என்பது அங்கே குறுக்கே இருக்கிற காரணத்தாலே அந்தத் தடை ஆணை விலக்கப்பட்டால்தான் இந்த அரசு கூட்டுறவுத் தேர்தலை நடத்தும் என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, உச்ச நீதி மன்றமானாலும் சரி, சென்னை உயர்நீதி மன்றமானாலும் சரி, அவைகளால் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஆணை என்ன சொல்லுகிறது என்று சொன்னால், "நாங்கள் மறுமுறை ஆணையிடுகிற வரையிலே கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல்களை நடத்தக் கூடாது"—`Don't conduct elections till further orders are given by this Honourable Court' - என்கின்ற அந்த

அடிப்படையிலேதான் இன்றையதினம் கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல்கள் தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றினை மட்டும் இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு எந்தக் காலத்திலும் எந்தத் தேர்தலையும் கண்டு அஞ்சியது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அண்மையில் நடந்த இராணிப்பேட்டை தேர்தல் ஆனாலும் சரி,, பழனி தேர்தல் ஆனாலும் சரி, வர இருக்கின்ற மைலாப்பூர் தேர்தல் ஆனாலும் சரி, பெருந்துறை தேர்தல் ஆனாலும் சரி, (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே இந்த அரசு எப்படிப்பட்ட வெற்றியைக் காண இருக்கிறது என்பதை இந்த நாடு அறியப் போகிறது. ஆகவே, பெரிய பெரிய தேர்தல்களை எல்லாம் சந்தித்த இந்த அரசு, கூட்டுறவுத் தேர்தலை சிறிய தேர்தல் என்று நான் சொல்லவில்லை; பொதுத் தேர்தல்களையெல்லாம் சந்தித்த இந்த அரசு கூட்டுறவுத் தேர்தல்களை எந்த நேரத்திலும் சந்திக்கத் தயாராக இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) நீதி மன்றத் தடை ஆணை நீக்கப்பட்டால் என்பதை மட்டும் நான் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல உறுப்பினர்கள், வெட்டுத் தீர்மானங்கள் மூலமாகக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டுமென்கிற அந்தக் கருத்தினையெல்லாம் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களானாலும் சரி அல்லது மத்திய கூட்டுறவுச் சங்கங்களுடைய கிளைகளானாலும் சரி, அவற்றிற்குக் கட்டிடம் கட்டப்பட வேண்டுமென்று சொன்னால், அரசினுடைய நிதிநிலைமையை உத்தேசித்து, நிதியாதாரத்தைக் கொண்டுதான் புதிய கட்டிடங்கள் கட்ட முடியும்.

பிற்பகல் 5-15

மாண்புமிகு தம்புசாமி அவர்கள்கூட, உரையாற்றுகிற பொழுது எடுத்துச் சொன்ன ர்கள், பல பி.ஏ.சி.ஸ்-அதாவது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை நஷ்டத்திலே நடைபெறுவதற்கு அந்த அலுவலகத்தை நடத்துகின்ற, அல்லது வங்கிகளை நடத்துகின்ற அதிகாரிகளால் இழைக்கப்படுகின்ற குற்றங்கள் காரணமாக இருக்குமோ என்றுகூட நான் ஐயப்படுகிறேன் என்று எடுத்துச் சொன்னார்கள்.

அவர்களே ஒத்துக்கொண்ட அந்த அடிப்படையிலே. நஷ்டத்திலே பல கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெறுகின்ற காரணத்தினாலே, புதிய புதிய கட்டிடங்களை வேகம் வேகமாக எழுப்ப முடியாது என்பதை எடுத்துச்

சொல்லிக்கொள்கிறேன். நிதி ஆதாரத்திற்கேற்ப, நிதிநிலை எப்பொழுது உயர்ந்துகொண்டு வருகிறதோ அப்பொழுது புதிய கட்டிடங்களைக் கட்ட இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

பயிர் இன்ஷ்யூரன்ஸ் முறையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அண்மையிலே, 1993 டிசம்பர் மாதத்திலே நடைபெற்ற புயல் வெள்ளத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட பயிர் இன்ஷ்யூரன்ஸ்களுக்கு நாகை-காயிதே மில்லத் மாவட்டமானாலும் சரி, தஞ்சாவூர் மாவட்டமானாலும் சரி அல்லது வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டத்திலே ஒரு பகுதியானாலும் சரி, எங்கே பயிர்கள் பாழாகி இருக்கின்றன என்பது இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். வெள்ளச் சேதத்தினால் மக்களோ அல்லது பயிரோ பாதிக்கப்படுகின்ற நேரத்தில், புயல் எந்தவகையில் வருகிறதோ அதைவிட வேகமாகப் புரட்சித் தலைவி அவர்கள் அந்த இடங்களுக்குச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கெல்லாம் தேவையான உதவிகளைச் செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அவர்கள் செல்லுகின்ற வேகத்திற்கு ஈடாக அமைச்சர்களையும் அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி அங்கேயிருக்கின்ற மக்களை நேரடியாகக் கண்டு, உதவிகளையெல்லாம் வழங்கச் செய்திருக்கிறார்கள்.

இந்தப் பயிர் சேதத்தைப் பொறுத்தமட்டில் இது பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் மூலமாக இன்றையதினம் மத்திய அரசு, இன்ஷ்யூரன்ஸ் செய்திருக்கின்ற அந்தக் கம்பெனிகளும் பெருமளவிற்கு அந்தப் பணத்தைக் கொடுக்கின்ற அளவிற்கு எல்லாவிதமான முயற்சிகளும் எடுத்து, குறிப்பாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியினுடைய அதிகாரிகளையெல்லாம் அழைத்துச் சென்று வீடியோ படங்களை எடுத்து, அந்தப் படங்களைப் பெரிய இடங்களுக்குப் போட்டுக் காட்டி அந்த நஷ்டத்தை அவர்கள் சரி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணம் வெகு விரைவிலே வந்துவிடும் என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்றையதினம் வெட்டுத் தீர்மானங்கள் மூலமாகக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சில உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய முடியாது. அவர்கள் சொல்லிய காரணம், அரசே வரிகளையெல்லாம் தள்ளுபடி செய்திருக்கிறது, ஆகவே கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கிற அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். நிலவரி கட்டுவது அல்லது வரியை

அரசுக்குச் செலுத்துவது என்பது வேறு; வாங்கிய கடனைத் திருப்பித் தருவது என்பது வேறு. ஆகையினால் நாம் எங்கோ-அரசு எங்கோ கடன்களை வாங்கி இங்கேயிருக்கின்ற விவசாயிகள் கடன் பெறுகின்ற காரணத்தினாலே வாங்கிய இடத்திலே அரசு செலுத்த வேண்டிய கடமை இருக்கிற காரணத்தினாலே கடன்களையெல்லாம், வட்டிகளையெல்லாம் தள்ளுபடி செய்ய இயலவில்லை, இன்றைய சூழ்நிலையில் என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்றையதினம் இந்த இன்ஷ்யூரன்ஸைப் பொறுத்தமட்டில், தற்போது நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் காரிப் 1993 மற்றும் ராபி 1993- 94 பருவக் காலங்களில் ஏற்பட்ட இழப்பிற்கு ஈட்டுத்தொகை பயிர் அறுவடை பரிசோதனை அடிப்படையில், விதிகளுக்கு உட்பட்டு, பொதுக் காப்பீட்டுக் கழகம் ஈட்டுத் தொகை வழங்க எல்லாவிதமான நடவடிக்கையும் எடுத்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

அவர்கள்கூட 8-4-1994 அன்று கேட்ட தொகையைப் பெருமளவிற்குத் தருவது என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்ற அந்த நிலையையும் நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்பொழுது எடுத்துவைத்த கருத்துக்களுக்கும், அவர்கள் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானங்களுக்கும் நான் வழங்கிய பதிலுரையில் பெரும்பாலும் விளக்கங்கள் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய சில கருத்துக்கள் நேரத்தின் அருமை கருதி, நான் தனித்தனியே அவர்களுக்குப் பதிலுரை தரவில்லை என்றாலும்கூட, அவர்கள் கொடுத்த தீர்மானங்களின் மூலமாகச் சொல்லப்பட்டிருக்கின்ற அந்த நிலைகளையெல்லாம் அறிந்து, தக்க நேரத்தில் அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்ய இந்த அரசு என்றும் தயாராக இருக்கிறது.

எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டு, கூட்டுறவுத் துறைக்கான மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்பான பதிலுரை. திரு. டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவுத் தணிக்கைத் துறையும், கூட்டுறவுத்

துறையின்கீழ் ஒரே தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. கூட்டுறவுச் சங்கங்களினுடைய பதிவாளராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி பணியாற்றி வருகிறார். அதேபோன்று கூட்டுறவுத் துறையினுடைய செயலாளராகவும் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி பணியாற்றி வருகிறார். ஆனால், கூட்டுறவுச் சங்கங்களினுடைய கணக்குகளைப் பார்க்கின்ற, தணிக்கைத் துறையினுடைய த்லைமை, ஒரு இணைச் செயலாளருடைய தலைமையிலே இயங்கி வருகிறது. இப்படி என்றால், எப்ப்டி கூட்டுறவினுடைய தணிக்கைத் துறை சுதந்திரமாகச் செயல்பட முடியும்? ஆகவே, கூட்டுறவுத் தணிக்கைத் துறையைத் தனியாகப் பிரித்து, அதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைத் தலைவராக நியமித்தால், நிச்சயமாக கூட்டுறவுத் தணிக்கைத் துறை சுதந்திரமாகச் செயல்பட முடியும். அதை அமைச்சர் ஐயா அவர்கள் செய்வதற்கு முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியோ அல்லது பதிவாளராக இருப்பவரோ எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் இந்த மாதிரிக் கூட்டுறவுச் சங்க சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மாதிரிக் கூட்டுறவுச் சங்கத்தை, அது தன்னுடைய பரிந்துரைகளைச் சொல்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினுடைய அறிக்கையும் அரசுக்கு வந்திருக்கிறது. அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அந்த 'மாடல் கோவாபரேடிவ் ஆக்ட்'—மாதிரி கூட்டுறவுச் சங்கச் சட்டத்தைப் பொறுத்தமட்டில், தேர்தல் நடந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்தவுடன் அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டு, அதற்கு ஒரு வடிவம் கொடுப்பதுதான். ஒரு ஜனநாயக முறை என்று கருதப்படுகிற அந்த நிலையில், அந்தத் தேர்தல்கள் முடிந்தவுடனே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படும் என்பதை எடுத்துச் சொல்லி, இந்தக் கூட்டுறவுத் துறையின் மூலமாக நான் ஆற்றிய உரையையொட்டி, சில அறிவிப்புகளை அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதாவது, மகளிருக்காக கூடுதலாக மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகளைத் திறத்தல். தமிழகத்தில் மொத்தம் 20 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன. இவற்றிற்கு 582 கிளைகள் உள்ளன; அவற்றில் 16 வங்கிகள் மகளிர் மட்டுமே பணியாற்றுவனவாகும். ஒவ்வொரு மத்திய கூட்டுறவு வங்கியிலும் ஒரு மகளிர் வங்கிக் கிளை வீதம் மேலும் 20 மகளிர் வங்கிக் கிளைகள் திறக்கப்படும் என்பதை அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது சிறு வணிகர்கள், பெட்டிக்கடை வியாபாரிகள் போன்றவர்களுக்குத் தேவை அடிப்படையிலான கடன்களை மத்திய கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கி வருகின்றன. இத்தகைய கடன்கள் பெரும்பாலும் பெண்களுக்கு வழங்கப்படுகின்றன. தற்போது இவ்வாறு வழங்கப்படும் கடன் தொகை அளவான 500 ரூபாயை 750 ரூபாயாக அதிகரிக்கவும், அதற்காக வசூலிக்கப்படும் வட்டி வீதத்தை 16 சதவிகிதத்திலிருந்து 14 சதவிகிதமாகக் குறைக்கவும், இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்தில் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடன் நிவாரணச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து முறையான நிதி நிறுவனங்கள் அல்லாதவைகள், கடன் வழங்குவதைக் குறைத்துக் கொண்டன. வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களின் கோரப் பிடியில் மீண்டு அவசரக் கடன் தேவைகளைச் சமாளிக்கவும், மாநிலம் முழுவதிலும் உள்ள கடன் கூட்டுறவுச் சங்கங்கள் நகைக் கடன்களை அடமானத்தின் பேரில் வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

நகைகளை அடமானம் வைப்பதன்பேரில், தற்போது ஒருவருக்கு வழங்கப்படும் உயரளவு கடன் தொகை ரூ. 25,000/- ஆகவும், ஒரு சவரனுக்கு வழங்கப்படும் கடன் தொகை ரூ. 2,200/- ஆகவும் வழங்கப்படுகிறது. உயரளவுக் கடன் தொகையான அந்த ரூ. 25,000/- ஐ, ரூ. 40,000/- ஆகவும், ரூ 2,200/-ஐ, ரூ. 2,400/- ஆகவும் உயர்த்த இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமப்புற மக்களுக்கு நகைக் கடன் வழங்க, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை ஊக்குவிக்கும்பொருட்டு, தீ மற்றும் திருடர்கள் அணுக முடியாத வகையில் நகைகளைப் பாதுகாப்புக்காக வைப்பதற்கான பெட்டகங்களை 1994-95-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட 450 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 225.00 இலட்சம் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி நிதியிலிருந்தும் நடப்பு ஆண்டில் மானியமாக ஒதுக்கப்படும்.

மேலும், 1994-95 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் அரசு நிதியிலிருந்து 150 தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ 30 இலட்சம் கடனாக வழங்க, வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே 1993-94 வரை இத்திட்டத்தின் கீழ் ரூ. 100.95 இலட்சம் கடனாக 895 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு வழங்கியுள்ளது.

எனவே, 1994-95 ஆம் ஆண்டில், தேர்ந்தெடுக்கப்பட்ட 450 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்படவுள்ள ரூ. 225 இலட்சம் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி நிதியிலிருந்தும் நடப்பு ஆண்டில் மானியமாக ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-25

தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி விளையாட்டுத் துறையில் ஒரு பொற்காலமாகும் என்பதை இந்த இந்திய நாடே அறிந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தடகளப் போட்டிகளுக்கும், உடல்திற விளையாட்டுகளுக்கும் ஊக்கமளிப்பதற்காக மாநில அரசு அண்மையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த அணுகுமுறைக்கு இணங்க, அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் சுமார் 47,067 பணியாளர்களும் பங்கேற்பதற்காக, ஒவ்வோராண்டும் மாநில அளவிலான தடகளப் போட்டிகளை நடத்தவும், சிறந்த விளையாட்டு அணியினருக்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயரில் சிறந்த வேலைப்பாடுகள் அடங்கிய சுழற்கோப்பை ஒன்று வழங்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவு இயக்கம் அடித்தள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு மாபெரும் இயக்கமாகும். கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு, வளர்ச்சி, தற்போது கூட்டுறவு இயக்கம் சமுதாயத்திற்கு ஆற்றுகின்ற மகத்தான சேவை குறித்தும் விளக்குகின்ற 15 நிமிடங்கள், அல்லது 30 நிமிடங்கள் கால அளவுடைய இரண்டு திரைப்படங்களைத் தயாரிக்க இந்தத் துறை இன்றையதினம் முடிவு எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையின் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பிரச்சார விளம்பர நடவடிக்கைகளை மேலும் முடுக்கிவிடக் கருதுகிறது.

பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில், ரூபாய் ஒரு கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவிற்குத் தயாராக இருக்கின்ற செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் புதிய கட்டிடத்திற்குப் " புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா " என்கிற திருப்பெயரை சூட்ட முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் இம் மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், காஞ்சிபுரம், கடலூர், சாத்தூர் ஆகிய இடங்களில் கூட்டுறவு பட்டயப் பயிற்சிக்காக கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தஞ்சாவூரிலுள்ள கூட்டுறவு பயிற்சி நிலையத்திற்கு 'சாமியப்பா' கூட்டுறவு பயிற்சி நிலையம் என்றும், மதுரையிலுள்ள கூட்டுறவு பயிற்சி நிலையத்திற்கு ''பாண்டிய நாடு' கூட்டுறவு பயிற்சி நிலையம் என்றும், திருநெல்வேலியிலுள்ள கூட்டுறவு பயிற்சி நிலையத்திற்கு 'மேதை தளவாய் குமாரசுவாமி' கூட்டுறவு பயிற்சி நிலையம் என்றும், கோயம்புத்தூரிலுள்ள கூட்டுறவு பயிற்சி நிலையத்திற்கு 'இராமலிங்கம்' கூட்டுறவு பயிற்சி நிலையம் என்றும், சேலத்திலுள்ள கூட்டுறவு பயிற்சி நிலையத்திற்கு ' 'நாச்சியப்பா' கூட்டுறவு பயிற்சி நிலையம் என்றும் ஏற்கெனவே, பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம், கடலூர் மற்றும் சாத்தூர் ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு பயிற்சி நிலையங்களுக்கு பெயரிடப்படாமல் அந்தந்த ஊர்களின் பெயரே அப்பயிற்சி நிலையங்களுக்கு இடப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட மூன்று கூட்டுறவு பயிற்சி நிலையங்களுக்கும் பெயரிடப்பட வேண்டியது மிகவும் அவசியமென உணரப்படுவதால், காஞ்சிபுரம் கூட்டுறவு பயிற்சி நிலையத்திற்கு 'பேரறிஞர் அண்ணா' அவர்களுடைய பெயரையும் (மேசையைத் தட்டும் ஒலி), கடலூர் கூட்டுறவு பயிற்சி நிலையத்திற்கு 'டாக்டர் எம்.ஜி.ஆர்.' அவர்களுடைய பெயரையும் (மேசையைத் தட்டும் ஒலி), சாத்தூர் கூட்டுறவு பயிற்சி நிலையத்திற்கு 'சங்கரலிங்கனார்' என்கிற பெயரையும் (மேசையைத் தட்டும் ஒலி) சூட்ட முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே அறிவிக்க நான் மகிழ்ச்சி அடைகிறேன்.**

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரலிங்கனார் என்று சொல்லியிருக்கிறார். தியாகி சங்கரலிங்கனார் என்று சேர்த்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூட்டுறவுத் துறை அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபடி தியாகி என்கிற அந்த வார்த்தையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

பிற்பகல் 5-30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: * *

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * *

திரு. எஸ். டேனியல்ராஜ்: * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்குப் புதிதாகக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டிடத்திற்கு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரைச் சூட்டுவது என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதை அறிவித்து முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாங்குடி கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது எப்போது பிரிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சங்கத்தை அல்லது ஒரு வங்கியைப் பிரிக்கவேண்டும் என்றால் அதற்கு பல விதிமுறைகள் இருக்கின்றன. அங்கே அதற்கான மக்கள் தொகை இருக்கவேண்டும். அங்கே அந்த

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வங்கிக்காக எதை எதை எதிர்பார்க்கிறார்களோ அந்த வியாபாரமும், மற்றவற்றிற்குமான தன்மைகளும் வசதிகளும் இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். அதுமட்டுமல்ல, ஒரு சங்கத்தை இரண்டாகப் பிரிக்கிறபோது ஏற்கெனவே இருந்த வங்கி செயல் இழந்துவிடக்கூடாது. அது நலிந்துவிடக்கூடாது. அதுமட்டுமல்லாமல் நபார்ட் கொடுத்திருக்கிற சில விதிமுறைகளைப் பார்க்கிறபோது வங்கிகளை எல்லாம் அவ்வளவு இலகுவாகப் பிரிக்க முடியாது என்றாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் சொல்வதற்கு ஏற்ப அங்கே இருக்கின்ற சூழ்நிலைகளை கவனித்து விரைவில் அதைச் செய்யமுடியுமா என்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்பதை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆசைமணி.

திரு.எஸ்.ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கருத்துக்களை தெள்ளத் தெளிவாக சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், வேளாண்மை உற்பத்தியைப் பொறுத்தவரையில் முதல் நிலையிலே நிற்கின்ற மாவட்டமாகும். அந்த மாவட்ட மக்கள் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்த மத்திய கூட்டுறவு வங்கியை அங்கே அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது நல்ல செய்தியைச் சொல்வாரா என்று எதிர்பார்த்தேன். அங்கே மத்திய கூட்டுறவு வங்கியை அமைப்பதற்கு திட்டம் உள்ளதா? எப்போது துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தின் வளத்தைப் பற்றியும் அங்கு வாழ்கின்ற மக்களைப் பற்றியும் இந்த அரசு நன்றாக அறியும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தையும் இந்த அரசு கவனத்தில் கொண்டு நிதிநிலைக்கேற்பவும் மற்ற சூழ்நிலைகளுக்கேற்பவும் இது கவனிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அளித்துள்ள பதிலில் 3 பிரச்சினைகளில் எனக்கு சரியான விளக்கம் கிடைக்கவில்லை. மாடல் கோ-ஆப்பரேடிவ் ஆக்ட் உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட கமிட்டியிலே தமிழ்நாட்டைச் சார்ந்த யாரும் உறுப்பினராக இல்லாத நிலைமையிலே தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலமாக இந்த மாதிரி கூட்டுறவுச்

சட்டத்தை பரிசீலிப்பதற்காக ஒரு கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டிருந்தேன். இன்னொன்று இந்தக் கொள்கைக் விளக்கக் குறிப்பிலே 38 வது பக்கத்திலே ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் கோவை மாவட்டத்தில் நிறைவேற்றப்படுவதாக ஒரு குறிப்பு இருக்கிறது. இது குறித்து அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதில் உரையில் ஏதும் சொல்லவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் அதிலே இருக்கிறது இல்லையா?

திரு.வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது கோவை மாவட்டத்தை விட்டுவிட்டார். அதனால் இருக்கிறதா இல்லையா என்று தெரியவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வி கேளுங்கள், இரண்டாவது, மூன்றாவது கேள்விக்குப் போகாதீர்கள். நீங்கள் ஏற்கெனவே பேசியிருக்கிறீர்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி கூட்டுறவுச் சங்கச் சட்டத்தைப் பொறுத்துவரையில் ஏற்கெனவே ஒரு குழுவை மத்திய அரசு உருவாக்கியது. அங்கே அந்தச் சட்டத்தை உருவாக்கி அனுப்பியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், அந்த மாதிரி கூட்டுறவுச் சங்கச் சட்டத்தை ஆய்ந்து தன்னுடைய கருத்துக்களை தருவதற்காக சர்க்கரைத் துறை ஆணையர் தலைமையில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், பால் துறை ஆணையர், கைத்தறித் துறை ஆணையர், தொழில் துறை ஆணையர் ஆகியோரைக் கொண்ட ஒரு சிறு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு தன்னுடைய அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்திருக்கிறது. மாதிரி கூட்டுறவுச் சங்கச் சட்டம் மற்றும் மேற்படி குழுவின் அறிக்கை இப்போது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. நான் ஏற்கெனவே தேர்தல் முடிந்துவிட்டபிறகு இதைப்பற்றி முடிவு செய்யப்படும் என்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.செல்லக்குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் எண் 63ல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக மகளிரே நிர்வகிக்கின்ற கூட்டுறவு வங்கிகள் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே

மகளிருக்கான 14 கிளைகள் செயல்பட்டு வருகின்றன என்றும், மேலும் 7 கிளைகள் விரைவில் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, 16 கிளைகள் ஏற்கெனவே, செயல்பட்டுக்கொண்டிருப்பதாகவும், புதிதாக 5 கிளைகள் தோற்றுவிக்கப்படும் என்றும் சொல்லி அந்த 5 இடங்களையும் தெரிவித்தார்கள். இன்னொரு முறை பேசுகிறபோது, வருங்கால திட்டங்கள் என்று சொல்கிறபோது ஏற்கெனவே 16 செயல்படுகிறது, இன்னும் 20 நாங்கள் துவக்க இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். 3 இடத்திலே 3 விதமான எண்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். எதற்காக இந்த குளறுபடி என்று கேட்டு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-40

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பேச்சின்போது விளக்கமாகவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மகளிருக்காக நடத்தப்படுகின்ற கிளைகள் எத்தனை இருக்கின்றன, இனி எத்தனை ஆரம்பிக்க இருக்கிறோம் என்று எடுத்துச் சொல்லி இருக்கின்றேன். ஆக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி எந்தவிதமான முரண்பாடும் இல்லை என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லமுடியும். என்ன முரண்பாடு என்று அவர் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் எண் 63-ல் மத்திய கூட்டுறவு வங்கிகளில் மகளிர் கிளைகள் துவக்குவது குறித்து என்பதிலே 2-வது பத்தியில் '14 மகளிர் கிளைகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, இரண்டு முறை சொல்கிறபோது, 16 கிளைகள் ஏற்கெனவே செயல்பட்டு வருவதாகச் சொன்னார்கள். இரண்டாவதாக அந்தப் பகுதியிலே சொல்கிறபோது, 63-வது பக்கத்திலே சொல்கின்றபோது, மேலும் 7 கிளைகள் விரைவில் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார். ஆனால் தன்னுடைய விளக்கவுரையில், பதிலுரையில் சொல்கிறபோது, 5 கிளைகள் புதிதாக துவக்கப்பட இருக்கிறது என்று சொல்லி, அதிலே 5 இடங்களுடைய பெயர்களையும் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே வடசேரி பகுதியைச் சுட்டிக்காட்டினார்கள். இன்னும்கூட தஞ்சை மாவட்டம்

ஆகிய 5 மாவட்டங்களிலே என்று சொன்னார்கள். ஆனால் பிறகு சொல்கிறபோது, இரண்டாவது அவர் பதிலுரை தருகிறபோது புதிதாக 20 கிளைகள் துவக்கப்பட இருக்கிறது என்று கூறினார்கள். எனவே, அதிலேதான் தெளிவாக விளக்கம் தந்திருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது இங்கே குறிப்பிட்டிருக்கிறது "ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக மகளிரால் நிர்வகிக்கப்படும் ஒரு மத்திய கூட்டுறவு வங்கியின் கிளையினை நிறுவ உத்தேசிக்கப்பட்டு 14 மகளிர் கிளைகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன, மேலும் 7 கிளைகள் விரைவில் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 7 கிளைகள் திறக்க உத்தேசிக்கப்பட்டு இருப்பதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்லக்குமார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத்தான் சொல்கிறார்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் எண் 63-லே நீங்கள் இப்போது சொல்கிறது சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் உங்களுடைய பதிலுரையிலே சொல்கிறபோது, நீங்கள் ஏற்கெனவே, 16 நிலுவையில் இருப்பதாகவும், இன்னும் 5 கிளைகள் புதிதாக துவக்கப்பட இருக்கிறது என்று ஒரு முறை சொன்னீர்கள். இரண்டாவது சொல்கிறபோது 16 கிளைகள் ஏற்கெனவே இருக்கிறது, இன்னும் புதிதாக 20 கிளைகள் துவக்கப்போகிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். அவருடைய பதிலுரையிலே அது கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு திரு.கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 கிளைகள் ஏற்கெனவே இருக்கிறது. மேலும் 20 கிளைகள் திறக்கப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் இதில் பக்கம் 63-இல் நாங்கள் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைத் தயார் செய்தபோது இருந்ததைவிட இன்றைக்கு அதிகமாக அதைத் திறப்பது என்ற முடிவுக்கு வந்ததால் இன்றையதினம் இதை அவையிலே அறிவித்திருக்கிறேன் என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

1994 ஏப்ரல் 30]

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்தில் இயங்கும் நியாயவிலைக் கடைகளில் அரிசிக்கு வழங்கும் விளிம்புத் தொகையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே, உறுப்பினர்கள் பேசுகின்றபோதுகூட, தொடக்க வேளாண்மை சங்கங்களில் எல்லாம், அங்கே நடத்தப்படுகின்ற அந்த நியாய விலைக் கடைகளிலே நஷ்டம் ஏற்படுகிறது என்று எடுத்துச் சொன்னார்கள். அதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கூட, கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் நஷ்டத்தில் இயங்கும் நிலையில் இருக்கின்றன என்பதை பலபேர்கள் எடுத்துச்சொன்னதன் காரணமாக, கிராம நியாய விலைக் கடைகளுக்கு 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 1,760 லட்சங்கள் மானியமாக அரசு ஒப்பளித்துள்ளது. இந்த நியாய விலைக்கு பொருள்கள் வழங்கும் முதன்மை மற்றும் இணைப்புச் சங்கங்களுக்கு இதுவரை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கும் அரிசியைப் பொறுத்தமட்டில் குவிண்டாலுக்கு 10 ரூபாய் என்று இருந்த விளிம்புத் தொகையை—டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரைக்கேற்ப நியாய விலைக் கடைகள் நஷ்டத்தில் இயங்கும் நிலையைத் தடுக்கும் வண்ணம் 1994-95 ஆம் ஆண்டில் இந்த விளிம்புத் தொகை இரு மடங்காக அதாவது குவிண்டாலுக்கு ரூ.20 ஆக உயர்த்தி ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-45

(அ) கோரிக்கை எண் 23 - கூட்டுறவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு, மானியக் கோரிக்கை எண் 23 - கூட்டுறவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு.மா. சுந்தரதாஸ்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வே. தம்புசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. வே. தம்புசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு ஜி. பழனிசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் படுகிறது. பழனிசாமி, நான் கேட்கிறபோது நீங்கள் கையை அசைத்தால்தான் நீங்கள் திரும்பப் பெற்றுக்கொண்டீர்கள் என்று வரும். நீங்கள் அங்கே திரும்பிவிட்டீர்கள் என்றால் ஏதோ கோபத்தில் இருக்கிறீர்கள் என்று வரும். *(சிரிப்பு)*

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 58,15,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ஆ) கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த மானியக் கோரிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

நாளையதினம் மே ஒன்று. தொழிலாளர் தினம். அந்தத் தொழிலாளர் தினத்தையொட்டி மிகப் பொருத்தமாக இன்றையதினம் அதுபற்றிய விவாதத்தை நாம் இங்கே எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்தப் பொருத்தமான விவாதத்தை முன்மொழிய வர இருக்கிற மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், தான் முதன் முதலாக தன்னுடைய துறை பற்றிய மானியக் கோரிக்கையைப் (மேசையைத்

திரு. வே. தம்புசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு ஜி. பழனிசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் படுகிறது. பழனிசாமி, நான் கேட்கிறபோது நீங்கள் கையை அசைத்தால்தான் நீங்கள் திரும்பப் பெற்றுக்கொண்டீர்கள் என்று வரும். நீங்கள் அங்கே திரும்பிவிட்டீர்கள் என்றால் ஏதோ கோபத்தில் இருக்கிறீர்கள் என்று வரும். *(சிரிப்பு)*

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 58,15,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

(ஆ) கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த மானியக் கோரிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

நாளையதினம் மே ஒன்று. தொழிலாளர் தினம். அந்தத் தொழிலாளர் தினத்தையொட்டி மிகப் பொருத்தமாக இன்றையதினம் அதுபற்றிய விவாதத்தை நாம் இங்கே எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்தப் பொருத்தமான விவாதத்தை முன்மொழிய வர இருக்கிற மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், தான் முதன் முதலாக தன்னுடைய துறை பற்றிய மானியக் கோரிக்கையைப் (மேசையைத்

தட்டும் ஒலி) பேரவைக்கு எடுத்து வைக்க இருக்கிறார்கள். அவர்களுக்குப் பேரவை சார்பிலும், என் சார்பிலேயும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு, அவருடைய மானியக் கோரிக்கையை பேரவைக்கு வைக்கக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 68,71,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்,"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1757, திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகை காயிதே மில்லத் மாவட்டம், திருவாரூர் பகுதியில் பேப்பருக்கான மூலப்பொருள் கிடைப்பதைப் பயன்படுத்தி பேப்பர் தொழிற்சாலை அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 68,71,49,000-ல். ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1784, திரு மா. சுந்தரதாஸ்.

Thiru M. Sundaradoss: Mr. Speaker, Sir,

"To discuss the need to enforce the provisions of labour legislations to the firms registered under the Motor Transport Workers Act and to regulate the transport workers' service conditions", I move that—

"The sum of Rs. 68,71,49,000 allocated under Demand No. 28 - Labour including Factories be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1791, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 69 சதவிகித ஒதுக்கீட்டைப் பின்பற்றி அமுல்படுத்தும் அவசியத்தைக் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 68,71,49,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவற்றில், தமிழில் இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்கு என்னுடைய பதிலுரையையும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு எடுத்துள்ள முடிவுகள் பற்றியும் தெரிவிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் தொடங்குகிறது. 7 மணிக்குள்ளாக எல்லாம் முடித்து ஊருக்குச் செல்ல விரும்புகிற உறுப்பினர்களுக்கு வழி வகுத்தால்தான் நன்றாக இருக்கும். அதையொட்டி, உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பதில் உரையே 7 மணிக்குள் முடிக்க வேண்டுமென்று சொன்னேன். விவாதமே 7 மணி வரையில் என்று நினைக்காதீர்கள். திரு. கே. ஏ. மனோகரன்.

@ 251 முதல் 340 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

பிற்பகல் 5-50

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன், தொழிற்சாலைகள் மற்றும் வேலை வாய்ப்பு-பயிற்சி முதலான மானியக் கோரிக்கைகளின்மீது பேச அனுமதித்தமைக்காக என்னுடைய நன்றியை உரித்தாக்குகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தொழிலாளர் நல தினமான மே தினத்திற்கு முன்பாக இந்த மானியக் கோரிக்கையில் இங்கே பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸ் சார்பாக வணக்கங்களைச் சொல்லி, தொழிலாளர் நலன்கள் பாதிக்கப்படுகின்ற சில சம்பவங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சமீப காலமாக தொழிலாளர்கள் விரும்பி அமைக்கக்கூடிய தொழிற்சங்க நடவடிக்கைகளை ஒடுக்க சில நிர்வாகங்கள் ஒசூர் தொழிற்பேட்டையில் செயல்படுகின்றன. சங்கம் அமைத்த தொழிலாளர்கள் பழி வாங்கப்படுகிறார்கள். அதன்மீது நடவடிக்கைகளை எடுக்க தொழிலாளர் நல அதிகாரிகள் விழைந்தாலும், நிர்வாகம் ஒத்துழைக்க மறுக்கிறது. தொழிலாளர் நல அதிகாரிகளிடம் பேசவே வருவதில்லை. உதாரணமாக, சங்கம் அமைத்த காரணத்தால், ஒசூர் தொழிற்பேட்டையில் உள்ள தர்மதீப் என்ற நிறுவனம் சுமார் 34 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து, பழி வாங்கியுள்ளது. கடந்த 6, 7 மாதங்களாக பேச்சு வார்த்தைக்கு எந்தவிதமான பலனும் இல்லை. சங்கம் அமைத்த காரணத்தால் பெர்ரோரிஜன்ட் என்ற நிறுவனமும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை பல இடங்களுக்கு, அதாவது தொழிற்சாலைக்குச் சம்பந்தப்படாத இடத்திற்கு மாற்றியுள்ளார்கள். இதனையும் தொழிலாளர் நலத் துறையினரிடம் முறையிட்டு, அவர்கள் தாக்கீது அனுப்பினாலும், நிர்வாகம் பேச வரவில்லை. அரசு உடனடியாக இதில் தலையிட்டு தொழிலாளர்கள் நலனைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம் பிற்பட்ட பகுதி என அறிவிக்கப்பட்டு, தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும், அப்பகுதியினைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரிய சம்பவம் ஆகும். ஆகவே, வேலை வாய்ப்புத் துறை இதில் தலையிட்டு தனியார் மற்றும் அரசு கூட்டு முயற்சியில் தொடங்கப்படும் தொழிற்சாலைகளில் வேலை கிடைக்க வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொழிற்பேட்டையில் உள்ள சில நிறுவனங்களில் நட்டம் ஏற்பட்டு, பி.ஐ.எஃப்.ஆர். மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டு நிறுவனமான டாப்கோ பல வருடங்களாக நலிவடைந்து, சுமார் 400 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பினை இழந்து உள்ளார்கள். நிர்வாகம், வழக்கு மன்றத்தில் தடை ஆணையைப் பெற்றும், நடத்த இயலாத நிலையில் உள்ளது. ஆகவே தொழிலாளர் நலத் துறை அந்த நிர்வாகத்திற்கு உடனடியாக உதவி செய்து, ஆலையைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு நிறுவனங்களான டிக், சிப்காட் போன்ற கடன் வழங்கும் ஸ்தாபனங்களினால் சில தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு, தொழிலாளர்கள் வேலை இழக்கிறார்கள். உதாரணமாக டூல்ஸ் இன்டர்நேஷனல் என்ற நிறுவனத்திற்கு நிறைய ஆர்டர்கள் இருந்தும், நிதி ஸ்தாபனங்களின் முரட்டுத்தனமான போக்கினால் மூடப்பட்டு, சுமார் 100 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பல சிறு தொழிற்சாலைகள், சிட்கோவில் உள்ளவைகளும் இவர்களால் பாதிக்கப்படுகிறார்கள். நிர்வாகத்தின் தவறான போக்கினால் ஷாகீல் என்னும் நிறுவனம் தற்சமயம் பி.ஐ.எஃப்.ஆர்.க்கு அனுப்பப்பட்டு மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பி.ஐ.எஃப்.ஆர். தொழிலாளர்களே அந்த நிர்வாகத்தினை ஏற்று நடத்த வாய்ப்பு கொடுத்துள்ளது. அதற்கு தமிழக அரசு கூட்டுப் பொறுப்பேற்று, தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி, அதன்மூலமாக அந்த நிறுவனத்தை எடுத்து நடத்த முன்வர வேண்டும், அதற்கு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் சுமார் 2 கோடி மதிப்பில் கட்டப்பட்டு, 1992 ஆம் ஆண்டே துவங்க வேண்டிய திட்டம் இருந்தும், இன்னும் செயல்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன் காரணமாக பல தொழிலாளர்கள் மருத்துவ சிகிச்சை பெற இயலாத சூழ்நிலையில் உள்ளார்கள். பல தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் கிடைக்கப்பெறவில்லை.

தொழிலாளர் நீதிமன்றம் வேலூரில் துவங்கி, நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அதனுடைய ஆளுகை தருமபுரி, வட ஆற்காடு, சம்புவராயர் மாவட்டங்கள் ஆகும். அங்கு சுமார் 7,000 வழக்குகள் உள்ளன. கடந்த அக்டோபர் மாதத்தில் அந்த நீதிமன்றம் மற்ற இடங்களில் அமர்வுகளை நடத்தவில்லை. தொழிலாளர்கள் வேலூர் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் கேட்டால் அவர்களுக்குப் பயணப்படி நிலுவையில் உள்ளதால், அமர்வுகளை நடத்த இயலவில்லை என்று

சொல்லுகிறார்கள். ஆகவே அந்தக் குறையினை உடனடியாக நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சுமார் 20,000 தொழிலாளர் குடும்பங்கள் உள்ளன. அவர்களின் குழந்தைகள் படிக்க கல்வி வசதி மிகவும் குறைவாக உள்ளது. அரசுப் பள்ளிகள் இரண்டுதான் உள்ளன. ஆண்கள் பள்ளியில் சுமார் 4,000 மாணவர்களும், பெண்கள் பள்ளியில் சுமார் 2,500 மாணவிகளும் படிக்கிறார்கள். அவர்களில் தமிழ் படிக்கக்கூடியவர்கள் 2,300 மாணவர்களும், 1,900 மாணவிகளும் ஆவார்கள். அங்கே அவர்களுக்கு ஆசிரியர்கள் குறைவாக இருப்பதாகவும், இட வசதி போதவில்லை என்ற நிலையும் இருக்கிறது. அந்தக் குழந்தைகள் தரமான கல்வி பயின்று வாழ்வில் முன்னுக்கு வர கூடுதலான ஆசிரியர்களை அனுமதிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் காலை 8 மணிக்கே வேலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் ஓசூர் மற்றும் சுற்றுப்புறத்திலே காலை 5.30 மணிக்கு மின்சாரம் தடைப்பட்டு 7.15 மணிக்குத்தான் வருகிறது. இதன் காரணமாக தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தொழிற்சாலைகளுக்குச் செல்ல தனியாக தொழிலாளர்களுக்கு ஸ்பெஷல் பஸ்களைவிட காலையிலும் மாலையிலும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-55

தொழிலாளர்கள் பொழுது போக்க எந்தவிதமான வசதியும் அங்கு இல்லை. அவர்களுடைய வசதிக்காக ஒரு விளையாட்டு அரங்கமோ, அல்லது உள்விளையாட்டு அரங்கமோ, சிறந்த புத்தகங்களைக் கொண்ட படிப்பகமோ, கலை நிகழ்ச்சிகள் நடத்த அரங்கமோ, இது போன்ற வசதிகளை இந்த அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளின் ஆய்வகத் துறை சம்பந்தமான பல மனுக்களை தொழிலாளர்கள் அனுப்பினாலும், அவற்றின்மீது தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழிலகத்திற்கு அறிவுரை வழங்குவதாகச் சொல்கிறார்கள். உதாரணமாக தர்மதீப் நிறுவனத்தின் மீது தொழிலாளர்கள் புகார் மனுவைக் கொடுத்து அதன் மீது ஆய்வாளர்கள் பார்வையிட்டு, சில சட்ட மீறல்களை சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தகவல் வந்தும், அந்நிறுவனம் மீண்டும் அதே தவறுகளை இன்றைக்கும் செய்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரியப்படுத்தக் கடமைப்பட்டு உள்ளேன்.

தொழில் அதிபர்கள், பிரச்சினைபற்றிப் பேச முறையிட்டால், தொழிலாளர் நல அலுவலரிடம் வருவதே இல்லை. ஆகவே, கிருஷ்ணகிரியில் உள்ள அலுவலகத்தினை தரம் உயர்த்தி அசிஸ்டன்ட் கமிஷனர் அலுவலகமாக மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள் மேலும் தொழில் நுட்பங்களை அறிய வாய்ப்பாக அந்தப் பகுதியிலே ஒரு பாலிடெக்னிக்கை ஏற்படுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக எங்கள் தொழிற்பேட்டையில் பல காலமாக மூடியுள்ள தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு நிதியினை வழங்க வேண்டும், உதாரணமாக Zu Zu Wires Fabhin, Tort, Appolo Tyres, Kalind Pressings போன்ற நிறுவனங்களிலே பணி செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு அந்த நிதியை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சமீப காலத்திலே கதவடைப்பு செய்யப்பட்ட Indicarh - LRT - Premier Castings போன்ற நிறுவனங்களைத் துவக்க, தொழிலாளர் நலத் துறை துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு இந்த வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தொழிலாளர் நலம், தொழிற்சாலைகள் மற்றும் வேலை வாய்ப்பு—பயிற்சி பற்றிய கொள்கைகள் மீதான மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேசுகின்ற வாய்ப்பைத் தந்தமைக்காக, நான் வணங்குகின்ற தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, தமிழக முதல்வர் அவர்களுடைய இருக்கையை நோக்கி வணங்கி என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

'ஆண்டவன் உலகத்தின் முதலாளி,
அவனுக்கு நான் ஒரு தொழிலாளி.'

என்ற தத்துவத்தை மக்கள் மத்தியிலே வைத்து, தொழிலாளர் உலகத்திற்கு இன்றையதினம் இந்த மானியக் கோரிக்கையில் பல கோடி ரூபாய் வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்து இருக்கின்றார்கள். இன்றையதினம் தொழிலாளர் வர்க்கம் என்று சொல்கின்றபோது பஞ்சாலைத் தொழிலாளர்கள், என்ஜினியரிங்

1994 ஏப்ரல் 30] [திரு. சிங்கை கோவிந்தராசு]

தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், பாரம் தூக்கும் தொழிலாளர்கள், கல் உடைக்கும் தொழிலாளர்கள், மோட்டார் மெக்கானிக் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள், போக்குவரத்து ஓட்டுநர்கள், நடத்துநர்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், மளிகைக் கடைத் தொழிலாளர்கள் என்று பொதுவாக ஒவ்வொரு இல்லத்திலே இருந்தும் உழைக்கச் செல்லுபவர்கள் எல்லாம் தொழிலாளர்கள் என்ற அடிப்படையிலேதான் இந்த மானியக் கோரிக்கையிலே நாம் பேசுகின்றபோது வருகின்றார்கள்.

பஞ்சாலைகள் நிறைந்த கோவை மாவட்டத்திலே பஞ்சாலைத் தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற, அங்குள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைக்கு, தொழிலாளர்களுக்காகவே வாழ்ந்து தன்னுடைய வாழ்நாள் முழுவதும் இருந்து மறைந்துவிட்ட—அவர் தேசியப் பாரம்பரியத்திலே வந்து இருந்தாலும்—தொழிலாளர்களுடைய ஒன்றுபட்ட தலைவராக, முதலாளிகளால் பழி வாங்கப்பட்டு, தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுத்து, உயிர் நீத்த உத்தமத் தலைவன் தியாகி எம்.ஜி. இராமசாமி அவர்களுடைய பெயரை ஈ.எஸ்.ஐ. - தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைக்கு வைக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றையதினம் தொழிலாளர்கள் தங்களுடைய நோய்களுக்காக பயன்படுத்துகின்ற தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகள் கிட்டத்தட்ட 8 இடங்களிலே தமிழகத்திலே இருக்கின்றன.

பிற்பகல் 6-00

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

கோவையில், மதுரையில், சென்னை அயனாவரத்தில், தமிழகத்தினுடைய பல இடங்களில் தொழிலாளர்களுடைய உடல் நலத்தைப் பார்ப்பதற்காக, அவர்கள் சிகிச்சை பெறுவதற்காக இந்த மருத்துவமனைகள் மத்திய, மாநில அரசுகளுடைய உதவித் தொகையோடு செயல்பட்டு வருகின்றன. மத்தியில் ஆட்சி செய்து கொண்டிருப்பவர்கள் இந்த மருத்துவமனைக்கு தியாகி எம்.ஜி.இராமசாமி பெயரை வைப்பதற்கு செவி மடுக்க மாட்டேன் என்கிறார்கள். இந்த மருத்துவமனை நிர்வாகத்தை மாநில அரசு பார்த்தாலும், இந்த மருத்துவமனைக்கு மத்திய அரசு தர வேண்டிய பங்காக, தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைக்கு என்ன வகையில் தங்களுடைய கடமையை ஆற்றுகிறார்கள் என்பதை சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்காக

தபால் எழுதி அனுப்பியும்கூட தேசிய பாரம்பரியத்தில் வந்த ஒரு தியாகியின் பெயரை அவர்கள் வைப்பதற்கு முன்வரவில்லை. இவர்கள் தங்கள் நிலையை மறுபரிசீலனை செய்து மத்திய அரசோடு கலந்து பெயர் வைக்கக் கோரி இரண்டாவது முறையாக நான் இங்கே பேசுகிறேன். இந்தத் தபாலை இந்த முறையும் அனுப்ப இருக்கிறேன். அதையும் கூட கண்காணிக்க முடியாத அளவில் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறீர்கள் என்பதை எண்ணுகிறபோது, வேதனைக் கண்ணீர் வடிக்க வேண்டியதாக இருக்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.வி.கே. சின்னசாமி): சீக்கரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு தொழிலாளி, தொழிலாளர்களைப் பற்றி பேச வேண்டாமா? ஆண்டவன் உலகத்தின் முதலாளி, அவனுக்கு நான் ஒரு தொழிலாளி என்றது தொழிலாளி வர்க்கம். இன்றையதினம் சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்கிற கஷ்டங்களைச் சொல்வதற்கு சபையில் எனக்குக் குறைவான நேரம் கொடுத்திருக்கிறீர்கள். இருந்தாலும் பரவாயில்லை. இன்றையதினம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள்—ஆலை மூடப்பட்டாலோ, நலிவுற்றாலோ, இதனால் பாதிக்கப்படுகிற தொழிலாளர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கிற முறையில் அரசு, புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தொழிலாளர் நல நிதி என்னும் தொழிலாளர் மறுவாழ்வு நிதியை ஏற்படுத்தி, ஒரு கோடி ரூபாயை அந்தத் துறைக்கு அனுமதித்ததை உண்மையில் தொழிலாளர்கள் அனைவரும் இன்றையதினம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி ஆலோசனை வாரியம் மூலம் இன்றையதினம்—வீடுகள் கட்டித் தருவதற்கு—44,408 வீடுகளைக் கட்ட வேண்டுமென்று கோரிக்கை இருந்தது. அதிலே 40,814 வீடுகள் தரமுள்ளவையாகவும், தரமற்ற வீடுகள் (நான்-ஸ்டாண்டர்டு ஹவுசஸ்) 2,605 வீடுகளும் கட்டித்தர வேண்டுமென்று இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிற மிகப் பெரிய அக்கறையை நான் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் மத்திய மாநில அரசுகளுடைய நிதியுதவியோடு ஓசூரில் தொழிலாளர்களுக்கென்று ரூ.1732 கோடி திட்டம் ஒன்றை வகுத்து 50 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையை உருவாக்கி வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தீக்குச்சி, தீப்பெட்டி, பட்டாசு தயாரிக்கும் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு தரும் வகையில் தொழில் கொள்கை மாறுதலால் இந்தக் கொள்கை குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிற சிலவற்றை இங்கே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். தொழிலாளர்கள், இளம் சிறுவர்கள் கூட அங்கே தொழிலாளர்களாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு தேவைப்படுகிறது. அப்படி பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு, அந்த நிறுவனங்களின் மூலம், தீப்பெட்டி, பட்டாசு தயாரிக்கும் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு, கையுறை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்க நான் விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போல் பீடித் தொழிலாளர்கள் பீடி தயாரிக்கும்போது அந்தப் புகையால் பாதிக்கப்பட்டு சுவாச நோயால் பாதிக்கப்படுவதால் அவர்களுக்கு நல்ல காற்றை சுவாசிக்க பீடி சுற்றுகிறபோது சுவாச உறை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் நச்சு ஜந்துக்களால் பாதிக்கப்பட்டு உயிர் ஆபத்து ஏற்படுகிற காரணத்தால் அவர்களுக்கு காலில் முழங்கால் வரை பாதுகாப்பு உறை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துப்புரவுத் தொழிலாளர்கள் தமிழகத்தில் அதிகம் பேர் இருக்கிறார்கள். அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கையில் நோய் மட்டுமே மிஞ்சுகிறது. இந்த நிலை மாறுகிற வகையில் தொழிலாளர்களுக்கு வாரம் ஒருமுறை மருத்துவப் பரிசோதனை செய்து, அவர்கள் செய்கிற தொழிலால் ஏற்படுகின்ற பாதிப்பைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-05

அதேபோல, இன்றையதினம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியிலே பெண்களுக்கு முன்னுரிமை வழங்கி பல்வேறு திட்டங்களை அரசு நடத்தி வருகிறது. ஆனால் கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய தனியார் பஞ்சாலைகளிலே பெண்களுக்கு என்று இருக்கக்கூடிய ரீலிங் டிபார்ட்மெண்ட்டிலும், பண்ட்லிங் டிபார்ட்மெண்டிலும், அதேபோல பேக்கிங் டிபார்ட்மெண்டிலும் வைண்டிங் டிபார்ட்மெண்டிலும் அவர்களுக்குக் கொடுக்கிற பணிகள் நிறுத்தப்பட்டு வருகின்றன. இதனால் பெண்கள் சமுதாயத்தில் உழைக்கச்சென்று தங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற சூழ்நிலை பாதிக்கப்படுகின்ற நிலைமை எதிர்காலத்தில் உருவாக்கப்படும். எனவே தனியார் நிறுவனங்களாக

இருந்தாலும் பெண்களுக்கு என்றுள்ள பணியிலே தொடர்ந்து அந்த ரீலிங் துறையிலே பணியாற்ற இத்தனை சதவீதம் ஒவ்வொரு துறை மூலமும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று தொழிலாளர் நல வாரியம் மூலமாக வலியுறுத்தவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆலைகளில் பணியாற்றுகிற பெண்களின் குழந்தைகளைப் பாதுகாக்க கடந்த காலத்திலே பேபி வார்டு என்று வைத்திருந்தார்கள். அவைகளையெல்லாம் இன்றையதினம் தனியார் ஆலைகளில் எடுத்து வருகிறார்கள். அதை மீண்டும் கொண்டுவரவேண்டும் என்ற கோரிக்கையை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிலாளர்கள் விளையாட்டுத் துறையிலே (மணியடிக்கப்பெற்றது)— ஒரு நிமிஷம். ஈடுபடவேண்டுமென்ற நிலையில், விளையாட்டை எல்லாம் நீங்கள் நடத்தி வருகிறீர்கள். அப்படி ஆனால் விளையாட்டில் தொழிலாளர்களுக்கு பயிற்சி ஏதாவது கொடுக்கப்படுகின்றதா? அப்படி பயிற்சி கொடுக்கப்படவில்லை என்று சொன்னால்—பொதுவாக விளையாட்டு என்று சொன்னால் எந்த அடிப்படையிலே என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வைத்திருக்கக்கூடிய தொழிலாளர் நலத்துறை—அவர்களுக்கு ஒவ்வொரு ஆலையிலும் விளையாடுவதற்குப் பயிற்சி கொடுக்கிற திட்டத்தை வகுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இங்கே இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பைத் தந்தமைக்காக உள்ளபடியே நான் மனதார நன்றி சொல்லிக் கொள்கிறேன். இன்றையதினம் தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை மக்களும், தொழிலாளர் வர்க்கமும் நன்றியோடு இருக்கிறார்கள். ஆலைகள் மூடப்பட்டதால் அந்தத் தொழிலாளர்களுக்கு இரண்டு முறை 400 ரூபாய் வீதம் நிவாரணம் வழங்கியதை நன்றியுடன் இந்த நேரத்திலே சொல்லி, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பார்த்து தொழிலாளர் உலகம், நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற; இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற; இங்கே நல்லவங்க எல்லோரும் உங்க பின்னாலே; நீங்க நெனச்சதெல்லாம் நடக்குதுங்க தமிழ்நாட்டிலே என்று தொழிலாளர் வர்க்கம் பாடுகின்ற இந்த நேரத்தில், இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, சமூக நீதி காத்து, தமிழகத்திலே மக்களாட்சித் தத்துவத்தை உணர்த்தி, புரட்சி கலந்த

புனிதம் நிறைந்த நல்லாட்சியை புதிய பாதையில் நடத்திச் செல்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொண்டு அவர்தம் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்ற துறைகளில் ஒன்றான தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கைகளை வரவேற்று, இந்த மாமன்றத்திலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

ஒரு நாட்டினுடைய தொழிற்சாலைகளும், தொழில்களும் தொழிற்சட்டங்களும் எத்தனையோ இருந்தாலும் கூட, சட்ட ரீதியாக நாம் தீர்வு காண்பதை விட்டுவிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், வாருங்கள் என்னிடம், தொழிலாளர் பிரச்சினை என்ன, தொழில் நிறுவனங்களுடைய பிரச்சினை என்ன, தொழிற்சாலைகளின் பிரச்சினை என்ன என்பதை ஆர அமர்ந்து விசாரித்து, அவர்களுடைய கோரிக்கைகளையும் கருத்துக்களையும், அவர்களுடைய சங்கடங்களையும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒருவருக்கொருவர் பரிமாறி இன்றையதினம் 1992-93 ஆம் ஆண்டு கதவடைப்பு, வேலை நிறுத்தம் போன்ற சற்றேறக்குறைய நாலரை லட்சம் மனித உழைப்பு நாட்களைக் குறைத்து—இந்த ஆண்டு 1993-94-லே சற்றேறக்குறைய நாலரை லட்சம் மனித உழைப்பு நாட்களைக் குறைத்து—இருக்கிறது என்பதால் நான் தொழிலாளர் நலத்துறையின் நிர்வாகத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6-10

ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு தொழில் எவ்வளவு முக்கியமோ, ஒரு தொழிலினுடைய வளர்ச்சிக்கு தொழில் உற்பத்தி எவ்வளவு முக்கியமோ, ஒரு தொழிலினுடைய உற்பத்திக்கு தொழிலாளர்கள் அமைதி என்பது எவ்வளவு முக்கியமோ, அதை உணர்ந்த நம் அரசு தொழிலாளர் அமைதியை நிலைநிறுத்தி, தமிழகத்திலே தொழில் வளர்ச்சியை மேலோங்கச் செய்திருக்கின்றது. அதன் வாயிலாக, இனிவரும் காலங்களில் தொழிற்சாலைகளும், தொழில் நிறுவனங்களும், தொழிலாளர்கள் பால் அன்பு கொண்டு, கனிவு கொண்டு, கருணை கொண்டு, தொழிலாளர் அமைதியைப் பேணிக் காக்கவும், தொழிலாளர்களை, தொழிலாளர் களுடைய குழந்தைகளை, தொழிலாளர்களுடைய கல்வியை, மேம்படுத்துவதற்காக முழு ஒத்துழைப்பும், முழு ஆதரவும் கொடுத்து, தொழிலாளர்களுடைய அமைதியைக் காக்கிறோம் என்று சொல்லி, தொழிலாளர்கள் அமைப்பு என்ற ரீதியிலே இருக்கக்கூடிய தடைகளைக்

களைந்து, தொழிலாளர்களுக்கு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்கின்ற தமிழகத்தினுடைய நல்ல தொழில் நிறுவனங்களையும், தமிழகத்தினுடைய நல்ல தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களையும் கண்டறிந்து, வருகின்ற ஒவ்வொரு மே திங்களிலும், அப்படிப்பட்ட தொழில் நிறுவனங்களையும், தொழில் நிறுவனங்களுடைய உரிமையாளர்களையும், தொழிற்சங்கங்களையையும் நம்முடைய அரசின் சார்பில் சிறப்பாக கௌரவிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் தொழில் வளர்ச்சியும், தொழில் உற்பத்தியும், தொழிலாளர்கள் நலமும், தமிழகத்தில் மேலோங்கும் என்பதை இந்தத் தருணத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் கல்வி, தொழிலாளர்கள் குழந்தைகளுடைய கல்வி, தொழிற்சாலைகள்தோறும் விளையாட்டுப் போட்டிகள், தொழிற்சாலைகள் தோறும் தொழிலாளர்களுடைய சுற்றுலாக்கள் போன்றவற்றை நாம் ஏற்படுத்திக் கொடுப்போமானால், மேலும் தொழிலாளர்களுடைய அமைதியையும், நல்ல ஒரு சூழ்நிலையையும் உருவாக்கக்கூடிய நிலைமையை, Harmonious Atmosphere-ஐ நாம் உண்டாக்கித் தரவேண்டும். அதற்கு தொழிலாளர் நலத்துறை சீரோடும் சிறப்போடும், முனைப்போடும் செயல்படுவதற்கு வேண்டிய ஆக்க பூர்வமான பணிகளிலே ஈடுபடவேண்டும். அப்படி ஈடுபடும் பட்சத்தில் தொழிலாளர்கள் மத்தியிலே நம்முடைய அரசுக்கு மிகப் பெரிய பாராட்டு கிடைக்க இருக்கிறது என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில் மட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய கிராமப்புறங்களிலேகூட, இன்றையதினம் சமையல் எரிவாயு என்று சொல்லப்படுகின்ற 'காஸ் சிலிண்டரை' நாம் பயன்படுத்தி வருகிறோம். நம்முடைய தொழிலாளர் நலத்துறையினுடைய எடை அளவுத்துறை ஒவ்வொரு சிலிண்டருடைய எடைகளையும் கண்காணிக்கின்ற பொறுப்பில் இருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, குடும்பங்களுக்கும், நுகர்வோர்களுக்கும் வழங்கப்படுகின்ற காஸ் சிலிண்டர்களின் எடை சரியான அளவில் கொடுக்கப்படுகிறதா என்பதை நம்முடைய துறை அவ்வப்போது கண்காணிக்க வேண்டும். அதேபோல் நுகர்வோர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற காஸ் சிலிண்டர்களினுடைய எடையை நுகர்வோர்கள் கேட்டால், சிலிண்டர்களைக் கொண்டு வருகிற தொழிலாளர்கள் வில்தராசு மூலம், அதனுடைய நிலுவையை நிறுத்திக் காட்டவேண்டும் என்கிற ஒரு ஆணையை நம்முடைய தொழிலாளர் நலத்துறை இடவேண்டும் என்று இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், பல்வேறு பெட்ரோல் பங்குகளிலே அடல்டரேசன் இருப்பதை நாம் இன்று பார்க்கிறோம். அவைகளை நம் தொழிலாளர் நலத்துறை அவ்வப்போது கண்டறிந்து ஒவ்வொரு பெட்ரோல் பங்கிலும், சோதனை செய்து, அந்தச் சோதனை செய்த நாள், சோதனையைச் செய்த அதிகாரியின் பெயர் போன்றவற்றைத் தெரிவிக்கும் பெயர்ப் பலகையைப் போட்டு, 'பெட்ரோல் பங்குகளிலே சரியான பெட்ரோல் பங்குகள் திறம்படச் செய்தால், திறம்படச் செய்யப்பட்டது என்றும், அடல்டரேசன் இருந்தால், அடல்டரேசன் செய்யப்பட்ட பெட்ரோல் பங்கு என்றும் ஒரு குறிப்பினை எழுதி, அந்தக் குறிப்புப் பலகையை ஒவ்வொரு பெட்ரோல் பங்கிலும் வைக்கவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எப்படி பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்கிறோமோ, அதைப்போல், நம்முடைய தமிழகத்தில் ஊட்டி, வால்பாறை, கொடைக்கானல், ஏற்காடு, திருநெல்வேலி போன்ற மலைப் பகுதிகளிலே உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு, மழையிலே நனைந்து, குளிரிலே நடுங்கி, வெய்யிலிலே காய்ந்து கொண்டிருக்கிற அந்தப் பாவப்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும், மற்ற தொழிற்சாலைகளில் வழங்கப்படுவதைப் போன்று மாதச் சம்பளம் வழங்குவதற்கு நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சி, இந்த மாபெரும் திட்டத்தைத் தீட்டவேண்டும். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள், இதுகுறித்து மத்திய அரசினுடைய தொழிலாளர் நலத்துறைக்கு பரிந்துரை செய்து, இந்த நல்ல திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, நம்முடைய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களில் கருவுற்ற பெண்களுக்கு, அந்தக் கருவுற்ற நாட்களில் கடினமான வேலைகள் கொடுப்பதற்குப் பதிலாக லேசான வேலைகளைக் கொடுப்பதற்கு உண்டான சாத்தியக்கூறுகளை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பெண் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற தொழிற்சாலைகளிலே பெண் ஆய்வாளர்கள் அமர்த்தப்படும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 6-15

அதுபோல் வேலைவாய்ப்புத் துறையின் மூலமாக ஜாதிக் கலவரத்தால், மதக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிட

மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கவேண்டுமென ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மேலும் வலுப்படுத்துகின்ற வகையிலே ஆராயவேண்டுமென்றும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல் இண்டியன் ஓவர்சீஸ் மேன்பவர் 'கார்ப்பரேஷன்' என்று சொல்லக் கூடிய அயல்நாடுகளிலே வேலை தேடித் தருகின்ற நிறுவனங்களில் எந்தெந்த நாடுகளில் வேலைகள் அதிகமாக Feasibilities and Possibilities இருக்கின்றன என்பதை நம்முடைய மாநிலத்தினுடைய ஒவ்வொரு வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயும் தெரிவிக்க வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து இன்டர்வியூ கார்டுகள் அனுப்பப்படுகின்றபோது இப்போதெல்லாம் சர்டிபிகேட் ஆஃப் போஸ்டிங்கில் அனுப்பிக்கொண்டிருக்கின்றோம். இனிமேல் வருங்காலங்களில் நாம் அந்த இண்டர்வியூ கார்டுகளை ரிஜிஸ்டர்டு போஸ்ட் மூலமாகவும் 15 நாட்களுக்கு, 20 நாட்களுக்கு நாம் ்டைம் கொடுத்து, அந்த கேண்டிடேட்டுகளுக்கு அனுப்பவேண்டுமென்றும் அதற்குண்டான கட்டணத்தை நாம் அந்த கேண்டிடேட் மூலமாகக்கூட பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் நான் இந்த நேரத்திலே கருத்து சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல வால்பாறைத் தொகுதியிலே உள்ள வால்பாறை நகரியம் என்பது ஒரு தொழிற்கூடத்தை அமைக்கவேண்டுமென்று - ஒரு ஐ.டி.ஐ. அமைக்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு வேலைவாய்ப்புத் துறைக்கு விண்ணப்பங்கள் செய்து கொண்டிருக்கின்றது. அந்தத் தொழில் பயிற்சிக்கு வேண்டிய உதவிகளையும், வேண்டிய பணமும் மற்ற இதர அனைத்து செலவுகளையும் வால்பாறை நகரியத்தின் சார்பாக ஏற்றுக்கொள்ளலாம் என்று தீர்மானமும் இயற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நம்முடைய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு வேலைவாய்ப்புத் துறை அமைச்சரவர்கள் அந்தக் கோரிக்கையைப் பரிவோடு பரிசீலித்து வால்பாறை நகரியத்தின் சார்பாக தொழிற் பயிற்சி நிலையம் தொடங்குவதற்கு உண்டான அனைத்து ஆணைகளும் பிறப்பிக்கப் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் அரசுக்கு எந்தவிதமான செலவும் இல்லை. தன்னாட்சி நிறுவனமான வால்பாறை நகரியமே அத்துணை செலுவுகளையும் ஏற்றுக்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே

தெரிவித்துக்கொண்டு, வால்பாறை பகுதிக்கு ஒரு ஐ.டி.ஐ. பெற்றுத் தரவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் சக்தி தலைனார் எஸ்டேட் போன்ற பகுதிகளுக்கு ப்ளேன்டேஷன் லேபர் ஆக்ட் பிரகாரம் கொடுக்கக் கூடிய பணிகளையும், கொடுக்கக் கூடிய சலுகைகளையும் பராமரிப்பதற்கு தொழிலாளர் நல ஆய்வாளர்களுடைய வேலைப் பளுவை மாண்புமிகு அமைச்சரவர்கள் மாநிலத்திலுள்ள அதிகாரிகளைக் கொண்டு அவ்வப்போது கண்காணிக்கவேண்டும்.

அதுபோல மஹாவீர் பிளேண்டேஷன் என்று சொல்லக்கூடிய அந்த எஸ்டேட்டில் சுமார் 40 பேர்களுக்கு இன்னும் கிராஜுவிடி செட்டில் மென்ட் ஆகாமல் இருக்கிறது. போனஸ் பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கின்றது. இவைகளை எல்லாம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நேரத்தின் அருமை கருதி, என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு தியாகி சங்கரலிங்கனார் அவர்களுடைய உணர்வினைப் போற்றுகின்ற வகையில், அவர்களைக் கௌரவிக்கின்ற விதத்திலே அந்தக் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளிக்கு பெயர் வைக்கவேண்டுமென்ற அறிவிப்பினைத் தந்தார்கள். மிக மகிழ்ச்சிக்குரிய செய்தி. அது சம்பந்தமாக, தொடர்பாக யதார்த்தமாக ஏற்பட்ட விவாதங்களிலே பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும், பேரவைத் தலைவர் அவர்களும் யதார்த்தமான சில விவரங்களை, இருந்த நிலைமைகளை இங்கே தெரிவித்தீர்கள். அதற்குப் பின்னர் நானும் சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தேன். அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம் என்று நாங்கள் எல்லாம் கருதுகிறோம். அதைத் தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு ஒன்றுமில்லை. ஏதோ தொனி அந்த முறையில் இருக்கிறது என்று சொன்னதனாலே அப்படியே சென்று கொண்டிருந்தது. அவ்வாறு தொனி இல்லை என்று நான் சொன்னதையொட்டி, அதுவும் இல்லாமல் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் வெறும் சங்கரலிங்கனார் என்று சொன்னதனாலே, வெளியே இந்தச் செய்தியை சொல்லவேண்டுமென்பதற்காகச் சொன்ன செய்தி தானே தவிர, அது வேறு ஒன்றுமில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் கேட்டுக்கொள்கிற காரணத்தாலே அது தொடர்பாக ஏற்பட்ட விவாதமான, திரு. டேனியல்ராஜ் அவர்கள் சொன்னது வரையிலேயும் இருந்த அந்தக் குறிப்புகள் அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற விவாதங்கள் சபையில் நடைபெறுகின்றபோது அதற்குப் பின்னால் அமைச்சர்களோ அல்லது சட்டப்பேரவை உறுப்பினர்களோ இந்த அவையிலே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அதற்குப் பின்னாலே அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறபோது இங்கே பத்திரிகை நிருபர்கள், ஒவ்வொரு பத்திரிகையிலிருந்தும் 2, 3 பேர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொருவருடைய விவாதம் நடக்கிறபோது தன்னுடைய ப்ரஸ் ரிப்போர்ட்டை எடுத்துக்கொண்டுபோய், தங்களுடைய பத்திரிகை அலுவலகத்திற்கு, எடிட்டருக்குக் கொடுத்து விடுகிறார்கள். அப்படிக் கொடுக்கிறபோது காலங்கடந்து, நேரங்கடந்து, மணி கடந்து அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறபோது அது பத்திரிகையிலே ப்ரஸ் ஆகிறது. ஆக ப்ரஸ் ஆன பிறகு, அதன் மேலே ஒரு பிரிவிலெஜ் வருகிறது. அதன்மீது பத்திரிகையினுடைய ஆசிரியர் மீது அல்லது பத்திரிகை நிருபர் மீது ஒரு தண்டனையை தாங்கள் வழங்குகிறீர்கள். அதிலே கான்டிரடிக்ஷன் ஆகி பிரச்சினைகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது...

பிற்பகல் 6-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே நீங்கள் நேரம் கடந்து காலம் கடந்து என்று சொல்லுகிறீர்கள். மறுநாள் கூட நீக்கிய சம்பவங்கள் எல்லாம் உண்டு. இப்போது நடந்தது, பத்து நிமிடத்திற்கு முன்னாலே நடந்தது, உடனடியாகச் சொல்லியிருக்கிறோம். இது சம்பந்தமாக - நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். ஒவ்வொரு பத்திரிகைக்கும் 3 நிருபர்கள் இருக்கிறபோது இன்னொரு நிருபர் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டார்கள் என்கிற செய்தியையும் பத்திரிகை அலுவலகத்திற்குக் கொடுத்துவிடுகிறார்கள்.

1994 ஏப்ரல் 30]

திரு. ஜி. பழனிசாமி: பத்திரிகையிலே வந்திருக்கிறது. பத்திரிகையிலே இந்த மாமன்றத்திலே நாம் பேசிய குறிப்புகள் மாலைப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதன் மீது உரிமைப் பிரச்சினையும் பல தடவை பிரிவிலெஜ் ஆக வந்திருக்கிறது. அது வந்ததினாலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் சொல்வது போல காலம் கடந்து நீக்கிய பிரச்சினையின்மீது அவ்வாறு உரிமைப் பிரச்சினை வந்திருந்தாலும், காலம் கடந்து பேரவைத் தலைவர் நீக்கிய காரணத்தால் நாங்கள் அவ்வாறு பிரசுரித்து விட்டோம் என்று பதில் சொல்லி, அந்தப் பதிலை ஏற்றுக்கொண்டும் இருக்கிறோம் இந்த பேரவையில். ஆகவே இதிலே ஒன்றும் பிரச்சினை வராது.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 2, 3 நிருபர்கள் இருந்தாலும் செய்தி கொடுக்கிறபோது இறுதியாக அதை நிச்சயமாக எடிட் செய்துதான் பத்திரிகையிலே கொடுப்பார்கள். ஆகவே அது பற்றிய பிரச்சினை இருக்காது என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. பழனிசாமி வேறு எங்கோ வருகிறார். அதுவும் தெரியும். (சிரிப்பு) திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நடைபெறுகிற தொழிலாளர்கள், தொழிற்சாலைகள் மற்றும் வேலை வாய்ப்பு—பயிற்சி கொள்கைக் குறிப்பின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளைக் கூற நான் முன் வருகின்றேன். குறிப்பாக இந்தத் துறை என்பது மிக முக்கியமான துறை. தமிழ்நாட்டினுடைய தொழிலாளர் வர்க்கத்தினுடைய நலன்களை பாதிக்கக்கூடிய, ஆலைகளுக்கும், ஆலைத் தொழிலாளர்களுக்கும் இருக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஏற்படுகின்ற முரண்பாடுகளுக்கு தீர்வுகாணுகின்ற ஒரு பிரதானமான துறை. இது நம்முடைய சட்டமன்றத்திலே கடந்த காலங்களிலே ஒரு நாள் முழுவதும் விவாதிக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இருக்கக் கூடிய பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்ற ஒரு முக்கியமான துறை. நாளைய தினம் உலக பாட்டாளி தினமாக மே தினத்தைக் கொண்டாடுவதற்கு முன்னதாக இன்று இரவு நாம் சில அவசரகோலத்தோடு இந்த விவாதங்களை நடத்தி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இன்றைக்குப் பதிலுரை வழங்க இருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எந்த அவசரமும் இல்லை. இப்போது நீங்களே கூட முதலிலே பேச வேண்டாம் என்று இருந்தீர்கள். உங்களை நான் அழைத்து நீங்கள் பேசுங்கள் என்று உங்களைப் பேச வைக்கிற அளவுக்குத்தான் விவாதத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோமே தவிர (குறுக்கீடு) திரு. தம்புசாமி அவர்கள் பேசுகிறேன் என்று இருந்தார்கள். தாங்கள் பேசவில்லை என்று சொல்லியிருந்தீர்கள். இருந்தாலும் நீங்கள் இருந்து இந்தத் தொழிலாளர் நலன் பற்றிப் பேச வேண்டும் என்று வற்புறுத்திப் பேச வைத்திருப்பதிலிருந்தே இங்கே எந்த அவசரமும் இல்லை. நிதானமாக மேலும் ரொம்ப விரிவாக அது பற்றி என்னென்ன கருத்துக்களைச் சொல்ல வேண்டுமோ அதற்கு எல்லாம் அமைச்சர் பதில் சொல்கிற அளவுக்கு நிலைமைகளை வைத்துக் கொண்டுதான் நாம் இந்த விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். ஒன்றும் அவசரம் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தொழிலாளர் நலத் துறையிலே நம்முடைய அரசு இந்தியாவிலேயே முதலாக தமிழகத்தில் எப்படி தொழில்களை துவங்கவேண்டும் என்ற எண்ணத்திற்கு ஆர்வம் காட்டுகிறோமோ அதுபோல அதிலே பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் நலனையும் பாதுகாப்பதிலே இந்தத் துறை மிக முக்கியமான அக்கறையைச் செலுத்த வேண்டும் என்பதை மிகப் பணிவன்போடு நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக இங்கே தொழில் துறை மூலமாக பல்வேறு தொழிற்சாலைகளை நாம் துவங்க வேண்டும் என்று சொன்னால், பல்வேறு நாட்டிலுள்ள தொழில் முனைவோர்கள் இங்கே வந்து தொழிலை முனையவேண்டும் என்று சொன்னால்—முதலில் மின்சார வசதி வேண்டும். அமைதியான நிலைமை-பதட்டமான நிலைமை இல்லாமல் இருந்தால்தான் மற்ற நாடுகளிலிருந்து, மற்ற மாநிலங்களிலிருந்து இங்கே வந்து தொழிலை துவங்குவதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்ற சூழ்நிலையை அவர்கள் எதிர் பார்க்கிறார்கள். அதேபோல தொழிலாளர் போராட்டங்கள், ஆலைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் போராட்டம் இல்லாத மாநிலம் எது என்று கண்டறிந்து அங்கே தொழிற்சாலைகளை துவங்குவதற்கு இன்றையதினத்தில் இருக்கக்கூடிய முதலாளிகள் முன்னுக்கு வருகிறார்கள். அந்த வகையிலே பார்த்தோம் என்று சொன்னால் தமிழகத்தில் புதிய தொழில்களைத் துவங்குவதற்கு எவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்கிறோமோ அந்த முறையில் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இருக்கக் கூடிய ஆள் குறைப்பு, கதவடைப்பு போன்ற பிரச்சினைகளில் துரிதமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 6.25

குறிப்பாக நமது ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியினுடைய பிரச்சினை 1989 ஆம் ஆண்டு முதல் துவங்கி மாண்புமிகு முதலமைச்சர் பொறுப்பு ஏற்ற பின்னால் இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்பட்டு அதற்காக 3 கோடி ரூபாயை தமிழக அரசு வழங்கியது. அப்படி வழங்கி மீண்டும் அந்த ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி செயல்படுவதற்கான முறையிலே ஒப்பந்தங்கள் ஏற்பட்டு நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனால் நிர்வாகம் முறையாக அதில் இருக்கின்ற தொழிலாளர்களுக்கு முழுவதும் வேலைவாய்ப்பு அளிக்க முடியாத காரணத்தினால் பல தொழிலாளர்கள் அதிலே வேலையில்லாமல் போதிய சம்பளமும் கிடைக்காததால் தாங்களே விலகிக்கொள்கிறோம் என்று சொல்லி அந்த நிர்வாகத்திற்கு எழுதிக்கொடுத்து விட்டார்கள். 214 தொழிலாளர்கள் இவ்வாறு எழுதிக்கொடுத்து விலகிக் கொண்டார்கள். மீதி 2187 பேர் இப்பொழுது அந்த ஆலையிலே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில், பார்ட் டைமாக தங்களுடைய வேலைகளை, பணிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் 250 ரூபாயிலிருந்து 900 ரூபாய்க்கு மேலே அவர்களுக்குச் சம்பளம் கிடைப்பதில்லை. முழுவதுமாக அந்த நிர்வாகம், அந்தத் தொழிலிலே, அந்த உற்பத்தியிலே ஈடுபடமுடியவில்லை. அரசாங்கம் தந்த 3 கோடி ரூபாய் கடனைப் பெற்றுக்கொண்டு அந்த ஆலை முடங்குகின்ற அபாயத்திலே இன்றைக்கு இருக்கிறது. இதுகுறித்து பல்வேறு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மூலமாக தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அந்த நிர்வாகம், அந்த ஆலைத் தொழிலாளர்களுக்கு முழுவதுமாக வேலை அளிப்பதற்கு மறுத்து வருகின்ற காரணத்தினால் எதிர்காலத்தில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? அந்தத் தொழிலாளர்களுக்கு என்ன வாய்ப்பு அளிக்கப் போகிறீர்கள் என்று அவர்கள் மூலமாக.....

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியினுடைய் பிரச்சினை குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்முடைய தொழிலாளர் நலத்துறையினுடைய ஆணையாளர் முன்னிலையில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே, தொடர்ந்து பேச்சுவார்த்தை என்ற பெயரிலே காலங்கடந்து கொண்டிருக்கிறது. தொழிலாளர்களுடைய வாழ்க்கை நலிந்து கொண்டு இருக்கிறதே தவிர இதில் ஒன்றும் முன்னேற்றம்

ஏற்படவில்லை. அந்த நிர்வாகத்தின் மீது நீங்கள் நடவடிக்கை எடுத்து மீண்டும் அந்த ஆலை இயங்குவதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? இதுகுறித்து ஒரு கொள்கை ரீதியான முடிவை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பின்னி தொழிற்சாலை. இன்றைக்கு பின்னி தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் இதே நிலைதான். நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13-4-1992 அன்று பேச்சுவார்த்தை நடத்தி அது திறக்கப்பட்டது. இன்றைக்கு அரசு ஆணைகளுக்கு நேர் விரோதமாக அந்த பின்னி நிர்வாகம் ஆள் குறைப்பிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிற ஆட்களைக் குறைப்பதற்கான முயற்சி நடந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: தலைவர் அவர்களே, பின்னி ஆலையில் இன்றையதினம் 3 தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. லேபர் யூனியன் ஒன்றும், சோமு அவர்களைத் தலைவராகக் கொண்ட தி.மு.க சார்புடைய எம்ப்ளாயீஸ் யூனியன் ஒன்றும், திரு. சண்முகம் அவர்களைத் தலைவராகக் கொண்ட அ.இ.அ.தி.மு.க. சார்புடைய தொழிற்சங்கம் என்றும் 3 தொழிற்சங்கங்கள் வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில் அங்கே இருக்கின்ற வரதராஜன் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகு, அதன் பிறகு பி.ஐ.எஃப்.ஆர்.க்கு சென்ற பிறகு நிலுவையில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தடை உத்தரவும் இருக்கிறது. பி.ஐ.எஃப்.ஆரில் இருக்கின்ற காரணத்தால் பிரச்சினை அப்படியே இருக்கிறது. சீக்கிரத்தில் நல்ல முடிவு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கேயிருக்கின்ற வேலை பார்க்கின்ற தொழிலாளர்கள் தானாக முன் வந்துதான் வெளியேறிக் கொண்டிருக்கிறார்களே ஒழிய நிர்வாகம் வெளியேற்றவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே, ஒரு ஆலையில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர்கள், அரசினுடைய ஒப்பந்த அடிப்படையிலே பேச்சுவார்த்தை நடைபெறுகிறபோது அங்கு போட்டிச் சங்கங்களை உருவாக்குகின்ற தன்மைகளிலே இன்றையதினத்திலே அந்த நிர்வாகம் ஈடுபடுகிறது. அதற்கு ஆதரவாக, அதற்குத் துணையாக அரசாங்கத்தில் இருக்கக்கூடிய சார்பற்ற சங்கங்களும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. இதன் மூலமாக அந்தத் தொழிலாளர்களுக்கு உண்மையாக கிடைக்கக்கூடிய அந்தச் சலுகைகள் உத்தரவாதங்கள் இல்லாத போக்குகள் இன்றைக்கு தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. அதுதான் பின்னி நிர்வாகத்தில் ஏற்பட்டுக்கொண்டு வந்திருக்கிறது. இதிலிருந்து போடக்கூடிய நிர்வாக அதிகாரி ஒருவர், இன்றைக்கு நிர்வாகத்திற்கு துணையாகப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆக

இப்படிப்பட்ட நிலைமைகளிலிருந்து நீங்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு உத்தரவாதமான வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டும். இன்றைக்கு ஆட்குறைப்பு இல்லை என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இன்றைக்கு 3017 பேர்கள் ஆட் குறைப்பு செய்யப்பட்டிருக்கிறார்கள். இங்கே இருந்து பண்ணினார்கள்.

பிற்பகல் 6-30

மாணபுமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.அண்டு சி. ஆலையில் தொழிலாளர்கள் தானாக முன்வந்து ஏறத்தாழ 1228 பேர் சென்றிருக்கிறார்களே' ஒழிய அந்த நிர்வாகம் தானாக வெளியே அனுப்பவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போட்டி சங்கம் ஆரம்பிப்பது என்பது ஏதோ அரசாங்கம் அதற்கு ஒத்துழைப்பு கொடுப்பது போல் சொல்லுவது தவறு. உங்களுடைய சங்கம் எங்காவது இருந்தால் அந்தச் சங்கத்திலே இருக்க விருப்பம் இல்லாத மற்ற தொழிலாளர்கள் வேறு சங்கத்திலோ அல்லது வேறு ஒரு அரசியல் கட்சி சார்பான சங்கத்தைத் துவக்கி விட்டாலோ அந்தச் சங்கத்தை உடைக்கிறார்கள் என்று எல்லாம் சொல்லுவது அவ்வளவு சரியாக இல்லை என்று நான் கருதுகிறேன். எனவே, அந்தந்த அரசியல் கட்சிகளுடைய விருப்பத்திற்கு இணங்க அந்த அரசியல் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் ஒரு சங்கமாக இயங்குவதையோ, மற்றதையோ அரசாங்கம் தடுக்கவும் முடியாது. எனவே, அதைத் தடுத்து நிறுத்தினால் கூட தவறு தான். அரசாங்கம் அதிலே தலையிட முடியாது. எனவே, அது தொழிற்சங்கங்களுக்குள்ளே இருக்கிற பிரச்சினை. அதிலே அரசாங்கம் அதைத் தூண்டி விடுகிறது என்று நீங்கள் சொல்லுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஒரு தொழிற்சாலையிலே யூனியன் ஆரம்பிக்கப்படுவது பற்றி சொன்னார்கள். ஆனால் இன்றைய சட்டப்படி எத்தனை யூனியன்கள் வேண்டுமானாலும் ஒரு தொழிற்சாலையில் ஆரம்பிக்கலாம் என்று

சட்டப் பாதுகாப்பு இருக்கிறது. அதைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று தான் டெல்லி அரசு முயன்று கொண்டிருக்கிறது. அப்படி வருகிறபோது அங்கே இருக்கிற தொழிலாளர்கள் 50 சதவீதத்தினர் யாரை ஆதரிக்கிறார்களோ அந்தச் சங்கம்தான் அதிகாரமான சங்கமாக இருக்க, ஒரு கருத்துரு டெல்லியில் இருக்கிறது. அப்போது இந்த நிலைமை உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துகிறது; அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்துகிறார்; உச்ச நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கிகொண்டிருக்கிறது. அதற்குப் பின்னாலும் கூட ஆலை நிர்வாகம் அடாவடித்தனமாக, பிடிவாதமாக இருக்கிறபோது நம்முடைய அரசாங்கம், நம்முடைய தொழிலாளர் நலத்துறை அதற்குரிய நடவடிக்கைகளை சரியாக எடுத்தால்தான் இந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்கமுடியும். இன்றைக்கு ஒன்றைச் சொல்ல முடியும். இன்றைக்கு நாகப்பட்டினத்தில் இருக்கிற ரோலிங் மில், அதிலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் சமீபத்திலே பலபேர் இறந்துவிட்டார்கள். ஏன் என்று சொன்னால் பல மாதங்கள் சம்பளம் கிடைக்கவில்லை, தங்களுடைய குழந்தைகளோடு குடும்பம் நடத்த முடியாமல், பல்வேறு தொழில்கள்... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இதே சட்டமன்றத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து என்னிடத்திலே விளக்கம் கேட்டார். 2 மாத சம்பளத்தை நாங்கள் தனித் துணை ஆணையர் மூலம் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். மீண்டும் நிர்வாகமும், தொழிலாளர் சங்கமும் இன்றையதினம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றிற்கும் பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று சொன்னால் எப்போது தான் தீர்வு காணப் போகிறோம்? தொழிலாளர்களுக்கு என்ன வேலைவாய்ப்பு தரப்போகிறோம்? என்ன சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கறாராகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொழிலாளர் நலன் என்றாலே பேச்சுவார்த்தை தான். கன்சிலியேஷன் என்பதே இங்கேதான் இருக்கிறது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30]

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை ஆண்டு காலம் தான் இந்தப் பேச்சுவார்த்தை என்பது...

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டீல் ரோலிங் மில்லில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களும், நிர்வாகமும் ஒத்துழைத்து சீக்கிரத்தில் நல்ல முடிவு எடுக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச்சுவார்த்தை முடிவே இல்லாமல் இருப்பதற்குக் காரணம் அமைச்சர் மட்டுமே என்பது போல் சொல்லக்கூடாது. பேசுகிற நாமும் கூட எந்த அளவுக்குக் காரணம் என்பது; முடுக்கி விடுவது என்பது எல்லாம் இருக்கிறது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தை நடத்தி நீங்கள் உரிய முறையில் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாகப்பட்டினத்தில் இருக்கின்ற ரோலிங் மில் உங்களுடைய கவன ஈர்ப்புக்குப் பின்னால் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பேச்சு வார்த்தை நடத்திய பின்னால் முழுமையாக சுத்தமாக அந்த ஆலையை இழுத்து மூடிவிட்டார்கள். தாங்கள் சொல்வது போன்று, அவர்களுக்குக்கொடுக்கக் கூடிய அந்த இரண்டு மாதச் சம்பளத்தை வழங்கவேண்டுமென்று தாங்கள் உத்தரவிட்டிருக்கிறீர்கள். அதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இருந்தாலும் உங்களுடைய கவனத்திற்கு அதிகாரிகள் தவறான தகவல்களைத் தந்து இருக்கலாம் என நான் கருதுகிறேன். இருந்தபோதிலும்கூட, அவர்களுடைய பிரச்சினைகளில் நீங்கள் தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-35

அதேபோன்று, பொதுப்பணித் துறை. இந்தப் பொதுப்பணித்துறையிலே இருக்கக் கூடிய பல்வேறு ஷட்டர் ஊழியர்கள், மெக்கானிக்குகள், இப்படிப்பட்ட தொழிலாளர்கள் ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஏற்கெனவே அந்தப் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால், தமிழக அரசினுடைய லாட்டரிச் சீட்டு டிபார்ட்மெண்டிலே கூட பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அந்தத் துறைகளின் மூலம் பொதுவாக தனியாருக்கு கான்ட்ராக்ட் விடுவதன் மூலமாக, அந்தத் தொழிலாளர்கள் வேலை இழக்கக் கூடிய அபாயம் வந்திருக்கிறது. இது அரசாங்கத் துறை. ஆகவே, அதற்கு என்ன ஒரு மாற்றுத் திட்டத்தை,

மாற்று வேலைவாய்ப்புகளை நீங்கள் உருவாக்கப் போகிறீர்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும். அந்த வேலைகளை கான்ட்ராக்ட் விடுவதன் மூலமாக, கான்ராக்ட் முறையிலே அவர்கள் வேலைசெய்வதன் மூலமாக, இவர்கள் வேலை வாய்ப்பை இழக்கக்கூடிய ஒரு அபாயம் வந்து கொண்டு இருக்கிறது. இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்பதனை நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் இருக்கின்ற வேலைவாய்ப்பு அலுவலகத்தை, சமீபத்திலே மாற்றுவதாக தங்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கக் கூடிய பொதுமக்கள், தொழிலாளர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலே இருக்கின்ற வேலைவாய்ப்பு அலுவலகம் மாற்றப்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தொழில் துறையிலே தொழிலாளர்கள் தங்களுடைய விபத்துக் காலங்களில் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகிறார்கள். இன்றைக்கு தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பள்ளி மாணவர்களை அல்லது இளம் சிறார்களையெல்லாம் வேலையில் அமர்த்தக் கூடாது; பணியிலே அமர்த்தக் கூடாது என்கிற ஒரு சட்டத்தை சென்ற ஆண்டே கொண்டு வரப்போவதாகச் சொன்னீர்கள். இந்தக் கொள்கைக் குறிப்பிலே அதைப்பற்றி ஒன்றும் கண்டுகொள்ள முடியவில்லை. அதற்கான ஒரு சட்டத்தை நீங்கள் இயற்றுவதற்கு முயற்சிக்கவேண்டுமென்று கேட்டு, நான் அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன், பேச்சைச் சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் பேரில் இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரத்தினச் சுருக்கமாக சில கருத்துக்களை நான் முன் வைக்க

விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், இந்திய அரசின் முதல் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக விளங்கிய எங்களுடைய வணக்கத்திற்குரிய ரட்சகர், பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய திருவுருவச் சிலையை இன்று சென்னை மாநகரத்திலே, மையப் பகுதியிலே திறந்து வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்களுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) முதல் தொழிலாளர் நல அமைச்சராக விளங்கிய அவருக்கு, விடிந்தால் 'மே தினம்' என்கிற நிலையிலே அவருடைய பெருமையையும் சிறப்பையும் நினைவு கூர்கிற வகையிலே இன்றைக்கு மிகப் பொருத்தமாகத் திறந்த வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்களது நன்றியை மேலும் தெரிவித்துக்கொள்ள நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலாளர்கள் இரண்டு வகையிலே பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள். அமைப்பு ரீதியான தொழிலாளர்கள்; அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் என்கிற வகையிலே பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள். அமைப்பு ரீதியான தொழிலாளர்கள் போராடுவதற்குப் பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அந்தத் தொழிற் சங்கங்கள் இல்லாவிட்டாலும்கூட, அமைப்பு ரீதியாக இருக்கிற தொழிலாளர்கள் ஓரளவிற்கு விவரம் தெரிந்தவர்கள், படித்தவர்கள், நாட்டின் நிலைமையையும் அனைத்து சூழ்நிலைகளையும் புரிந்தவர்கள். அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் மிகப்பெரும் அளவிற்கு படிப்பறிவு அற்றவர்கள். பாமரர்கள், கிராமப் புறங்களிலே இருக்கிறவர்கள், தங்களைத் தாங்களே புரிந்துகொள்ள முடியாத பல்விதமான நிர்ப்பந்தங்களிலும் துயரங்களிலும் தங்களுடைய வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டு இருக்கிறவர்கள். எனவே, நாம் அமைப்பு ரீதியான தொழிலாளர்களுக்கு அதிகப்படியான கவனம் செலுத்துவதைக் கொஞ்சம் தவிர்த்து, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு அதிகப்படியாக கவனம் செலுத்துதல் வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 6-40

இப்பொழுது நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் அரசியல் சட்ட வழிகாட்டுதலின்படி கட்டாயக் கல்விச் சட்டத்தை இங்கே தீவிரமாக அமல்படுத்த சட்டம் இயற்றி இருக்கிறார்கள். நான் பாராட்டுகிறேன். இதன்மூலம் இனி குழந்தைத் தொழிலாளர்கள் சட்ட முறையற்ற வகையிலே பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்படும். 10 வயது குழந்தை, 5, 6 வயது நிரம்பிய குழந்தைகளையெல்லாம் சிவகாசியைப்

போல வளர்ந்து வருகின்ற தொழில் நகரங்களிலே தீப்பெட்டித் தொழிலிலே பயன்படுத்தப்படுவதையும், வேறு சில தொழில்களிலே குற்றேவலர்களாக, உதவியாளர்களாக அவர்கள் பயன்படுத்தப்படுவதையும் நாம் பார்க்கிறோம். இனி கட்டாயமாகக் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும். அப்படி படிக்க வைக்கத் தவறினால் பெற்றவர்களுக்குத் தண்டனை தருவோம் என்று இந்தச் சட்டத்தின் மூலம் அவர்களை வலியுறுத்துவதன் மூலம், இனி இது தவிர்க்கப்படும். அதை மிகக் கடுமையாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இங்கே கருத்தை முன் வைக்க விரும்புகிறேன்.

தொழிலிலேகூட சமுதாய ரீதியாக, அதுவும் இந்தியா போன்ற ஒரு தொன்மை வாய்ந்த, பழமையிலே ஊறிப் போய்க் கொண்டிருக்கிற இந்த நாட்டிலே அதிலேகூட வித்தியாசமிருக்கிறது. தொழிலிலே இழிந்த தொழில், மேம்பட்ட தொழில் என்கிற அப்படிப்பட்ட ஒரு வித்தியாசம் பாரம்பரியமாக இங்கே ஏற்பட்டு விட்டது.

ஒரு மனிதனுக்குத் தலையிலேயிருந்து கால் வரை எடுத்துக் கொண்டால், எது எது அந்த மனிதன் வாழ்வதற்கு அத்தியாவசியமாகத் தேவையோ அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களெல்லாம் இழிந்த தொழிலாளர்களாக, இழிந்த சமுதாயத் தொழிலிலே ஈடுபட்டு இருக்கிறவர்களாகக் கருதப்படுகிற நிலைமையை நாம் கண்கூடாகப் பார்க்கக் கூடிய நிலைமை இருக்கிறது.

தலைமுடி வெட்டுவது ஒரு அடிப்படை சுகாதாரத் தொழில் என்றால், முடிதிருத்துகிறவன் தாழ்த்தப்பட்டவன்; சலவை செய்வது ஒரு அடிப்படை வசதியாக அடிப்படைத் தூய்மையை ஏற்படுத்துகிற தொழில் என்றால் அதைச் செய்கிறவன் தாழ்த்தப்பட்டவன்; செருப்பு தைப்பது ஒரு மிக அத்தியாவசியமான ஒரு மனிதனின் தொழில் என்றால் அதைச் செய்கிறவன் தாழ்த்தப்பட்டவன்; மலம் வாருவது சுகாதாரத்தை ஏற்படுத்துகிற மிக அத்தியாவசியமான ஒரு தேவை என்றால் அதைச் செய்கிறவன் தாழ்த்தப்பட்டவன். பிணம் புதைப்பது, சுடுகாட்டிலே போய் அதை எரித்து தூய்மைப்படுத்துவது, இது ஒரு மிக அத்தியாவசியமான தொழில் என்றால் அதைச் செய்கிறவன் தாழ்த்தப்பட்டவன். ஆகவே, முடி திருத்துகிறவன் தாழ்த்தப்பட்டவன்; சலவைத் தொழிலாளி தாழ்த்தப்பட்டவன்; செருப்பு தைக்கிறவன் தாழ்த்தப்பட்டவன்; வெட்டியான் தாழ்த்தப்பட்டவன். ஆக, இந்த நாட்டிலே எது எது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

1994 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, யார் எந்தத் தொழிலைச் செய்தாலும், தொழில் செய்வதிலே கேவலம் இல்லை. அது எப்படியோ சமுதாயத்திலே வந்து விட்டது. ஆனால் எது கேவலமானது என்றால், சோம்பலாக இருப்பது ஒன்றுதான் கேவலமேயொழிய, தொழிலில், எந்தத் தொழிலைச் செய்தாலும் அதில் கேவலமான உணர்வு இல்லை.

திரு. செ. கு. தமிழரசன்: பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய வருத்தத்தை, சமுதாய இழிநிலையை, ஆதங்கத்தைத்தான் நான் இங்கே வேதனையோடு குறிப்பிட்டேன்.

ஒரு மனிதனின் தூய்மைக்கு எது எது இந்த நாட்டிலே அத்தியாவசியமான தேவையோ அதையெல்லாம் ஆண்டாண்டுக் காலமாகச் செய்து வந்ததனாலேயே அவர்களெல்லாம் ஒதுக்கப்பட்டு விட்டார்களே, தாழ்த்தப்பட்டு விட்டார்களே, வஞ்சிக்கப்பட்டு விட்டார்களே என்ற அந்த வேதனையைத்தான் இங்கே வெளிப்படுத்தினேன்.

அதை நாம் மாற்ற வேண்டும் என்கிற அந்த அவசியத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு ஆண்டுக் காலமாக இதை அவர்கள் செய்ததனாலேயே அவர்களெல்லாம் தள்ளி வைக்கப்பட்டு விட்டார்கள். இது எல்லாம் மிக முக்கியத் தேவை. ஒரு மனிதனுக்கு, இதையெல்லாம் செய்யாவிட்டால் மனிதன் மிருகமாகி விடுவான். ஆகவே, மனிதனை மனிதனாக மாற்றக் கூடிய அத்தியாவசியமான பணி இது.

மனிதனைப் பூரணத்துவம் படுத்துகின்ற பணி இது. இதிலே ஈடுபட்டு இருக்கிறவர்களுக்கு நாம் ஒரு தனிக் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் இப்படிச் செய்கிறபொழுதும் நாம் இந்த மாநகராட்சியிலே கூட வெட்டியான்களுக்குக் கொடுக்கிற கூலியிருக்கிறதே எவ்வளவு தெரியுமா? 25 ரூபாய்க்கு மேலே தருவதில்லை. அதை அதிகப்படி ஆக்கலாம். எனவே, இப்படிப்பட்ட தொழிலிலே இருக்கிறவர்களுக்கு நாம் ஒரு தனி அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தத் தொழிலாளர் நலத் துறையே அவர்களுக்கு ஒரு பிரத்தியேக அக்கறை செலுத்த வேண்டுமென்பதற்காகத்தான் அதை வலியுறுத்த விரும்புகிறேன்.

பிறகு, கூலி நிர்ணயச் சட்டம் இருக்கிறதே, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே, அந்தக் கூலி நிர்ணயச் சட்டத்தை மாநிலம் முழுவதும் ஒரேமாதிரியாகக் கொண்டு வருவதற்கு

நாம் முயற்சிக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்திலே மட்டும் வேண்டுமானால் கூலிகளுக்கு அதிகப்படியான கூலி இருக்கலாம். வேறு மாவட்டத்திலே அப்படிக் கிடையாது. அதிலேகூட வித்தியாசம் இருக்கிறது. கிராமப்புறத்திலே விவசாயக் கூலியாக இருந்தால் ஒரே பணியிலே, ஒரு ஆண் ஈடுபட்டாலோ, பெண் ஈடுபட்டாலோ, ஆணுக்கு ஒரு கூலி, பெண்ணுக்கு ஒரு கூலி என்கிற வித்தியாசம் இருக்கிறது. ஒரே தொழிலிலே. (குறுக்கீடு) தஞ்சை மாவட்டத்திலே வேண்டுமானால் அது விதி விலக்காக இருக்கலாம். ஆனால், பிற மாவட்டங்களிலே அப்படி இருக்கிறதா? அதை நாம் கண்காணிக்க வேண்டும். வேண்டுமானால் அதற்காகவே வட்ட அளவிலே லேபர் இன்ஸ்பெக்டர்களை தொழிலாளர் நலத் துறையின் சார்பிலே ஆய்வாளர்களை நியமிக்கலாம், அந்தப் பணியை அவர்களுக்குத் தரலாம் என்ற அந்த யோசனையையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 6-45

குறிப்பாக, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், வீட்டு வேலையிலே ஈடுபட்டிருப்பவர்கள் மட்டும், மிகக் குறைந்தபட்சம் ஒரு லட்சம் பேருக்கு மேலே இருப்பார்கள். அங்கே பலவிதமான துர்மரணங்கள் எல்லாம் நடக்கின்றன. முறைகேடான சில விஷயங்கள் கூட நடக்கின்றன. அந்தத் தொழிலிலே பெண்கள்தான் அந்த வீட்டு வேலைக்குப் பயன்படுத்தப் படுகிறார்கள். எனவே, அவர்களுக்கெல்லாம், குறைந்தபட்சம் இவர்களையெல்லாம் வீட்டு வேலைக்கு வைத்துக் கொள்கிறார்கள் என்கின்ற, ஒரு கணக்கையாவது, ஒரு பதிவேட்டையாவது வைக்க வேண்டும். அதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. ஒரு வீட்டில் வேலை செய்கிறார்கள்; திடீரென்று ஒருநாள் இறந்து விடுகிறார்கள்; வேறு எந்த விவரமும் தெரிவதில்லை. எனவே, அதற்கு ஒரு பதிவேடு என்ற முறையிலே கொண்டு வரவேண்டும். இது ஒரு சாதாரண விஷயம் அல்ல. இதை நீங்கள் கொஞ்சம் பரிசீலிக்க வேண்டுமென்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய வேர்ஹவுசிங் கார்ப்பரேஷனிலே மட்டும் மூட்டை தூக்குகிற தொழிலாளர்கள் அதிக அளவு இருக்கிறார்கள். மூட்டை தூக்குகிற தொழிலாளர்கள் நீண்டகாலமாக அங்கு இருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டும். உணவுக் கிடங்கிலேயும் அத்தகைய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 30] [திரு. செ. கு. தமிழரசன்]

நாளை 'மே தினம்' என்பதாலேதான், இன்றைக்கு நம்முடைய தொழிலாளர் நலத் துறையின் மானியக் கோரிக்கைகளை இங்கே இன்றைக்கு நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். முதன் முதலில், வேலைநிறுத்தத்திற்கான உரிமையை சட்டரீதியாகப் பெற்றுத் தந்தவர், அண்ணல் அம்பேத்கார் அவர்கள். 1930-களிலேயே அவர் வழக்கறிஞராக இருந்தபோதே, ஒரு தொழிலாளிக்கு வேலை செய்வதற்கு எப்படி உரிமை இருக்கிறதோ, அப்படி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதிலும் உரிமை இருக்கிறது என்று வழக்கறிஞராக இருந்தபோதே, பம்பாய் நீதிமன்றத்திலே போராடி, அதிலே அவர் வெற்றியும் பெற்று, அந்த உரிமையைப் பெற்றுத் தந்தார். வாய்ப்பு கிடைத்தபோது, அதைச் சட்டமாகவும் மாற்றினார். ஆகவே, தொழிலாளர்களுக்கு அத்தகைய தொழிலாளர் நலமும், உரிமைகளும் இருக்க வேண்டும். சமீபத்தில் நம்முடைய மாநில அரசுகூட, கடந்த 19-4-1994 அன்று ஒரு மிகப் பெரிய பாராட்டத்தக்க, மிகச் சிறப்புமிக்க புரட்சிகரமான ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், துணிவோடு இவ்வாறு உத்தரவிட்ட மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன். அது என்ன உத்தரவு என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் யூனியன் இருக்கிறதே, தொழிற்சங்கம், அந்தச் சங்கத்தின் பிரதிநிதிகளோடு பேச மறுத்த ஒரு நிர்வாகத்திற்கு தாக்கீது செய்து, அந்த நிர்வாகம், தன்னுடைய கடமையிலிருந்து தவறியிருக்கிறது என்று அதற்கு ஒரு தாக்கீது அனுப்பி, அந்த நிர்வாகத்தினரைக் கண்டித்து, அவர்களை நீதிமன்றத்திற்கே அழைத்திருக்கிற அந்த ஆணையை, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள். 'கோத்தாரி' நிறுவனத்திலே, கடந்த 30 ஆண்டுகளாக ஒரு தொழிற்சங்கம் இருக்கிறது. அந்தத் தொழிற்சங்கத்திலே, அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் சேர்ந்து தேர்ந்தெடுத்த ஒரு செயலாளர் இருக்கிறார். வரதராஜன் என்பவரைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்தத் தொழிற்சங்கத்தோடு—ஒரே ஒரு தொழிற்சங்கம் தான் அந்தத் தொழிற்சாலையிலே அந்தத் தொழிற்சங்கத்தோடு—அந்தத் தொழில் நிறுவனத்தினுடைய தலைவராக விளங்குகிற திரு. ஷியாம் கோத்தாரி அவர்கள், நான் பேச மாட்டேன் என்று புறக்கணித்தார். இவர்கள் வழக்குத் தொடர்ந்தார்கள். அதற்குப் பின்னாலே, வழக்குமன்றத்திலே, நம்முடைய அரசுக்கு, அதுகுறித்து நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி, நெறிப்படுத்த வேண்டுமென்று ஒரு நீதிமன்றத் தீர்ப்பு வந்தது. அதைச் செயல்படுத்துகிற வகையிலே, இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு நாளை 'மே தினப்' பரிசாக, ஒரு மிக முக்கிய ஆணையை, இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலமும் பிறப்பிக்க

முடியாத அந்த ஆணையைப் பிறப்பித்திருக்கிறது என்பதை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்சங்கத்தோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளோடு, நீங்கள் பேசத் தவறினால், உங்களுக்கு குற்ற தண்டனையே வழங்குவோம் என்று, மிகத் துணிவான ஆணையை இந்த அரசு பிறப்பித்து இருக்கிறது. அது சாதாரண ஆணை அல்ல. இந்தியத் துணைக் கண்டத்திலேயே இருக்கிற எல்லாத் தொழிற்சங்கங்களுக்கும் அந்த உரிமைகளைப் பாதுகாக்கிற மிக முக்கிய ஆணையை இந்த அரசு பிறப்பித்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அந்த ஆணையைக்கூட 25(யு) என்று நம்முடைய தொழிற்சங்கச் சட்டத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் அந்த ஆணையை 25(ஜே) என்றே சொல்வேன். அந்த அளவுக்கு மிகப் புரட்சிகரமான ஆணையை இந்த அரசு பிறப்பித்திருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அத்தகைய செயல்களைப் பாராட்டி அதனைச் செயல்படுத்திட வேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

எந்தத் தொழில் நிறுவனமானாலும் அங்கே இருக்கிற தொழிற்சங்கத்திற்கு மரியாதை செலுத்த வேண்டும்; அவர்களோடு ஏற்படுகிற தொழிற் தகராறுகளைப் பேசி முடித்துக் கொள்வதற்கு வாய்ப்புத் தரவேண்டும். அது முடியாவிட்டால், முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று அந்தச் சட்டத்தை தொழிலாளர் நல அமைச்சராக இருந்தபோது, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் உருவாக்கினார்கள். நான் ஒருசில கோரிக்கைகளை இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

ஒப்பந்த அடிப்படையில் சில தொழிலாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாக மிகப் பெரிய நிறுவனங்களிலே துப்புரவுப் பணிகளையெல்லாம் கான்ட்ராக்ட் பேசிசிலே விட்டுவிடுகிறார்கள். அது ஏதோ தேவையில்லாத பணி, அதை ஏதாவது ஒரு கான்டிராக்ட்டிலே விட்டுவிட்டால் அவர்கள் இந்தத் துப்புரவு வேலையை கவனித்துக்கொள்வார்கள் என்று, இந்தத் துப்புரவுப் பணியை மட்டும் கான்டிராக்ட்டிலே விட்டுவிடுகிறார்கள். அட்மினிஸ்டிரேட்டிவ் பணிகளையெல்லாம் இவர்கள் வைத்துக்கொண்டு துப்புரவுப் பணியை மட்டும் கான்டிராக்ட்டிலே விட்டுவிடுகிறார்கள். அவர்கள் மிகக் குறைந்த அளிவிலே துப்புரவுத் தொழிலாளர்களை பயன்படுத்தி இந்தப் பணியில் ஈடுபடுகிறார்கள். அது, அந்த ஒரு தொழிலை நாம் ஏதோ இழிவான தொழில் என்று கருதுகிற வகையிலே நாம் எண்ணிவிட்டோம் என்பதற்கு அர்த்தமாகிவிடும். எனவே, துப்புரவுத் தொழிலாளர்களையும் அந்தக் கம்பெனியின் தொழிலாளர்களாக, நிர்வாகத்தின் தொழிலாளர்களாக உருவாக்குவதற்கு வாய்ப்புத் தரவேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 6-50

ஆதி திராவிடர் நல ஊழியர் சங்கங்கள் எல்லாம் இருக்கின்றன. ஒவ்வொரு நிறுவனத்திலும் இருக்கிறது. எல்லாத் துறையிலும் இத்தகைய நலச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் அங்கீகரிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன். மத்தியிலே இரயில்வே துறையிலே இப்படி அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. வங்கித் துறையிலும்கூட இப்பொழுது வழக்கு மன்றத்திற்குப் போய் தீர்ப்பு கிடைத்து சிண்டிகேட் வங்கி மற்றும் பிற வங்கிகளிலும் ஆதி திராவிடர் நலச் சங்கங்களை தொழிற் சங்கங்களாக அங்கீகரிக்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. எனவே, மாநில அரசாலும்கூட, ஆதி திராவிடர் நலச் சங்கங்களை தொழிற் சங்கங்களாக நீங்கள் அங்கீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். 50 ஆண்டுகளுக்கு மேலாக சில தொழிற் சங்கங்கள் 'மோனோபலி' செய்வதை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே, குறைந்தபட்சம் 20 சதவீதமோ அல்லது 25 சதவீதமோ தொழிலாளர்கள் இருந்தால் அந்தத் தொழிற் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும். என்கிற அந்தப் புதிய நிலையைக் கொண்டுவர வேண்டும். நான் வெளிப்படையாகச் சொல்ல விரும்பினால் இப்பொழுது ஒரு தொழிற்சாலையிலே அல்லது நமது அரசு நிறுவனங்களிலேகூட எச்.எம்.எஸ்.- ஐப் பேச அழைத்தார்கள். எச்.எம்.எஸ். பல நிறுவனங்களிலே இல்லவே இல்லை. எச்.எம்.எஸ். என்பது ஏறக்குறைய தேய்ந்து கொண்டிருக்கிற சங்கமாகவே ஆகிவிட்டது. ஆனாலும்கூட, அதைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார்கள். நலச் சங்கங்கள் என்கிற பெயராலே நாங்கள் மிக அதிக அளவிலே உறுப்பினர்களை வைத்திருந்தாலும் நாங்கள் தொழிற் சங்கங்கள் இல்லையென்று புறக்கணிக்கப்பட்டு நாங்கள் பேச்சு வார்த்தைக்கு மறுக்கப்படுகிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. செல்லக்குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எச்.எம்.எஸ். தொழிற் சங்கத்தைப் பேசுவதற்கு அழைத்ததாக இங்கே சொன்னார்கள். இதற்கு முன்னாலே இந்த மாமன்றத்திலே பேசுகின்றபோது திரு. சிங்கை கோவிந்தராசு அவர்கள் சொல்கின்றபோது தொழில் உலகத்தினுடைய தந்தையாகத் திகழ்ந்த தியாகி எம்.ஜி. இராமசாமி. அவர்களுடைய திருவுருவச் சிலையை, திருநாமத்தை வைக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே ஒரு கோரிக்கை வைத்து, மத்திய அரசின் மீது குற்றச்சாட்டை வைத்தார்கள். அந்த அளவிற்கு அந்தத்

தொழில் உலகத்திற்கு தந்தையாகத் திகழ்ந்த, அவர் தலைமை வகித்த தொழிற் சங்கம் எச்.எம்.எஸ். தொழிற் சங்கம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த அமரர் தியாகி எம்.ஜி. இராமசாமி அவர்கள் எச்.எம்.எஸ். தொழிற் சங்கத்தை உருவாக்கினார்கள். அவர் உருவாக்கிய அந்தத் தொழிற் சங்கம் இன்றையதினம் அவரை மறந்துவிட்டது. அவருடைய பெயராலே அந்த மருத்துவமனைக்கு பெயர் வைக்க வேண்டும் என்பதைத்தான் நான் குறிப்பிட்டேனே தவிர அந்தச் சங்கத்தினுடைய தன்மை பற்றி நான் குறிப்பிடவில்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆதார பூர்வமாகத்தான் இதை வலியுறுத்த விரும்புகிறேன். நம்முடைய தமிழக அரசின் போக்குவரத்துத் துறையிலே, அங்கே இருக்கிற தொழிற் சங்கங்களிலே எங்களுடைய நலச் சங்கமானது எச்.எம்.எஸ். தொழிற் சங்கத்தைவிட அதிக அளவிலே உறுப்பினர்களை வைத்திருக்கிற சங்கம். ஆனால் எங்களை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதில்லை. எச்.எம்.எஸ்.-ஐ அழைக்கிறார்கள். கேட்டால் அது அங்கீகரிக்கப்பட்ட சங்கம். எப்பொழுது அங்கீகரித்தீர்கள் என்று கேட்டால், 40 ஆண்டு காலத்திற்கு முன்னாலே உள்ள அங்கீகாரத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 40 ஆண்டு காலத்திற்கு முன்னாலே பெற்ற அங்கீகாரத்தை வைத்துக்கொண்டு இன்னமும் அதை அழைத்துக்கொண்டே இருப்பார்களேயானால், இந்த 40 ஆண்டுகளுக்குப் பிறகு மற்ற தொழிற் சங்கங்கள் எப்படி இருக்கிறது, எது எது வளர்ந்திருக்கிறது என்று அதைப் பார்த்து அல்லவா அனுசரிக்க வேண்டும் ? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

* மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழரசன் அவர்கள் பேசுகின்றபோது Warehousing Corporation-லே இருக்கின்ற ஆதிதிராவிடர் மூட்டை தூக்கும் தொழிலாளர்கள், அதைப் போல இந்த நலச் சங்கங்களையும், தொழிலாளர்

நலச் சங்கங்களாக அங்கீகரிக்க வேண்டுமென்று பேசினார்கள். அங்கேயும் இந்தச் சங்கம் இருக்கிறது. தொழிலாளர்கள் என்கிற பெயராலே சங்கம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறாரா, அல்லது வேறு பிரிவினைகளை அதிலே உருவாக்கி அப்படிப்பட்ட பிரிவினைகள் எல்லாம் வரவேண்டுமென்று விரும்புகிறார்களா? அதைத் தவிர வேறு பிரிவினைகளை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறார்களா அல்லது தொழிலாளர்கள் எல்லாம் ஒன்றாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

பிற்பகல் 6-55

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இறுதி இலட்சியம் அதுதான். தொழிலாளர்களிடையே வித்தியாசம் இருக்கக்கூடாது. இன வேறுபாடு, மத வேறுபாடு, சாதி வேறுபாடு இருக்கக்கூடாது, அதிலே வர்க்க உணர்வுதான் இருக்கவேண்டும் என்பதுதான் இறுதி இலட்சியமாகும். ஆனால் இன்றைக்கு தொழிலாளர்களுக்கு வர்க்க உணர்வு இருக்கிறதா? வர்க்க உணர்வு இல்லையே. ஒரு தொழிற்சாலையிலே ஒரே தொழிலிலே ஈடுபட்டிருக்கிற இரண்டு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்க்கையிலே வர்க்க உணர்வோடு சம்பந்தம் செய்து கொள்வார்களா? செய்து கொள்ள மாட்டார்கள். ஒரே தொழிற்சாலையிலே.......

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் அங்கே வேலை செய்கிற தொழிற்சாலைகளிலே தங்களுடைய உரிமைகள், அல்லது ஊதியங்கள் போன்ற இவைகளுக்காகத்தான் போராடுகிறார்களே தவிர அங்கே வேறு ஏதாவது கொள்கை, கோட்பாடு போன்ற பிரச்சினைகளுக்காகப் போராடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வர்க்க உணர்வு இல்லை என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு தொழிற்சாலையைச் சேர்ந்த குடியிருப்பில் 10 வீடுகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். அதாவது அவர்கள் ஒரே மாதிரியான வீடு, ஒரே இடம், ஒரே வேலை என்ற வகையில் இருக்கிறார்கள் என்றாலும் ஒத்த சம்பளம் வாங்கக்கூடியவர்களாக இருந்தாலும் கூட வாழ்க்கை முறையில் இவர்களுக்கு ஒத்த உணர்வு கிடையாது. அவர்கள் வேறு, இவர்கள் வேறு என்கிற வகையிலேதான் இருக்கிறார்கள். அவர்களுக்கு வர்க்க உணர்வு வரவில்லை. ஆனால் நம்முடைய இறுதி இலட்சியம்

அதுதான். வர்க்க உணர்வு வரவேண்டும். தொழிலாளிக்கு தொழிலாளி என்ற உணர்வுதான் வரவேண்டும். ஆனால் தொழிலாளிக்கு இன்றைய நிலையில் வர்க்க உணர்வு இல்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நிலையிலே இருப்பவர்களை வைத்துக் கொண்டுதான் நாம் பேச வேண்டும். ஆதிதிராவிடர்களுக்கு என்று தனி நலத்துறை இருக்கிறது. அதற்கு தனி கமிஷன் இருக்கிறது. தனிச் சட்டம் இருக்கிறது. எனவே தனியாக இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கின்ற சூழ்நிலையிலே தனியாக அங்கீகாரம் தேவை என்று நான் வற்புறுத்துவதிலே தவறில்லை. எனவேதான் இரயில்வேயிலே இப்படிப்பட்ட அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. வங்கியிலே அப்படிப்பட்ட அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. இது ஒரு தனி துறையாகவே இருக்கிறபோது தனி அங்கீகாரம் கிடைப்பதில் தவறில்லை. அது ஒரு பெரிய நீண்டகாலத்திட்டம் என்று நான் சொல்லவில்லை. ஒரு தற்காலிகத் திட்டமாக அதை நீங்கள் செயல்படுத்த வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் உரையை முடித்து விடுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: முடித்து விடுகிறேன். இறுதியாக ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத்துறை என்று இருப்பது அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, அவர்களுக்கு வேலைதேடித் தருவதற்கு, அல்லது வேறு கடன் உதவிகளைக் கொடுத்து அவர்களுடைய தரத்தை உயர்த்துவதற்காகத்தான். அதற்காகத்தான் அந்த நலத்துறை இருக்கிறதே தவிர வேறல்ல. அவர்கள் வேலை தேடிச் சென்ற பின்னாலும் அந்தப் பணிகளிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் சமமாக மதிக்கப்படவேண்டும் என்பதுதான் நம்முடைய எண்ணமாக இருக்கிறது. அதைத்தான் நாம் கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிறோம். உதாரணமாக எங்களுடைய கட்சியின் சார்பாக இருக்கின்ற பல்வேறு தொழிற்சங்கங்களிலே நீங்கள் போய்க் கணக்கிட்டுப் பார்த்தால் பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிலே பொறுப்பிலே, மிக முக்கிய பொறுப்பிலே உள்ளவர்களாக இருக்கிறார்கள். இதனை ஆணித்தரமாகச் சொல்ல முடியும். அந்த அளவுக்கு அரசியல் கட்சிகளை எடுத்துக்கொள்கிற போது நல்ல கொள்கையின் மூலமாக அல்லது எந்தவொரு நல்ல முடிவின் காரணமாக

அதிலே சமுத்துவத்தை ஏற்படுத்துவதற்கு நம்மால் முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லட்சியத்திலே, நல்லெண்ணத்திலே நமக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனாலும் இந்த வித்தியாசம் வந்துவிட்ட காரணத்தால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சதர்ன் இரயில்வே மஸ்தூர் யூனியன் இருக்கிறது. அது மிகத்தொன்மையான மஸ்தூர் யூனியன். இப்போது புதிதாக ஒரு செல் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த யூனியனிலே ஒரு செல் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று ஒரு செல் இருக்கிறது. அதாவது அந்த தொழிலாளர்களிடேயே ஒரு பிரிவை ஆரம்பிக்கிறபோது அவர்களுக்கிடையே வர்க்க உணர்வு இல்லை என்பதுதானே பொருள். அரசியல் கட்சியில்கூட இப்படி ஒரு செல் ஆரம்பித்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன். காங்கிரஸ் பேரியக்கத்தில் செல் இருக்கிறது. வேறுசில இயக்கங்களிலே செல் இருக்கிறது. இப்போது பாரதீய ஜனதா கட்சியிலே கூட அந்த செல், அந்தப் பிரிவு அங்கே வந்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே வாழ்க்கையிலே எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. அதையெல்லாம் ஒட்டித்தான் பல பிரச்சினைகளுக்காக அமைப்புகள் உருவாகின்றன. நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை. தொழிலாளர்கள் என்று வந்துவிட்டதற்குப் பிறகு அங்கே ஊதிய உயர்வு என்றால் எல்லாத் தொழிலாளர்களுக்கும்தான் ஊதிய உயர்வு. உரிமைகள் என்றால் எல்லாத் தொழிலாளிக்கும் உரிமைகள்தான். ஆகவே தொழிலாளர்களின் சங்கங்கள் வேறு வேறு பொருளிலே இருக்கலாமே தவிர அங்கேயும் கொண்டு வந்து தொழிலாளர்களுக்குள்ளே, வேறு ஒரு பிரிவின் அடிப்படையில் தொழிலாளர் அமைப்பை உருவாக்கவேண்டும், அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்கிற விவாதமும் அந்த முயற்சிகளும் இன்றைய சமுதாய முன்னேற்றத்திற்கு உகந்ததுதானா என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. செல்லக்குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் பேரியக்கத்திலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய பிரிவு இருக்கிறது என்று செ. கு. தமிழரசன் அவர்கள் சொன்னார்கள். அவர் ஒரு உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராகவே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய பெரியவர் சஞ்சீவையா அவர்களை காங்கிரஸ் பேரியக்கம் நியமித்தது, தலைவராக ஏற்றுக் கொண்டது என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரியப்படுத்த விரும்புகிறேன் (குறுக்கீடு) தாழ்த்தப்பட்ட பிரிவு என்று வருகின்றபோது அதில் ஒரு உள் அர்த்தம் வருகிறது. தனிப்பிரிவு என்பது அல்ல. அவரைத் தலைவராகவே நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியில் தாழ்த்தப்பட்ட பிரிவு என்ற அமைப்பு இருக்கிறதா இல்லையா, அதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் துணைத் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்று காங்கிரஸ் கட்சியில் ஒரு தனிப் பிரிவு இருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் காங்கிரஸ் கட்சியில் ஒவ்வொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு, அதேபோன்று அவர்களுக்கு ஒரு அந்தஸ்தைக் கொடுப்பதற்கு, அதே போன்று தேர்தல் காலங்களிலே அந்தப் பிரிவிலே இருந்து சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இந்தப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கட்சியில் இருக்கிறதா என்றீர்கள். அவரும் இருக்கிறது என்று சொல்லிவிட்டார். நீங்கள் ஏற்கனவே விளக்கம் சொல்லி விட்டீர்கள் இல்லையா? (குறுக்கீடு) திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவர்கள் வைத்திருக்கின்ற அந்தப் பிரிவை கொஞ்சம் மரியாதையாக தாழ்த்தப்பட்ட பிரிவு என்று சொன்னேன். ஆனால் எங்களுடைய கொள்கைக்கு நேர் மாறாக நாங்கள் எந்தப் பெயரை எதிர்த்து போராடுகின்றோமோ, எந்தப் பெயரை எங்களுக்கு சொல்லக்கூடாது

என்று நாங்கள் எதிர்த்துக் கொண்டிருக்கிறோமோ அதை இவர்கள் வைத்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் எங்களுடைய கோரிக்கையை ஏற்று அந்தப் பெயரை மாற்றி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆதிதிராவிடர்கள் என்று அறிவித்தார்கள். அதைத்தான் இவர்கள் " லீக் " என்று வைத்திருக்கிறார்கள். அரிஜனங்கள் என்று சொன்னால் கடவுளின் குழந்தைகள் என்று சொல்லுகிறார்கள், கடவுளின் குழந்தைகள் என்று சொன்னால் மற்றவர்கள் எல்லாம் சாத்தானின் குழந்தைகளா என்று பாபா சாகிப் அம்பேத்கார் அவர்கள் கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர் கட்சித் துணைத் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.சி./எஸ்.டி. என்று இருக்கிறதே தவிர அரிஜனங்கள் 'செல்' என்று இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சியில் இருப்பதை நீங்கள் சொல்லுகிறீர்கள். அதைத்தான் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் சொன்னார்கள் (குறுக்கீடு) எஸ்.சி./எஸ்.டி செல் இருக்கிறது என்று சொல்லிவிட்டார். அதனால் மற்றவற்றுக்குப் போகவேண்டும். திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நலச் சங்கங்கள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று நான் வலியுறுத்துவதற்குக் காரணமே அவர்கள் பணிக்கு தேர்வுசெய்யப்படுகிறபோதே 18%, 19% என்ற இட ஒதுக்கீட்டின் அடிப்படையில்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல் 94 என்ன சொல்கிறது... (குறுக்கீடு) திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இவர்கள் பேசுவதை எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது கடந்த ஐந்து நிமிடங்களாக குழப்பமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் செ. கு. தமிழரசன் அவர்கள் பேசுகிறபோது சாதி அடிப்படை தொழிலாளர்கள் மத்தியில் வேண்டுமென்று சொல்கிறாரா, வேண்டாம் என்று சொல்கிறாரா என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. மேலும் அவர் பேச்சின் ஆரம்பத்தில் எங்களுடைய அன்புக்குரிய டாக்டர் அம்பேத்கார் என்று சொன்னார். நம்முடைய அம்பேத்கார் என்று சொன்னால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். சாதி அடிப்படை

வேண்டும் என்கிறாரா, அல்லது வேண்டாம் என்கிறாரா என்பதைத் தெரிவிக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களிடையே சாதி வேற்றுமை நிச்சயமாக இருக்கக் கூடாது என்பதுதான் நம்முடைய கொள்கை. அதுதான் நம்முடைய இறுதி லட்சியம். ஆனால் இப்போது பிரிந்து இருக்கிற வரையிலும், இப்போது இருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு, இப்போது இருக்கின்ற உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இந்த நலச் சங்கங்கள் அங்கீகரிக்கப்படவேண்டும். முதலில் சொன்னது நம்முடைய இறுதி லட்சியம் (குறுக்கீடு). மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடைசியாக ஒரு கோரிக்கையை இங்கே முன்வைக்க விரும்புகிறேன். அயல் நாடுகளில் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லும் சில அமைப்புகள் இருக்கின்றன. அதிலே பெரும் அளவுக்கு முறைகேடுகள் நடைபெறுகின்றன. சில தனியார் ஏஜென்சிகள் நாங்கள் வெளி நாடுகளில் வேலை வாங்கித் தருகிறோம் என்று சொல்லி ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான பணங்களை வசூல் செய்து வேலையற்றுக் கிடக்கும் அப்பாவி பட்டதாரிகளை ஏமாற்றுகிறார்கள், வஞ்சிக்கிறார்கள். சிலர் டெல்லி வரை பம்பாய் வரை அழைத்துச் சென்று பின்னர் அவர்களை அங்கே அனாதைகளாக விட்டுவிட்டு ஏமாற்றி விடுகிறார்கள் என்ற செய்திகள் பத்திரிகைகளில் வருகின்றன. இதிலே தீவிர கண்காணிப்பு வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். கடைசியாக, தொழிலாளர்களுக்கு நிர்வாகத்திலே பங்கு கொடுக்க வேண்டும். அதுதான் நாம் தொழிலாளர்களுக்குச் செலுத்துகின்ற உயரிய மரியாதையாக இருக்கும் என்று நம்முடைய அரசியல் வழிகாட்டு கோட்பாடுகளிலே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அதற்கு முன்மாதிரியாக அரசு நிறுவனங்களிலேயாவது அல்லது பொது நிறுவனங்களிலேயாவது எங்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு நிர்வாகத்திலே, போர்ட் ஆப் டைரக்டர்ஸ் இடத்திலே இடம் கொடுக்கலாம். அப்படிக் கொடுப்பது புரட்சிகரமான திட்டமாக இருக்கும். இது தொழிலாளர்களுக்குச் செய்கின்ற பெரிய சாதனையாக இருக்கும் என்று இறுதியாகக்கூறி, எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி அமைகிறேன்.

•

இரவு 7-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி.

1994 ஏப்ரல் 30]

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 மாதங்களுக்கு முன்பு சேலம் மாவட்டத்தில் கூட்டுத்துறையின் மூலம் நியாய விலைக் கடைகளுக்கு 150 பேர்கள் விற்பனையாளர்கள் பணிக்குத் தேர்வு செய்தார்கள். அந்தத் தேர்வு செய்கின்றபோது பத்திரிகைகளில் விளம்பரம் செய்து அந்தக் கூட்டுறவு விற்பனையாளர் பணிக்கு தேர்வு செய்தார்கள். இம்மாதிரி தேர்வு செய்கின்றபோது குறைந்தபட்சம் கல்வித் தகுதி பள்ளி இறுதித் தேர்விலே வெற்றி பெற்றவர்கள் மனு செய்யலாம் என்பதைப் பார்க்கும்போது ஏற்கனவே ஆயிரக்கணக்கானவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்திருக்கின்றார்கள், அந்த 150 பேர்களும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக தேர்வு செய்யப்பட்டிருக்கவேண்டும். தொழிலாளர் நல அமைச்சகம் இனிமேலாவது இதுபோன்ற பணிகளிலே நிரப்பும்போது, வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக நிரப்புவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் நிறுவனங்களிலும்கூட. வேலைவாய்ப்பு அளிப்பதில்– ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில்– 18 சதவிகித ஒதுக்கீட்டைக் கடைபிடிக்கவேண்டும் என்று அரசு ஆணை உள்ளது. அவ்வாறு 18 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்படுகிறதா என்று சரிபார்க்கும் அதிகாரமும் ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநருக்கு இருக்கிறது. அந்த 18 சதவிகித ஒதுக்கீடு சரியாக அமல்படுத்தப்படுகிறதா என்பதைப் பார்க்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அரசு போக்குவரத்துக் கழகங்களிலும்கூட, 18 சதவிகித ஒதுக்கீடு ஆதிதிராவிடர்களுக்கு அமல்படுத்தப்படுகிறதா என்பதைச் சரிபார்க்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர்க்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசினர் தொழில் பயிற்சி நிலையங்களிலே, புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஆர்வம் கொண்டுள்ளது. அந்தவகையில், சேலம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் ரெடிமேட் ஆடைகள் குறிப்பாக நாள் ஒன்றுக்கு 30 லட்சம் மதிப்புள்ள ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த ரெடிமேட் ஆடைகளை பெரும்பாலும் பெண்கள்தான் தயாரிக்கிறார்கள். சேலம் பகுதி பெண்களுக்கு சுயவேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க உதவுகின்றவகையில் சேலத்தில் ஏற்றுமதி ஆடை தையற்கலை தொழிற் பிரிவு ஒன்றினை, சேலம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1992 ஆம் ஆண்டில் தொழில் தகராறு 1743 ஆக இருந்தது. 1993ல் 1875 ஆக உயர்ந்து உள்ளது. அதாவது 132 தகராறுகள் அதிகரித்துள்ளன. தொழில் தகராறுகளைத் தீர்க்க, அரசு அதிக முயற்சிகள் மேற்கொள்ளாததால் இந்த உயர்வு ஏற்பட்டதா அல்லது வேறு காரணமா, என்னவென்று தெரியவில்லை.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் குழந்தைகளின் படிப்பிற்கு உதவித் தொகை வழங்கி வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் உதவி பெறுவோரின் எண்ணிக்கை 1992 ஆம் ஆண்டைவிட 1993 ஆம் ஆண்டில் மிகவும் குறைந்துள்ளது. உதவி பெறுகின்ற தொழிலாளர்களின் குழந்தைகளும் குறைந்துள்ளனர். இதற்கு என்ன காரணம் என தொழிலாளர் அமைச்சகம் அறிவிக்கவேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தமிழ்நாடு பொதுச்சுகாதாரத் துறையில் பல நோக்கு சுகாதாரப் பணியாளர்கள், மல்ட்டி பர்ப்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸ் பயிற்சிக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக 1990-91 ஆம் ஆண்டில் 321 பேரும், 1991-92 ஆம் ஆண்டில் 270 பேரும் பதிவு மூப்பு மற்றும் நேர்காணல் (seniority and interview) முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்கு இந்த வாய்ப்பு, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து பத்து ஆண்டுகள் கழித்து கிடைத்த வாய்ப்பாகும். பயிற்சியின்போது அரசின் உதவித்தொகையாக மாதம் ரூ.125 மற்றும் தங்கும் வசதியும் செய்து கொடுக்கப்பட்டது. பயிற்சி முடிந்தபின், பணியில் அமர்த்தப்படுவார்கள் என்ற உத்தரவாதத்தின் பேரிலும், பயிற்சி முடிந்தபின், தமிழ்நாடு அரசின் பலநோக்கு சுகாதார உதவியாளராக குறைந்தது மூன்று ஆண்டுகள் பணி புரிய வேண்டும் என்று கூறிய காரணத்தினாலும், பயிற்சி பெற்று மூன்று ஆண்டுகள், ஆகியும் இதுநாள்வரை வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை. ஆனால், இதேபோன்று பயிற்சி பெற்ற பெண் பணியாளர்களுக்கு உடனடியாக வேலை வழங்கப்பட்டுள்ளது. பலநோக்கு சுகாதாரப் பணித் திட்டத்தின்கீழ் ஒரு துணை சுகாதார நிலையத்திற்கு ஒரு பெண் பணியாளரும், ஒரு ஆண் பணியாளரும் வேலை செய்ய வேண்டும். இதன் அடிப்படையில், தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள துணை சுகாதார நிலையங்கள் 8,681 ஆகும். பலநோக்கு சுகாதாரப் பெண் பணியாளர்கள் 8,681. ஆனால் பலநோக்கு சுகாதார ஆண் பணியாளர்கள் 5,314 மட்டும் தான். மீதமுள்ள காலியிடங்கள் 3,367 ஆகும். ஆனால், பயிற்சி முடிந்து தகுதியுள்ள பணியாளர்கள், மொத்தம் 591 பேர்கள்தான். இந்த 591 பேரும் வேலைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். வேலைக்கு ஆள் தேவை

என்று தேர்ந்தெடுத்து, பயிற்சியும் கொடுத்து, வேலை கொடுக்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். வேலை வழங்கிவிட்டதாகக் கருதி இவர்களின் பதிவை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ரத்து செய்துவிட்டார்கள். இவ்வாறு பயிற்சி பெற்றவர்களில் பெரும்பாலானோர் 30 வயதைக் கடந்தவர்களாகவும், திருமணமாகி குழந்தைகளுடனும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இவர்களின் கோரிக்கையைப் பரிசீலித்து இவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7-10

சென்ற ஆண்டு, 23.4.1993-ல் நடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் விபத்தில் இறக்கும் கட்டடத் தொழிலாளர்களுக்கு ரூ.20 ஆயிரம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று அன்றைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அறிவித்திருந்தார்கள். இந்த அறிவிப்பு இன்றையநாள் வரை நிறைவேற்றப்படவில்லை. இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கூறி அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (செல்வி எல். சுலோசனா): மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுடைய நல்வாழ்விற்கும், அவர் தம் உயர்வுக்கும், தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவரும், அனைத்துத் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்து நிற்பவருமான எங்கள் அன்னை, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி, தொழிலாளர் நலத் துறையினுடைய அமைச்சராக ஆக்கி, இம்மாமன்றத்திலே முதன் முறையாக இத்துறை மானியக் கோரிக்கையின்மீது எழுந்த விவாதம்மீது விடையளிக்கின்ற நல்ல வாய்ப்பினை நல்கிய, இதயதெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் வாழ்நாள் முழுவதும் நன்றியுள்ளவனாகவும், இதயதெய்வம் இடும் ஆணையினை ஏற்று செயல்படுத்தும் தொண்டனாகவும் இருந்து என்றென்றும் தங்கள் வழி நடப்பேன் என்று உறுதியோடு கூறிக்கொண்டு, 6 கோடி தமிழர்களின் அசையாத நம்பிக்கை நட்சத்திரம், உலகத் தமிழர் எல்லாம் போற்றுகின்ற ஒளிவிளக்கு, சாதனைச் சரித்திரத்தை சத்தியத்தால்

எழுதுகின்ற சாதனைத் தலைவி இருக்கின்ற திசைநோக்கி வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

தொழிலாளர் நலத் துறை:

இன்று தமிழகத்தில் தொழில் அமைதி நிலவுகிறது. தமிழகம் தொழில் உறவு பூங்காவாகப் பூத்துக் குலுங்குகிறது. அதற்குக் காரணம் 6 கோடித் தமிழர்களுடைய நம்பிக்கை நட்சத்திரம், இதயதெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தீர்க்கதரிசன தொழிலாளர் நலக் கொள்கைகள் ஆகும்.

தமிழகத்தில் 22 ஆயிரத்து 849 தொழில் நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் 11 லட்சத்து 61 ஆயிரத்து 654 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால் இன்றையதினம் வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பு போன்ற நிகழ்வுகள், மற்றைய மாநிலத்தைக் காட்டிலும் தமிழகத்தில் மிகவும் குறைவு என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

1991 ஆம் ஆண்டில் வேலைநிறுத்தம், கதவடைப்பினால் 72 லட்சத்து 78 ஆயிரத்து 969 மனித நாட்கள் இழக்கப்பட்டன. 1992 ஆம் ஆண்டில் அது 28 லட்சத்து 68 ஆயிரத்து 472 ஆக இருந்தன. 1993 ஆம் ஆண்டில் மனித இழப்பு நாட்கள் 24 லட்சத்து 22 ஆயிரத்து 103 ஆகக் குறைந்துள்ளன.

இரவு 7-15

மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம் மற்றும் கேரளா ஆகியவற்றில் 1993 ஆம் ஆண்டில் இழந்த மனித நாட்களின் எண்ணிக்கை, நமது மாநிலத்தில் மனித நாட்களின் இழப்பைவிடக் கூடுதலாக உள்ளது.

சீர்மிகு தமிழகம்
பார்புகழ்நிலை அடைய
ஏர்முனைச் செல்வமும்
கூர்தொழில் நுட்பமும் வளர
ஆர்வத்துடன் பாடுபடும்

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு, பயனுள்ள கொள்கைகளைச் செயல்படுத்தி வருகிறது. நிர்வாகத்தினரும்

தொழிலாளர்களும் ஒத்துழைத்து செயல்பட உற்சாகப்படுத்துகிறது. 1993 ஆம் ஆண்டில் 1642 தொழிற் தகராறுகளில் இரு தரப்பினரும் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் சுமூக உடன்படிக்கை செய்து கொண்டுள்ளனர். 1993 ஆம் ஆண்டு 8,834 தொழிற் தகராறுகளின்மீது சமரச அலுவலர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். பெரும்பாலான தொழில் தகராறுகள் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக,

(1) திருப்பூரிலுள்ள 1 லட்சம் பனியன் தொழிலாளர்களுடைய பொதுக் கோரிக்கைகள் 9-8-1993 அன்று சமரச முயற்சியால் தீர்த்து வைக்கப்பட்டன என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) 75 ஆயிரம் தோல் பதனிடும் தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைகள் 7-10-1993 அன்று தீர்த்து வைக்கப்பட்டன என்பதையும் இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) தமிழ்நாடு மின்வாரியத் தொழிலாளர்கள் பொதுக் கோரிக்கைகள்மீது, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடந்து, இறுதியில், தொழிலாளர் துறை ஆணையர் முன்னிலையில் 19-1-1994 அன்று உடன்படிக்கை ஏற்பட்டது என்பதையும் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளவனாக இருக்கிறேன்.

(4) மலைத் தோட்டப் பணியாளர்களின் பொதுக் கோரிக்கையில் நேரடிப் பேச்சு வார்த்தை நடந்து, இறுதியில் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் உடன்படிக்கை ஏற்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில் வளம்பெற வேண்டும், தொழிலாளர் நலம் பெருக வேண்டும்—இதுதான் எங்கள் இதய தெய்வம் ஆட்சியின் அடிப்படைக் கொள்கை. இந்தக் கொள்கையின் பலனாக, 1993 ஆம் ஆண்டில் 1537 தொழிற்சாலைகள், 1992 ஆம் ஆண்டை விட அதிகமாக உள்ளன. அதேபோல் 51,092 தொழிலாளர்கள் 1992-ஐ விடக் கூடுதலாக உள்ளனர்.

அமைப்புரீதியற்ற தொழிலாளர்கள் நலம்:

ஏழை எளியவர்களின் ஒளிவிளக்காகத் திகழும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் நலனில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. அவர்களுக்குக் குறைந்த பட்ச சம்பளம் அவ்வப்போது மாற்றியமைக்கப்படுகிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மொத்தம் 67 தொழில்கள் குறைந்தபட்ச சம்பளச் சட்ட

அட்டவணையில் உள்ளன. அதில் 58 தொழில்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தைப் பொறுத்தமட்டில், குறைந்தபட்ச சம்பளம் 38 தொழில்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1993 ஆம் ஆண்டில் ஒரு தொழிலுக்குக்கூட அங்கு சம்பளம் நிர்ணயிக்கவோ, மறு நிர்ணயம் செய்யவோ இல்லை. மகாராஷ்டிரத்தில் 1993 ஆம் ஆண்டில் 3 தொழில்களுக்கு சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டு, 5 தொழில்களுக்கு மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கர்நாடகத்தைப் பொறுத்தமட்டில் 61 தொழில்கள், அட்டவணையில் உள்ளன. அவற்றில் 36-க்குக் குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அங்கு 1993-ல் 4 தொழில்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசால், 1993 ஆம் ஆண்டில் 4 தொழில்களுக்கு முதல்முறையாகக் குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், 1993 ஆம் ஆண்டு 7 தொழில்களுக்குக் குறைந்தபட்ச சம்பளத்தை அதிகரித்து, மாற்றி அமைத்துள்ளோம். 1994 ஆம் ஆண்டில் கடல் உணவு பதப்படுத்துதல் தொழிலுக்கு முதன்முறையாகக் குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயித்துள்ளோம். மேலும், 4 தொழில்களுக்கு குறைந்தபட்ச சம்பளத்தை அதிகரித்து, ஆணை பிறப்பித்துள்ளோம். இன்னமும் 14 தொழில்களுக்குக் குறைந்தபட்ச சம்பளத்தை அதிகரித்து ஆணை பிறப்பிக்க உள்ளோம். குறைந்தபட்ச சம்பளத்தை அதிகரித்து ஆணை பிறப்பித்தால் மட்டும் போதாது. அந்த ஆணைப்படி தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுகிறதா என்பதைக் கண்காணித்து, செயல்படுத்துவதில் டாக்டர் புரட்சித் தலைவி அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இந்தியத் துணைக்கண்டத்திலேயே தொழில் அமைதி மற்றும் தொழிலாளர் நலன் காக்கின்ற சிறந்த அரசாகவும், வழிகாட்டியாகவும் திகழ்கின்ற அரசு, தனிப்பெரும் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அரசு என்பதனைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

இரவு 7-20

சட்டங்களைச் செயல்படுத்துதல்:

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்”

என்ற வள்ளுவன் வாக்குக்கு இலக்கணமாகத் திகழும் எங்கள் இதயதெய்வம்

ஆட்சியில், சட்ட மீறல்களுக்குக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் நலச் சட்டத்தில் சொல்லப்பட்ட சலுகைகள் கிடைக்கவேண்டும் என்பதில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு உறுதியாக இருக்கிறது. 1993 ஆம் ஆண்டில் தொழிலாளர் நலச்சட்டங்களை மீறியதற்காக 52,525 வழக்குகள் வேலை அளிப்பவர்கள் மீது போடப்பட்டுள்ளன. இவற்றில் 49,466 வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. வேலையளிப்பவர்களிடம் இருந்து ரூ. 35,57,135 அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது என்பதையும் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நுகர்வோர் நலன்:

நல்லாட்சி நடைபெறும் நாட்டில், மக்கள் நல்லதை எளிதில் செய்யமுடியும் என்ற கோட்பாட்டின் இலக்கணமாக ஒப்பற்ற தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு இந்த நிலையை ஏற்படுத்த பாடுபட்டு வருகிறது. இதயமற்றவர்கள், குறைத்து அளக்கிறார்கள், குறைவாக எடைபோட்டு விற்கிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது பொதுமக்கள்.

தவறு செய்யும் வியாபாரிகளிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் டாக்டர் புரட்சித் தலைவி அரசு மிகத் தீவிரமாக இருக்கிறது. 1993 ஆம் ஆண்டு எடை அளவுச் சட்டம் மற்றும் பொட்டலம் இட்ட பொருள்கள் விதிகளின்கீழ், 557 வழக்குகளில் நீதிமன்றம் தண்டனை அளித்துள்ளது. ரூ. 1,05,570 அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது. வர்த்தகர்கள் தங்களது குற்றத்தை ஒத்துக்கொண்டு, இணக்கக் கட்டணம் செலுத்தியுள்ளனர். அத்தகைய வழக்குகள் 36,786. அவர்கள் செலுத்திய இணக்கக் கட்டணம் ரூ. 51,37,925 ஆகும். எனவே, நுகர்வோர் நலனில் அக்கறை காட்டுகின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க அரசு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசாகும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தனிக் கட்டடம்:

ராஜபாளையத்தில் 1993 ஆம் ஆண்டில் தொழிலாளர் நல மையத்திற்காக வாரியம் தனியாக ஒரு கட்டடம் கட்டியுள்ளது. அதற்கான செலவு ரூ. 6,54,500 ஆகும். அது 16-8-1993 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குற்றாலத்தில் திரு. வி. க. ஓய்வு இல்லத்தில் படுக்கைகள் போதாது என்று கூடுதலாக ஒரு கட்டடம் கட்டப்பட்டது. அதற்கான செலவு ரூபாய் 8 லட்சத்து 20 ஆயிரம். அது, 18-8-1993 அன்று திறந்து வைக்கப்பட்டது. தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்தோடு சென்று குற்றாலத்தில் தங்குவதற்கு வாய்ப்பாக இந்தக் கூடுதல் இடவசதி செய்யப்பட்டதும், இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில்தான் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிவாரண நிதியிலிருந்து உதவி:

முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி; நல்ல மழையில் நனையும் மயிலுக்கு போர்வை தந்தான் பேகன்; எல்லையில்லா கொடையுள்ளம் கொண்ட எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, கருணை மனம் கொண்டு செய்த தூய பணிகள் பல. மூடிக்கிடந்த 12 ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு 1993 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் நிவாரண நிதியிலிருந்து உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயன்பெற்ற தொழிலாளர்கள் 8,113 பேர். இவ்வாறு கொடுக்கப்பட்ட தொகை ரூ. 32,65,200 என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுப்புது தொழிலாளர் மையங்கள்:

20-6-1990 அன்று நடந்த தொழிலாளர் நல வாரியக் கூட்டத்தில், தி.மு.க. ஆட்சியில், தாம்பரம், கிண்டி, பல்லடம், உடுமலைப்பேட்டை, காஞ்சிபுரம், மணலாரி ஆகிய 6 இடங்களில் செயல்பட்டு வந்த தொழிலாளர் நல மையங்களை மூடிவிடுவது என்றும் அவற்றை வேறு மாவட்டங்களுக்கு மாற்றிவிடலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடும் பொன் மனம் கொண்ட எங்கள் இதயதெய்வம், தொட்டதெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) துலங்கும் தூய தலைவி, எங்கள் புரட்சித் தலைவி பொறுப்பேற்றபின், அதில் எந்த மையத்தையும் மூடாமல் பாதுகாத்தது மட்டுமல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) போரூர், துலுக்கப்பட்டி, நாசரத், தூத்துக்குடி, கமுதக்குடி, மணலி, பள்ளிப்பாளையம், பழநிச் செட்டிப்பட்டி, புதுக்கோட்டை, வடலூர் ஆகிய 10 இடங்களில் புதிதாக தொழிலாளர் நல மையங்களை துவக்கி செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்றையதினம் 72 தொழிலாளர் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதையும் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 7-25

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை:

இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் தொழிற்சாலைகள் சட்டம், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதியப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, 1992-ன் இறுதியில் 19 ஆயிரத்து 52 ஆக இருந்தது. தற்போது 1993-ல் 1,537 தொழிற்சாலைகள் புதிதாக பதிவு செய்யப்பட்டு 20 ஆயிரத்து 589 தொழிற்சாலைகளாக உயர்ந்துள்ளன என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

அதேபோல, தொழிற்சாலைகளின் சட்டத்தின் கீழ்வரும், தொழிலாளர்களின் எண்ணிக்கையும் 9 லட்சத்து 28 ஆயிரத்து 883 ஆக இருந்தது. 1993-ல் புதிதாக 44 ஆயிரத்து 92 தொழிலாளர்கள் இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு, தற்போது, 9 லட்சத்து 72 ஆயிரத்து 975 தொழிலாளர்களாக உயர்ந்துள்ளனர்.

தன்னிகரில்லாத் தலைவி, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சி, தொழிலாளர்களின் நலனில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதை இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். இதனைக் கருத்தில்கொண்டு, தொழிற்சாலைகளை ஆய்வு செய்த ஆய்வுகளின் எண்ணிக்கையும் 22 ஆயிரத்து 879-லிருந்து 28 ஆயிரத்து 541 ஆகக் கூடியுள்ளது.

விபத்துக்களைக் குறைத்துள்ள தொழிற்சாலைகளுக்கு மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், முதல் பரிசு மட்டும் கேடயமாக வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் முதல் இரண்டு பரிசுகள் வெள்ளிக் கேடயமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த ஆலோசனை கூறும் தொழிலாளர்களுக்கு 'உழைப்பின் உயர்வு' விருதுகள் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில், இப்பரிசுத் தொகையை கணிசமாக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முதல் பரிசுத் தொகை ரூபாய் 1,000-லிருந்து ரூபாய் 5,000 ஆகவும், இரண்டாம் பரிசு, ரூபாய் 500-லிருந்து ரூ. 3,000 ஆகவும், மூன்றாம் பரிசு ரூபாய் 250-லிருந்து ரூ. 1,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மிக்க மனமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கமனத் தலைவி, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு தொழிலாளர்களையும், நிர்வாகத்தினரையும் உற்சாகப்படுத்தி, அரவணைத்துச் செல்லும் மிகச் சிறந்த அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

20-4-1992 அன்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சட்டப் பேரவையில் தமிழ்நாட்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் ஈடுபடுத்தப்படுவது ஐந்து ஆண்டுகளுக்குள் அறவே நீக்கப்படும் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிந்தனையில் உருவாகிய 15 அம்சத் திட்டத்தில்கூட குழந்தைத் தொழிலாளர் நீக்குதலும் ஒரு இனமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

எனவே, இத்திட்டத்தை அமல்படுத்துவது குறித்து கடந்த 16-2-1994 அன்று காமராசர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் விவாதித்தோம். இக்கூட்டத்தில் தொழிலாளர் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சியாளர், தொழிற்சாலை உரிமையாளர்கள், சங்கப் பிரதிநிதிகள், குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் அரசு சார்பற்ற இயக்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரவு 7-30

பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் ஈடுபடுத்துவது, தீவிர ஆய்வின் காரணமாக வெகுவாக குறைக்கப்பட்டு விட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இக்கூட்டத்தில், நிர்வாகப் பிரதிநிதிகள் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் நான்கு ஆண்டுகளுக்குள் குழந்தைத் தொழிலாளர்களை நிறுத்திவிடுகிறோம் என்று உறுதி அளித்திருக்கிறார்கள்.

1993-94 ஆம் ஆண்டில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் ஈடுபடுத்தியதற்காக தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு நீதிமன்றம் ரூ. 80,000 அபராதம் விதித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 66 தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் ஈடுபடுத்தியதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தமிழகத்தின் காவல் தெய்வம், தொழிலாளர்களின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சட்ட மன்றத்தில்

அறிவித்தவாறு 5 ஆண்டுகளுக்குள், தமிழகத்தில், தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்துவதை அறவே நீக்கும் திட்டத்தினை அமலாக்க இந்த அரசு முழுமூச்சுடன் செயலாற்றும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை:

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைப் பொறுத்தவரை, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பணிகளைப் படிப்படியாக கம்ப்யூட்டர் மயமாக்கி வருகிறோம். மொத்தமுள்ள 34 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இதுவரை 12 வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள் கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் காஞ்சிபுரம் மற்றும் தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பணிகள் ரூ. 10 இலட்சம் (மேசையைத் தட்டும் ஒலி) செலவில் கம்ப்யூட்டர் மய்மாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், ஆதிதிராவிட சகோதரர்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினரான ஆதிதிராவிடர்களுடைய முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆதிதிராவிட மாணவர்கள், இளைஞர்களுக்கு, பல்வேறு அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு சிறந்த முறையில் வெற்றி பெறுவதற்கு வேலை வாய்ப்புத் துறையின் மூலமாக தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலமாக பல்வேறு தேர்வாணையங்கள் நடத்தும் தேர்வுகளில் ஆதிதிராவிட மாணவர்கள் அதிக தேர்ச்சி பெற்றுவருகின்றனர். மனித நேயம் கொண்ட இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை இத்திட்டத்தின்கீழ் 21,855 ஆதிதிராவிட மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, ஆதிதிரர்விட மாணவர்களுக்கு, தொழிற் கல்விக்கான நுழைவுத் தேர்வுகளுக்கும், தனிப்பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு மட்டும் இத் திட்டத்தினால் சுமார் 1000 ஆதிதிராவிட மாணவர்கள் பயனடைந்து உள்ளனர் என்பதையும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

படித்த இளைஞர்கள் சுயவேலை வாய்ப்புத் தொழில்களில் ஈடுபட்டு, தங்கள் திறமையின் அடிப்படையில் அதிக வருவாய் பெறுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு, வேலை வாய்ப்புத் துறை மூலம் சிறப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டு, இந்தத் திட்டத்தின் கீழ், சுமார் 1000 படித்த இளைஞர்களுக்கு ரூ.2.32 கோடி ரூபாய் வங்கி மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பயிற்சிப் பிரிவு:

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில், தர்மபுரியில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் ரூ. 44 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மற்றொரு பின்தங்கிய பகுதியான இராமநாதபுரத்தில் நடப்பு நிதியாண்டில், சுமார் 45 இலட்சம் ரூபாய் செலவில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட, நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் கொடுத்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காது கேளாதவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்க ஒரு புதிய தனியார் தொழிற் பயிற்சி நிலையம் தொடங்குவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு அனுமதி அளித்துள்ளது.

கண்கள் இரண்டில் ஒன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை அகற்றிடும் காணீர்

என்று போர் முரசு கொட்டிய பாரதியின் கனவினை நனவாக்கிடும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் பெண்களின் வேலை வாய்ப்பினைப் பெருக்க, உலக வங்கியின் உதவியுடன் புதிதாக மகளிர் மட்டும் பயிலக் கூடிய 4 தொழிற் பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

காவிரி போல், கங்கை போல், அள்ளி வழங்கும் தாயுள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பெண்களுக்கான வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கத்துடன் பெண்களுக்கான 'ஏற்றுமதி ஆடை தயாரித்தல்' பற்றிய குறுகிய காலப் பயிற்சி, சென்னையிலும்,

'திரை அச்சிடல்' பயிற்சி ஈரோட்டிலும் இந்த ஆண்டு முதல் தொடங்கிட அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 7-35

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்:

அயல்நாடுகளில் வேலை வாய்ப்பினைத் தேடும் ஏழை எளிய மக்கள், சில மோசடி நிறுவனங்களால் ஏமாற்றப்படுவதைத் தடுத்து அவர்களுக்கு உதவி செய்வதற்காக, 1978 ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால், ஏற்படுத்தப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம், இதுவரை 4 ஆயிரத்து 406 நபர்கள் பயன் அடைந்துள்ளனர். 1990-91 ஆம் ஆண்டு வரை நஷ்டத்தில் இயங்கி வந்த இந்த நிறுவனம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் லாபத்தில் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 5.44 லட்சம் லாபம் ஈட்டி உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவியினுடைய புதிய திட்டங்களை அறிவிக்கிறேன். ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா. இன்று ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன் என்று கூறியுள்ள நமது இதய தெய்வம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு, கீழ்க்கண்ட நலத் திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது என்பதைப் பெருமையுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெ. மாளிகை :

புதிய தமிழகத்தின் வளர்ச்சிக்கு அடிக்கல் நாட்டியவர் இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். ரூ.60 லட்சம் செலவில் கோவையில் எழுப்பப்பட்டு தற்போது முடிக்கப்பட்டுள்ள தொழிலாளர் நலத்துறை அலுவலகத்திற்கு 'டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெ. மாளிகை' என்னும் திருப்பெயர் சூட்டப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், கட்டடத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிக் கேட்டார்கள். அவர்களுக்காக கடந்த ஆண்டு 30.4.1993 அன்று, இதே அவையில் மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர்

புரட்சித் தலைவி அவர்கள் வருகின்ற ஆண்டில் கட்டடத் தொழிலாளர்களுக்கு வாரியம் அமைக்கப்படும் என்றும் கட்டடத் தொழிலாளர்களுக்கு திட்டம் கொண்டுவரப்படும் என்றும் சொன்னார்கள். மே தினப் பரிசாக இன்றையதினம் கட்டடத் தொழிலாளர்களுக்கு நலத் திட்டம்.—எல்லோருக்கும் கட்டடம் கட்டித் தருபவர்கள் கட்டடத் தொழிலாளர்கள். அவர்களுடைய வாழ்க்கைக் கட்டடம் சிறப்பாக அமைய வேண்டுமென்பதில், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தனியாத விருப்பம். அந்த விருப்பத்தின்படி, அரசு கட்டடத் தொழிலாளர்களுக்கு நலத் திட்டம் வகுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், குழந்தை பராமரிப்பு இல்லம், பெண்களுக்கு மகப்பேறுகால சலுகை, விபத்துக் காப்பீட்டுத் திட்டம், வைப்பு நிதித்திட்டம், ஓய்வூதியத் திட்டம் ஆகியவை அடங்கும். முதற்கட்டமாக சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் செயல்படுத்தப்படும். 1982 ஆம் ஆண்டு உடல் உழைப்பு தொழிலாளர் (பணி முறைப்படுத்துதல் மற்றும் வேலை நிபந்தனைகள்) சட்டத்தின்கீழ் விரைவில் வாரியம் அமைக்கப்பட்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலே காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலத்தில்கூட இல்லை. மேற்கு வங்கத்திலேகூட இல்லை. குறிப்பாகச் சொல்லப் போனால், தமிழகத்தில் மட்டும்தான் கட்டடத் தொழிலாளர்களுக்கு என தனி வாரியம் அமைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சுகாதார வசதித் திட்டம் :

வீட்டு நலத்தில்தான் நாட்டு நலம் அடங்கி இருக்கின்றது. உழைக்கும் வர்க்கம் உடல் வலிமையோடு உள்ள நாட்டில் பொருளாதாரம் வலிவோடு இருக்கும். இந்தத் தத்துவத்தை உணர்ந்து செயல் வடிவத்தில் அதை மொழி பெயர்த்து வருபவர், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அமைப்பு ரீதி இல்லாத தொழிலாளர்களான சலவைத் தொழிலாளி, காலணி தைப்பவர், மண்பாண்டத் தொழிலாளி, சவரத்தொழிலாளி போன்றவர்களுக்கும் சுகாதார வசதிகள் தரப்பட வேண்டுமென்பது டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் விருப்பம். எனவே, இவர்களுக்கான சுகாதாரத் திட்டத்தைத் தீட்டி, தற்போது மாவட்ட மற்றும் வட்ட அளவில் உள்ள மருத்துவமனைகளில், இவர்கள் சிகிச்சை பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

இத்தகைய தொழிலாளர்கள் பெருவாரியாக இருக்கும் பகுதிகளில் கள ஆய்வு நடத்தி, இவர்களுக்கு ஏற்படும் சுகாதாரக் கேடுகளைக் கண்டறிந்து அதற்கேற்ற முறையில் சுகாதாரத் திட்டம் வகுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோவி. எஸ். மோகனன், நீங்கள் 3 பேர்களும் 3 இடத்திலேயிருந்து வந்து, ஒரே இடத்திலே ஒன்று சேர்ந்திருக்கிறீர்கள். அதனால், அந்த இடத்திலே அமைதிச் சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதற்கு எப்போதும் தேவை விழிப்புணர்ச்சி. நுகர்வோர் மத்தியில் அத்தகைய விழிப்புணர்ச்சி சிறப்பாக விளங்குகிறபோதுதான் மக்களின் நல்வாழ்வு உறுதிப்படும். எனவே, மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, தமிழகத்தின் உரிமை காப்பதில் எப்போதும் விழிப்போடு செயல்படும் தங்கத் தலைவி, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நுகர்வோர் நலனை முன்னிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றார்கள். அந்த அடிப்படையில், மாவட்ட அளவில் கருத்தரங்கு, கண்காட்சி ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்து, எடை அளவுகளில் ஏற்படும் குறைபாடு, அவற்றைச் சரியாகக் கண்டுபிடிக்கும் முறை, ஈட்டப்படு கிடைக்கக்கூடிய நிவாரணம் ஆகியவற்றை எடுத்துக்கூறி மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இரவு 7-40

தொழிலாளர்களுக்கு நல வசதி :

உழைப்போர் மனமகிழ்ச்சியோடு ஓய்வுப் பொழுதைக் கழிக்கும்போதுதான், தொடர்ந்து தங்களது பணியைச் சிறப்புற, செம்மையாக நடத்துகின்ற ஆற்றலைப் பெறுகிறார்கள். அவர்களுடைய மனவளமும், அறிவு வளமும் பெருகுவதற்கு கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் தேவை.

ஆசிய விளையாட்டு அரங்குகளின் அரசி என்று அழைக்கப்படுகின்ற சென்னையில் அமைக்கப்பட்டுள்ள நேரு விளையாட்டு அரங்கத்தை உலகம் வியக்க அமைத்துத் தந்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய

அரசு, தொழிலாளர்களுடைய கலாச்சார பொழுதுபோக்கு வசதிகளிலும் பெரும் கவனம் செலுத்துகிறது. சிப்காட் காம்ப்ளக்ஸ் தொழிற்பேட்டை போன்ற இடங்களில், பொழுதுபோக்கு, விளையாட்டு, யோகா பயிற்சி, நூலகப் படிப்பு ஆகிய வசதிகளைத் தொழிலாளர்களுக்கு உருவாக்கித் தர தொழிலாளர் மையங்கள் அமைக்கப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தபால் மூலம் தொழிலாளர் கல்வி :

அறியாமை இருள் நீங்க, அறிவொளி இயக்கம் தந்த அறிவார்ந்த முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில், பொதுக் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படுவதைப் போலவே, தொழிலாளர் கல்விக்கும் சிறப்புரிமை அளிக்கப்படுகிறது. தொழிலாளர் நிர்வாகம் என்னும் பட்டப் படிப்பிற்கு மேல்நிலை பட்டயப் படிப்பை இந்த ஆண்டு (1994) முதல் தபால் மூலம் படிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம், விரும்பியவர்கள் வீடு தேடி கல்வி செல்லும்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தொழிலாளர் கல்வி நிலையம் மூலம் அஞ்சல் வழிக் கல்வி நடத்துவது, ஒவ்வொரு துறையிலும் புதுமைகள் புரிந்துவரும், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில்தான் என்பதை எடுத்துரைப்பதில் இணையில்லா மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கிராமப்புறப் பள்ளிகளை தத்து எடுத்துக் கொள்ளுதல் :

கிராமங்களை தத்து எடுத்துக்கொள்வதைப் போலவே, கிராமப்புறப் பள்ளிகளை தத்து எடுத்துக்கொள்ளும் தனிப்பெறும் திட்டம் ஒன்றையும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அரசு செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

வேலைவாய்ப்பிற்கான போட்டித் தேர்வுகள் மற்றும் உயர்தொழில் கல்விக்கான நுழைவுத் தேர்வுகள் போன்றவற்றில் கிராமப்புற மாணவர்கள் சிறந்து விளங்க பயிற்சி அளிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ், கிராமப்புற மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கவும், பயிற்சி அளிக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமப்புற பள்ளியினை, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் தத்து எடுத்துக்கொள்ளும். அப்பள்ளியின் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு தக்க வல்லுநர்களைக் கொண்டு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

1994 ஏப்ரல் 30] [திரு. ஏ. எம். பரமசிவன்]

இந்தத் திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் சுமார் 5000 மாணவர்கள் பயனடைவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திறமைமிக்க தொழிற்பயிற்சி மாணவர்களுக்கு விருது வழங்குதல் :

விருதுகளும், பரிசுகளும், முடங்கிக் கொண்டிருக்கும் திறமையை எழுப்பி, எவரையும் உற்சாகப்படுத்துகின்றவை ஆகும்.

மாநில அளவில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களின் திறனை உற்சாகப்படுத்தி வளர்க்கும் முறையில் ஒன்பது தொழிற் பிரிவுகளில் தொழில் திறன் போட்டி நடத்தப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன. மிகக் குறைவாக உள்ள விருதுத் தொகையை உயர்த்திட வெற்றிச் சரித்திரம் படைத்துவரும், டாக்டர் புரட்சித் தலைவி அரசு திட்டமிட்டுள்ளது.

மாநில அளவில், திறமைமிக்க சிறந்த மாணவராக தேர்வு பெறுபவருக்கு ரூ.10,000 பணமுடிப்பும், சான்றிதழும் வழங்கப்படும். அதேபோல், இரண்டாவதாக தேர்வு பெறுவோருக்கு ரூ.5,000/- பணமுடிப்பும், சான்றிதழும், மூன்றாவதாக தேர்வு பெறுபவருக்கு ரூ.2,500/- பணமுடிப்பும், சான்றிதழும் வழங்கப்படும்.

எழுச்சிமிக்க இளைய தமிழகத்தை உருவாக்கப் பாடுபட்டு வரும், இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரால், "டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா விருது" என்று வழங்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கிராமங்களைத் தத்தெடுத்தல் :

தொழிற்பயிற்சி நிலையங்களில், தொழிற்பயிற்சி பெறுகின்ற மாணவர்களை சமூகத் தொண்டில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன், அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அருகிலுள்ள கிராமங்களைத் தத்தெடுத்து, அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் ஒரு திட்டத்தினை இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அரசு உருவாக்கியுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த சீரிய திட்டத்தின் மூலம் கிராம மக்களுடைய அடிப்படைத் தேவைகளான குடிநீர்க் குழாய் செப்பனிடுதல், மின் இணைப்பு, விவசாயக் கருவிகளில் ஏற்படும் பழுதுகளை சீர்ப்படுத்துதல், சாண எரிவாயு சாதனம் போன்ற கிராமம் முழுமைக்கும்

பயன்படும் கருவிகளை நல்ல முறையில் பராமரிக்கக் கூடிய வகையில் அரசினர் தொழிற்பயிற்சி மாணவர்களும், பயிற்சியாளர்களும் செயல்படுவார்கள். இத்திட்டத்தின் மூலம், இந்த ஆண்டு மட்டும் 100 கிராமங்கள் பயனடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இரவு 7-45

அருமை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீதரன் அவர்களும், செ.கு.தமிழரசன் அவர்களும், பழனிசாமி அவர்களும், கந்தசாமி அவர்களும் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஸ்ரீதரன் அவர்கள் வால்பாறை நகரத்தில் பெண்களுக்கென ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை உருவாக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு உண்டான வழிமுறைப்படி விண்ணப்ப பாரங்களை பெற்றுக் கொண்டு பூர்த்தி செய்து அனுப்பி வைத்தால் அதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல திரு. தமிழரசன் அவர்கள் கோத்தாரி தொழில் நிறுவனத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். கோத்தாரி நிறுவனத்தில் அங்கிருக்கின்ற தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எந்த அளவுக்கு முன்னுரிமை கொடுத்து இந்த அரசு செயல்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திரு. கந்தசாமி அவர்கள் சொல்லும்போது கூட்டுறவுத் துறையிலே எப்படி ஆட்களை எடுத்தார்கள் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். அந்தக் கூட்டுறவுத் துறையிலே அங்கேயிருக்கிற மாவட்ட வேலை வாய்ப்புத் துறையின் மூலம் எடுக்கப்பட்ட வேலை ஆட்கள்தான் அங்கே பணி புரிந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அருமைச் சகோதரர் சட்டமன்ற உறுப்பினர் சிங்கை கோவிந்தராசு அவர்கள் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்த கருத்துக்கு ஒப்ப தொழிலாளர் மையங்களில் குறிப்பாகச் சொன்னால் குழந்தைகள் காப்பகத்தை பல்வேறு நல மையங்களிலும் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. நிதிநிலைமைக்கு ஏற்றவாறு அவை செயல்படுத்தப்படும். தொழிலாளர் நலத்துறை மூலம் தொழிற்சாலைகளுக்கும், மற்ற வெளிநாடுகளுக்கும் வேலைக்கு அனுப்புகிற பல்வேறு தொழில் நிறுவனங்கள் செம்மையாகச் செயல்படுகின்றன. கடைசியாக புரட்சித் தலைவியினுடைய ஆட்சி தமிழகத்தில் மேதின பரிசாக இங்கே கட்டடத் தொழிலாளர்களுக்கென ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அருமைச் சகோதரர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் பல்வேறு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கொண்டுவந்த நேரத்தில் சீக்கிரம் அந்தத் திட்டத்தை அறிவிக்க இருக்கிறேன்

என்று சொன்னேன். புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த பல்வேறு வெட்டுத் தீர்மானங்களுக்கான பதிலும் என்னுடைய உரையில் இருக்கிறதென நினைக்கிறேன். அப்படி இல்லையென்றாலும் இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசிய கருத்துகளும் பிரச்சினைகளும் அவைக் குறிப்பிலே பதிவாகியிருக்கும். அப்படிப் பதிவான மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் ஆகியவற்றிற்கான மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர் நலன் காத்திடும் புரட்சித் தலைவியே, மகத்தில் பிறந்த மலர் முகத்தாயே, எங்கள் வாழ்வின் ஒளியே, எங்கள் தலைவியே உங்கள் பாதம் சரணம் என்று கூறிக் கொண்டு, கடைசியாக இங்கே இருக்கிற தொழிலாளர்களுடைய உரிமைகளை, உணர்வுகளை மேலும் மேலும் மதிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய தலைமையிலே அமைந்துள்ள இந்த அரசு பாடுபடும் என்பதை உழைக்கும் வர்க்கத்திற்கு மே தின வாழ்த்துக்களாகத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பெரியசாமி, நேற்றுகூட உங்களுடைய டெஸ்க் ரிப்பேர் செய்யப்பட்டிருக்கிறது. (சிரிப்பு) இன்றைக்கும் ரிப்பேர் செய்கிற நிலைமையில் வைக்காதீர்கள். திரு. செல்லக்குமார்.

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய பதிலுரையைக் கேட்டேன். தொழிலாளர்களுக்கு அவர்களுடைய தொழிலில் உத்தரவாதம் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஸ்மால்ஸ்கேல் என்ஜினியரிங் இன்ஸ்டிடியூட் ஊதிய போர்டினுடைய சிபாரிசின் பேரில், முட்டுக்காட்டில் உள்ள உடல் ஊனம் உற்றோர் தொழில் மற்றும் பயிற்சிக் கூடத்தில், அந்த ஊதியக் குழுவினுடைய சிபாரிசை அமல்படுத்தாமல், இன்றைக்கு அங்கே பத்து ரூபாய்க்கும் 12 ரூபாய்க்கும் பிரதிதின சம்பளமாக வழங்கப்படுகிறது. ஏறத்தாழ 100-க்கும் மேற்பட்ட ஊனமுற்ற தொழிலாளர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு, சமூக நல வாரியத்தின் மூலமாக,

ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு சிறப்புச் சலுகைகளோடு அங்கே ஸ்டூல் போன்ற பொருள்களைக் கொடுத்து வருகிறது. அங்கே தயாரிக்கப்படுவதுதான் மருத்துவமனைகளில் பயன்படுத்துகின்ற ஸ்ட்ரெச்சர் போன்றவைகள், நாற்காலிகள் போன்றவைகள் எல்லாம் அங்கே பயன்படுத்தப்பட்டு வந்தவை. கடந்த பல ஆண்டுகளாக அவர்கள் அங்கே பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அங்கே ஏறத்தாழ 100 பேர் இருந்த இடத்திலிருந்து 30 பேராகக் குறைக்கப்பட்டது மட்டும் அல்ல, இன்றைக்கும் அவர்கள் 10 ரூபாய், 12 ரூபாய்தான் பிரதி தின சம்பளம் வாங்குகிறார்கள். அதுமட்டுமல்ல; அவர்கள் அத்தனை பேரும் நிரந்தரம் செய்யப்படவில்லை. இதற்குக் காரணம் என்னவென்று பார்க்கின்றபோது...(குறுக்கீடுகள்) தலைவர் அவர்களே, நான் கேள்வியாகத்தான் கேட்கிறேன். கேள்வி வந்துகொண்டிருக்கிறது. நான் சொல்லித்தான் அனுமதி கேட்டேன்.

இரவு 7-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். அவர் பேசுவதற்கு வாய்ப்பு கேட்டார். கடைசியில் கேள்வி கேளுங்கள் என்று அனுமதித்தேன். ஆகவே சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார்: தலைவர் அவர்களே, அங்கு செய்து கொண்டிருந்த தொழில்கள் சப் கான்ட்ராக்ட் என்ற முறையிலே கொடுக்கப்பட்டதினுடைய பிரதிபலன் ஊனமுற்றவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகின்ற நிலைமையாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? வெள்ளையர் காலத்திலிருந்து பி.டபிள்யூ.டி வொர்க்ஷாப், மின்ட்டிலே பணியாற்றிக்கொண்டிருந்தது. ஏறத்தாழ 2000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கே பணியாற்றி வந்தார்கள். இன்றைக்கு 400 தொழிலாளர்கள்தான் அங்கே பணியாற்றுகின்றார்கள். ஓய்வு பெற்றதற்குப் பிறகு, புதிதாக அங்கே பணி நியமனம் செய்யப்படவில்லை. புதிய தொழிலாளர்கள் அங்கே நியமிக்கப்படவில்லை. இன்றைக்கு பெரிய பெரிய அணைகளுடைய மதகுகள் போன்றவைகளை எல்லாம் அவர்கள்தான் செய்து வந்தார்கள். ஏறத்தாழ தொழிலாளர்கள் 1600 பேர்களுக்கு அங்கே இடம் காலியாக இருக்கிறது என்பதோடு முக்கியமான.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேட்டீர்கள் என்றால் சரி. ரொம்ப விரிவாகப் போகக்கூடாது.

டாக்டர் அ. செல்லக்குமார் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடமிருந்து சில பதில்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்

என்பதற்காகத்தான் கேட்கிறேன். ஓசூரிலே தங்கத்தாலே செய்யப்பட்ட 50 படுக்கைகள் கொண்ட ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை 1732 கோடி ரூபாய் செலவிலே பணி நடந்துக் கொண்டிருப்பதாக இங்கே கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. பக்கம் 35. ஓசூரிலே ரூ. 1732 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட ஈட்டுறுதி தொழிலாளர்களுடைய மருத்துவமனைக் கட்டடம் முடியும் தருவாயில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1732 கோடி ரூபாயில் 50 படுக்கைகள் என்று சொல்லப்படுகின்றபோது தங்கத்தாலே மட்டும்தான் செய்ய முடியும். எனவே அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் தர வேண்டும். ஏன் என்று சொன்னால் பிழைகள் இருக்கலாம்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பேசுகின்றபோது ஸ்ரீதரன் அவர்களும், மனோகரன் அவர்களும் ஓசூரில் என்றைக்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை திறக்கப்படும் என்று கேட்டார்கள். சீக்கிரத்தில் திறக்கப்படும், ஏறத்தாழ உபகரணங்கள் வாங்குவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அருமைச் சகோதரர் செல்லக்குமார் அவர்கள் அங்கே இருக்கின்ற புள்ளியை மறந்துவிட்டு முழுவதுமாக படித்துவிட்டார்கள். இருந்தாலும் உங்களுடைய கேள்வியை மதித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. செல்லக்குமார் : தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிஷம், நகைச்சுவைக்காக கூட பேசக்கூடாதா? அங்கே 'கமா' போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது அது புள்ளி. புள்ளி வைப்பதற்குப் பதிலாக 'கமா' போட்டிருக்கிறது. அதை நீங்கள் முழுவதுமாக படித்திருக்கிறீர்கள். 1732 கோடிக்கு இந்தத் துறைக்கு எங்கே போவது? புள்ளி வைப்பதற்குப் பதிலாக 'கமா' வைத்து விட்டார்கள். அதெல்லாம் அச்சுப் பிழையிலே திருத்துவார்கள். பேசி முடித்துவிடுங்கள்.

டாக்டர் அ. செல்லக்குமார்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக, விஞ்ஞான ரீதியாக முன்னேறுவதற்கும் சரி, மேலும் இந்த நாடு இன்றைக்கு எழில்மிகு நகரமாக இருக்கின்றது என்று சொன்னால் அதற்குக் காரணமாக இருக்கின்ற கட்டடத் தொழிலாளர்களுக்கு மே தின பரிசாக இந்த அரசு அறிவித்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார் அமைச்சர் அவர்கள். ஏற்கனவே 29-4-94-ல் இதே மாமன்றத்தில் அன்றைக்கு மே தினப் பரிசாக இந்த அரசு

மேற்குறிப்பிட்ட அந்தக் கட்டடத் தொழிலாளர்களுக்கு முத்தரப்பு நிறுவனம் ஈ.எஸ்.ஐ., பி.எஃப், பென்ஷன்கள் போன்ற திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறது. ஏற்கனவே ஒரு மே தினப் பரிசு கொடுத்திருக்கிறது. ஆனால் இதுவரைக்கும் அது அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இன்றைக்கு நீங்கள் மே தினப் பரிசு அறிவித்திருக்கிறீர்கள். இந்த முறையாவது அது அமல்படுத்தப்படுமா என அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

இரவு *7-55*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தமிழில் இருப்பதை மட்டும் படித்தீர்கள்; வழக்கமாக எப்போதும் ஆங்கிலத்தில் இருப்பதைத்தான் படித்து அவையில் விளக்கம் கேட்பீர்கள்; ஆங்கிலத்தில் கரெக்டாக இருக்கிறது. *1732* குரோர்ஸ்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய உணர்வை மதித்து செய்ய வேண்டிய நேரத்தில் செய்யவேண்டிய காரியங்கள் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தாரி நிறுவனத்தினர் தொழிற்சங்கத்தோடு பேச்சு நடத்த மாட்டோம் என்று அந்த நிறுவனம் தொடர்ந்து ஆணவப் போக்கைப் பின்பற்றுவதால் அரசே தலையிட்டு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய உணர்வை மதித்து அதற்கு வேண்டிய அளவில் நிர்வாகத்தை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி செ. சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மேட்டூர் டெக்ஸ்டைல் என்ற ஆலை கடந்த *10* ஆண்டு காலமாக மூடியிருக்கிறது. தி மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி என்ற ஆலை கடந்த *2* ஆண்டு காலமாக மூடியிருக்கிறது. இந்த *2* கம்பெனிகளிலும் வேலை செய்து வந்த *4*

ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய வயது வந்த பெண்களைத் திருமணம் செய்து வைக்க முடியாமல் தங்களுடைய குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் மூடிய ஆலைகளைத் திறந்து, தொழில் புரட்சி செய்து வரும் நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தன்னுடைய கடைக் கண் பார்வையை என்னுடைய தொகுதியில் செலுத்தி, இந்த 2 ஆலைகளையும் திறக்க ஆவன செய்யவேண்டும் என்றும் அவருடைய பொற் பாதங்களில் வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த 2 ஆலைகளையும் திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன். இன்னும் ஒன்று, தி மேட்டூர் டெக்ஸ்டைல் என்ற ஆலையை கூட்டுறவு முறையில் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட், மேட்டூர் என்ற அந்த ஆலையும், மற்றும் அங்கே இருக்கின்ற டெக்ஸ்டைல்ஸ் என்ற ஆலையும் எந்த நிலைமையில் மோசமாக இருக்கிறது என்பது சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து ஆண்டுக்கு ஒரு நபருக்கு 400 ரூபாய் வீதம் அளிக்கப்பட்டு வருகிறது. அந்த 2 மில்களும் பி.ஐ.எப்.ஆர்.லே இருக்கின்ற காரணத்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை—அது நலிவு அடைந்த ஆலையாக இருப்பதால் வேண்டிய நடவடிக்கைகளை—மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி டி. சக்குபாய் தேவராஜ்.

திருமதி டி. சக்குபாய் தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட உள்ளது. எனது தொகுதியில் என்னை வாழ வைக்கும் தர்மத் தாய் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரைச் சூட்டவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியில் எம்ப்ளாய்மெண்டு ஆபிஸ் இருக்கிறது. அது மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாற்றுகின்ற திட்டம் எதுவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் கல் குவாரியில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு என்று ஒரு நிலையான இடம் சட்டத்தில் இல்லை. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் மத்திய அரசுக்கு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து ஆபத்தான தொழிலைச் செய்கின்ற லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். ஏன் என்றால் பல்வேறு குவாரிகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு ஏதேனும் ஆபத்து—கை, கால் போனாலோ, உயிர் போனாலோ அவர்களுக்கு எந்த விதமான பணிப் பாதுகாப்பும் இல்லாத ஒரு சூழ்நிலையில் அன்னியச் செலாவணி ஈட்டிக் கொடுக்கக்கூடிய அந்த கறுப்புக் கல் அல்லது மற்ற..... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : தொழிற்சாலைகளில் அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள அந்த தொழிலாளர்களுக்கு பணி பாதுகாப்பு என்ன இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்களுக்கு தர்மபுரி மாவட்டத்தில் கல் குவாரிகளில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களைப் பற்றி நன்கு தெரியும். அவர்களை ஒரு யூனியன் அமைத்து அதற்கு அவர் தலைவராக வந்து என்னிடத்தில் முறையிட்டால் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. கந்தசாமி.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் மால்கோ தொழிற்சாலையைத் திறக்கும் நோக்கத்துடன் இரண்டு நாட்களுக்கு முன்பு புது டெல்லியில் பி.ஐ.எஃப்.ஆர். கூட்டம் நடந்துள்ளது. அக்கூட்டத்தில் தமிழக அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு) அதாவது, போர்டு மீட்டிங்.

1994 ஏப்ரல் 30]

இரவு 8-00

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் ஆர்டரா? இதிலே என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர். (குறுக்கீடு) திருமதி செ. சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மெட்ராஸ் அலுமினியம் கம்பெனியைத் திறப்பதற்கு வேண்டிய சலுகைகள் அனைத்தையும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அளித்துள்ளார்கள். அந்தக் கம்பெனி நமது தமிழக அரசுக்கு 28 கோடி ரூபாய் மின் கட்டணம் கட்ட வேண்டும். ஒரு யூனிட் மின்சாரம் தயாரிப்பதற்கு ஒரு ரூபாய் 92 காசு செலவாகிறது. ஆனால் கருணை உள்ளம் கொண்ட நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அந்தக் கம்பெனிக்கு ஒரு ரூபாய்க்குக் கொடுத்துள்ளார்கள். இத்தனை சலுகை அளித்தும் அந்தக் கம்பெனி நிர்வாகம் கம்பெனியைத் திறக்காமல் மெத்தனமாக உள்ளது. ** (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** பற்றியெல்லாம், பர்சனலாக வேண்டாம். நிர்வாகம் மெத்தனமாக இருக்கிறது என்பது மட்டும் போதும், மற்றது வேண்டாம்.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் ** அந்த ஆலையைத் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். டாக்டர் ராதாகிருஷ்ணன், கக்கன், காமராஜர் போன்ற பெருந்தலைவர்கள் அங்கே வந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவர்களை அணுகி, இந்தக் கம்பெனியைத் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றொன்று, பி.ஐ.எஃப்.ஆர். மீட்டிங்கை அந்தக் கம்பெனியினுடைய முதலாளி அட்டென்ட் பண்ணுவதே இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள், நம்முடைய தமிழகத்தினுடைய தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

டெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று சொன்னார்கள். அந்தக் கூட்டம் நடைபெற்றதா இல்லையா என்பது பற்றி எங்களுக்குத் தகவல் வரவில்லை. ஆனால், மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி அந்த அளவுக்கு மோசமாக இருப்பதற்கான நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே பார்ட்னர்களாக இருக்கிறவர்களிடத்திலே ஒற்றுமை இல்லாத காரணம் ஒன்று. நிதிநிலை மோசமாக இருக்கிறது என்று காரணம் சொல்லிவிட்டு, மில்லை மூடி விடுகின்றார்கள். ஆனால், பாதிக்கப்படுகின்றவர்கள் தொழிலாளர்கள். ஆகவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள், அந்த நிர்வாகத்திடம் எடுத்துச் சொல்லி, தொழிலாளர் நண்பர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் அப்போதே எடுத்து விட்டேன். திருமதி சுந்தராம்பாள் அவர்கள் சொல்லும்போதே எடுத்து விட்டேன். தனிப்பட்ட முறையிலே அவர்களுடைய பெயர்களெல்லாம் வேண்டாம்; நிர்வாகம் மெத்தனமாக இருக்கிறது என்பது மட்டும் இருக்கட்டும் என்று சொல்லிவிட்டேன். திருமதி கே.மரியம் உல் ஆசியா.

* திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் கரூரில் 1978-இல் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியின்போது அங்கே துணை வேலைவாய்ப்பு அலுவலகம் துவங்கப்பட்டு செயல்பட்டு வந்து கொண்டிருக்கிறது. படித்த மாணவ மாணவியர் சுமார் 50 ஆயிரம் பேர் அதில் பதிவு செய்திருக்கிறார்கள். அதில் குறிப்பாக 30 ஆயிரம் பேர்கள் பெண்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், தமிழ்நாட்டில் தனி மாவட்டமாகப் பிரிக்கக் கூடிய அளவிற்கு வளர்ந்து வரும் பெரிய நகரங்களில் கரூரும் ஒன்றாகும். இந்தச் சூழ்நிலையில் இந்தத் துணை வேலை வாய்ப்பு அலுவலகத்தை மாற்றி, திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தோடு இணைப்பதற்காக முயற்சிகள் எடுத்து இருப்பதாக அறிகிறேன். ஆகவே, இதுசம்பந்தமாக அரசின் கவனத்திற்கு கவன ஈர்ப்புத் தீர்மானமும் ஒன்று கொண்டு வந்திருக்கிறேன். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படி அந்தத் துணை வேலைவாய்ப்பு அலுவலகத்தை திருச்சியில் இணைக்காமல்.....(மணியடிக்கப்பெற்றது).

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருச்சியோடு இணைக்காமல் இருக்க வேண்டும். அதுதான் கேள்வி. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் இருக்கின்ற துணை வேலைவாய்ப்பு அலுவலகம், அதே இடத்தில் இயங்கிக்கொண்டு இருக்கும். மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பிறகு அதுபற்றி யோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் நலத் துறை மானியத்தில் நான் பேசுவதற்கு எடுத்துக் கொண்ட காரணமே, தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்துத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய ஒட்டுமொத்த பிரதிபலிப்பாக, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வைத்து இருந்தேன். இது மத்திய அரசு சம்பந்தப்பட்ட விஷயமாக இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சென்று ஒரு தீர்மானத்தையாவது இயற்றி, மத்திய அரசுக்கு சமர்ப்பிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஆராயப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்குவாரியில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஜனதா பாலிசி எல்லா இடங்களிலும் செயல்படுத்தப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதை நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொழிலாளர் நலத் துறையினுடைய அதிகாரிகள் கல்குவாரிகளுக்குச் சென்று, செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். தொழிலாளர்

நண்பர்களுக்கு நல்ல காரியத்தைச் செய்வதற்காக அங்கே மேலூராக இருந்தாலும், தர்மபுரியாக இருந்தாலும் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களில் வேலை பார்க்கின்ற தொழிலாளர் நண்பர்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறோம்.

இரவு *8-05*

(ஆ) கோரிக்கை எண் 28–தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி. உறுப்பினர் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

"தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.68,71,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்,"

என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

1994 ஏப்ரல் 30] [பேரவைத் தலைவர்]

தொழிலாளர் நாளான மே நாள், நாளை பிறப்பதையொட்டி தொழிலாளர் நலனுக்காக 68,71,49,000-க்கு உரிய தொகையை இந்தப் பேரவையின் மூலம் பெற்றுக் கொடுத்த திருப்தியோடு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய இதய பூர்வமான மே நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 2-5-94 திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 8-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

-ஏதுமில்லை-

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

157. மானியக் கோரிக்கை எண் 23 - கூட்டுறவுத்துறை குறித்த கொள்கை விளக்கம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

158. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

159. தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் நிர்வாக அறிக்கை, 1989-90. (தமிழ்)

160. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்தெட்டாவது அறிக்கை, 1993-94.

161. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்தொன்பதாவது அறிக்கை, 1993-94.

162. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபதாவது அறிக்கை, 1993-94.

163. பொது, நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்தொன்றாவது அறிக்கை, 1993-94.

164. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்திரெண்டாவது அறிக்கை, 1993-94.

165. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினான்காவது அறிக்கை, 1993-94.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30] [பேரவைத் தலைவர்]

தொழிலாளர் நாளான மே நாள், நாளை பிறப்பதையொட்டி தொழிலாளர் நலனுக்காக 68,71,49,000-க்கு உரிய தொகையை இந்தப் பேரவையின் மூலம் பெற்றுக் கொடுத்த திருப்தியோடு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய இதய பூர்வமான மே நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 2-5-94 திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை இரவு 8-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

-ஏதுமில்லை-

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

157. மானியக் கோரிக்கை எண் 23 - கூட்டுறவுத்துறை குறித்த கொள்கை விளக்கம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

158. மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர், தொழிற்சாலை மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

159. தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் நிர்வாக அறிக்கை, 1989-90. (தமிழ்)

160. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்தெட்டாவது அறிக்கை, 1993-94.

161. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று அறுபத்தொன்பதாவது அறிக்கை, 1993-94.

162. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபதாவது அறிக்கை, 1993-94.

163. பொது, நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்தொன்றாவது அறிக்கை, 1993-94.

164. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று எழுபத்திரெண்டாவது அறிக்கை, 1993-94.

165. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினான்காவது அறிக்கை, 1993-94.

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—I

[23 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறியைக் காண்க.]

கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கம் 1994-95

அத்தியாயம்: 1

1. முன்னுரை

"ஒருகை தட்டினால் ஓசை எழாது - இரு கைகளும்
இணைந்தால்தான் ஒலி எழும்பும்",

என்று தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் கூட்டுறவுத் தத்துவத்தைப் பற்றி அழகுறக் கூறியுள்ளார்.

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை". இது தொன்றுதொட்டு தமிழகத்தில் வழக்கில் இருக்கிற முதுமொழி. ஒரு மனிதனால் செய்து முடிக்க இயலாத செயல்களை கூட்டுறவு முயற்சியால் செய்து முடிக்க முடியும் என்பது உலகறிந்த உண்மை. ஆக்கப் பணிகள் அருமையாக வெற்றிபெற ஒரு கருவியாக விளங்குவது கூட்டுறவு என பண்டைக்கால தத்துவப் பேரறிஞர்கள் முதல் இன்றைய சீரிய சிந்தனையாளர்கள் வரை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மாபெரும் தத்துவம்.

1844-ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் ராக்டேல் (Rockdale) என்ற ஊரில் 28 கம்பெனி நெசவாளர்கள் சேர்ந்து நுகர்வோர் பண்டக சாலை ஒன்றினை அமைத்ததன் மூலம் கூட்டுறவு இயக்கம் என்ற தத்துவம் உலகிற்கு அறிமுகமானது. இவ்வாறு உருப்பெற்ற கூட்டுறவு இயக்கம் பல்வேறு நாடுகளில் பல்வேறு உருவங்கள் கொண்டு வளர்ந்து வந்துள்ளது.

மேலை நாடுகளில் தொழில் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளின் எதிரொலி இந்திய நாட்டிலும் கேட்கத் தொடங்கியது. அயல் நாடுகளில் இயந்திரங்களின் துணை கொண்டு உருவாக்கப்பட்ட சரக்குகள் இந்தியாவில் மலிவான விலைக்கு விற்கத் தொடங்கப்பட்டன. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், இதன் விளைவாகத்தான் கிராமத் தொழில்கள் நலிந்து வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி, அன்றைய நாட்டின் பொருளாதாரம் சீர்குலைய ஆரம்பமானது. வேளாண் மக்களின் வறுமை,

[1994 ஏப்ரல் 30

அறியாமை, பணம் படைத்தோர் ஆதிக்கம், கடன் சுமை ஆகியவற்றால் சிக்கிச் சீரழிந்து, செய்வதறியாது கிடந்த மக்களைக் காப்பாற்ற காக்கும் கரங்களாக வந்த இயக்கம் தான் கூட்டுறவு இயக்கம் ஆகும்.

1904-ஆம் ஆண்டு கூட்டுறவு நாணயச் சங்கங்கள் சட்டம் இயற்றப்பெற்ற ஆண்டிலிருந்து இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் முதல் கட்டம் ஆரம்பம் எனக் கூறலாம். இந்தியாவில் முதல் கிராமக்கூட்டுறவுக் கடன் சங்கம் 30.8.1904-ல் தமிழகத்தில் உள்ள (அன்றைய செங்கற்பட்டு மாவட்டம் இன்றைய) செங்கல்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் திரூர் என்ற கிராமத்தில் பதிவு செய்யப்பட்டது என்பது நமக்குப் பேருவுவகை அளிக்கக் கூடியதாகும். இந்தியாவில் முதலாவது பண்டகசாலைச் சங்கமாக திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கம், சென்னை நகரில் 1904-ல் அமைக்கப் பெற்றது.

இந்தியாவிலேயே முதல் மத்திய நில அடமான வங்கி சென்னை நகரில்தான் 1929-ல் அமைக்கப்பட்டது என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தியாகும்.

தமிழகத்தில் முதல் நகரக் கூட்டுறவு வங்கி (பெரிய காஞ்சிபுரம் நகரக் கூட்டுறவு வங்கி) 1904-ல் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டது.

இப்படிப் படிப்படியாக உருவெடுத்து தமிழகத்தில் இன்று டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியின்கீழ் 27,341 கூட்டுறவுச் சங்கங்கள் விவசாய வளர்ச்சியிலும், நுகர்வோர் நலன் காத்தலிலும், விற்பனை பெருக்கத்திலும், சிறுதொழில் வளர்ச்சியிலும், பால்வளப் பெருக்கத்திலும், கைத்தறி, கைவினைப் பொருள் உற்பத்தித் தொழிலிலும், ஊரகத் தொழில்களிலும் அரும் பணியாற்றி தனியார் துறை மற்றும் பொதுத் துறைக்கும் இடையில் சமப்படுத்தும் ஒரு பாலமாக பாமர மக்களுக்கும் விவசாயப் பெருமக்களுக்கும் பணியாற்றும் வகையில் கிராமப் பொருளாதாரத்தை சீர்படுத்தி கூட்டுறவு இயக்கம் பீடுநடை போட்டு வருகிறது.

புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாக கிராம விவசாயப் பெருமக்களும் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ள மக்களும் பெரிதும் பாதிக்கப்படும் நிலை வருமென்ற அச்சத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு, கைகொடுத்து உதவும் கருவி கூட்டுறவு இயக்கம் ஒன்றே என்கிற வகையில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணைக்கிணங்க

1994 ஏப்ரல் 30]
தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கத்தை சமுதாய மறுமலர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சிப்பாதையில் திசை திருப்பும் பற்பல திட்டங்களை தமிழக அரசு தீட்டி வருகிறது.

தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் குறிப்பாக கடந்த மூன்றாண்டு காலமாக ஒரு புதிய வேகம் கொண்டும் கிராமப் பகுதிகளின் வளர்ச்சியை முக்கிய நோக்கமாகக் கொண்டும் வளர்ந்துள்ளது. மாநிலப் பொருளாதாரத்தில் பல்வேறு அமைப்புகளான வேளாண்மை உற்பத்தி, பதப்படுத்துதல், பண்ணைகளில் இயந்திரமயமாக்குதல், கைத்தறி, பால் உற்பத்தி, கிராமிய கைவினைப் பொருட்கள், ஊரகத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் பெரிதும் பங்கு கொண்டு மாபெரும் சாதனை படைத்துள்ளது.

1955-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் இருந்தன. 1956-57 ஆம் ஆண்டு முதல் சிலவகையான சங்கங்கள் பிற துறைகள் மற்றும் சட்டப்பூர்வ வாரியங்களின் கட்டுப்பாட்டின் கீழ் அவ்வப்போது மாற்றப்பட்டன.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் இயங்கும் சங்கங்களின் நடவடிக்கைகள், கடன் வழங்குதல், நுகர்பொருள் விற்பனை மற்றும் விளைபொருள் கொள்முதல் மற்றும் இதர நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள சங்கங்களின் மொத்த ஆண்டு வியாபாரத் தொகை ரூ. 6,252 கோடியாகும். பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய எண்ணிக்கை விவரங்களும், அச்சங்கங்களின் ஆண்டு விற்பனையளவு விவரங்களும் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

வரிசை எண்.	சங்கங்களின் வகைகள்	சங்கங்களின் எண்ணிக்கை	ஆண்டு விற்பனையளவு (ரூ. லட்சத்தில்)
(1)	(2)	(3)	(4)
1.	தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள்	6	2,12,839.91
2.	மத்தியக்கூட்டுறவு வங்கிகள்	20	1,71,639.12
3.	கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்	29	57,866.91

[1994 ஏப்ரல் 30

(1)	(2)	(3)	(4)
4.	தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்	1	3,848.52
5.	மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள்	17	85.94
6.	கூட்டுறவு அச்சகங்கள்	18	252.79
7.	கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள்	9	41.05
8.	தொடக்கக் கூட்டுறவு விறபனைச் சங்கங்கள்	111	36,948.00
9.	தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் (விவசாய சேவைச்சங்கங்கள் மற்றும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களையும் சேர்த்து)	4655	38,661.00
10.	தொடக்க நிலவள வங்கிகள்	181	6,421.00
11.	கூட்டுறவு நகர வங்கிகள்	129	38,270.09
12.	பணியாளர்கள் கூட்டுறவு கடன் சங்கங்கள்	1707	37,819.73
13.	தொடக்க மற்றும் மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகள்	3712	17,992.83
14.	நகர்ப்புற கூட்டுறவுச்சங்கங்கள்	49	701.45
15.	கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலைகள்	72	301.10
16.	நிலக்குடியேற்ற கூட்டுறவுச் சங்கங்கள்	46	4.14
17.	குத்தகைதாரர்கள் பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்கள்	25	39.38
18.	நீரேற்றுப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள்	33	46.89
19.	தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்	213	298.83
20.	காய்கறி உற்பத்தியாளர் சங்கங்கள் உள்ளிட்ட தனிவகை வேளாண் விளைபொருள் விற்பனை சங்கங்கள்	192	631.10
21.	பழங்குடியினர் விற்பனைச் சங்கங்கள்/வனத் தொழிலாளர் சங்கங்கள்	6	4.67

1994 ஏப்ரல் 30]

(1)	(2)	(3)	(4)
22.	உப்பு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்	14	105.88
23	ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள்	3	316.68
24.	பழம் பதப்படுத்தும்கூட்டுறவுச் சங்கம்	1	-
25.	இதரபல்வகை கூட்டுறவுச் சங்கங்கள் (சலவைத் தொழிலாளர் மற்றும் முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளிட்டது)	44	21.38
	மொத்தம்	**11293**	**6,25,158.39 (அ) 6252 கோடிகள்**

இலாபம்/நட்டத்தில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை மற்றும்இலாபம் இல்லாமலும்/நட்டம் இல்லாமலும் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

வரிசை எண்.	சங்கங்களின் வகை	மொத்த சங்கங்களின் எண்ணிக்கை	இலாபத்தில் செயல்படும் சங்கங்கள் எண்.	தொகை (ரூ. இலட்சத்தில்)	நட்டத்தில் செயல்படும் சங்கங்கள் எண்.	தொகை (ரூ. இலட்சத்தில்)	இலாபம்/ நட்டமில்லாமல் செயல் படும் சங்கங்களின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	**தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள்**						
அ.	தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி	1	1	1262.94	-	-	-
ஆ.	தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி	1	-	-	1	265.50	-

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
இ.	தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்	1	1	60.84	-	-	-
ஈ.	தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்	1	-	-	1	34.70	-
உ.	தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்	1	-	-	-	-	1
ஊ.	தமிழ்நாடு கூட்டுறவு நகர வங்கிகள் இணையம்	1	-	-	-	-	1
2.	மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள்	20	19	1209.80	1	68.60	-
3.	மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்	29	8	51.23	21	2788.76	-
4.	தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்	1	1	73.94	-	-	-
5.	மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள்	17	-	-	-	-	17
6.	கூட்டுறவு அச்சகங்கள்	18	14	27.16	4	16.66	-
7.	கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள்	9	-	-	-	-	9
8.	வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்	111	68	444.16	43	197.41	-
9.	தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் (உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், புறநகர் கூட்டுறவு வங்கிகள் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளிட்டது)	4655	727	615.96	3773	8221.95	155
10.	தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள்	181	59	357.49	122	1857.02	-

1994 ஏப்ரல் 30]

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
11.	நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள்	129	117	805.03	7	22.85	5
12.	தொழிலாளர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்	1707	1566	2688.86	116	129.15	25
13.	தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் (ஊரக, நகர்ப்புற, புறநகர், தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் மகளிர் கூட்டுறவுப் பண்டக சாலைகளையும் உள்ளிட்டது.)	3712	2256	154.32	1272	111.96	184
14.	இதர நகர்ப்புறக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்	49	30	2074.42	13	49.26	6
15.	கூட்டுறவுச் சிற்றுண்டிச் சாலைகள்	72	25	3.88	9	17.80	38
16.	பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்கள்	46	13	6.44	14	3.29	19
17.	குத்தகைதாரர் கூட்டுறவுச் சங்கங்கள்	25	7	3.60	15	14.33	3
18.	நீரேற்றுப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள்	33	15	10.52	16	15.45	2
19.	தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்கள் (கல் உடைக்கும் கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளிட்டது.)	213	46	9.17	108	70.59	59
20.	வேளாண் விளைபொருள் விற்பனைச் சங்கங்கள் (காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளிட்டது.)	192	7	2.24	89	19.19	96

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
21.	மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வனத் தொழிலாளர்கள் சங்கங்கள்	6	2	0.88	-	-	4
22.	உப்புத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்	14	6	4.46	3	0.77	5
23.	ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள்	3	-	-	3	92.82	-
24.	பழம் பதப்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள்	1	-	-	-	-	1
25.	இதர வகைக் கூட்டுறவுச் சங்கங்கள், (முடிதிருத்துவோர் மற்றும் சலவையாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளிட்டது.	44	3	0.41	7	2.14	34
	மொத்தம்	**11293**	**4991**	**9867.75**	**5638**	**14000.20**	**664**

பலவகைக் கூட்டுறவுச் சங்கங்களில் அரசு முதலீடு செய்துள்ள பங்கு மூலதனத்தின் 31.3.93-ல் நிலுவையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

வரிசை எண்.	நிறுவனங்களின் பெயர்	31.3.93-ல் நிலுவை (ரூபாயில்)
1.	தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவளவங்கி	14,84,11,992
2.	தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி	1,26,00,000
3.	தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்	3,69,83,727
4.	தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்	85,08,284

1994 ஏப்ரல் 30]

5.	தஞ்சாவூர்கூட்டுறவு விற்பனை இணையம், திருவாரூர்	15,29,192
6.	மத்தியக் கூட்டுறவு வங்கிகள்	16,68,26,840
7.	நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்	5,69,05,073
8.	பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்	81,96,857
9.	தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூட்டுறவுப் பண்டகசாலைகள்	3,22,500
10.	பழம் பதப்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள்	3,68,000
11.	ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள்	1,03,00,000
12.	கட்டுமானக் கூட்டுறவுச் சங்கங்கள்	3,80,000
13.	உப்புத் தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்	52,850
14.	உடல் ஊனமுற்றோர் கூட்டுறவுச் சங்கங்கள்	1,40,000
15.	கூட்டுறவு அச்சகங்கள்	79,610
16.	வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும் சேர்த்து	31,83,51,139
17.	தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை-களையும் சேர்த்து	96,46,564
18.	கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்	12,36,66,531
19.	நகரக் கூட்டுறவு வங்கிகள்	21,45,309
20.	தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள்	1,99,15,429
	மொத்தம்	**92,53,30,857**

2. பொது முன்னேற்றம்:

கூட்டுறவுத் துறையின் பெரும் பணிகளான விவசாயக் கடன்களை வழங்குதல், வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்தல், உரங்கள்

[1994 ஏப்ரல் 30

விநியோகித்தல், நுகர்பொருட்கள் விநியோகித்தல் போன்ற இனங்களில் 1993-94 ஆம் ஆண்டில் அடைந்த முன்னேற்றம் மற்றும் 1994-95 ஆம் ஆண்டிற்கான குறியீடு கீழே குறிக்கப்பட்டுள்ளன:-

வரிசை எண்.	விவரம்	அலகு	1993-94 ஆம் ஆண்டுக்கான திட்டம்	ஏப்ரல்'93 முதல் டிசம்பர்'93 வரை அடைந்த முன்னேற்றம்	1994-95 ஆம் ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம்
1..	2.	3.	4.	5.	6.
1.	குறுகிய கால வேளாண்மைக் கடன் வழங்குதல்	(ரூபாய் கோடியில்)	350.00	340.16	370.00
2.	நடுத்தரக் கால வேளாண்மைக் கடன் வழங்குதல்	”	50.00	20.89	55.00
3.	குறுகிய கால மற்றும் நடுத்தர கால வேளாண்மைக் கடன்களை வழங்கிய மொத்தத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டவை	விழுக்காடு	70%	66.3%	70%
4.	நீண்டகால வேளாண்மைக் கடன்கள் வழங்குதல்	(ரூபாய் கோடியில்)	49.50	39.77	53.00
5.	நகையீட்டுக்கடன்கள் வழங்குதல்	”	1185.71	969.31	1300.00
6.	சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணைசாராப் பிரிவுக் கடன்கள் வழங்குதல்	”	19.00	28.84	20.00
7.	இரசாயன உரங்கள் வழங்குதல்	”	375.00	135.18	400.00
8.	வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்தல்	”	350.00	230.98	375.00

1994 ஏப்ரல் 30]

1.	2.	3.	4.	5.	6.
9.	கிடங்கு வசதியின் திரண்ட கொள்திறன்	(ஆயிரம் டன்னில்)	718.00	709.00	731.00
10.	நுகர்பொருட்கள் சில்லறை விற்பனை செய்தல்	(ரூபாய் கோடியில்)	1400.00	1029.10	1550.00

3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு:

கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கான 1992-93 ஆம் ஆண்டிற்கான செலவு, 1993-94 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, 1993-94 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு மற்றும் 1994-95 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகிய விவரங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன:-

திட்டங்களின் விவரம்	1992-93ஆம் ஆண்டிற் கான செலவு	1993-94 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	1993-94ஆம் ஆண்-டிற்கான திருத்த மதிப்பீடு	1994-95ஆம் ஆண்டிற் கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
1.	2.	3.	4.	5.
		(ரு. கோடியில்)		
அ. மாநிலத் திட்டப் பணிகள்				
1. நெறிப்படுத்துதலும் நிருவாகமும்	0.0020	0.0031	0.0252	0.0269
2. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் (பயிர் காப்புறுதித்திட்டம் மற்றும் வேளாண்மை நிதியுதவி நிறுவனங்-களில் முதலீடும் சேர்ந்தது)	6.9546	3.7289	4.0230	3.5707

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 30

1.	2.	3.	4.	5.
3. ஏனையக் கூட்டுறவுச் சங்கங்கள்	0.5850	0.2860	0.2941	0.7631
4. கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி	0.1073	0.0450	0.0487	0.0200
5. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்	0.7828	0.7899	0.7898	0.7898
மொத்தம்	**8.4317**	**4.8529**	**5.1808**	**5.1705**
ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களும் தன்னாட்சி நிறுவனங்கள் நிதிஉதவி பெறும் திட்டங்களும் (தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் கிராமிய மின்வசதிக் கழகம்)	5.5119	3.8646	3.9311	1.4448
திட்டப் பணிகள்மொத்தம்	13.9436	8.7175	9.1119	6.6153
இ. திட்டத்தில் சேராதது	150.6085	75.4983	82.2012	58.9739
பெருமொத்தம்	**164.5521**	**84.2158**	**91.3131**	**65.5892**

4. 1994--95 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

1.) இரும்புப்பெட்டகம் வாங்க தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி உதவி

கிராமப்புற மக்களுக்கு நகைக் கடன் வழங்க தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை ஊக்குவிக்கும்பொருட்டு, தீ மற்றும் திருடர்கள் அணுகமுடியாத நகைகள் பாதுகாப்பாக வைப்பதற்கான இரும்புப் பெட்டகங்கள் 150 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்க ரூ. 30 இலட்சம் 1994-95 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30]

2.) விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி

வேளாண் மக்கள், தங்கள் வேளாண் விளைபொருட்களை விற்பனைச் சங்கங்களின் விற்பனை மையத்திற்கு கொண்டு வந்து நல்ல விலைக்கு விற்று அவர்களுக்கு உதவும்பொருட்டு கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உதவி புரிகின்றன. இத்திட்டத்தின் கீழ், அரசு இரண்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.4.30 இலட்சம் அளவிற்கு (ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும்) ஏல கொட்டகையுடன் கூடிய விற்பனைக் கூடம் கட்டவும், உலர்தளம், பயிரிடுவோர் ஓய்வறை, மாட்டுவண்டிகொட்டகை, லாரிகள் நிறுத்துமிடம் கட்டவும். தரம் பிரிக்கும் இயந்திரங்கள், மற்றும் லாரிகள் வாங்குவதற்கும் 1994-95 ஆம் ஆண்டிற்கு நிதி உதவி அளிக்க முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ. 8.60 லட்சம் 1994-95 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.) நுகர்வோர் கூட்டுறவுகளினால் 5 நவீன கூட்டுறவு சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்க நிதி உதவி

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனையினை நகர்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் மேற்கொள்கின்றன. நியாய விலையில் கட்டுப்பாடு மற்றும் கட்டுபாடற்ற பொருட்களை பொது மக்களுக்கு விநியோகிப்பதை மேம்படுத்தும் பொருட்டு, வட்டம் மற்றும் வட்டார தலைமையிடங்களில் (இதுவரை நவீன சில்லறை விற்பனை நிலையங்கள் இல்லாத இடங்களில்) நவீன சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கும் பொருட்டு அரசு நிதி உதவி அளிக்கிறது. இன்னும் 40 வட்டார தலைமையிடங்களில் நவீன சில்லறை விற்பனை நிலையங்கள் ஏற்படுத்த வேண்டியுள்ளது. எனவே, 5 நவீன சில்லறை விற்பனை நிலையங்களை நுகர்வோர் கூட்டுறவுகள் மூலம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு கூட்டுறவுக்கும் ரூ.2 இலட்சம் கடனாக வழங்கப்படும். 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.) 25 நியாய விலைக் கடைகளுக்கான கட்டிடம் கட்ட நிதி உதவி

கட்டுப்பாட்டுப் பொருட்கள் 20,912 நியாய விலைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு கூட்டுறவுகளால் விநியோகிக்கப்படுகின்றன. இந்த நியாய விலைக் கடைகள் பெரும்பாலானவை வாடகைக் கட்டிடங்களில் இயங்குகின்றன: நியாய விலைக் கடைகள் சொந்தக் கட்டிடங்களில் இயங்க 25 நியாய விலைக் கடைகளுக்கு கட்டிடம் கட்ட ஒவ்வொரு

[1994 ஏப்ரல் 30

நியாய விலைக் கடைக்கு ரூ. 1.50 இலட்சம் என்ற வீதத்தில் கடன் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த தொகையான ரூ.37.50 இலட்சத்தில் ரூ.23.28 இலட்சம் 1994-95ஆம் ஆண்டிற்கு வழங்கப்படும்.

5.) நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு விளிம்புத் தொகை நிதி உதவி

மாநிலத்தில் உள்ள 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் பொது விநியோகத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளன. அவைகள் போதிய நிதி ஆதாரம் இன்மையால் போதிய காசுக் கடன் வசதி பெற்று வியாபாரத்தினை நடத்த இயலாமையில் உள்ளன. பொது விநியோகத் திட்டம் மற்றும் பொது விற்பனை தடைபடாமல் செயல்பட நடைமுறை மூலதன உதவியாக தேவையான நிதி உதவி அளிக்க உத்தேசிக்கப்- பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1994-95 ஆம் ஆண்டிற்கு இரண்டு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட உள்ளது. பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு ரூ.20 இலட்சமும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அமராவதி மொத்த விற்பனைக் கூட்டுறவுப் பண்டகசாலைக்கு ரூ.10 இலட்சமும் என 1994-95 ஆம் ஆண்டில் நிதி உதவி அளிக்க வரவு செலவுத்திட்டத்தில் ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.) கடன் பெறும் திறனை அதிகரிக்க, கூடுதல் பங்குத் தொகை செலுத்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன் நிதி உதவி அளித்தல்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக உள்ள ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வங்கிகளில் போதிய கடன் பெற, செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்குச் சிரமப்படுகிறார்கள் என்பதால் அரசு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் குறுகிய மற்றும் நடுத்தர காலக் கடன் பெறும் ஆதி திராவிட உறுப்பினர்களுக்குப் பங்குத் தொகை செலுத்தும் வகையில் நிதி உதவி அளிக்கத் திட்டமிட்டது. 1994-95 ஆம் ஆண்டில் 8,000 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.250/- வீதம் ஐந்து ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு ரூ.50/- வீதம் திரும்பச் செலுத்தும் வகையில், வட்டியில்லாக் கடனாக அளிக்க திட்டமிட்டது. 1994—95 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக ரூ.20/- இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1994 *ஏப்ரல்* 30]

7.) கூட்டுறவு நகர வங்கிகளில் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் கூடுதல் பங்குத் தொகை நிதி உதவி அளித்தல் தொடர்பாக.

மாநிலத்தில் மொத்தம் 125 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்படுகின்றன. இவைகள் சிறு வணிகர்கள், கைவினைஞர்கள், தனித்தொழில் நடத்துபவர்கள் மற்றும் வீடுகளை விரிவுபடுத்தல், சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில்கள் நடத்தல் ஆகிய இனங்களுக்கு கடன் வழங்கி வருகின்றன. இவ்வங்கிகளில் 2,40,000 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். கூட்டுறவு நகர வங்கிகளில் ஆதி திராவிட வகுப்பு உறுப்பினர்கள் கூடுதலாக பங்குத் தொகை செலுத்த வட்டியில்லாக் கடனாக 2,000 ஆதி திராவிட உறுப்பினர்களுக்கு ரூ.500/- வீதம் 5 ஆண்டுகளில் ஆண்டுக்கு ரூ.100/- வீதம் திரும்பச் செலுத்தும் வகையில் நிதி உதவி அளிக்க அரசு உத்தேசித்துள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் 1994-95 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம்-2

கூட்டுறவுக் கடன்

(அ) குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்

1. அமைப்பு

தமிழகத்தில் குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன் வழங்குதலுக்கான கூட்டுறவுக் கடன் அமைப்பானது (1) மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி (2) மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (வேளாண்மையைத் தவிர பிற காரியங்களுக்கு கடன் வழங்கும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி நீங்கலாக) மற்றும் (3) கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் என மூன்று அடுக்குகளைக் கொண்டதாகும்.

2. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்

மாநிலத்தில் 4655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவைகள் பயிர் சாகுபடி செலவிற்கான குறுகிய காலக் கடன்களையும், பால் பண்ணை, ஆடு வளர்த்தல், கோழிப் பண்ணை முதலிய வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள நடுத்தரக் காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. அவைகள் குத்தகை சாகுபடியாளர்களுக்கு பயிர் கடன்களையும்; நிலமில்லா விவசாயத் தொழிலாளர்களுக்கு துணைத் தொழில்களுக்கான கடன்களையும் வழங்கி வருகின்றன. கடன்கள் தேவையின் அடிப்படையில் ரூ.65,000/- வரை (அதில் நபர் ஜாமீன் பேரில் ரூ. 45,000/- வரை) வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்களில் ரொக்கம் ஒரு பகுதியாகவும் உரம், விதை, பூச்சிக் கொல்லிகள் உட்பட்ட இடுபொருட்கள் ஒரு பகுதியாகவும் உள்ளன. குறுகிய காலப் பயிர் சாகுபடி கடன்கள் அறுவடை முடிவுற்ற பின்னர் மகசூல் தொகையிலிருந்து அதிக பட்சமாக 15 மாத காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். துணைத் தொழில்களை மேற்கொள்ளுவதற்கான நடுத்தரக் காலக் கடன்கள் 3 முதல் 5 ஆண்டு காலத்திற்குள் முதலீட்டின் மூலமாக பெற்ற வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தங்களது வைப்பு நிதியைத் திரட்டுவதிலும், கடன் வழங்கலைப் பரவலாக்கி பன்முகப்படுத்துவதிலும் வெகுவாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. கிராம மக்களைக்

1994 ஏப்ரல் 30]
கவரும் நோக்குடன் வைப்புத் தொகைகளுக்கு வணிக வங்கிகள் அளிக்கும் வட்டியை விட 1.5 விழுக்காடு கூடுதலாக வட்டி வழங்க அவை அனுமதிக்கப்பட்டுள்ளன.

3. மத்தியக் கூட்டுறவு வங்கிகள்.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் எல்லைகளுக்குள் இயங்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகும். அவை தங்களது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஒப்பளிக்கும் கடன் அளவு வரம்புகளிலிருந்து (credit limits.) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி வசதி அளிக்கின்றன. 31.12.93 ஆம் நாளன்று தமிழக அரசு வழங்கியுள்ள ரூபாய் 22.11 கோடி உள்பட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் மொத்த பங்கு மூலதனம் ரூ.113.12 கோடியாகும். 31.12.93ன் படி, இவ்வங்கிகளின் ஒதுக்கிய நிதிகள் ரூபாய் 125.23 கோடியும், வைப்புத் தொகை ரூபாய் 1538.82 கோடியும் ஆகும். 31.12.93ன் படி, அவை வழங்கிய மொத்தக் கடன்கள் ரூபாய் 1433.15 கோடியாகும். அவை அவற்றின் எல்லைக்குள் செயல்படும் எல்லா வகையான கூட்டுறவுகளுக்கும் நிதி வசதி அளிக்கின்றன. கடன்தாரர்களின் தவணை தவறிய கடன் தொகையினை திரும்பச் செலுத்தாமையால் பாதிக்கப்பட்ட தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தவிர, இதர மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் 1991-92 ஆம் ஆண்டில் இலாபத்தில் செயல்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றுடன் இணைந்துள்ள சங்கங்களுக்கு அவற்றின் சொந்த நிதியிலிருந்தும், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வங்கியிலிருந்து வாங்கிய கடன்களிலிருந்தும் நிதி உதவி அளிக்கின்றன. மாநிலத்தில் வேளாண்மைத் தொழிலுக்கு வழங்கப்படும் மொத்தக் கடனில் தோராயமாக மூன்றில் ஒரு பகுதியைக் கூட்டுறவு வங்கிகள் நிறைவு செய்கின்றன என்பது குறப்பிடத் தக்க அம்சமாகும். அது போன்றே தமிழகத்தில் வங்கியியல் பிரிவிலுள்ள மொத்த வைப்புத் தொகைகளில் தோராயமாக ஐந்தில் ஒரு பகுதியைக் கூட்டுறவு வங்கிகள் பெற்றுள்ளன.

4. தமிழ் நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் பணிகள்

1905 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, வேளாண்மை மற்றும் வேளாண்மை சாராக் கடன்

TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 30

வழங்குவதில் பெரும் பங்கினை ஆற்றி வருகிறது. இவ்வங்கி மத்திய கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகும். இவ்வங்கி வேளாண்மைக்கான குறுகிய காலக் கடன்கள், வேளாண்மை மூதலீட்டிற்கான நடுத்தரக்காலக் கடன்கள், நடுத்தரக் கால மாற்றுக் கடன்கள், நெசவுத் தொழிலுக்கான நிதியுதவி மற்றும் உற்பத்தி அடமான கடன்கள் (Produce Pledge Loan) முதலியவற்றிற்குத் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான வங்கி வழங்கும் நிதியுதவியைப் பெற்று வழங்குகிறது. மேலும் உர வியாபாரம், பொதுவான வங்கிப் பணி, அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம், சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகளுக்கான நடைமுறை மூலதனம், காலக் கடன்கள் (term finance) போன்றவற்றிற்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் நிதி வசதிகளுக்கு ஈடு செய்யும் ரொக்கக் கடன் (Cash Credit) ஒப்பளிப்பு அளித்து வருகிறது. மேலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பொது வங்கியியல் தேவைகளுக்கான (General Banking requirement) அவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ள அரசு பொறு ப்பாட்சியர் கடன் பத்திரங்கள் (Government trustee security) நிலை வைப்புகள் (Fixed deposits) ஆகியவற்றின் பேரில் நடப்பு கணக்கின் மீது அதிகப் பற்று வசதிக்கும் (Over draft) இவ் வங்கி வழிவகை செய்கிறது. இவ்வங்கி தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ.ஆப்டெக்ஸ்), தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு தொழிலியல் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு உற்பத்தி இணையம், திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம், தமி ழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து சாகுபடியாளர் இணையம் போன்ற பிற தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நேரிடையாக நிதி வசதி அளித்து வருகிறது.

தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் கிடங்குகளின் சேமித்துவை க்கும் திறனை அதிகரிக்க உலக வங்கியின் சேமித்து வைக்கும் திட்டம் III-ன் உதவியின் (World Bank Storage Project III Assistance) கீழ் ஒரு திட்டத்தினைத் தீட்டியுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களாகிய கூட்டுறவு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள், தமி ழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், கோ.ஆப்டெக்ஸ், சாகோ சர்வ், இன்கோ சேர்வ், 134 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவை இதனால் பயன்பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 31.12.93

1994 ஏப்ரல் 30]

அன்றுள்ளபடி தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்திலிருந்து பெறப்பட்ட கடன் ரூ.10.10 கோடியாகும்.

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப் பெறச் செய்வதற்கு தொடக்க வேளாண்மைக் மேம்பாட்டு நிதி (Primary Co-operative Development Fund) மாநில வங்கி அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டிலிருந்து மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தங்களது நிகர இலாபத்திலிருந்து 5 விழுக்காடு அளவிற்கு இத்திட்டத்திற்கு என தர வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செலுத்தியுள்ள தொகை ரூ.194.59 இலட்சம் ஆகும். 31.12.93 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனம் ரூபாய் 6.33 கோடி (இதில் அரசின் பங்கு ரூபாய் 1.26 கோடி) வைப்புத் தொகை (Deposit) ரூபாய் 628.11 கோடி, ஒதுக்கப்பட்ட நிதி (Reserve fund) ரூபாய் 38,50 கோடி, ஆகும். 31.12.93 ஆம் நாள் அன்று வங்கி பெற்ற கடன்கள் ரூ.299.94 கோடியாகும். தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI), சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI) ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப் பெறும் மறு நிதி வசதியைக் கொண்டு இவ்வங்கி 31.12.93 ஆம் நாளன்று வழங்கிய கடன்களின் அளவு ரூபாய் 844.05 கோடியாகும். 31.12.93 ஆம் நாளன்று இவ்வங்கியின் செயல்பாட்டு மூலதனம் ரூ.1081.25 கோடியாகும். இவ்வங்கி 1992-93 ஆம் ஆண்டில் ரூபாய் 15.39 கோடி அளவிற்கு நிகர இலாபம் ஈட்டியுள்ளது. 1991-92 ஆம் ஆண்டிற்கு இவ்வங்கி 14 விழுக்காட்டளவிற்கு ஈவுத் தொகை (Dividend) வழங்கியுள்ளது. மேலும், 1992-93 ஆண்டிற்கும் இதே அளவினை நிலை நிறுத்த எண்ணியுள்ளது.

தேசிய அளவிலான மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பு (National Federation of State Co-operative Bank) 1982-83 ஆண்டிலிருந்து மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அவற்றின் செயல்பாடுகளுக்கு ஏற்ப பரிசு வழங்கி வருகிறது. இந்த அமைப்பிலிருந்து (தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி அதன் அனைத்து செயல்பாடுகளுக்கும் 1985-86 ஆம் ஆண்டு முதல் 1990-91 வரை 1989-90 ஆம் ஆண்டு தவிர தொடர்ந்து பரிசு பெற்றுள்ளது. 1989-90 ஆம் ஆண்டில் சமூக மேம்பாட்டிற்கான இலக்கினை (Social Goal Development) அடைந்ததற்கான பரிசினைப் பெற்றுள்ளது

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 30

5. கடன் வழங்குதல்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் 1990-91, 1991-92, 1992-93 மற்றும் 1993-94 ஆம் ஆண்டுகளில் குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்கள் வழங்குதலில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:

(ரூ. கோடியில்)

ஆண்டு	குறுகிய காலப் பயிர் சாகுபடிக் கடன்கள்		துணைத் தொழில்களுக்கான நடுத்தரக் கால வேளாண்மைக் கடன்கள்		வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் (குறுகிய காலம் மற்றும் நடுத்தரக் காலம்).
	திட்டம்	முன்னேற்றம்	திட்டம்	முன்னேற்றம்	
1.	2.	3.	4.	5.	6
1985-86	135.00	130.88	20.00	20.14	151.02
1986-87	160.00	162.45	20.00	25.32	187.77
1987-88	185-.00	186.82	22.00	34.03	220.85
1988-89	215.00	205.04	30.00	40.14	245.18
1989-90	250.00	233.84	37.55	41.11	274.95
1990-91	260.00	243.98	40.00	40.02	284.00
1991-92	**275.00**	**278.52**	**50.00**	**44.71**	**323.23**
1992-93	**300.00**	**340.86**	**55.00**	**45.75**	**386.61**
1993-94 (31.12.1993 வரை)	**350.00**	**340.16**	**50.00**	**20.89**	**361.05**

மேலே குறிப்பிட்டுள்ள ஆண்டுகளில் வேளாண்மைக் கடன் வழங்கல் சீராக அதிகரித்து வருவதும், 1992-93 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வேளாண்மைக் கடன்கள் மிகவும் அதிகமென்பதும் குறிப்பிடத் தக்க அம்சங்களாகும். 1994-95 ஆம் ஆண்டுக்கான குறுகிய காலக் கடன் வழங்கலுக்கான குறியீடு 370 கோடி ரூபாயும், நடுதரக் காலக் கடனுக்கான குறியீடு 55 கோடி ரூபாயுமாகும்.

6. நில உடமைதாரர்களை கூட்டுறவில் சேர்த்தல்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள எல்லா கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளன. பொதுவாக, ஒரு தொடக்க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30]

வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அதன் எல்லையிலுள்ள இரண்டு அல்லது மூன்று வருவாய் கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. மாநிலத்தி லுள்ள மொத்த நில உடமை விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை 77.06 இலட்சம் ஆகும். சிறு மற்றும் மிகச் சிறு விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை 67.58 இலட்சம் ஆகும். 31.12.1993 ஆம் நாள் வரை மொத்த விவசாயக் குடும்பங்களில் 85.8 சதவீதத்தினரும், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களில் 84.0 சதவீதத்தினரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுகளில் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

7. உடனடி கடன் வழங்கும் திட்டம்.

கடன் வழங்கல் முறையை எளிதாக்கவும், கடன் தவணை தவறாத உறுப்பினர்களுக்குப் பயிர்க் கடன்களை துரிதமாக வழங்குவதை உறுதிப் படுத்தவும் 1991-92 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உடனடி கடன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. நடப்பு ஆண்டில் 31.12.93 ஆம் நாள் வரை 4475 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த விஸ்தரிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 31.12.93 ஆம் நாள் வரை 2.35 இலட்சம் கடன்தாரர்களுக்கு பச்சை வண்ண அட்டை வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு 125.34 கோடி ரூபாய் அளவிற்கு குறுகிய கால வேளாண்மைக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

8. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்கு கடன் வழங்குதல்.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (நாபார்டு) வழிமுறைகளின்படி, வழங்கப்படும் மொத்தக் குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்கு குறைந்த நன்செய் அல்லது புன்செய் நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள நலிந்த பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் உரிய கவனம் செலுத்தி வருகின்றன. 1992-93 ஆம் ஆண்டின் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய மற்றும் நடுத்தரக் காலக் கடனின் அளவும், 1993-94 ஆம் ஆண்டுக்கான திட்டமும் அதில் 1993 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 நாள் வரை எய்திய முன்னேற்றமும் பின்வருமாறு:-

[1994 ஏப்ரல் 30

வ.எண்.	விவரங்கள்	ஆண்டு	திட்டம் (சத வீதம்)	நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன்தொகை (ரூபாய் கோடியில்)	வழங்கப் பட்ட மொத்த கடனில் இதன் சதவீதம்
1.	2.	3.	4.	5.	6.
1.	குறுகிய காலக் கடன்	1992-93	63	210.27	61.7
		1993-94 (1993 டிசம்பர் 31 வரை)	65	211.58	62.2
2.	நடுத்தரக் காலக் கடன்	1992-93	95	41.64	91.0
		1993-94 (1993 டிசம்பர் 31 வரை)	95	17.87	85.6

1994-95 ஆம் ஆண்டில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் குறுகிய காலக் கடனில் 67 விழுக்காடும், நடுத்தரக் காலக் கடனில் 95 விழுக்காடும் வழங்கப்பட உள்ளது.

9. ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்

வேளாண்மைத் தொழிலுக்கான குறுகிய காலக் கடன் மற்றும் வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களுக்கான நடுத்தரக் காலக் கடன் பெற்று பொருளாதார நிலையை மேம்படுத்த ஆதி திராவிட வகுப்பினரின் குடும்பத்தில் ஒருவரையேனும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக்கும் நோக்கத்துடன் அரசு 1981-82 ஆம் ஆண்டிலிருந்து ஆதி திராவிட விவசாயிகளை அதிக அளவில் கூட்டுறவில் சேர்க்கும் திட்டம் தீட்டியுள்ளது. அரசு ஒவ்வொரு நபருக்கும் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக 100 ரூபாய் மானியமாக வழங்கி வருகிறது. அரசு அளித்துள்ள 110 இலட்ச ரூபாய் மானியத்தில் இதுவரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 1.10 இலட்சம் நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தைச் தற்சமயம் மைய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. 1988-89 முதல் 1992-93 வரைக்கான காலத்தில் 85,092 ஆதி திராவிட வகுப்பினரை உறுப்பினர்களாக்க மைய அரசு 85.092 இலட்ச ரூபாய் மானியம் வழங்கியுள்ளது. இவ்வாறு 31-3-1993 ஆம் நாள் வரை மாநில மற்றும் மைய அரசு திட்டங்களின் கீழ் 1.95 இலட்சம் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் உதவி பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டுக்கான மொத்தக்

1994 ஏப்ரல் 30]

கடன் வழங்கும் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு ஆதி திராவிட மற்றும் பழங்குடி உறுப்பினர்களுக்கு வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் ஆதி திராவிட மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் குறுகிய காலக் கடனில் 10.1 விழுக்காடும், நடுத்தரக் காலக் கடனில் 24.6 விழுக்காடும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.1993-94-ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 12 விழுக்காடும், நடுத்தரக் காலக் கடனில் 23 விழுக்காடும் கடன்கள் வழங்க திட்டமிட்டதில் 1993-ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை முறையே 9.2 விழுக்காடும், 26.5 விழுக்காடும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையின்படி, 1994-95 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 13 விழுக்காடும் நடுத்தரக் காலக் கடனில் 24 விழுக்காடும் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

10. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கான வணிக மேம்பாட்டுத் திட்டம் செயற்படுத்துதல்

ஒவ்வோரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கும் தன்னிறைவு பெறுவதற்கான ஒரு செயல் திட்டம் வகுக்கப்பட வேண்டும் எனவும், 10 இலட்சம் ரூபாய் கடன் வரவு செலவை எட்டாத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தின் மீதும் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் வேளாண்மைக் கடன் ஆய்வுக்குழு தெரிவித்துள்ளது. ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும் தனது கடன் வழங்குதலை அதிகரித்தல், இலாபந் தரக்கூடிய இதர பணிகளை விரிவுபடுத்துதல், நிதி ஆதாரத்தினைப் பெருக்குதல், தவணை தவறிய தடனைக் குறைத்து வரவு செலவை அதிகரிப்பதன் மூலம் நடைமுறைச் செலவினத்தை ஈடு கட்ட போதிய இலாபம் ஈட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

இதன் முதற்கட்டமாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கான வணிக மேம்பாட்டுத் திட்டம் தயாரிப்பதன் எல்லா அம்சங்கள் குறித்தும் மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1991 ஜனவரி திங்களில் நடேசன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ஒவ்வொரு மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்தும் நான்கு அலுவலர்களுக்கு அத்திட்டப் பயிற்சி மூன்று பகுதிகளாக வழங்கப்பட்டது. தொடர்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்ட இவ்வலுவலர்கள் தெரிவு செய்யப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வணிக மேம்பாட்டுத் திட்டத்தினை வகுத்து செயல்படுத்தும் பொறுப்புடையவர்கள் ஆவார்கள். தொடக்க

வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கான வணிக மேம்பாட்டுத் திட்டம் தயாரித்ததல், செயற்படுத்துதல் ஆகியவற்றை கண்காணிப்பதற்காக விரிவான வழிமுறைகள் கள அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

முன்னேற்றதினைக் கண்காணிக்க மண்டல இணைப்பதிவாளர் தலைமையில் மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது போலவே, மாநில அளவில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

1994-95 ஆம் ஆண்டிற்கு முன்னர், 3785 தொடக்கப் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 2718 தொடக்க வேளான்மைக் கூட்டுறவு வங்கிகள் வியாபார மேம்பாடுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு:-

வருடம்	வணிக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் எண்ணிக்கை
1991-92	409
1992-93	1084
1993-94	1225
	2718

1994-95-ல் 1,067 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் கொணரத் திட்டமிடப்பட்டுள்ளது.

11. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கான உள்ளமைப்பு வசதி ஏற்படுத்துதல்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் லேவாதேவியினை மேம்படுத்த கீழ்காணும் உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் நகைக்கடன் வழங்கும் பணியிணை மேற்கொள்ள இழுப்பறைகளுடன் கூடிய இரும்புப் பெட்டகம் வாங்குவதற்கு இதுவரையில் 795 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ. 80.95 இலட்சம் அரசு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1993-94-ம் ஆண்டிலும், மேலும் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு இழுப்பறைகளுடன் கூடிய இரும்புப் பெட்டகம் வாங்குவதற்கு

1994 ஏப்ரல் 30]

வங்கி ஒன்றுக்கு ரூ. 20000/- வீதம் ரூ. 20.00 லட்சத்திற்கான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி மூலம் 1992-93 ஆம் ஆண்டில் 150 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்புப் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மூலம் 1992-93 மற்றும் 1993-94 ஆம் ஆண்டில் 300 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்பு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பொலிவான வங்கிகளாகத் திகழ ஏதுவாக, நவீன வங்கி முகப்பு அமைத்திட தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி 650 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ. 37.25 லட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது.

12. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வைப்புத்தொகை உத்தரவாதத் திட்டம் செயல்படுத்துதல்

தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பயிற்சி பட்டறையினால் இறுதியாக்கப்பட்ட வைப்பு தொகை உத்திரவாதத் திட்டம் 1-4-92 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலுள்ள வைப்புத் தொகைகளுக்கு மத்திய வங்கியின் உத்திரவாதம் வழங்குவது மூலம், வைப்புத் தொகையை முதலீடு செய்பவர்களின் மனதில் தங்களது தொகைக்கு பாதுகாப்பு உள்ளது என்ற எண்ணத்தை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அதிக அளவு வைப்புத் தொகை கிடைப்பதற்கும் இதன் மூலம் வாய்ப்பு ஏற்படுகின்றது.

வியாபார வளர்ச்சி திட்டத்தினை செயல்படுத்தும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும், தன்னிறைவினைப் பெற்றுள்ள வங்கிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு கீழ்காணும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்:-

(1) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் ஆண்டு இறுதியில் கடைசி தேதியன்று 6 மாதங்களுக்கு மேல் தவணை கொண்ட வைப்புத் தொகை நிலுவை ரூ. 25,000/-ம் அதற்கு மேலும் இருக்க வேண்டும்.

(2) வங்கிகளின் கணக்குகள் நன்கு பராமரித்திடல் வேண்டும். இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள உபரிநிதி அல்லது அதிகபட்ச அளவுக்கு மேல் உள்ள ரொக்கக்

கையிருப்பு போன்ற தொகைகளை மத்திய கூட்டுறவு வங்கியில் இட்டு வைத்தல் வேண்டும். மேலும், ஒவ்வொரு காலாண்டின் இறுதி மாதத்தில் கடைசி நிலுவை வைப்புத் தொகையில் 15 சதவீதம் அளவு தொகையினை மத்திய கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்திடல் வேண்டும். வைப்பு உத்திரவாத திட்டத்தின் கீழ் எழும் கோரிக்கைகளை நிறைவு செய்ய ஏதுவாக ஒவ்வொரு மத்திய கூட்டுறவு வங்கியிலும் உத்திரவாதக் கட்டணத்தினைக் கொண்டு ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. உத்திரவாதம் வழங்கப்படவேண்டிய வைப்புத் தொகை நிலுவைக்கு கீழ்கண்டவாறு உத்திரவாத நிதிக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

1. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி .. 0.15 %
2. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி .. 0.10 %
3. மாநிலக் கூட்டுறவு வங்கி .. 0.05 %

உத்திரவாத நிலுவை வைப்பு உத்திரவாதத்தின் அடிப்படையில் பெறப்படும் கோரிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்துவதுடன் வேறு எந்தகாரியங்களுக்கும் பயன்படுத்தக் கூடாது. 1992-93-ஆம் ஆண்டு வரையில் 2,314 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எஞ்சியுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும் இத்திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

13. ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி பெருக்குத் திட்டம்

நடப்பு ஆண்டில் இந்திய அரசின் ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி பெருக்குத் திட்டம், மாநிலத்தில், நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்களை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், கடன் வழங்கும் சங்கங்கள் நெறபயிர் சாகுபடிக்காக பயிர்க்கடன்கள் அளிப்பது மட்டுமின்றி தேவையான இடுபொருள்களையும் வழங்கும். இத்திட்டம் அமுலாக்கப்பட்ட 1988-89 ஆம் ஆண்டிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட குறியீடு மற்றும் அதில் எய்தப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு:-

ஆண்டு	திட்டக் குறியீடு (ரூபாய் கோடியில்)	அடைந்த முன்னேற்றம்
1988-89	52.45	55.87
198-90	63.10	69.30
1990-91	68.90	75.46

1994 ஏப்ரல் 30]

ஆண்டு	திட்டக் குறியீடு (ரூபாய் கோடியில்)	அடைந்த முன்னேற்றம்
1991-92	85.26	86.49
1992-93	102.94	122.65
1993-94 (31-12-1993 வரை)	134.50	115.08

14. எண்ணெய் வித்துக்கள் பெருக்குத் திட்டம்

இத்திட்டம் கன்னியாகுமரி, சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர ஏனைய எல்லா மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான மறு நிதி உதவி வசதியுடன் எண்ணெய் வித்துக்கள் பயிர் சாகுபடி செய்ய கடன் வழங்குவதே கூட்டுறவுகளின் தனித்தன்மை பங்காகும். 1992-93-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 44.23 கோடி ரூபாய் வழங்கத் திட்டமிட்டதில்; 44.21 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் குறியீடு 57.36 கோடி ரூபாய் ஆகும். அதில் 1-4-93 முதல் 31-12-93 வரையில் 50.10 கோடி ரூபாய் அளவிற்கு முன்னேறம் எய்தப்பட்டுள்ளது.

15. கடன்கள் வசூல்

கூட்டுறவுகளை இன்று எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சனை, பெருகி வரும் தவணை தவறிய கடன் நிலுவையாகும். இது கூட்டுறவு கடன்களை தங்கு தடையின்றி வழங்குவதற்கு பெரும் தடையாக உள்ளது. தவணை தவறிய கடன் நிலுவைக் கேட்பில் 40 விழுக்காட்டிற்கு குறைவில்லாமல் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வசூல் செய்தாலன்றி வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி மறு நிதி வசதி அளிக்காது. கூட்டுறவுகளில் பெருகி வரும் தவணை தவறிய கடன் நிலுவைக்கு முக்கிய காரணம், கடன்தாரர்களிடையே கடனைத் திருப்பச் செலுத்தும் எண்ணம் இல்லாமல் இருப்பதே ஆகும். கடனைத் திருப்பச் செலுத்தாதவர்களில் பெரும்பாலானோர் வேண்டுமென்றே அவ்வாறு செய்பவர்களாவர். தவணை தவறிய கடன் நிலுவையை குறைக்கும் பொருட்டு, கடனை திரும்பச் செலுத்தத் தவறியவர்களிடமிந்து கடனை வசூல் செய்வதை முனைப்பாக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இவ்வாறு கடன் வசூல் செய்தால் தான் மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தேசிய வங்கியிடமிருந்து மறு நிதி பெறும் தகுதியை அடைய இயலும்.

[1994 ஏப்ரல் 30

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் தவணை தவறிய கடன் நிலுவை கடந்த ஏழு ஆண்டுகளில் பின்வருமாறு உள்ளது:-

(ரூபாய் கோடியில்)

தேதியன்று.	தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிஅளவில்		
	நிலுவைத்தொகை.	தவணை தவறிய நிலுவைத் தொகை.	கேட்பில் தவணை தவறிய சதவீதம்.
1	2	3	4
30-6-87	420.53	147.23	33.7
30-6-88	545.40	179.03	41.2
30-6-89	710.58	227.50	36.3
30-6-90	941.31	298.34	55.6
30-6-91	1,091.85	404.63	43.7
30-6-92	1,114.32	444.08	41.4
30-6-93	1,435.79	398.71	31.8
31-12-93 வரை	1,491.15	553.37	65.3

16. வேளாண் மற்றும் ஊரகக் கடன் நிவாரணத் திட்டம், 1990

1990 ஆம் ஆண்டில் வேளாண் மற்றும் ஊரகக் கடன் நிவாரணத் திட்டத்தை மத்திய அரசு அறிவித்த போது, தங்கள் மாநிலங்களிலுள்ள கூட்டுறவு வங்கிகளாய் வழங்கப்பட்ட கடன்களுக்குப் பொருந்தும் வகையில், இத்திட்டத்திற்கு இணையான திட்டங்களைத் தயாரிக்கும்படி மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

இத்திட்டத்தின்படி கோரும் தொகையில் 50 விழுக்காடு மத்திய அரசு மானியமாக வழங்கும். கடன் நிவாரணத் திட்டத்திற்கு உட்பட்ட மொத்த தொகையில் மீதமுள்ள 50 விழுக்காட்டினை மாநில அரசு வழங்கும். மாநில அரசால் அளிக்கப்பட வேண்டிய இத்தொகை நாபார்டு நிறுவனத்தின் மூலம் மாநில அரசுக்குக் கடனாக வழங்கப்படும். இக்கடன் 10 சதவீத வட்டியுடன் மூன்று சம ஆண்டுத் தவணைகளில் திருப்பி செலுத்தப்பட வேண்டிதாகும்.

1994 ஏப்ரல் 30]

கூட்டுறவுத்துறையின் வேளாண் மற்றும் ஊரகக் கடன் நிவாரணத் திட்டம் செயல்படுத்துமாறு 25-6-90 நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் 571-ன் அரசாணையில் அரசு ஆணையிட்டுள்ளது.

31-3-91 உடன் இத்திட்டம் முடிவு பெற்றவுடன், இத்திட்டத்தின் கீழ் தொடக்க வங்கிகளால் அளிக்கப்பட்ட நிவாரணத் தொகையான 289.43 கோடி ரூபாய்க்கு தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கியும், தேசிய வங்கிக்கு உரிமை கோரிக்கைகள் அனுப்பி வைத்தன. அடுத்து சரி பார்த்து நீக்கப்பட்ட தகுதியில்லாத உரிமைக் கோரிக்கைகள் நீங்கலாக நிவாரணத்திற்குத் தகுதியான உரிமைக் கோரிக்கைத் தொகை 284.818 கோடி ரூபாய் ஆகும். இதில் 261.735 கோடி ரூபாய் நாபார்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டு விட்டது. நாளது தேதியில் இத்திட்டத்தின் கீழ் 23.083. கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து இன்னும் பெறப்படவேண்டியுள்ளது.

இத்தொகையினை திரும்ப அளித்ததில் ஏற்பட்ட காலதாமதத்தினால் 31-12-93 முடிய தொடக்க வங்கிகள் 25.63 கோடி ரூபாய் அளவிற்கு வட்டி இழப்பு அடைந்து உள்ளது.

17. நகைக் கடன்கள்

கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதால் நிறுவன அமைப்பில்லாத தனியார் நிறுவனங்களிடமிருந்து கடன் கிடைப்பதற்கரிய நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் நகையீட்டின் பேரில் மாநிலம் முழுவதும் கடன் வழங்கி, மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் குறிப்பிடத் தக்க பணி ஆற்றி வருகின்றன. தற்பொழுது 4,561 கூட்டுறவு அமைப்புகள் நகையீட்டுக் கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. 1992-93-ம் ஆண்டில் 19.69 இலட்சம் நபர்களுக்கு 1,080.28 கோடி ரூபாய் அளவிற்கு நகையீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ள 1,185.71 கோடி ரூபாயில் 31-12-93 வரை 979.54 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டிற்கு 1,300 கோடி ரூபாய் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினர்களின் அவசர நிதித் தேவைகளை பயன் விளையத் தக்க வகையில் நிறைவு செய்து, அவர்கள் தனியார் கடன் வழங்குபவர்களின் பிடியில் சிக்காமல் பாதுகாக்கின்றது. நகையீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் சவரன் ஒன்றுக்கு ரூபாய் 2,400/-ஆகும். தனி நபர்களுக்கு அளிக்கப்படும் அதிகபட்ச கடன்

[1994 ஏப்ரல் 30

அளவு ரூ. 40,000 ஆகும். இது 1-4-94 முதல் நடைமுறைப் படுத்தப்படுகிறது. 2-9-93 முதல் கடன்தாரர்களிடம் ஆண்டு ஒன்றுக்கு 15 சதவீத வட்டி வசூலிக்கப்படுகின்றது.

18. சிறு வியாபாரிகளுக்கு குறிப்பாக பெண்களுக்கு தேவையின் அடிப் படையில் சிறு கடன்கள் வழங்கல்:-

சிறு தொழில் ஈடுபட்டுள்ள வியாபாரிகளுக்கு உதவும் பொருட்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அதிகபட்சமாக ரூபாய் 500 வரை தேவை அடிப்படையில் சிறு கடன்கள் வழங்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள், தேவையின் அடிப்படையில் 3,200 மகளிர் உறுப்பினர்களுக்கு 14.93 இலட்சம் ரூபாய் கடன் வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டில் 31-12-93 முடிய மத்தியக் கூட்டுறவு வங்கிகள் 2,135 மகளிர் உறுப்பினர்களுக்கு 10.16 இலட்சம் ரூபாய் கடன் வழங்கியுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன், சில வகையான சிறு வியாபாரிகளுக்கு போதுமானதாக இல்லாமையால் தற்பொழுது வழங்கப்படும் தொகையான ரூபாய் 500/-ரூபாய் 750/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

19. ஒழுங்குபடுத்தும் குழு அமைத்தல்

அ. முன்னுரை

மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை ஒழுங்கு படுத்துதல் குறித்து ஆராய ஒரு குழுவினை அமைக்க 3-7-87 நாளிட்ட எண் 404, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசாணையில் உத்திரவிடப்பட்டது. இக்குழுவினரால் அளிக்கப்பட்ட பரிந்துரைகள் 9-8-90 நாளிட்ட எண் 747, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசாணையில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அக்குழுவின் அடிப்படையில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் தற்போது ஒழுங்குப்படுத்தப் பட்டுள்ளன.

ஆ. குழு அமைத்தல்

17-7-92 நாளிட்ட எண் 340 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, அரசாணையில் மூன்று குழுக்களை அமைக்குமாறு பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க நிலவள வங்கிகள் மற்றும் கூட்டுறவு நகர

1994 ஏப்ரல் 30]

வங்கிகளின் செயல்பாட்டினை ஆராயும் பொருட்டும், பணி நிலை பிரிவினர் எண்ணிக்கை, ஊதிய விகிதங்கள் முதலியவற்றை ஒழுங்கு படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கருத்துரைக்கவும் பதிவாளரால் மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டன. குழுக்கள் தம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. இக்குழுக்களின் பரிந்துரைகளை அரசு மிக்க கவனத்துடன் ஆராய்ந்து மேற்குறித்த மூன்று வகை நிறுவனங்களின் பணியாளர்களின் நலனுக்கு உகந்த வகையில் 12-11-93 அன்று ஆணை வழங்கியுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்களின் தற்போதைய ஒட்டு மொத்த மாத ஊதியத்தை ரூ. 600-லிருந்து 1-4-94 முதல் 750/- ஆக உயர்த்தி 6-1-94 நாளிட்ட எண் 3 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசாணையில் உத்திரவு வழங்கியது.

20. விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம்

இயற்கைச் சீற்றங்களின் கொடுமைகளிலிருந்து விவசாயிகள் பாதுகாப்பு பெற்று பயனடைய சரியான ஒரு சாதனமாக உள்ள விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் இம்மாநிலத்தில் 1985-86-ம் ஆண்டு முதல் செயலாக்கத்தில் உள்ளது. மைய அரசும், மாநில அரசும் பிரிமியத் தொகை பகிர்ந்து கொள்வதிலும், ஈட்டுறுதித் தொகையை வழங்குவதிலும் 2:1 என்ற விகிதாச்சாரத்தில் ஏற்கின்றன. பொது காப்பீட்டுக் கழகமும், தமிழ்நாடு பயிர் பாதுகாப்பு நிதியும் முறையே மைய அரசு மற்றும் மாநில அரசின் முகவர்களாகச் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு நிறுவனங்கள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல கிராமிய வங்கிகளால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில், நெல், கோதுமை, சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைப் பயிர்களுக்கு வழங்கப்படும் பயிர்க்கடன்கள் முழுவதும், ஒரு விவசாயிக்கு ரூ. 10,000/-க்கு மிகாமல் கட்டாய அடிப்படையில் ஈட்டுறுதி செய்யப்படுகிறது. ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையில், இரு சதவீதம் நெல், கோதுமை மற்றும் சிறு தானிய பயிர்களுக்கும் ஒரு சதவீதம் எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைப் பயிர்களுக்கும் பிரிமியக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் இணையும் சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவீகிதம் மட்டும் செலுத்தினால் போதும். மிகுதி 50 சதவீதம் மானியமாக அவர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. இச்செலவினை மைய அரசும் மாநில அரசும் சம அளவில் பகிர்ந்துகொள்கின்றன.

[1994 ஏப்ரல் 30

இம் மாநிலத்தில் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை எள் மற்றும் சூரிய காந்திப் பயிர்களுக்கு இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டு காலத்தில் திட்டம் செயலாக்கப்பட்ட விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

வ.எண்.	பருவ காலம்.	விவசாயிகள் எண்ணிக்கை.	பரப்பளவு. (ஹெக்டேரில்)	ஈட்டுறுதி செய்த தொகை.	வசூலித்த பிரிமியம்.	வழங்கிய ஈட்டுத் தொகை.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	
1.	காரிப்	1990	46419	87092	1648.23	32.14	21.72
2.	ராபி	90-91	200807	254843	6426.52	114.52	227.08
3.	காரிப்	1991	99844	156129	3934.00	75.84	28.56
4.	ராபி	91-92	117594	159466	5191.75	88.85	117.93
5.	காரிப்	1992	133765	292425	5670.07	110.52	195.12
6.	ராபி	92.93	110455	161228	5781.38	97.30	111.82

ராபி 1992-93 பருவ காலம் முதல் புதுக்கோட்டை மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டங்களில் நெல் பயிருக்கு பயிர் அறுவடைப் பரிசோதனை பிர்கா அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தற்போது (ராபி 1993-94 பருவ காலத்தில்) கீழ்க் குறிப்பிட்டுள்ள விவரப்படி அறிவிக்கப்பட்ட பகுதிகளில் செயலாக்கப்படுகிறது:-

வ.எண்.	பயிர்.	அறிவிக்கப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை.	அறிவிக்கப்பட்ட பிர்காக்களின் எண்ணிக்கை (புதுக்கோட்டை மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் மட்டும்)
1	2	3	4
1.	நெல்	222	21
2.	சோளம்	65	-
3.	கம்பு	54	-
4.	கேழ்வரகு	85	-
5.	நிலக்கடலை	138	-
6.	எள்	60	-

1994 ஏப்ரல் 30]
முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டம்

நடைமுறையில் உள்ள விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டத்துடன் புதிய திட்டத்தினை உருவாக்க பொது காப்பீட்டுக் கழகத்தை திட்டம் தயாரிக்க மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மாதிரி படிவம் பெறப்பட்டு மத்திய மாநில அரசுகளின் பரிசீலனைகளில் உள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாவட்டத்தைத் தெரிவு செய்து அனைத்து விவசாயிகளுக்கும் அனைத்து இடையூறுகளுக்கும் அனைத்து பயிர்களுக்கும் (Actuarial) பிரிமியக் கட்டணம் வசூலித்து இத்திட்டம் செயல்படுத்துவதாகும்.

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதிய முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டத்தினைச் செயலாக்க தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. பயிர் ஈட்டுறுதி நிதிக்குழு புதிய முன்னோடி பயிர் ஈட்டுறுதி திட்டத்தை செயலாக்க பொது காப்பீட்டுக் கழகத்துடன் கலந்து மாதிரி வடிவம் தயாரித்து வருகிறது.

(ஆ) நீண்ட காலக் கடன்

1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி

கடன்கள் வழங்குவதற்கும் தேவைப்படும் நிதியைச் சாதாரண மற்றும் சிறப்பு கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுவதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி பெறுகிறது. மத்திய மாநில அரசுகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் பிரிவுகள், வர்த்தக வங்கிகள், தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் இதர மாநில கூட்டுறவு நிலவள வங்கிகள், சாதாரண கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. நபார்டு, மத்திய மற்றும் மாநில அரசுகள் ஆகியவை சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. சிறு பாசனம் மற்றும் சிறுபாசனம் அல்லாத திட்டங்களின் கீழ் நிதியுதவி செய்யும் நோக்கத்தோடு, பகுதி முன்னேற்றத் திட்டங்கள் பலவற்றை மாநில நிலவள வங்கி தீட்டியுள்ளது. 31-12-93 அன்று சாதாரண மற்றும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முறையே ரூ. 52.69 கோடி மற்றும் ரூ. 170.43 கோடி நிலுவையில் உள்ளது. 31-12-93 அன்று வங்கியின் சொந்த நிதி ஆதாரம் ரூ. 352.54 கோடியாகும். ஒவ்வொரு சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களுக்கான காலம் முடிவடையும் போது பத்திரங்களுக்குரிய தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கான "கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி" (Debenture Redemption Fund) ஒன்றினை வங்கி பராமரித்து வருகிறது. இந்த நிதியில் 31-12-93 தேதியில் ரூ. 21.34 கோடி உள்ளது.

பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டில் ஏற்படும் சிக்கல்களை கண்காணிக்கவும் (monitoring) திட்டத்தினால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயனைக் கணிப்பாய்வு (Evaluation) செய்யவும், குழு ஒன்றை நிலவள வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நாள் வரை 345 கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகட்கு விரிவாக்க பணியாக 'நிலவளம்' என்ற மாதாந்திர இதழை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி வெளியிடுகிறது. தொடக்க நிலவள வங்கி பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக "நாபார்டின்" உதவியுடன் இளநிலை பணியாளர் பயிற்சித்திட்டம் ஒன்றினை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி சென்னையில் நடத்தி வருகிறது.

2. நீண்ட காலக் கடன் நெறிமுறைகள்

நீண்ட காலக் கடன் அமைப்பானது மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி மற்றும் வட்டம், வட்டார அளவில் 181 தொடக்க நிலவள வங்கிகள் என இரண்டு அடுக்குகளைக் கொண்டதாகும். தொடக்க கூட்டுறவு நிலவள வங்கிகள் விவசாயிகளுக்கு 5 முதல் 15 ஆண்டுகள் வரையில் திருப்பிச் செலுத்துமளவில் நீண்ட காலக் கடன்களை வழங்குகிறது. அவை திட்ட அடிப்படையில் சிறுபாசனம், தோட்டப் பயிர்கள் சாகுபடி முதலிய மேம்பாட்டு பணிகளுக்கும் மற்றும் கோழி வளர்ப்பு, பால்பண்ணை, ஆடு வளர்த்தல், டயர் வண்டிகள் வாங்குதல், பட்டுப்புழு வளர்ப்பு முதலிய நானாவித நோக்கங்களுக்கும் கடன்கள் வழங்குகின்றன். மேலும், தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள் அவற்றின் சாதாரண கடன் வழங்கும் திட்டங்களின் கீழ் கிணறுகளைப் பழுதுப்பார்த்தல், நீர்க்குழாய்கள் அமைத்தல், டிராக்டர், விசை உழவுச் சாதனங்கள் வாங்குதல், நிலச் சீர்திருத்தம், முன் கடன்களைத் தீர்த்தல், நிலம் வாங்குதல், கால்நடை தொழுவம் அமைத்தல், பண்ணை வீடு அமைத்தல் முதலிய நோக்கங்களுக்குக் கடன்கள் வழங்குகின்றன.

தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி "நாபார்டு" நிர்ணயித்துள்ள நெறிமுறைகளின்படி, அதிலும் முக்கியமாக அவற்றின் கடன் வசூல் செயல்பாட்டினை தொடர்புறுத்தி நிர்ணயிக்கப்படுகிறது. 1-4-1991 ஆம் நாள் முதல் நாபார்டு கடன் வழங்கும் தகுதியைக் கீழ்கண்டபடி திருத்தி அமைத்துள்ளது:-

1994 ஏப்ரல் 30]

முந்தைய ஆண்டில் சூன் 30 ஆம் நாளன்று நிலவிய கடன் வசூல் விழுக்காடு	தொடக்க கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி
1.	2.
'அ' வகை - 60 விழுக்காடும் மற்றும் அதற்கு மேலும்	வரையறையற்றது.
'ஆ' வகை - 60 விழுக்காட்டிற்குக் குறைவாக	கடந்த ஆண்டு சூன் 30 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டில் வசூலித்த தொகை (அல்லது) மார்ச் 31 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டில் வழங்கிய கடன் (அல்லது) முந்தைய 3 ஆண்டுகளில் வசூலித்த கடன் தொகை/வழங்கப்பட்ட கடன் இவற்றில் எது அதிகமோ அந்த அளவு மறுநிதி பெற தகுதி பெறுகிறது.

இதனடிப்படையில் 1993-94-ஆம் ஆண்டில், 181 தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகளில் 47 வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியை பெற்றுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில், 1990-91 மற்றும் 1991-92-ஆம் திட்டக் காலம் மற்றும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1992-93 மற்றும் 1993-94 (31-12-1993 வரை) ஆண்டுகளில் வழங்கப்பட்ட நீண்ட காலக் கடன்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டு	குறியீடு	எய்திய முன்னேற்றம்
1.	2.	3.
	(ரூபாய் கோடியில்)	
ஏழாவது திட்டக் காலம்		
1985-86	20.00	24.19
1986-87	20.00	20.52
1987-88	26.00	30.60
1988-89	27.00	28.94

(1)	(2)	(3)
1989-90	30.00	25.97
ஆண்டுத் திட்டக்காலம்		
1990-91	25.00	31.31
1991-92	32.00	41.71
எட்டாவது திட்டக்காலம்		
1992-93	41.00	64.21
1993-94	49.50	39.77 (31-12-1993 வரை).

1994-95-ஆம் ஆண்டில் ரூ.53 கோடி நீண்டக் காலக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

3. தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகளுக்கு கடன் வழங்குவதற்கான புதிய வழிகள்

இதுகாறும், தொடக்கக்கூட்டுறவு நிலவள வங்கிகள் 'நாபார்டு' உதவியுடன் கூடிய தனித்திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி பெருக்குத்திட்டம் மற்றும் பால்பண்ணை, ஆடு வளர்த்தல், கோழிப்பண்ணை முதலிய பலதரப்பட்ட காரியங்களுக்கு கடன்கள் வழங்கி வந்தன. இருப்பினும், நிதி வசதி அளிப்பதில் இதர நிதி நிறுவனங்கள் அளவில் ஏற்பட்டுள்ள மாறி வரும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள் கீழே விவரித்த இனங்களுக்கும் நிதி வசதி அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

(1) பண்ணை சாராக் கடன் வழங்குதல்

"நாபார்டு" வங்கியால் அறிவிக்கப்பட்டுள்ள மறுநிதி உதவித் திட்டத்தின் படி கிராமக் கைவினைஞர்கள் சிறு கைத்தொழில் செய்பவர்கள் மற்றும் சிறிய அளவிலான தொழில் செய்பவர்கட்கு பண்ணைசாராக் கடன் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டு முதல் தொடக்க கூட்டுறவு நிலவள வங்கிகள் கடன் வழங்கி வருகின்றன. இவ்வகை நிதி உதவி கிராம மக்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்புக்களை அளித்து அதன் மூலம் அவர்களது வருமானத்தை அதிகரித்து பயன் அளிப்பதுடன், நிலவள வங்கிகளின் கடன் லேவாதேவி பெருகிடச் செய்யவும் உதவுகிறது. நாபார்டு வங்கியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கடன் வழங்கும்

1994 ஏப்ரல் 30]

தகுதிக்கு நிர்ணயித்துள்ள வரன்முறைகளைப் பின்பற்றும் தேவையின்றி நிலவள வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் 100 விழுக்காடு மறுநிதி வசதி பெற்று கடன்கள் வழங்கலாம் என்பது இதன் சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தின் கீழ் தனி நபர் ஒருவருக்கு அதிகப்படியாக ரூ.50,000 கூட்டுக் கடனாகவும், ரூ.10 இலட்சம் வரை ஒருங்கிணைந்த கடனாகவும் வழங்கலாம் என கடனளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1993-94-ஆம் ஆண்டில் ரூ.5 கோடி அளவிற்கு கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள் டிசம்பர் 1993 திங்கள் வரை ரூ.12.73 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளன. 1994-95-ஆம் ஆண்டில் ரூ.6 கோடி அளவிற்கு கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(2) கிராமங்களில் வீடு கட்ட கடன் வழங்குதல்

1989-90-ஆம் ஆண்டுகளில் வரவு செலவு கூட்டத் தொடரில் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட தேசீயக் கொள்கைக்கு ஏற்ப, தேசீய வீட்டு வசதி வங்கியின் மறு நிதி உதவியுடன் கிராமப்புறங்களில் வீடுகள் கட்ட கடன்கள் வழங்க தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஒரு விவசாயி உச்சக் கடன் பெறும் தகுதி ஒரு இலட்ச ரூபாயாகும். தேசீய வீட்டு வசதி வங்கி இம்மாநிலத்திலுள்ள தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள் கிராமப்புறங்களில் வீடு கட்டுவதற்கு நிதி உதவி அளிப்பதற்காக ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உத்தேசமாக ஒதுக்கீடு செய்துள்ளது. தனியாக அரசு உத்திரவாதம் அளித்தல், கிராமப்புறத்தில் வீடு கட்டுவதற்காக சிறப்பு கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுவதற்காக தனியே பத்திரம் நிறைவேற்றுதல் முதலியவற்றில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை முடியப் பெற்ற பின்னர், தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள் இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கும்.

(3) கிராமப்புறங்களில் சாலைப் போக்குவரத்து சிறு ஊர்தி இயக்குநர்களுக்கு கடன் வழங்குதல்.

தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள் சாலைப்போக்குவரத்து சிறு ஊர்தி இயக்குநர்களுக்கு கடன் வழங்குத் திட்டத்தின் கீழ், கிராமப் புறங்களில் உள்ள தனி நபர்கள் மற்றும் தனி நபர்களின் குழுக்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு மூன்று சக்கர வண்டிகள், டெம்போக்கள், வேன்கள் முதலிய போக்குவரத்து வாகனங்களை வாங்க கடன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கடன் வண்டியின் அமைப்புச் சட்டம், கட்டுமானச் செலவு, வரிகள், வட்டி உள்ளிட்ட அலகு விலையில் 85 விழுக்காட்டளவிற்கு வழங்கப்படும்.

[1994 ஏப்ரல் 30

4. நலிந்த பிரிவினருக்கான கடன் வசதி

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான கடன் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வகை செய்யும் வகையில் கடன் வழங்கும் திட்டத்தில், சாதாரணத் திட்டத்தின் கீழ் 20 விழுக்காட்டு அளவிற்கும் திட்ட அடிப்படையில் 60 விழுக்காட்டு அளவிற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலம் மற்றும் 1990-91, 1991-92, 1992-93 மற்றும் 1993-94-ஆம் ஆண்டுகளில் நலிவுற்ற பிரிவினர்க்கு வழங்கப்பட்ட கடன் விழுக்காடு குறித்த விவரம் பின்வருமாறு:-

ஆண்டு. 1.	வழங்கப்பட்ட மொத்த கடன். 2.	நலிவுற்றப் பிரிவினருக்கு வழங்கிய கடன். 3.	வழங்கிய மொத்த கடன் தொகையில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன் விழுக்காடு. 4.
		(ரூபாய் கோடியில்)	
1985-86	24.19	10.70	44.2
1986-87	20.52	9.78	47.7
1987-88	30.60	14.18	46.3
1988-89	20.94	11.38	39.3
1989-90	25.97	7.79	30.2
1990-91	31.31	9.78	31.2
1991-92	41.71	13.99	33.5
1992-93	64.21	17.52	27.3
1993-94 (டிசம்பர் 1993 திங்கள் வரை)	39.77	9.50	23.9

எட்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ள ரூ.265 கோடி நலிவுற்ற பிரிவினருக்கு 50.15 விழுக்காடான ரூ.132.92 கோடி அளவிற்கு நிதி உதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. திட்ட வரைவின்படி, 1994-95 ஆம் ஆண்டில் கடன் வழங்க நிர்ணயித்துள்ள குறியீடான ரூ.53 கோடியில் சுமார் 50 விழுக்காடான ரூ.26.06 கோடி அளவிற்கு நலிவுற்ற பிரிவினருக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 30]

5. கடன்கள் வசூல்

கூட்டுறவில் இன்று எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சனை பெருகிவரும் தவணை தவறிய கடன் நிலுவையாகும். தவணை தவறிய கடன்களில் நிலுவை தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் திறன், நிதிநிலை, இலாபம் மற்றும் இறுதியாக அவற்றின் பொருளாதார நிலைத்தன்மைக்கு பெருந்தடையாக உள்ளது. தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி அவற்றின் கடன் வசூல் செயல்பாட்டை பொருத்து அமைகிறது. கடன் கேட்பில் 60 விழுக்காட்டிற்கு குறைவில்லாமல் தொடக்க நிலவள வங்கிகள் கடன் வசூல் செய்தாலொழிய அவை வரையற்ற கடன் வழங்கும் தகுதியை எய்தாது. அதிகரித்து வரும் தவணை தவறிய கடன் நிலுவைக்கு முக்கியக் காரணம் கடன்தாரர்களிடையே கடனைத் திருப்பிச் செலுத்தும் எண்ணம் இல்லாமல் இருப்பதே ஆகும். கடனைத் திருப்பிச் செலுத்த தவறியவர்களில் பெரும்பாலானோர் வேண்டுமென்றே அவ்வாறு செய்பவர்கள் ஆவர். வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்த தவறிய தெரிவு செய்யப்பட்ட ஆறுவகைக் கடன்தாரர்களிடம் சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ள கூட்டுறவுகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது 1994-95 ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 181 தொடக்க நிலவள வங்கிகளில் 143 வங்கிகள் வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியை எய்துமளவிற்கு கடன் வசூலில் முன்னேற்றம் காண வழி கோலியது.

தொடக்க நிலவள வங்கிகளைப் பொறுத்தமட்டில். கடன் ஆறு ஆண்டுகளில் தவணை தவறிய கடன் நிலவரம் பின்வருமாறு:-

நாளிது வரை.	கடன் நிலுவைத் தொகை.	தவணைத் தவறிய கடன் தொகை.	கேட்பில் தவணைத் தவறிய விழுக்காடு.
1.	2.	3.	4.
	(ரூபாய் கோடியில்)		
1988 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்.	163.13	52.38	77.2
1989 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்	175.93	64.34	78.3
1990 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்	193.11	87.61	88.1

[1994 ஏப்ரல் 30

நாளிது வரை.	கடன் நிலுவைத் தொகை.	தவணைத் தவறிய கடன் தொகை.	கேட்பில் தவணைத் தவறிய விழுக்காடு.
1.	2.	3.	4.
	(ரூபாய் கோடியில்)		
1991 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்	196.39	66.27	54.8
1992 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்	211.79	65.90	64.3
1993 ஆம் ஆண்டு சூன் திங்கள் 30 ஆம் நாள்	246.49	42.37	39.8
1993 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள்	266.64	61.89	84.9

6. பொய்த்த கிணறுகள் நிதி

தமிழ்நாடு தொடக்க நிலவள வங்கிகளில் கடன் பெற்று தோண்டப்படும் கிணறுகளில் தண்ணீர் இன்றி பொய்த்துப் போய் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவுவதற்கான பொய்த்த கிணறுகள் நிதி ஒன்றை தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி நிர்வகித்து வருகிறது. திறந்த வெளிக் கிணறுகள், வடிமுறை குழாய் கிணறுகள், குழாய்க் கிணறுகள், ஆழ்குழாய் கிணறுகள் ஆகியவைகளுக்கு பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து உதவியளிக்கத் தற்போது பயிரிடப்படும், பயிர் பரப்பு, விளைச்சல் பற்றிய நடைமுறையிலுள்ள விதிமுறைகளை அரசு தளர்த்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகட்கு, பெரிய விவசாயிகட்கு முறையே 90 சதவீதமும் 75 சதவீதமும் அசல் மற்றும் வட்டி பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன சிறு விவசாயிகட்கு அவர்களின் சொந்த உழைப்பாக அளித்த பங்கு நீங்கலாக, முழுத் தொகையும் மான்யமாக அளிக்கப்படுகிறது. 31-12-1993 வரை 3207 பொய்த்த கிணறுகட்கு ரூ.2.22 கோடி உதவி வழங்கப்பட்டது.

எல்லா மாநிலங்கட்கும், பொதுவான பொய்த்த கிணறுகள் இழப்பீட்டுத் திட்டம் ஏற்படுத்தும் நோக்கத்துடனும் மான்யம் அளிப்பதில் பொதுவான நெறிமுறைகளைப் பின்பற்றும் நோக்கத்துடனும், எல்லா மாநிலங்களும் கடைப்பிடிப்பதற்கான பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதி ஒன்றினை " நாபார்டு" அறிவித்துள்ளது. மேற்படி பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு

1994 ஏப்ரல் 30]

நிதி திட்டத்தினை 1-7-86 முதல் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டதிதின்படி தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க நிலவள வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் கடன் பெற்று, கிணறுகள் தோண்டி அவை பொய்த்துப் போனால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன விவசாயிகட்கு 100 சதவீத அளவிற்கு மான்யம் வழங்கப்படும். இத்திட்டத்தின்படி கடன் தொகையில் அசல் பகுதிக்கான மானியத் தொகை மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும். வட்டிப் பகுதியைப் பொறுத்த வரையில் "நாபார்டு திட்டங்கள்" தொடர்பான கடன்களாக இருந்தால், "நாபார்டு" சம்மந்தப்பட்ட வங்கியும், சரிசமமான அளவிலும் இதர சாதாரணத் திட்டம் பற்றியக் கடன்களாக இருந்தால், முழு வட்டித் தொகையும் சம்பந்தப்பட்ட வங்கி தள்ளுபடி செய்து தன் சொந்த நிதியிலிருந்து ஏற்கும், இந்த திட்டத்தின் கீழ் 31-12-93 வரை 42 பொய்த்த கிணறுகளுக்கு ரூபாய் 6.57 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

7. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித்திட்டம்

நாட்டில் சில தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், கூட்டுறவு வளர்ச்சிகளை செயல்படுத்துவதற்கென தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் எனும் திட்டத்தை உருவாக்கியுள்ளது. தொடக்க கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளான வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டுப்பூச்சி வளர்த்தல், பன்றி வளர்த்தல், கோழிப்பண்ணை, மீன் வளர்ப்பு போன்ற வேளாண்மை சார்ந்த பிரிவுகள் மற்றும் கைத்தறி, கிராமக் கைத் தொழில், கைவினைஞர் தொழில் போன்ற பண்ணைச்சாரா பிரிவுகள் முதலியவற்றில் பன்முகைப்படுத்தி பெருக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். சங்கத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பகுதி அடிப்படையிலான வளர்ச்சி காண்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

தற்போது தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ரூ.862 இலட்சம் ஒதுக்கீட்டில் காமராசர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.641.285 இலட்சத் தொகையை காமராசர் மாவட்டத்திற்கு விடுவித்துள்ளது. இதைப் போலவே 1992-93 ஆம் ஆண்டு முதல் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் தென்னாற்காடு மாவட்டத்தில் ரூ.1,508 இலட்சம் ஒதுக்கீட்டில் அமுல்படுத்தப்பட்டுவருகிறது. அரசால் இதுவரை ரூ.437.114 இலட்சம் இம்மாவட்டத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

[1994 ஏப்ரல் 30

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை 5 ஆண்டுகளில் ரூ.1,492 இலட்சம் அளவில் செயல்படுத்த தர்மபுரி மாவட்டம் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ. 1,500 இலட்சம் அளவிற்கு தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் விரைவில் ஒப்புதல் அளிக்கப்படும்.

இதே போன்று கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதை அம் மாவட்டத்தில் செயல்படுத்தும் பொருட்டு 6-7-92 அன்று நடைபெற்ற மாநில அளவிலான குழுவில் விவாதிக்கப்பட்டது. மாநிலக் குழுவும் ஒரு சில மாற்றங்களுடனும் மற்றும் ஆலோசனைகளுடன் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை அமுல்படுத்த ஏற்றுக் கொண்டது. திருத்திய அறிக்கையும் தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அக்கழகம் மேற்படி திட்டத்திற்கு ரூ.1081.07 இலட்சம் அளவில் 1994-95-ஆம் ஆண்டு முதல் 1998-99-ஆம் ஆண்டு வரை செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தை தேர்வு செய்துள்ளது. திட்ட அறிக்கை தயாரிக்கும் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கை 18-10-1992 அன்று நடைபெற்ற மாவட்ட அளவிலான குழுவில் அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு தோராயமாக ரூ.705 இலட்சம் தேவைப்படும் எனக் கருதப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளைக் கொண்டு திருத்திய திட்ட அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறு திட்டம் தயாரிக்கும் நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

விரைவில் தமிழ்நாட்டில் இதர மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

(இ) நகர்ப்புறக் கடன்

1. நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள்

நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, வங்கியியல் மற்றும் கடன் வசதிகளை செய்து தரும் நிதி நிறுவனங்களாக, நகர கூட்டுறவு வங்கிகள் செயல்படுகின்றன. தமிழகத்தில் தற்போதுள்ள இவ்வகையான 129 நகர்ப்புற வங்கிகளில், 125 வங்கிகள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இவைகள், நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் தரப்பு பிரிவினரிடமிருந்து வைப்புத் தொகைகளை சேகரித்து, அவற்றினை தெரிந்தெடுக்கப்பட்ட காரியங்களுக்கு கடனாக

1994 ஏப்ரல் 30]

வழங்கப் பயன்படுத்தி வருகின்றன. சிறு விவசாயிகள், கைவினைஞர்கள், நடுத்தரப் பிரிவினர் ஆகியோருக்கு வீட்டினை விரிவு படுத்துதல் மற்றும் பழுது பார்த்தல், மிகச் சிறு வியாபாரம் செய்தல், குழந்தைகளுக்கான கல்விச் செலவு, முன்கடன் தீர்த்தல், சிறிய அளவிலான தொழில் மற்றும் குடிசைத்தொழில் செய்தல் ஆகிய காரியங்களுக்கு கடனுதவி செய்வது, இவ்வகையான வங்கிகளின் செயல்பாட்டில் அடங்குவனவாகும் நகர கூட்டுறவு வங்கிகள் 1992-93-ஆம் ஆண்டில் நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த மக்களுக்கு, குறுகியகால மற்றும் மத்தியகால கடனாக ரூ.451.81 கோடி அளவிற்கு கடன்களை வழங்கியுள்ளன. 1992-93-ஆம் ஆண்டின் இறுதியில் நகர கூட்டுறவு வங்கிகள் அளவில் 496.24 கோடி அளவிற்கு வைப்புத்தொகைகள் நிலுவையில் இருந்தது. இந்திய தலைமை வங்கி நிர்ணயம் செய்துள்ள நெறி முறைகளின்படி, இவ்வங்கிகள் வழங்கும் மொத்த கடன் தொகையில் 60 சதவீதத்திற்கு குறையாமல் முன்னுரிமைக் காரியங்களுக்கான கடனாகவும், அவ்வாறு வழங்கும் முன்னுரிமைக் கடன் தொகையில் 25 சதவீதத்திற்கு குறையாமல் நலிவுற்ற பிரிவினருக்கான கடனாகவும், வழங்க வேண்டும்.

2. அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டம்

கடன் நிறுவனங்களில் அனுசரிக்கப்படும் நெறி முறைகளைப் போலவே, நகர கூட்டுறவு வங்கிகளில், அங்கத்தினர்களின் கடனின் அளவு அவர்கள் செலுத்தும் பங்குத் தொகை அளவுடன் தொடர்புள்ளதாகும். நகர கூட்டுறவு வங்கிகளின் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களின் கடன் வாங்கும் சக்தியை அதிகரிக்கும் வகையில் தெரிந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனாக ரூ.500/- வழங்கும் வகையில், சிறப்புத் திட்டம் ஒன்று எட்டாவது ஐந்தாண்டு திட்ட வரைவில் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கடன் தொகை 5 ஆண்டுகளில் வசூலிக்கப்படவேண்டும். இத்திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் ஆண்டில் நகர கூட்டுறவு வங்கிகளின் அங்கத்தினர்களில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த 2017 நபர்களுக்கு ரூ.10 லட்சம் கடனாக வழங்கப்பட்டது. அதே போன்று 1993-94-ஆம் ஆண்டில் இவ்வகைக் கடன்களாக 2000 தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு வழங்க ஒதுக்கப்பட்டுள்ள தொகையான ரூ.10 லட்சத்தில், 1993 டிசம்பர் மாத இறுதி வரை, 1720 தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு ரூ.8.60 லட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

1994-95-ஆம் ஆண்டில் நகர கூட்டுறவு வங்கிகளின் அங்கத்தினர்களில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த 2000 அங்கத்தினர்களுக்கு, ரூ.10 லட்சம் அளவிற்கு, இவ்வகையான வட்டியில்லாக் கடன் தொகை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

3. நகர்ப்புற வங்கிகளின் மூலம் விவசாய சார்பற்ற கடன்கள்

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நகர வங்கிகள் விவசாய சார்பற்ற கடன்களையும் குறிப்பாக சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களுக்கு வழங்கி வருகின்றன. 1993-94-ஆம் ஆண்டிற்கு விவசாய சார்பற்ற காரியங்களுக்கு குறிப்பாக குடிசைத்தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கென ரூ. 19 கோடி கடனாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் டிசம்பர் 1993 முடிய வழங்க நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டுத் தொகையான ரூ. 14.15 கோடிக்கு மேலாகவே டிசம்பர் 1993 முடிய ரூ. 21.34 கோடி, கடனாக வழங்கப்பட்டுள்ளது.

1994-95-ம் நிதி ஆண்டிற்கு சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்களுக்கு விவசாய சார்பற்ற கடன் ரூ.20 கோடி கடனாக வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30]

அத்தியாயம்.3

கூட்டுறவுகள் மூலம் வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்தல்

(அ) இடு பொருட்கள்

தமிழ்நாட்டில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை கூட்டுறவுத் துறையில் இரசாயன உர விற்பனைக்கு மொத்த விற்பனையாளர்களாகச் செயல்பட்டு வருகின்றன. 4326 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் நடத்தப்படும் 5678 சில்லரை விற்பனை நிலையங்கள் மூலமாகவும், 101 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும் அங்கத்தினர்களுக்கு பயிர்க் கடனில் பொருட் பகுதியாகவும், அங்கத்தினர் மற்றும் அங்கத்தினரல்லாதவர்களுக்கு ரொக்கத்திற்கும் உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 1993-94-ஆம் ஆண்டில் இதுவரை (டிசம்பர் '93 முடிய) ரூ.13,518.10 இலட்சம் மதிப்புள்ள இரசாயன உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இரசாயன உர விநியோகத்தில் 25-8-92 முதல் கொள்கையில் ஒரு மாற்றத்தினை மத்திய அரசு அறிவித்தது. இப்புதிய கொள்கையின்படி பாஸ்பர மற்றும் பொட்டாசிய அடிப்படையிலான உரங்களின் மீது கட்டுப்பாடு நீக்கப்பட்டது. இதன் விளைவாக டை-அமோனியம் பாஸ்பேட், முரியேட் ஆப் பொட்டாஷ் மற்றும் கலப்பு உரங்களின் விலைகள் வெகுவாக உயர்ந்தன. எனவே, விவசாயிகளின் நன்மையைக் கருதி, டை அம்மோனியம் பாஸ்பேட் மற்றும் முரியேட் ஆப் பொட்டாஷ்க்கு டன் ஒன்றுக்கு ரூ.1000/- வீதமும் கலப்பு உரங்களுக்கு டன் ஒன்றுக்கு ரூ.340/- முதல் ரூ.999/- வரையிலும் சலுகை வழங்கும் வகையில் உரச் சலுகைத் திட்டத்தினை மத்திய அரசு 1-10-1992 முதல் அனுமதித்து ஆணை வழங்கியுள்ளது. இதுவரை கூட்டுறவுத் துறைக்கு இச்சலுகைத் திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் பருவங்களுக்கு விடுவிக்கப்பட்ட தொகை பின்வருமாறு:-

	ராபி 92-93ல் (அக்.92 முதல் மார்ச் 93 வரை)	காரீப் 93 (ஏப்ரல்93 முதல் செப்.93 வரை)	ராபி 93-94 (அக் 93 முதல் மார்ச் 94 வரை)
	(தொகை ரூ. இலட்சத்தில்).		
தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்.	1081.69	302.30	100.00
தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்.	143.02	136.92	50.00
நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம்	9.60	14.09	10.00
மொத்தம்	**1234.31**	**453.31**	**160.00**

[1994 ஏப்ரல் 30

(ஆ) விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் வேளாண் கருவிகள் வழங்கல்.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் ஆகிய நிறுவனங்கள் இதர இடுபொருட்களான விதைகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், மற்றும் வேளாண் கருவிகள் வழங்குவதற்கு மொத்த விற்பனையாளர்களாகச் செயல்பட்டு வருகின்றன. 1993-94-ஆம் ஆண்டில் ரூ.13.15 கோடி மதிப்புள்ள இடு பொருட்களை விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டது. அதில் இதுவரை (டிசம்பர் 93 முடிய) 7.61 கோடி ரூபாய் அளவிற்கு இடுபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1994-95-ல் ரூ.14.00 கோடி மதிப்புள்ள இடுபொருட்கள் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சேவா நிறுவனம் பூச்சிக் கொல்லி மருந்து உற்பத்தி அலகு ஒன்றையும், வேளாண் கருவிகள் தயாரிக்கும் அலகு ஒன்றையும் நடத்தி வருகிறது. 1993-94-ல் (டிசம்பர் '93 முடிய) இந்நிறுவனம் ரூ.28.83 இலட்சம் மதிப்புள்ள பூச்சிக்கொல்லி மருந்துகளையும் ரூ. 4.10 இலட்சம் மதிப்புள்ள வேளாண் கருவிகளையும் விநியோகம் செய்துள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30]

அத்தியாயம்-4

கூட்டுறவு விற்பனை, பதப்படுத்துதல் மற்றும் கிடங்கு வசதி

1. அமைப்பு.

தமிழகத்தில் தொடக்க நிலையில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் 111 உள்ளன. அவற்றுள், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள விற்பனைச் சங்கங்கள் தவிர மற்றவை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் இணைந்து செயலாற்றுகின்றன. நாகப்பட்டினம் காயிதே மில்லத் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், நீலகிரி மாவட்டத்திற்கு நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கமும் உதகமண்டலத்தில் செயல்படுகின்றன.

அனைவரும் அறியும் வகையில் "டான்பெட்" என சுருக்கமாக அழைக்கப்படும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், 1959-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு விவசாயிகளுக்கு, வேளாண் இடுபொருட்கள் வழங்குவதிலும், வேளாண் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதிலும் மாநில அளவில் தனித்தன்மையுடன் வெகு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. விவசாயத்திற்குத் தேவையான இரசாயன உரங்களை மொத்த விற்பனையாளராக இருந்து விநியோகம் செய்து வருகின்றன. தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் அமைந்துள்ள இதன் பதினான்கு மண்டல அலுவலகங்கள், விவசாயிகளுக்கு இணையம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் விற்பனைச் சங்கங்கள் மூலமாக வழங்கப்படும் உரங்கள் சரிவர விநியோகம் செய்யப்படுகின்றனவா என கண்காணிக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடியை அடுத்துள்ள பாமனியில் இதனுடைய உர ஆலை 1970-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 120 டன்கள், என்.ப்பி.கே உரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இணையம் இதனைத் தவிர தமிழகத்தில் பத்து மையங்களில் கலப்பு உரங்களை தயாரித்து வருகின்றன. இணையம் வேளாண் விளை பொருட்களான பருத்தி, மிளகாய், தனியா, உளுந்து ஆகிய பொருட்களை கொள்முதல் செய்கின்றது. தமிழகத்தில் விலை நிர்ணயம் செய்யப்படுவதில் இணையம், தேசியக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் "ஏஜெண்ட்" ஆக செயல்படுகிறது. மேலும், 1976 முதல் பூச்சிக்கொல்லி விநியோகத்தில் மொத்த விற்பனையாளராக செயல்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதிலும்

இதற்கு சொந்தமாக 32 கிடங்குகள் 25,100 மெட்ரிக் டன் கொள்ளவுடன் பயன்படுத்தி வருகிறது. இத்துடன் 18,150 மெ. டன் கொள்ளளவு கொண்ட 26 வாடகை கிடங்குகளையும் அமர்த்தி செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1250 மெ. டன் கொள்ளளவு உடைய குளிர்பதன கிடங்கு ஒன்றினை சென்னையில் நிர்வாகித்து வருகிறது.

கிடங்கின் கொள்திறன் 59 விழுக்காடு மட்டுமே உபயோகித்து உள்ள நிலையில் 1991-92ஆம் ஆண்டில் இணையம் ரூ. 10.00 இலட்சம் வருவாயினை ஈட்டியுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் டிசம்பர் இறுதிவரை குளிர்பதன கிடங்கின் கொள்திறனில் 50 விழுக்காடு மட்டுமே உபயோகித்துள்ள நிலையில் ரூ. 8.58 இலட்சம் வருவாயினை ஈட்டியுள்ளது. கிடங்கின் கொள் திறனை முழுமையாக உபயோகப்படுத்துவதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது. சென்னையை அடுத்த புறநகர் பகுதியில் "கோயம்பேடு" என்ற இடத்தில் இணையம் 2500 மெட்ரிக் டன் கொள்திறனுடைய கிடங்கினை ரூ. 167.59 இலட்சம் செலவில் நிர்மாணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. மேலும், வெங்காயம் இருப்பு வைப்பதற்கான, ஒவ்வொன்றும் 320 மெ.டன் கொள்திறன் கொண்ட மூன்று கிடங்குகள் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் "எரியோடு" என்ற கிராமத்தில் செயல்பட்டு வருகின்றன.

1993-94ல் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மேற்கூறப்பட்ட வியாபார நடவடிக்கைகள் விவரம் வருமாறு:-

	விவரம்.	(1993-94 டிசம்பர் '93 முடிய) கொள்ளளவு (மெ.டன்னில்).	மதிப்பு (ரூ. கோடியில்).
1.	உரங்கள்	229931	97.45
2.	பாமனி உரங்கள் உற்பத்தி	21998	6.26
3.	பாமனி உரங்கள் விற்பனை	180.57	10.80
4.	வேளாண் விளைபொருட்கள் கொள்முதல்	..	14.19
5.	விதைகள் விநியோகம்	..	0.06
6.	பூச்சிகொல்லி விநியோகம்	..	3.77
7.	வேளாண் கருவிகள்	..	0.02
8.	மண்ணெண்ணெய் விநியோகம்	2427 (கிலோ லிட்டர்)	0.60

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30]

2. வேளாண்மை விளை பொருட்கள் விற்பனை.

மாநில முழுவதிலும் 111 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அதனுடைய உறுப்பினர்களினுடைய விவசாய விளை பொருட்களை நியாயமான முறையில் விற்பனை செய்ய உதவுகின்றன. விவசாய விளை பொருட்கள் விற்பனையில் 1993-94க்கு ரூ. 350.00 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், டிசம்பர் 1993 முடிய ரூ. 230.97 கோடி ரூபாய் மதிப்புள்ள வேளாண் விளை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1994-95 ஆம் ஆண்டில் வேளாண் விளை பொருட்கள் விற்பனைக் குறியீடு ரூ.375.00 கோடியாக நிர்ணயிக்கப்படவுள்ளது.

3. விற்பனையுடன் இணைந்த கடன் வசதி.

(i) இத்திட்டத்தின் கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் கடன் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உறுப்பினர்களாகப் படுகின்றார்கள். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினர்களால் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு கொண்டு வரப்படும் பொருட்கள், விவசாயிகள் அதிக நன்மை பெறும் வகையிலும் மற்றும் அவர்கள் ஏற்கக்கூடிய விலையில் வெளி ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. விற்பனைத் தொகையிலிருந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் வசூலிக்கப்பட்டு அவ்வங்கிகளுக்கு ஒதுக்கப்படுகின்றன.

(ii) ஒருபுறம் உற்பத்தியாளர்களுடைய விளைபொருட்களுக்கு நியாயமான வகையில் வருவாய் தரத் தக்க விலையை நிர்ணயம் செய்யவும், மறுபுறம் நுகர்வோருக்கு அத்தியாவசியமான பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கவும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்படுகின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்கின்றன. 1992-93ல் வேளாண் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்ததன் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உற்பத்திக்கான கடன் தொகை ரூ.29.89 இலட்சம் வசூல் செய்துள்ளது, இக்கடன் வசூல் 1993-94ல் ரூ.75.00 இலட்சமாகவும், 1994-95ல் ரூ. 80.00 இலட்சமாகவும் உயர்த்தப்பட உள்ளது.

(iii) விவசாயிகளுக்கு அவர்களுடைய விளை பொருட்களை ஈடாக வைத்து கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் கடன் அளித்து வருகின்றன. அதனால் விவசாயிகள

தங்கள் விளைபொருட்களுக்கு பின்னர் நல்ல விலையைப் பெற முடியும். 1992-93 ஆம் ஆண்டில் சரக்கீட்டுக் கடனாக ரூ. 430.63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1993-94 ஆம் மற்றும் 1994-95 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.500.00 இலட்சம் மற்றும் ரூ.550.00 இலட்சம் சரக்கீட்டுக் கடனாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

4. பதப்படுத்துதல்.

விவசாயிகளுக்கு பதப்படுத்தும் வசதிகளைக் குறைந்த செலவில் அளிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்கள் பலவகையான பதப்படுத்தும் அலகுகளை நிறுவியுள்ளன. இந்த பதப்படுத்தும் அலகுகளை நிறுவ தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும், அரசிடமிருந்தும் பங்கு மூலதனமாகவும், கடனாகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. தற்போது 29 அரிசி ஆலைகள், 16 பருத்தி அரைவை ஆலைகள், 11 கடலை உடைக்கும் இயந்திரங்கள், 9 எண்ணெய் ஆலைகள், 1 எண்ணெய் ஆலைத் தொகுப்பு, 2 பழம் பதப்படுத்தும் அலகுகள், 2 காபி அரைவை ஆலைகள், 1 காபி பதப்படுத்தும் அலகு 1 குளிர் பதன அலகு, 1 மரவள்ளிக்கிழங்கு ஆலை, 1 மஞ்சள் அரைவை ஆலை, 4 மாவு ஆலைகள், 2 பருப்பு ஆலைகள், 2 சேமியா பதப்படுத்தும் அலகுகள், 2 விதை பதப்படுத்தும் அலகுகள், 1 புளி பதப்படுத்தும் அலகு மற்றும் 1 சீகைக்காய் அரைவை ஆலை ஆக 86 பதப்படுத்தும் அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

5. கிராமிய மற்றும் விற்பனைச் சங்கக் கிடங்குகள்.

கிராமங்களில் உற்பத்தியாகும் விளைபொருட்களை கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்காக கிராம அளவிலும், நகர அளவிலும் கூட்டுறவுத் துறையின் மூலம் கிடங்குகள் கட்டப்படுகின்றன. அரசு கிடங்குகள் கட்டத் தேவையான நிதியுதவியினை 45 சதவீதம் அரசு பங்கு மூலதனமாகவும், 50 சதவீதம் கடனாகவும் மீதியுள்ள 5 சதவீத நிதியினை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சொந்த நிதியிலிருந்தும் முதலீடு செய்து கிடங்குகள் கட்டப்படுகின்றன. 1992-93 ஆம் ஆண்டில் 50 கிராம கிடங்குகளும் 9 விற்பனைச் சங்க கிடங்குகளும் 12,400 மெட்ரிக் டன் கொள்ளளவில் கட்ட திட்டமிடப்பட்டிருந்தது. உலக வங்கியில் கிடங்கு கட்டுவதற்கான 4வது திட்டம் செயல்படுத்தப்படாமல் தாமதமாகும் என்று தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து மேற்கண்ட திட்டம் 92-93ல் செயல்படுத்துவது கைவிடப்பட்டது. தமிழ்நாட்டில் இன்றைய நிலவரப்படி 5,097 கிடங்குகள் 7.09 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளவுடன் செயல்பட்டு வருகின்றன. 1993-94 ஆம் ஆண்டின் இறுதியில் கூட்டுறவுகளின் மூலம் செய்யக்கூடிய கிடங்கு கொள்திறன் அளவானது 7.18 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு உயரக் கூடிய நிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1994 ஏப்ரல் 30]

அத்தியாயம்-5.

நுகர்வோர் கூட்டுறவு.

1. அமைப்பு.

தமிழ்நாட்டில் தற்பொழுது நுகர்வோர் கூட்டுறவு, தொடக்க நிலையில் 3,712 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுடனும் (மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உட்பட) மாவட்ட நிலையில் 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுடனும், மாநில நிலையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் கொண்டு செயற்படுகின்றது.

நுகர்வோர் கூட்டுறவுகளின் தலைமை அமைப்பான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 1966 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டுள்ளது இறக்குமதி, மூலமாகவும், மொத்தக் கொள்முதல் மூலமாகவும், அத்தியாவசிய நுகர் பொருட்களை கிடைக்கச் செய்தலும், தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட மற்றும் தொடக்க நிலை நுகர்வோர் கூட்டுறவுகளின் செயற்பாட்டினை ஒருங்கிணைத்தலும், இந்த இணையத்தின் தலையாய நோக்கமாகும். சென்னையில் "மண்டல விநியோக மையம்" ஒன்றினை அது துவங்கியுள்ளது. 7000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்றினைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பாட நூல்களை விநியோகிப்பதில் ஒருங்கிணைப்பு முகவராகச் செயல்படுகிறது.

இணையத்தின் செயல்பாடு குறித்த விபரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சங்களில்).

ஆண்டு.	கொள்முதல்.	விற்பனை.	வியாபாரத்தில் திரண்ட செயல் விளைவுகள்.
1989-90	481.65	541.41	(-) 66.75
1990-91	354.60	377.71	(-) 65.57
1991-92	189.76	224.70	(-) 34.70
1992-93	176.12	190.32	(+) 0.84
1993-94 (1993 டிசம்பர் திங்கள் வரை)	52.12	68.46	(+) 5.07

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடம் நிலுவையிலுள்ள பெருங்கடன் தொகையினை தீர்க்கும் வகையிலும் இணையத்தை சிறந்த

TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 30

வழியில் செயல்படுத்தவும், கீழ்க்குறித்த புனரமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(அ) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடம் நிலுவையிலிருந்த இணையத்தின் கடன் நிலை ரூ.312/- இலட்சத்திலிருந்து ரூ.49.63 இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளது. இணையத்தின் நடைமுறை மூலதனமாக ரூ.100/- இலட்சம் காசுக் கடனாக (ஆதாரம் இல்லாமல்) மாநில வங்கி அனுமதித்துள்ளது.

(ஆ) கூட்டுறவு கொள்முதல் குழு ஏற்படுத்தி, அதன் மூலம் குறிப்பிட்ட வேளாண் பொருட்களை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை இணையம் மேற்கொண்டுள்ளது. இணையம் அதன் வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடன் கூட்டுறவு அச்சகங்களுக்கு அச்சுத்தாள் விநியோகிப் பதற்காக காகித ஆலைகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய ஏற்பாடுகள் செய்துள்ளது. இத்தகைய வியாபாரத்தில் கிடைக்கின்ற இலாபத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தில் ரூ.5.00 இலட்சம் காப்புத் தொகையாக செலுத்தி கூட்டுறவுகளுக்கு தேவைப்பட்டியலைப் பூர்த்தி செய்ய முன் வந்துள்ளது. அதிக அளவில் நுகர்பொருட்களை வியாபாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

(இ) பணியாளர்களின் செலவினை குறைக்கும் நோக்குடன் இணையத்தின் 87 உபரி பணியாளர்கள் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் பல்வேறு மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஈ) பிற மாநிலங்களில் கிடைக்கும் பருவ கால வேளாண் பொருட்களை பெருத்த அளவில் கொள்முதல் செய்து, அதன் உறுப்பினர்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க இணையம் ஏற்பாடு செய்துவருகிறது.

2. நுகர்பொருட்களின் சில்லறை விற்பனை.

1992-93 ஆம் ஆண்டில் எல்லா வகை நுகர்வோர் கூட்டுறவுகளும் செய்த நுகர்பொருட்களின் சில்லறை விற்பனை மதிப்பு ரூ.1236.10 கோடி ஆகும். 1993-94 ஆம் ஆண்டிற்கு ரூ. 1400 கோடி அளவிற்கும் 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூ. 1550 கோடி அளவிற்கும் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவுகள் செய்யும் விற்பனையில் மூன்றிலொரு பங்கு விற்பனை தமிழ்நாட்டில் தான் செய்யப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள நுகர்வோர் கூட்டுறவுகள் நாட்டில் முதல் இடத்தை தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு வருகின்றது.

1994 ஏப்ரல் 30]

3. பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்துவதில் கூட்டுறவு அமைப்புகளின் தலையீடு.

அரிசி விற்பனை.

தனி வணிகர் சிலர் கடைபிடித்த நியாயமற்ற வியாபாரப் பழக்கத்தால் அரிசியின் சில்லறை விற்பனை விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. பண வீக்கத்தை கட்டுப்படுத்தவும், பேராசைமிக்க வணிகர்களின் பிடியில் இருந்து பொது மக்களை மீட்கவும் 1 கிலோவுக்கு ரூ.7/- வீதம் வெளிச்சந்தையில் அரிசி விற்பனை செய்ய சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. அக்கூட்டுறவுகளின் கிளைகள் மூலமாக மட்டுமின்றி சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள முக்கியமான குடியிருப்பு பகுதிகளில் நடமாடும் அங்காடிகள் மூலமாகவும் விற்பனை செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

4. சிறப்பங்காடிகள் மற்றும் சிறு சிறப்பங்காடிகள்.

மாநிலத்தில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் தொடக்கக் கூட்டுறவுப் பண்டசாலைகள் 34 பல்பொருள் சிறப்பங்காடிகளையும், 234 சிறு சிறப்பங்காடிகளையும் (நவீன சில்லறை விற்பனை நிலையங்களும், பெரிய அளவு சில்லறை விற்பனைக் கடைகளும்) நடத்தி வருகின்றன. 1992-93 ஆம் ஆண்டு இப்பண்டக சாலைகள் நடத்த எந்தவித நிதி உதவியும் மத்திய அரசிடம் இருந்து பெறப்படவில்லை. மேலும், இந்த மத்திய அரசு ஆதரவுத் திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கும் திட்டம் மாநில அரசுக்கு 1.4.92 முதல் மாற்றப்பட்டு விட்டது.

5. சுயசேவைப் பிரிவு ஆரம்பித்தல்.

வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவைப்படும் நுகர்பொருட்களின் தரம் மற்றும் விலைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு வசதி மற்றும் விருப்பத்திற்கேற்ப பொருட்களை அவர்களே தேர்ந்தெடுத்து வாங்குவதற்காக சுயசேவைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய சுயசேவைப் பிரிவுகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களின் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், கூர்ந்து கவனிக்கும் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்யவும் ஏற்படுத்தப்பட்ட நவீன உத்திகளில் ஒன்றாகும். இம்முயற்சிக்கு நல்ல ஆதரவு மக்களிடமிருந்து

[1994 ஏப்ரல் 30

கிடைத்து அதனால் நுகர்வோர் கூட்டுறவுகளில் வியாபாரம் பெருகியுள்ளது. மாநிலத்தில் இப்போது 64 சுயசேவைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் தேனாம்பேட்டையில் உள்ள புதிய காமதேனு சுயசேவைப் பிரிவு தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் சுமார் 6,000 சதுர அடி பரப்பளவில் இயங்கும் சுயசேவைப் பிரிவாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1994 ஏப்ரல் 30]

அத்தியாயம் - 6.

பொதுவிநியோகத் திட்டம்

1. நியாயவிலைக் கடைகள் மூலம் இன்றியமையாப் பொருட்களை விநியோகித்தல்.

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்டமானது 119.43 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 75 முதன்மை சங்கங்கள் மற்றும் 4,915 இணைப்புச் சங்கங்கள் வழியாக 20,912 நியாயவிலைக் கடைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பொது விநியோகத் திட்டம் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 75 கோடி அளவிற்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் பாமாயில் விநியோகம் செய்யப்படுகின்றன.

நகர்ப்புற மற்றும் புறநகர் நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கையும் அவைகளுடன் இணைக்கப்பட்ட குடும்ப கார்டுகளின் விவரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

	கடைகளின் எண்ணிக்கை.
நகரம்	4384
ஊரகம்	16528
மொத்தம்	**20912**

29. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், 111 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 4360 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், 18 பெரிய அளவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், 359 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மற்றும் 38 பிற வகைச் சங்கங்கள் இணைப்புச் சங்கங்களில் அடங்கும். மொத்த 20,912 நியாயவிலைக் கடைகளில், 4384 நகரக் கடைகளாகவும், 16,528 கிராமப்புறக் கடைகளாகவும் செயல்படுகின்றன. இந்தியாவில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சில்லறை வியாபாரம் செய்யும் அமைப்பை பெருமளவில் கூட்டுறவுச்

[1994 ஏப்ரல் 30

சங்கங்கள் மூலம் செயல்படுத்தும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட அளவு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

வரிசை எண்.	பண்டங்களின் பெயர்.	1992-93 ஆம் ஆண்டில் (1.4.93 முதல் 31.3.93 வரை) விநியோகிக்கப் பட்ட அளவு.	மதிப்பு (ரூபாய் கோடியில்.)	1993-94ஆம் ஆண்டில் (1.4.93 முதல் 31.12.93 வரை) விநியோகிக்கப் பட்ட அளவு	மதிப்பு (ரூபாய் கோடியில்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
		மெ.டன்னில்.		மெ.டன்னில்.	
11.	அரிசி	1311622	459.07	1102318	385.81
2.	சர்க்கரை	238205	197.71	225558	187.21
3.	கோதுமை	156696	54.84	110964	38.83
4.	மண்ணெண்ணெய் (கி.லிட்டரில்)	585628	163.98	496914	139.13
5.	பாமாயில் (மெ. டன்னில்)	9747	25.83	1346	3.57
	மொத்தம்		**901.43**		**754.55**

2. பொது விநியோகத் திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

(i) மாநில அளவில் செயல்படும் பொது விநியோகத் திட்டம் ஒவ்வொரு மாதம் இரண்டாவது செவ்வாய்க்கிழமை அன்று அரசுச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், பொது விநியோகத் திட்டத்தினை ஆய்வு செய்யும் பொருட்டு தேவையானபோது இவ்வாறான மாதாந்திர கூட்டமும் கூட்டப்படுகிறது. மாதந்தோறும் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பொது விநியோகத் திட்டச் செயல்பாட்டினை ஆய்வு செய்கின்றனர். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் நடத்தப்படும் மண்டல இணைப்பதிவாளர் ஆய்வுக் கூட்டத்தின்போதும், பொது விநியோகத்

1994 ஏப்ரல் 30]

திட்டம் பற்றிய செயல்பாட்டினை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திறனாய்வு செய்கின்றார்.

(ii) தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஆலோசனைக்குழு கூட்டத்தில், தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கலந்து கொண்டு, பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்துவதில் தோன்றும் இடர்பாடுகளை களைவது தொடர்பாக விவாதித்து அவைகளைத் தீர்வு செய்ய நடவடிக்கையும் மேற்கொள்கின்றனர்.

(iii) அனைத்து மாவட்டங்களிலும் வட்டம் மற்றும் கடை அளவில் கண்காணிப்புக் குழுக்கள் உள்ளன. மேலும், கண்காணிப்புக் குழுவை மாதம் ஒருமுறை கூடுவதை உறுதி செய்ய கிராமம் மற்றும் வட்ட அளவில் கண்காணிப்புக் குழுவைக் கூட்டுவதற்கு அதன் கூட்ட அழைப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அண்மையில், 5-11-93-ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் அரசு ஆணை எண் 616-ல் ஏற்கெனவே மாவட்ட அளவில் உள்ள கண்காணிப்புக் குழு மற்றும் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்களை கலைத்துவிட்டு அதற்குப் பதிலாக மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக்குழு அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இக்குழுவானது நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பொது விநியோகத் திட்டம் தொடர்பான பொருட்களை விவாதித்து அதனை மேம்படுத்துவதற்கான கருத்துக்களைத் தெரிவிக்கும்.

(iv) கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பணியாற்றும் விற்பனையாளர்கள் செய்யும் முறைகேடுகளுக்கு அவர்கள் மீது தொடரப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான வழக்குகளை தீர்வு செய்ய "ஒழுங்கு நடவடிக்கை ஆய்வுக்குழு" ஒன்றை அரசு மாவட்டந்தோறும் அமைந்துள்ளது. இந்த ஒழுங்கு நடவடிக்கை ஆய்வுக்குழுவானது நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை நிலுவை இணங்கள் குறித்து ஆய்வு செய்யும்.

(v) கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் ஏற்படும் விற்பனையாளர்களின் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு மாவட்டந்தோறும் ஒரு "மாவட்டத் தேர்வுக்குழு" ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இம்மாவட்டத் தேர்வுக்குழுவானது தேவையான கூட்டுறவு நியாயவிலைக்கடைப் பணியாளர்களைத் தேர்வு செய்யும்.

(vi) கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்தல்.

[1994 ஏப்ரல் 30

கூட்டுறவுத் துறையில் உள்ள பல்வேறு அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டிய கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

வ.எண்.	பதவி.	மாதந்தோறும் ஆய்வு செய்யப்பட வேண்டிய கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை.	
1.	இணைப்பதிவாளர் (பொ.வி.தி)		45
2.	மண்டல இணைப்பதிவாளர்கள்		10
3.	சரகத் துணைப்பதிவாளர்கள்		10
4.	துணைப்பதிவாளர் (பொ.வி.தி) சென்னை நகரம்		60
5.	துணைப்பதிவாளர் (பொ.வி.தி) மாவட்டங்களில்		50
6.	கூட்டுறவு சார் பதிவாளர் (பொ.வி.தி) சென்னை நகரம்	முறையாக இவருக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து கூட்டுறவு நியாய விலைக் கடைகள்.	மேலோட்டமாக வாரத்திற்கு இருமுறை இவருக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து கூட்டுறவு நியாய விலைக் கடைகள்.
7.	கூட்டுறவு சார் பதிவாளர் (பொ.வி.தி) மாவட்டங்களில்	25	15

அயற்பணி அடிப்படையில் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களும் கீழ்க்கண்டவாறு அவர்கள் பணியாற்றும் நிறுவனங்கள் நடத்தும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்ய வேண்டும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30]

வ.எண்.	பதவி.	மாதந்தோறும் ஆய்வு செய்யப்பட வேண்டிய கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை.
1.	முதன்மை அலுவலர்களாகப் பணிபுரியும் இணைப்பதிவாளர்/ துணைப்பதிவாளர்.	20
2.	பொது மேலாளர்/செயலாளர்/ வணிக மேலாளராக பணியாற்றும் துணைப்பதிவாளர்கள்.	20
3.	முதன்மை அலுவலர்களாகப் பணிபுரியும் கூட்டுறவு சார் பதிவாளர்கள்.	20

(vii) பறக்கும் படை.

மண்டல இணைப்பதிவாளர் மற்றும் இணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் பணி புரியும் அலுவலர்களைக் கொண்டு கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை திடீர் ஆய்வு செய்ய "ஒரு சிறப்பு பறக்கும்படை" அமைக்கின்றனர். இச்சிறப்புப் பறக்கும் படையானது மாதந்தோறும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை திடீர் ஆய்வு செய்யும். மேலும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகம் மற்றும் பிற நிறுவனங்களில் உள்ள கிடங்குகளிலிருந்து உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் போது ஏற்படும் முறைகேடுகளைக் கண்டுபிடிக்க ஆய்வு செய்யும் பொருட்டு சிறப்பு பறக்கும்படை மண்டல இணைப்பதிவாளர் மற்றும் இணைப்பதிவாளரால் (பொது விநியோகத் திட்டம்) அமைக்கப்படுகிறது.

(viii) சென்னை நகரில் உள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் காணப்படும் சமூக விரோதிகளின் தொல்லைகளைக் களைவதற்கு அது தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கையினை ஆய்வு செய்யவும் சென்னை நகர காவல் ஆணையாளர் நடத்தும் மாதாந்திரக் கூட்டத்தில் இப்பொருள் தொடர்பாக ஆய்வு செய்யவும், சென்னை நகர காவல் ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இது போலவே புறநகர்ப் பகுதியில் செயல்படும் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் காணப்படும் சமூக

[1994 ஏப்ரல் 30

விரோதிகளின் தொல்லை குறித்து, ஆய்வு செய்ய காவல்துறைக் கண்காணிப்பாளர் செங்கற்பட்டு (கிழக்கு) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

(ix) தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து, அத்தியாவசியப் பொருட்கள் சரியான அளவில் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்ல முடிந்த, அளவுக்குத் தரப்படுத்தப்பட்ட கோணிப்பைகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

(x) தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து எடுத்துச் செல்லப்படும் அத்தியாவசியப் பொருட்கள் எடை மாறுபட்டு இருப்பு குறைவு இன்றி சரியான எடையுடன் கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு சென்று சேர்வதை உறுதி செய்ய, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிச் செல்லும் லாரியுடன் செல்வதற்கு கூட்டுறவுத்துறை அலுவர்கள் தனியாக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.

3. சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம்.

நாட்டின் பிற பகுதிகளில் உள்ளபடி, தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் 1.1.92 முதல் சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் செயல்பாட்டிலுள்ளது. தமிழ்நாட்டில் 68 ஊராட்சி ஒன்றியங்கள் சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வருகின்றன. இச்செயல்பாட்டு பகுதியில் 2326 கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் 11,15,107 குடும்ப அட்டைதாரர்களுக்கு சேவை புரிகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஒரு நியாயவிலைக் கடைக்கு இணைக்கப்பட்ட சராசரி குடும்ப அட்டைகள் 479 ஆகும். மத்திய தொகுப்பிலிருந்து, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50 வீதம், வழங்கும் விலைக்குக் குறைவாக, இந்திய அரசு அரிசி வழங்குகிறது. ஆனால், நமது மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கும் விலை, மைய அரசால் குறைக்கப்பட்ட விலையைவிட குறைவாக உள்ளது. 1992 ஜூன் மாதம் முதல் 830 மெ.டன் அரிசியை இத்திட்டத்தின் கீழ் இந்திய அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டப் பகுதிகளுக்கு மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கும் கூடுதல் ஒதுக்கீடு தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டப்பகுதியிலுள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் பகிர்ந்தளித்தால், ஒரு குடும்ப அட்டைதாரருக்கு கூடுதலாக ஒரு கிலோ கூட வழங்க இயலாது. எனவே, இக்கூடுதல் ஒதுக்கீடு தற்போது ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் முன்னேற்றத்திட்டம் மற்றும் மலைப்பகுதி முன்னேற்றத் திட்டங்கள் செயல்படும் 13 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள

1994 ஏப்ரல் 30]

குடும்ப அட்டைதாரர்களுக்கு கூடுதலாக 4 கிலோ வீதம் வழங்கப்படுகிறது. சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் 1992 ஜூன் முதல் 1992 டிசம்பர் வரை 2527.375 மெ.டன் அளவிற்கு 4 கிலோ கூடுதல் அரிசி விநியோகிக்கப்பட்டது. 1993ஆம் ஆண்டில் (1993 நவம்பர் வரை) 6683.74 மெ.டன் அளவிற்கு 4 கிலோ அரிசி இத்திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டது.

4. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் ஊரக வளர்ச்சித் துறையால் நிருவகிக்கப்படுகிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒரு மனித நாளுக்கு 2 கிலோ வீதம் உணவுப் பொருட்கள் கட்டாயமாக வழங்க வேண்டுமென இந்திய அரசு ஆணையிட்டுள்ளது. பணியாளர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மட்டுமே அரிசி வழங்க வேண்டுமென இந்திய அரசு தெரிவித்துள்ளது. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிபுரியம் தொழிலாளர்களுக்குரிய அரிசியை, இந்திய உணவுக் கார்ப்பரேஷனிட மிருந்து எடுத்துச் செல்ல அவற்றை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் முதன்மை/இணைப்புச் சங்கங்கள் வழியாக நியாயவிலைக் கடைகளில் விநியோகம் செய்ய வேண்டுமென மாநில அரசு அறிவுரை வழங்கியுள்ளது. இதன்படி தமிழ்நாட்டில் இத்திட்டம் 1993 ஏப்ரல் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

5. கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு நிதியுதவி.

(அ) கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில், நட்டத்தில் இயங்கும் கிராம நியாயவிலைக் கடைகளுக்கு 1993-94-ஆம் ஆண்டில் ரூ.1260 இலட்சங்கள் மானியமாக அரசு ஒப்பளித்துள்ளது. முந்தைய ஆண்டுகளுக்குரிய மானியமும் இதில் அடங்கும்.

(ஆ) 1993-94-ஆம் ஆண்டில் நட்டத்தில் இயங்கி வரும் நகர்ப்புற நியாயவிலைக் கடைகளுக்கு ரூ.80 இலட்சம் மானியமாக அரசு ஒப்பளித்துள்ளது.

6. நடமாடும் நியாயவிலைக் கடைகளை நடத்த கூண்டு உந்துகள் (வேன்கள்) வாங்க அரசு நிதியுதவி.

மலைப்பகுதிகள் மற்றும் அணுக முடியாத இடங்களில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மலைவாழ் மக்களின் மேன்மைக்காக நடமாடும்

[1994 ஏப்ரல் 30

நியாயவிலைக் கடைகளை நடத்த, கூண்டு உந்துகள் வாங்க அரசு நிதியுதவி செய்து வருகிறது. 18 கூட்டுறவுச் சங்கங்களுக்கு 19 கூண்டு உந்துகள் வாங்க ரூ.59.50 இலட்சங்கள் இதுவரை அரசு ஒப்பளித்துள்ளது. இக்கூண்டு உந்துகள் மலைப்பகுதி மற்றும் மலைவாழ் பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் நடமாடும் நியாயவிலைக் கடைகளாக செயல்பட்டு வருகின்றன.

7. விற்பனையாளர்களின் சம்பளம்.

1-4-1994 முதல் கிராம நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களின் தொகுப்புச் சம்பளத்தை ரூ.600/-லிருந்து ரூ. 750-ஆக அரசு உயர்த்தியுள்ளது. இவ்வுயர்வின் விளைவாக கூட்டுறவுகளுக்கு ரூ.31.43 இலட்சங்கள் கூடுதல் செலவாகும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30]

அத்தியாயம்-7.

தனி வகைக் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் பழங்குடியினர் மேம்பாடு

1. தனிவகைக் கூட்டுறவுகள்

நலிவுற்ற பிரிவைச் சார்ந்த சில சமுதாய பிரிவினரான தொழிலாளர்கள், சலைவையாளர்கள், முடித்திருத்துவோர், உப்புத்தொழிலாளர் மற்றும் மலைவாழ் இனத்தவரின் நலனுக்கென சிறப்பினமாகச் சிலவகை கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்கள் ஒப்பந்தப் பணிகளைப் பெற்று அதன் மூலம் தமது உறுப்பினர்கட்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றன. 18 கூட்டுறவு அச்சகங்கள் தமது உறுப்பினர் சங்கங்கள் மற்றும் பிற கூட்டுறவுச் சங்கங்களின் அச்சுப் பணிகளை ஏற்று நியாயமான விலையில் பணியாற்றி வருகின்றன. பிற சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்குக் கடன் (அல்லது) சேவையை அளித்து வருகின்றன. மான்யம், பங்கு மூலதனம், கடன் மற்றும் துறைப்பணியாளர்களின் இலவச சேவை ஆகியவைகளை இத்தனி வகைச் சங்கங்கட்கு அரசு அளிக்கிறது.

2. கூட்டுறவுத் துறையில் இயற்கை மருந்து தயாரித்தல்.

இம்ப்காப்ஸ் (IMPCOPS) எனப்படும் இந்திய மருத்துவர்கள் கூட்டுறவு மருந்து செய் நிலையம் மற்றும் பண்டகசாலை சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவ முறையில் இயற்கை மருந்துகளைத் தயாரித்து வழங்கி வருகிறது. 1944-ஆம் ஆண்டில் சென்னையில் நிறுவப்பட்ட இந்த கூட்டுறவுச் சங்கம் சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவத்துறையில் பதிவுபெற்ற மருத்துவர்கள் 9836 பேர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அவர்களுடைய தேவைக்கேற்ப மருந்துகளைச் செய்து வழங்கி வருகிறது.

ஆரம்ப காலத்தில் சுமார் ரூ.20,000/-க்கு விற்பனை செய்து வந்த இச்சங்கம், கடந்த ஆண்டில் ரூ.4.40 கோடி மதிப்பளவில் விற்பனையைப் பெருக்கியுள்ளது.

உறுப்பினர்கள் மற்றும் வாங்குவோரின் வசதிக்காக மருந்து விற்பனை நிலையங்கள் சென்னை அண்ணாசாலை, மதுரை, தஞ்சாவூர், சேலம், திருச்சிராப்பள்ளி, பெங்களூர், ஐதராபாத், விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

3. பழங்குடியினர் மேம்பாடு

தமிழ்நாட்டில் தற்போது 18 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 74,881 மலைவாழ் மக்களை உறுப்பினர்களாகக் கொண்டு

செயல்பட்டு வருகின்றன. முதல் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அமைக்கப்பட்டது. பெரும்பாலான பழங்குடியினரின் குடும்பங்கள் இச்சங்கங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. பழங்குடியினரின் ஏழ்மையான பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு, அரசு இச்சங்கங்களுக்கு தொடர்ந்து நிதியுதவிகளைத் தாராளமாக வழங்கி வருகிறது. இச்சங்கங்கள் பயிரிடுதல் மற்றும் உற்பத்திக் காரியங்களுக்காகச் சலுகை வட்டியில், அதாவது ஆண்டுக்கு நான்கு சதவீதத்தில் 1984-85 வரை கடன் வழங்கின. தற்போது இச்சங்கங்கள் வட்டியில்லாக் கடன்கள் வழங்கி வருகின்றன. 1992-93-ல் வட்டி மான்யமாக அரசு ரூ.39.52 இலட்சம் வழங்கியது. ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டப்பகுதி மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டமில்லாத பகுதிகளுக்கு உறுப்பினர் பங்கு மூலதன மான்யம், வட்டி மான்யம், போக்குவரத்து மான்யம், துறை அலுவலர் மான்யம், சங்க அலுவலர்களுக்கான மான்யம் மற்றும் வாகனத்தைப் பராமரிக்க மான்யம் என்ற பல தரப்பட்ட திட்டங்களின் கீழ் 1993-94-ஆம் ஆண்டில் ரூ.79.00 இலட்சம் நிதியுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1985-86 முதல் இச்சங்கங்கள் எய்திய முன்னேற்ற விவரம் வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

ஆண்டு	வழங்கிய கடன்	வேளாண் பொருள் கொள்-முதல்	வேளாண் இடு பொருள் வழங்குதல்	சிறுவனப் பொருள் கொள் முதல்	நுகர் பொருள் விநியோகம்.
1.	2.	3.	4.	5.	6.
1985-86	98.48	11.00	26.41	22.15	95.90
1986-87	120.26	14.27	29.20	34.15	104.39
1987-88	166.52	13.85	32.15	54.39	136.20
1988-89	228.29	16.48	35.66	45.05	167.43
1989-90	273.17	29.54	47.26	45.04	194.93
1990-91	321.00	30.89	52.97	50.16	239.34
1991-92	406.43	79.30	73.89	87.20	268.60
1992-93	409.88	71.65	93.52	87.23	309.67
1993-94 (டிசம்பர் 93 வரை)	291.79	61.21	56.56	34.56	300.37.

1994 ஏப்ரல் 30]

அத்தியாயம்-8

கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி.

1. கொள்கை பரப்புதல் மற்றும் விளம்பரம்.

கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டினை சீரிய நிலையில் கவனிக்கவும், பலதரப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காகவும், உறுப்பினர்களுக்கும் சங்கப் பணியாளர்களுக்கும் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி அளித்தல், விளம்பரம் மற்றும் கொள்கை பரப்புவதற்காக 1914-ல் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மாநில அளவிலான சங்கமாக அமைக்கப்பட்டது. இது தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி விளம்பரம் மற்றும் கொள்கை பரப்புதல் ஆகிய பணிகளையும் கண்காணிப்பதோடு, ஆராய்ச்சி மற்றும் கல்விக்கும் பொறுப்பேற்று நல்ல பல ஆக்கப் பணிகளை ஆற்றி வருகின்றது.

மாவட்ட அளவில் 16 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் மேற்கூறிய பணிகளைச் செயல்படுத்தி வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் எல்லா தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. அதனுடைய நிதி அங்கத்தினர்களாக உள்ள சங்கங்களிடமிருந்து பெறும் சந்தா கட்டணங்கள், வெளியீடு, விற்பனை மற்றும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவுக் கல்வி நிதி வசூல் ஆகியவற்றின் மூலம் கிடைக்கிறது. மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தின் செயல்பாட்டு எல்லையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் தவிர மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தின் உறுப்பினர்களாக உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவுக் கல்வி நிதி என்ற இரண்டு நிதிகளை நிர்வகித்து வருகிறது. ஒவ்வொரு உறுப்பினர் சங்கமும் தங்களது நிகர இலாபத் தொகையிலிருந்து முறையே 3 சதவீதமும், 2 சதவீதமும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு சந்தா செலுத்த வேண்டும். வசூல் தொகையில் 10 சதவீதத்தினை தங்களது செலவிற்காக மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் வைத்துக் கொள்கின்றன. இந்த இரண்டு நிதிகளும் 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 90 மற்றும் 91-ன்படி அமைக்கப்பட்ட குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் இக்குழுக்களுக்கு பதவி வழித் தலைவராவார். (Ex. Officio President)

[1994 ஏப்ரல் 30

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் இதழ்கள் வெளியிட்டும், பொருட் காட்சிகள் நடத்தியும், சுவரொட்டிகள், படக்காட்சிகள் மற்றும் சினிமாப் படங்கள் மூலமும் கூட்டுறவுக் கொள்கைகளை பரப்பி வருகின்றது. இது உறுப்பினர்களுக்கு கல்வித் திட்டமும் நடத்தி வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் கூட்டுறவு வார விழாவினை நடத்தி கூட்டுறவுக் கொள்கைகளை மக்களிடம் பரப்பி வருகின்றது.

2. கூட்டுறவுப் பயிற்சி.

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, சேலம், காஞ்சீபுரம், வேலூர், திருநெல்வேலி, சாத்தூர் மற்றும் கடலூர் ஆகிய 9 இடங்களில் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் இளநிலையாளருக்குப் பயிற்சி அளித்து வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களில் பணியில் சேர விரும்புவோருக்கும் 2 முதல் 42 வாரங்கள் வரையிலான பல்வேறு பொது அடிப்படைப் பயிற்சிகளை அளித்து வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் வழிமுறைகளின் படி கூட்டுறவு பட்டயப் பயிற்சி, கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அஞ்சல் வழி கூட்டுறவு பட்டயப்பயிற்சியும், 1992-93 முதல் இந்தப் பயிற்சி நிலையங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

இடைநிலை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் நடேசன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியும் மதுரையில் ஒரு கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக IV-வது திட்டத்தின் கீழ் மாதவரத்தில் ரூ.2.22 கோடி செலவில் ஒரு வேளாண்மைக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையம் 1992-ல் நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையத்தை உருவமைத்து, நிறுவி பயிற்சித் திட்டங்களைச் செயல்முறைப்படுத்தும் பணியினைத் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி செய்துள்ளது. இப்பயிற்சி நிலையத்தில், கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு அவர்கள் வேலைக்குத் தொடர்புடைய மற்றும் தேவையான குறுகிய காலப் பயிற்சிகள் இப்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்பட்டு வருகின்றன.

1994 ஏப்ரல் 30]

அத்தியாயம்-9

கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்.

பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டு கட்டங்களில் முறையே 1992-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் திங்கள்களில் தேர்தல் நடத்த அரசாணை (நிலை) எண். 286, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள்.11-6-92-ல் அரசு ஆணை இட்டிருந்தது. மேற்படி அரசாணைப்படி தேர்தல் பணிகள் துவங்கப்பட்டபோது உறுப்பினர்கள் சேர்க்கை, நீக்கம் மற்றும் வாக்காளர் பட்டியல்கள் தயாரித்தல் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் பல நீதிப் பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மேற்படி நீதிப்பேராணை மனுக்களின் பேரில் சென்னை உயர்நீதிமன்றம், பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கு 31-10-92-க்குள் தேர்தல் நடத்துவதற்கு அனுமதி அளிக்குமாறு அரசு உச்ச நீதிமன்றத்திடம் கொடுத்துள்ள விண்ணப்பத்தின் பேரில் உச்ச நீதிமன்றம் அரசுக்கு அனுமதி ஏதும் வழங்காத நிலை உள்ளதால், பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைபெற இருந்த தேர்தலை ஒத்தி வைக்குமாறு W.M.P 14985/1992 மற்றும் W.P.NO. 10375/1992-ல் அரசுக்கு 7-8-92-ல் உத்தரவிட்டது. மேலும், மேற்படி நீதிப்பேராணைகளின் தொகுப்பை நீதி ஈராயத்தின் விசாரணைக்கு அனுப்பியது. இருந்தபோதிலும் நாளது தேதிவரையில் மேற்படி நீதிப் பேராணை மனுக்கள் சென்னை உயர் நீதிமன்ற ஈராயத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

மேற்கண்டவாறு சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணைகள் தவிர உச்ச நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள நீதிப் பேராணை மனு எண்.758/91-ல் மனுதாரர் பிரதமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்காட விண்ணப்பம் (ஐ.ஏ) 4/92 தாக்கல் செய்துள்ளதற்கு அரசு எதிர் ஆணையுறுதிப் பத்திரம் தாக்கல் செய்துள்ளது. தற்போது இவ்வழக்கிடை விண்ணப்பம் 4/92-ல் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளது.

இச்சூழ்நிலையில், உச்ச நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையாக உள்ள வழக்குகள் முடிவுற்ற பின்னரே கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த இயலும்.

[1994 ஏப்ரல் 30

அத்தியாயம்- 10.

1993-94 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட உறுதி மொழிகளும் அதன் மீதான நடவடிக்கைகளும்.

1. இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகரில் கூட்டுறவு மத்திய வங்கிகள் துவக்குதல் தொடர்பாக.

ஒரு மாவட்டத்திற்கு ஒரு கூட்டுறவு மத்திய வங்கி என்று அரசு கொள்கை அளவில் முடிவெடுத்துள்ளது.

இதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு முறையே இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கையினை தலைமையிடமாகக் கொண்டு பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் மற்றும் விருதுநகரை தலைமையிடமாகக் கொண்டு காமராசர் மாவட்டம் எனப் பிரிக்கப்பட்டது. இவற்றில் காமராசர் மற்றும் பசும்பொன் முத்து இராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் 2-9-93 முதல் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்படத் துவங்கின. இராமநாதபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மதுரையிலிருந்து இராமநாதபுரத்திற்கு மாற்றப்பட்டு 2-9-93 முதல் செயல்படத் துவங்கியது.

2. திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களுக்கு புதிய மத்தியக் கூட்டுறவு வங்கிகள் துவக்குதல் குறித்து.

திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களுக்கு புதிய கூட்டுறவு வங்கிகள் துவக்க தற்போதைய கூட்டுறவு வங்கிகளை பிரிக்கும் வகையில் கருத்துரு தேசீய விவசாய ஊரக வங்கிக்கும் மற்றும் ரிசர்வ் வங்கி, பம்பாய்க்கும் அனுப்பப்பட்டுள்ளது. அவைகளிடம் இருந்து ஆணை பெறப்பட்டதும், நடைமுறை வழிமுறைகளை அனுசரித்து இவைத் தொடங்கப்பெறும்.

3. நாகப்பட்டினம் காயிதேமில்லத் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டங்களில் புதிதாக மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நிறுவுதல் குறித்து.

இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து தீர்வாணைப் பெற்றபின் கும்பகோணத்தை தலைமையிடமாகக் கொண்டு, இயங்கிவரும் மத்தியக் கூட்டுறவு வங்கி நாகப்பட்டினத்திற்கு மாற்றப்பட உள்ளது. தென்னாற்காடு மாவட்டம் கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு, தென்னாற்காடு

1994 ஏப்ரல் 30]

வள்ளலார் மாவட்டம் எனவும், விழுப்புரத்தை தலைமையிடமாகக் கொண்டு விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் எனவும் பிரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திற்கு புதிய மத்தியக் கூட்டுறவு வங்கி துவக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் மகளிர் கிளைகள் துவக்குவது குறித்து.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக மகளிரால் நிர்வகிக்கப்படும் ஒரு மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளையினை நிறுவ உத்தேசிக்கப்பட்டு 14 மகளிர் கிளைகள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. மேலும் ஏழு கிளைகள் விரைவில் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

5. பண்ணை சாரா இனங்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தொழில் நுட்பக் குழு ஏற்படுத்துதல் குறித்து.

தேசீய விவசாய ஊரக வளர்ச்சி வங்கி, பண்ணை சாரா இனங்களுக்கு, கைவினைஞர் மற்றும் கலைஞர் ஆகியோர்களுக்கு கடனை விஸ்தரிக்கும் வகையில் ஒரு விரிவான வழிமுறைகளை வகுக்க கோரியது. இத்திட்டத்தின் வெற்றியானது தொழில் நுட்ப மதிப்பீட்டினை பெரிதும் சார்ந்து உள்ளது. இதனடிப்படையில் 7 தொழில்நுட்ப குழுக்கள் முறையே கோயம்புத்தூர், சேலம், வேலூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் துவக்கப்பட்டுள்ளது.

6. மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் ஒரு பொதுவான பணித் தொகுப்பு முறை உருவாக்குதல் குறித்து.

ஒரு பொதுவான பணித்தொகுப்பு (காமன் கேடர்) மத்திய கூட்டுறவு வங்கி பணியாளர்களுக்கிடையே ஏற்படுத்துவது குறித்து சில காலங்களாக அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அரசு ஆணை எண்.2டி எண்.74 கூட்டுறவு, மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, 23-12-92-ல் கொள்கை அள்வில் நிர்வாக இயக்குநர்கள், செலாளர்கள் மற்றும் உதவி செயலாளர்கள் ஆகியோரை உள்ளடக்கி தமிழ்நாடு மத்திய கூட்டுறவு வங்கி பணியமைப்பு என்ற அமைப்பினை ஏற்படுத்தியது. மேலும் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வங்கியின் தனி அலுவலர், கூடுதல் பதிவாளர் (கடன்) இரண்டு மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயலாளர்கள், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வங்கியின் பொது மேலாளர் ஆகியோர்களைக் கொண்ட குழுவினை பொதுவான பணித் தொகுப்பு முறையினை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் ஏற்பாடுகளை தீர்மானிக்கக் கோரியது. அக் குழுவும் தனது அறிக்கையினை சமர்ப்பித்து, அந்த அறிக்கை தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1994 ஏப்ரல் 30

அத்தியாயம்-11.

முடிவுரை

வேளாண்மைக் கடன் வழங்குதல், இடு பொருள் வழங்குதல், நுகர்வோர் பணிகள், வேளாண் விளை பொருள் விற்பனை மற்றும் விலைகளை நிலைநிறுத்துவதற்கென சந்தைத் தலையீட்டு முறை முதலியவை வாயிலாக மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு கூட்டுறவு நிறுவனங்கள் பெரும் பணி ஆற்றி வருகின்றன. எனவே பொதுவாக மக்களுக்கும், குறிப்பாக சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களுக்கும் கூட்டுறவு நிறுவனங்களின் பணிகளை விரிவுபடுத்தும் நோக்குடன் அவற்றை வளப்படுத்துவது இன்றியமையாததாகும்.

தமிழ்நாடு சட்டப்பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

(114 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

தமிழ் நாட்டில் தொழிலாளர் நலன்

கொள்கை விளக்கம்

1994-95

அத்தியாயம்-1

1.1. நாட்டின் தொழில் அமைதியைக் காத்து சுமூகமான தொழில் உறவினை நிலை நாட்டுவதும், தொழிலாளர்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அவர்களது குறைபாடுகள் அனைத்தும் தொழிலாளர் நலத்துறையின் மூலம் தீர்வு காணப்படுவதும் தமிழக அரசின் முக்கியமான குறிக்கோள்களாகும். வேலை நிறுத்தங்களற்ற ஒரு சுமுகமான தொழில் உறவு நிலவும் சூழ்நிலையில் தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினர் தங்களது கூட்டு முயற்சி மற்றும் உழைப்பின் சக்தியை உணர்ந்து, நாட்டு நலனைப் பெரிதெனக் கொண்டு உற்பத்தித் திறனைப் பெருக்க உதவுவதற்கு தொழிலாளர் துறை பெரிதும் பாடுபட்டு வருகிறது. வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பினால் வீணான மனித உழைப்பு நாட்கள், இவ்வரசின் முயற்சியால், 1992ம் ஆண்டு 28,68,472 ஆக இருந்தது 1993ம் ஆண்டு 24, 22, 103 ஆகக் குறைந்துள்ளது.

1.2. இவ்வரசு தொழிலாளர்களின் நலனைக் காப்பதில் உறுதி கொண்டுள்ளது. இதற்காக பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் தீர்ப்புகள் போன்றவற்றைத் தீவிரமான முறையில் அமுல்படுத்த சீரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அத்தியாயம்-2

தொழில் உறவுகள்:

2.1. ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதில் இந்த அரசு முனைப்பாக உள்ளது. 1993ம் ஆண்டில் எழுப்பப்பட்ட 10,709 தொழிற் தகராறுகளில் 8,834 வழக்குகள் சமரச அலுவலர்களால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க சில ஒப்பந்தங்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. மதுரை கோட்ஸ் லிமிடெட், தூத்துக்குடி:

இந்நிறுவனத்தில் ஊதிய மறு நிர்ணயம் குறித்து 11-6-1993 அன்று நிர்வாகம் சில தொழிற்சங்கங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு எதிராகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இந்த வேலை நிறுத்தம், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் தலையீட்டினாலும், தொழிலாளர் ஆணையரின் அறிவுரையின் பேரிலும் 13-9--1993 அன்று சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது. இதன் மூலம் 2000 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

2. லட்சுமி மில்ஸ் கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூர்.

மற்றும்

3. விஜயேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ், பொள்ளாச்சி:

லட்சுமி மில்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் 3 பிரிவுகளைச் சார்ந்த சுமார் 3500 தொழிலாளர்களும், விஜயேஸ்வரி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தினைச் சார்ந்த 700 தொழிலாளர்களும், அரசு ஆணையின்படி இடைக்கால நிவாரணம் மற்றும் ஒட்டு மொத்தத் தொகை கோரி மேற்கொண்ட வேலை நிறுத்தமானது தொழிலாளர் ஆணையரின் அறிவுரையின் பேரில் 12-5-1993 அன்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

4. அசோக் லேலண்ட் லிமிடெட், ஒசூர்:

ஊதிய மறு நிர்ணயம் மற்றும் படிகள், முதலியவைகள் கோரி இந்நிறுவனத்தின் 1500 தொழிலாளர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் 18-5-1993 அன்று தொழிலாளர் ஆணையர் முன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

5. பென்டேஷியா கெமிக்கல்ஸ் லிமிடெட், கடலூர்:

இந்நிறுவனத்தின் 83 தொழிலாளர்களால், சிறப்பு ஊக்கத் தொகை கோரி மேற்கொள்ளப்பட்ட உள்ளிருப்பு வேலை நிறுத்தம் மற்றும் அதனைத் தொடர்ந்த கதவடைப்பு ஆகியவை தொழிலாளர்

ஆணையரின் முன்பு ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் 26-4-1993 அன்று விலக்கிக் கொள்ளப்பட்டு, தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர்.

6. டி.டி. லிமிடெட், ஒசூர்:

ஊதிய மறு நிர்ணயம் மற்றும் வீட்டு வாடகைப்படி ஆகியவை கோரி இந்நிறுவனத்தில் 170 தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம் 2-6-1993 அன்று தொழிலாளர் ஆணையரின் முன்பு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

7. பனியன் தொழில் நிறுவனங்கள், திருப்பூர்:

ஊதிய மறு நிர்ணயம் மற்றும் சில கோரிக்கைகளின் பேரில் சுமார் 1 லட்சம் பனியன் தொழிலாளர்களால் 10-8-1993 அன்று முதல் மேற்கொள்ளப்பட இருந்த வேலை நிறுத்தம் தொழிலாளர் ஆணையரின் முன்பு 9-8-1993 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி தடுக்கப்பட்டது.

8. வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, வேலூர்:

இந்நிறுவனத்தில் வேலைப்பளு நிர்ணயம் சம்பந்தமான தொழிற் தகராறு தொழிலாளர் இணை ஆணையர் (நிர்வாகம்) முன்பு 27-10-1993 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் 800 பணியாளர்கள் பயனடைந்தனர்.

9. தமிழ்நாட்டில் அமைந்துள்ள தோல்பதனிடும் தொழிற்சாலைத் தொழிலாளர்கள்:

ஊதிய மற்றும் இதர படிகளின் உயர்வு கோரி, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள 75,000 பணியாளர்கள் சம்பந்தப்பட்ட தொழிற் தகராறு தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்பு 7-10-1993 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி தீர்த்து வைக்கப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு தொழிலாளரும் மாதம் ரூ. 315/- ஊதிய உயர்வு மற்றும் ரூ. 900/- நிலுவைத்தொகை பெற்று பயனடைந்தனர்.

10. காவேரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்:

இந்நிறுவனத்தில் ஏற்பட்ட வேலைப்பளு நிர்ணயம் மற்றும் விரிவாக்கப்படி ஆகியவை குறித்த தொழிற்தகராறு தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்பு தீர்த்து வைக்கப்பட்டது. இதன் மூலம் 700 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

2.2. தொழிற்தகராறுகள், தீர்வு காணப்பட்ட விவரங்கள், வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், சமரசம் செய்யப்பட்டவைகள் இவற்றில் தொழில் வாரியாகத் தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரங்கள் இணைப்புக்கள் 1 முதல் 4 வரையுள்ளவாறு தரப்பட்டுள்ளன.

2.3. போனஸ் பிரச்சினைகள்:

1993-ம் ஆண்டில் போனஸ் பிரச்சினைகள் குறித்த தொழிற் தாவாக்கள் வெகு சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டன. மேலும் சமரச அலுவலர்களின் உரிய நேரத்திலான தலையீட்டின் காரணமாக இவ்வாண்டில் போனஸ் பிரச்சினை சம்பந்தமான வேலை நிறுத்தங்கள் மிகக் குறைவாகும்.

2.4. மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு உதவித் தொகை அளித்தல்:

1993-ம் ஆண்டு, 12 மூடப்பட்ட பஞ்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களிலுள்ள 8,163 தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 32,65,200 நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

2.5. தொழிலாளர் நீதிமன்றங்கள்:

இம்மாநிலத்தில் 10 தொழிலாளர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகள் செயல்படும் இடங்கள் மற்றும் இவற்றின் ஆட்சி எல்லைகள் பின்வருமாறு:-

தொழிலாளர் நீதிமன்றங்கள்	ஆட்சி எல்லை.
1. முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், சென்னை.	சென்னை மற்றும் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டங்கள்.
2. முதல் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை.	
3. இரண்டாம் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை.	
4. தொழிலாளர் நீதிமன்றம், வேலூர்.	வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் தருமபுரி மாவட்டங்கள்,
5. தொழிலாளர் நீதிமன்றம், சேலம்.	சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்கள்.

6. தொழிலாளர் நீதிமன்றம், கடலூர்.	தென்னாற்காடு-வள்ளலார், தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டங்கள்.
7. தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத்தூர்.	கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்.
8. தொழிலாளர் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.	திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
9. தொழிலாளர் நீதிமன்றம், மதுரை.	மதுரை, திண்டுக்கல்-அண்ணா, காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்.
10. தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி.	திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள்.

2.6. இந்த 10 தொழிலாளர் நீதிமன்றங்கள் தவிர, இம்மாநில முழு ஆட்சி எல்லைக்கு உட்பட்ட தொழில் தீர்ப்பாயம் ஒன்று சென்னையில் உள்ளது.

அத்தியாயம்-3

தொழிலாளர் சட்ட அமுலாக்கம்:

3.1.1. பீடி தொழிலாளர்கள், உணவு நிறுவனங்களின் தொழிலாளர்கள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் தொழிலாளர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் போன்ற பிரிவுத் தொழிலாளர்களின் பணி நலன்களை முன்னிட்டு பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் அமுலில் உள்ளன.

3.1..2. இச் சட்டத்தின் பயன்கள் தொழிலாளர்களைச் சென்றடைய வேண்டும் எனும் குறிக்கோளை அடையத் தகுந்தவாறு தொழிலாளர் துறையின் சட்ட அமுலாக்கப் பிரிவு ஊக்குவிக்கப்பட்டுள்ளது. அமுலாக்கப் பணியின் முக்கிய குறிக்கோள்கள் சட்டத்தின் பயன்களை தொழிலாளர்கள் அடையச் செய்வதும், நுகர்வோர் நலத்தினைப் பாதுகாப்பதும் ஆகும்.

3.1.3. எடைகள் மற்றும் அளவுகள் உட்பட தொழிலாளர் நலச் சட்டங்கள் சரியாக அமுல் செய்யப்படுகின்றனவா என்று உறுதி செய்து கொள்ள, சிறப்பு சோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பொட்டலப் பொருட்கள் விதிகள் உட்பட, எடையளவுச் சட்டங்களின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் இசைவுத் தீர்வை முறையானது (Compounding Methods) நீதிமன்றத்தில் வழக்குகள் தொடருவதின் மூலம் ஏற்படும் தேவையற்ற மற்றும் கால விரயத்தைத் தடுக்க உதவுகிறது. 1993-ம் ஆண்டு இசைந்த தீர்வையின் மூலம் எடையளவுகள் சட்டம் மற்றும் பொட்டலப் பொருட்கள் விதிகளின் கீழ் 36,786 வழக்குகளில் ரூ. 51,37,925 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

குறைந்தபட்ச ஊதியச் சட்ட அமுலாக்கம்:

3.2.1. பேச்சு வார்த்தைகளின் மூலம் தங்களது உரிமைகளைப் பெற இயலாத அமைப்பு ரீதியற்ற முறையில் இயங்கும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் பயன்களைப் பெற்றுத் தருவதே அரசின் முக்கிய நோக்கமாகும்.

3.2.2. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் மிகுந்துள்ள தொழில்களுக்கு அரசு குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்து வருகிறது. இதுநாள் வரை 67 தொழில்கள் குறைந்தபட்ச ஊதிய சட்ட அட்டவணையில் அரசால் சேர்க்கப்பட்டுள்ளன.

3.2.3. தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவினத்தைச் சரிக்கட்டும் வகையில், குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்யும் தருணங்களில் அடிப்படை ஊதிய விகிதங்களைத் தவிர, நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் அடைப்படையில் கணக்கிடப்படும் அகவிலைப்படியையும் நிர்ணயம் செய்வதை அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் தற்போது ஈராண்டிற்கு ஒருமுறை மறு நிர்ணயம் செய்யப்படுகின்றன.

3.2.4. நிர்ணயம் செய்யப்படும் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் நாளொன்றிற்கு ரூபாய் 20-க்கு குறையாத வகையில் இருக்க வேண்டுமென்பதை அரசு தனது கொள்கையாகக் கொண்டுள்ளது.

3.2.5. அரசின்னால் பல்வேறு தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து வெளியிடப்படும் அறிக்கைகளைச் செயல்படுத்த இயலாதவாறு நிர்வாகத்தினரால் உயர்நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெறப்பட்டு நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதனால் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய குறைந்தபட்ச ஊதியம் மறுக்கப்படுகிறது. நிர்வாகத்தினரின் இப்போக்கினைத் தடுக்கும் பொருட்டு, இந்திய அரசியல் அமைப்பின் 2-வது அட்டவணையில் குறைந்தபட்ச ஊதியத்தை சேர்க்கும்படி இந்தியத் தொழிலாளர் மாநாடு மற்றும் தொழிலாளர் அமைச்சர்கள் மாநாடு போன்ற தேசீய அளவிலான கூட்டங்களில் இவ்வரசு எடுத்துரைத்துள்ளது.

3.2.6. 1993-94 ஆம் ஆண்டில் பின்வரும் தொழில்களுக்கு அரசால் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

நிர்ணயம்:

1. தேங்காய் உரிப்புத் தொழில்.
2. பாலிதீன், பதப்படுத்தப்பட்ட போம் வகைகள் மற்றும் பிளாஸ்டிக் தயாரிப்புத் தொழில்.
3. தச்சு மற்றும் கருமார் தொழில்.
4. உணவு பதப்படுத்தும் தொழில்.

மறு நிர்ணயம்:

1. புகையிலை (பீடி சுற்றுதல்) தயாரிப்புத் தொழில்.
2. முந்திரித் தொழில்.
3. கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் சாலைப் பராமரிப்புத் தொழில்.
4. செயற்கை வைரக் கற்களுக்கு பட்டை தீட்டும் தொழில்.

5. பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு ஃபால் பேக் ஊதிய மறு நிர்ணயம்.

6. மர ஆலைத் தொழில்.

7. விவசாயத் தொழில்.

8. பட்டு கைத்தறி நெசவுத் தொழில்.

9. தையற் தொழில்

10. மருத்துவமனை மற்றும் மருத்துவ இல்லத் தொழில் (அரசு மற்றும் ஈ.எஸ்.ஐ. மருத்துவ இல்லங்கள் நீங்கலாக).

11. கைத்தறி நெசவு (பருத்தி) தொழில்.

3.2.7 காற்றூட்டப்பட்ட நீர் (Aerated Water) தயாரிப்பு தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் குறித்து குறைந்தபட்ச ஊதிய ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

3.2.8 பின்வரும் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம்/ மறு நிர்ணயம் குறித்து பரிசீலனையில் உள்ளன.

நிர்ணயம்:

கடல் உணவு பதப்படுத்தும் தொழில்.

மறுநிர்ணயம்:

1. தோட்ட நிறுவனங்கள் (தொழிலாளர்கள்) தொழில்.

2. பொதுப் பொறியியல் மற்றும் கட்டமைப்புத் தொழில்.

3. விசைத் தறித் தொழில்

4. வனத் தொழில்.

5. புகையிலை (பீடி தயாரிப்பு) தொழில்.

6. புகையிலை (வாசனை மற்றும் மெல்லும்) தயாரிப்புத் தொழில்.

7. புகையிலை (மூக்குப்பொடி) தயாரிப்புத் தொழில்.

8. செங்கல் மற்றும் ஓடு தயாரிப்புத் தொழில்

9. விலைக்கு வாங்கும் தேயிலைகளைப் பதப்படுத்தும் தொழில்.

10. கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தொழில்.

11. சலவை நிலையங்கள் மற்றும் துணி வெளுக்கும் தொழில்.

12. ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி தொழில்.

13. அரிசி ஆலைகள், பருப்பு ஆலைகள் மற்றும் மாவு ஆலைகள் தொழில்.

14. வீட்டு உபயோகப் பாத்திரங்கள் தயாரிப்புத் தொழில்.

3.2.9. தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் தயாரிக்கும் தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதிய ஆலோசனைக்குழு அமைப்பது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

3.2.10 தொழில் நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவை பற்றிய விவரம் இணைப்புக்கள் *5* முதல் *7* வரையில் தரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் - 4

நலத்திட்டங்கள்

பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி:

4.1.1. பீடித்தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், வீடு கட்ட செலவாகும் தொகையில் 50 விழுக்காடு அல்லது உயர்ந்த பட்சமாக ரூ. 5,000 மற்றும் அபிவிருத்திக் கட்டணம் ரூ. 1000 ஒவ்வொரு வீட்டிற்கும் உதவித்தொகையாக மைய அரசால் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், வீடுகளைக் கட்டுவதற்கு ஏதுவாக அரசு நிலம் இல்லாவிடில் தகுதியான பட்டாநிலம் மாநில அரசு செலவில் கையகப்படுத்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூரில் உள்ள சத்துவாச்சாரியில் ஏற்கனவே 150 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

4.1.2. பீடித் தொழிலாளர்களுக்கு 1000 வீடுகள் கட்டுவதற்காக திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் மேலப்பாளையம் மற்றும் முக்கூடல் ஆகிய இடங்களில் மாநில அரசு நிலம் ஆர்ஜிதம் செய்துள்ளது. ஒரு வீடு கட்டுவதற்கு ரூ. 22,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டு, அதில் பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ. 5,000 மத்திய அரசின் மான்யமாகவும் மீதமுள்ள தொகை ரூ. 17,000 ஹட்கோ நிறுவனத்திடமிருந்து 22 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தும் தவணை முறையில் 9% வட்டியுடைய கடனாகவும் பெற்றுத் தரப்படும். இந்த வீடுகள் கட்டும் பணி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) இடம் விடப்பட்டுள்ளது.

பீடித்தொழிலாளர்களுக்கென உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை அமுலாக்குதல்:

4.2.1. ஆலங்குளத்தினைச் சேர்ந்த மாவட்ட பீடித் தொழிற்சங்கம், தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட பீடித் தொழிலாளர்களுக்குச் சரிவர அமுல்படுத்துவது தில்லையென உச்ச நீதிமன்றத்தில் 1987-ல் தாக்கல் செய்திருந்த ரிட் மனு மீது, உச்ச நீதிமன்றம் ஆராய்ந்து, 19-11-1991 தேதிய தீர்ப்பு மூலம் 11 கட்டளைகளைப் பிறப்பித்துள்ளது. மேற்படி கட்டளைகள் நிறைவேற்றப்படுவதைக் கண்காணிக்க, மூன்று ஆண்டுகளுக்கு தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவை உச்ச நீதிமன்றம் நியமித்துள்ளது. அதன் தலைவராக உள்ள ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டி, 3 மாதங்களுக்கொருமுறை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களடங்கிய கூட்டத்தை நடத்தி

1994 ஏப்ரல் 30]

உச்சநீதிமன்றக் கட்டளைகள் நிறைவேற்றப்படுவதிலுள்ள முன்னேற்றத்தைத் திறனாய்வு செய்து வருகிறார். அவ்வாறு 1992-ம் ஆண்டில் 3 கூட்டங்களும் 1993-ல் 5 கூட்டங்களும் இதுவரை நடத்தப்பட்டுள்ளன.

4.2.2. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள குறிப்பிடப்பட்ட 10 பீடி தயாரிக்கும் நிறுவனங்களில் வீடுதோறும் கணக்கெடுக்கும் பணி செய்யப்பட்டது.

4.2.3. வீடு தோறும் கணக்கெடுக்கும் பணி இந்த மாவட்டத்தில் உள்ள மற்ற பீடி நிறுவனங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. மேலும், இப்பணி இதுவரை இத்துறையின் களப் பணியாளர்களால் செய்யப்பட்டு வருகிறது. அரசு ஆணை எண். 27, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23-2-1994-ன் கீழ் இப்பணியினைச் செயல்படுத்துவதற்கு சமூக நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொள்ள தொழிலாளர் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிற திட்டங்கள்:

4.3. தொழிலாளர்கள் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் பயன் பெறவும், குறிப்பாக, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு வேண்டிய அறிவுரைகள் வழங்கவும், மாநிலத்தில் மூன்று தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் பணியாற்றுகின்றன.

தொழிலாளர் விபத்து துயர் தணிப்பு நிதி:

4.4. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, பணிக் காலத்தில் ஏற்படும் விபத்தினால் நிரந்தர ஊனம் ஏற்பட்டாலோ அல்லது அவர்கள் மரணமடைந்தாலோ அல்லது தொழிலாளரோ அவரது வாரிசுதாரரோ பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் கீழ் ஈட்டுத் தொகை பெற இயலாமற் போனாலோ, அவ்வமயம் தொழிலாளர்கள் துயர் தணிப்பிற்காக, இந்த நிதி அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து 1993-ம் ஆண்டு 25 வழக்குகளில் ரூ. 41,300/- வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டிடத் தொழிலாளர் நலத் திட்டம், 1994

4.5. தமிழ்நாட்டிலுள்ள கட்டிடத் தொழிலாளர் மற்றும் அணைகள், பாலங்கள், சாலைகள் பராமரிப்புத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மற்றும் இதர கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன் காக்கும் நோக்குடன் "தமிழ்நாடு கட்டிடத்

தொழிலாளர் நலத் திட்டம் 1994" என்ற திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு அத்திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மலைத் தோட்டங்கள்:

4.6. 1951-ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களின் நல மேம்பாடு மற்றும் பணிகள் குறித்து அமுலாக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் ஆலோசனைக்குழு, தோட்டத் தொழிலாளர் சட்ட விதிகளை விரிவாக அமுலாக்கம் செய்ய உரிய காலத்தில் கூட்டப்பட்டு வருகிறது. தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியமானது தொழிலாளர்களின் வீட்டுக் குறியீடு, ஆண்டு முன்னேற்றம் மற்றும் வீட்டு வசதி அமைப்பு குறித்து பரிசீலனை செய்தும் மற்றும் அரசுக்கு ஆலோசனையும் வழங்குகிறது. அதிகமான தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் வழங்குவதில் தமிழ்நாடு தனித்தன்மை பெற்றுள்ளது. இம் மாநிலத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டித் தரப்பட வேண்டிய வீடுகள் 44,408. இதுவரை 40,814 தரமுள்ள வீடுகள், 2,605 தரமற்ற வீடுகளும் (Non-Standard Houses) கட்டித் தரப்பட்டுள்ளன. இது கணக்குப்படி 97.8% ஆகும். 100 சதவிகிதம் வீடு வழங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொழிலாளர் மறுவாழ்வு நிதி:

4.7. நவீனப்படுத்துதலாலோ அல்லது தொழில் நுட்ப மேம்பாட்டினாலோ அல்லது நலிவடைந்த/மூடப்பட்ட நிலையினாலோ ஆட்குறைப்போ அல்லது வேலையின்மையோ ஏற்படுகின்றது. எனவே, அங்ஙனம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களைக் கண்டறிந்து அந்த தொழிலாளர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் பொருட்டு அரசு "புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தொழிலாளர் நல நிதி" என்னும் ஒரு தொழிலாளர் மறுவாழ்வு நிதியை ஏற்படுத்தி ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அத்தியாயம் - 5

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை:

5.1. தொழிலாளர் நலம் என்றாலே நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அளிப்பதே என்ற நிலையை 1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் மாற்றியுள்ளது. தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் மற்றும் அரசு ஆகியோர் அளிக்கும் நல நிதிப் பங்குத் தொகையினைக் கொண்டு பல்வேறு தொழிலாளர்களும் அவர்தம் குடும்பங்களும் பயன்பெறும் வகையில் நலத் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகின்றது.

5.2. தொழிலாளர் மற்றும் நிர்வாகம் ஆகியோரின் பிரதிநிதிகளைக் கொண்ட வாரியம், தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையின் கீழ், தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியை நிர்வகித்து வருகிறது.

5.3. இவ்வாரியம், தமிழகம் முழுமையும் 52 தொழிலாளர் நல மையங்களையும், 19 தையற் பயிற்சி மையங்களையும் நடத்தி வருகின்றது. ஒவ்வொரு மையத்திலும் தொழிலாளர்களின் ஆதரவில் வாழ்ந்துவரும் மகளிர்க்குத் தையற் பயிற்சி கற்பித்தலும், ஒரு பிரிவில் குழந்தைகளுக்கான பள்ளியும் நடத்தப்படுகின்றன. தையற் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ.80 வீதம் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவசக் கல்வியுடன் சத்துணவு, பால், பழம், முட்டை வழங்கப்படுவதுடன் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகள் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. பிரதி ஆண்டும் இரண்டு ஜதை டெரிகாட்டன் சீருடைகளும் வழங்கப்படுகின்றன.

5.4. காசநோயால் அவதியுறும் தொழிலாளர்கள் மருத்துவ மனைகளில் தங்கி சிகிச்சை பெறுவதற்காக டி.பி. சானிடோரியம், தாம்பரம், (26 படுக்கைகள்), திருப்பூர் (26 படுக்கைகள்), ஆசாரிப்பள்ளம் (30 படுக்கைகள்), ஆஸ்டின்பட்டி (20 படுக்கைகள்) மற்றும் கீழ்பெண்ணாத்தூர் (24 படுக்கைகள்) ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இவ்வாரியம் தனிப் பிரிவினைக் கட்டியுள்ளது.

5.5. தொழிலாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தில் 15 இடங்களில் இலவச படிப்பகத்தை இவ்வாரியம் நடத்தி வருகின்றது.

5.6. மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மிகமிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகின்றது. இவ்வில்லங்களில் 1993-ம் ஆண்டில் 12,159 பேர் தங்கி பயனடைந்துள்ளனர்.

5.7. தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்கு/விசாரணை/பேச்சு வார்த்தை ஆகியவற்றிற்காக வருபவர்கள், தங்குவதற்காக ஓர் இல்லம் சென்னை டி.எம்.எஸ் வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 6,909 தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இவ்வில்லத்தில் தங்கி பயனடைந்துள்ளனர்.

5.8. தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு விளையாட்டுத் துறையில் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

5.9. 1993-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்:

(1) காமராஜர் மாவட்டம், இராஜபாளையத்தில், தொழிலாளர் நல மையம் மற்றும் தொழிலாளர் உதவி ஆய்வர் (நல மையங்கள்) அலுவலகம் செயல்பட, வாரியத்திற்குச் சொந்தமாக ரூ. 6,54,500 மதிப்பீட்டில், புதிதாகக் கட்டிடம் கட்டப்பட்டு 16–8–93-ல் திறக்கப்பட்டது.

(2) அதே போன்று குற்றாலம், திரு.வி.க. இல்லக் கட்டிடத்தில் ரூ. 8,20,000 மதிப்பீட்டில் புதிதாக ஒரு கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு 18–1–93 அன்று திறக்கப்பட்டது.

(3) கடலூரில் ஒரு தொழிலாளர் நலமையமும், துலுக்கப்பட்டியில் ஒரு படிப்பகமும், புதுக்கோட்டையில் ஒரு தையற்பயிற்சி மையமும் புதிதாக திறக்கப்பட்டன.

(4) செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், போரூரில் புதிய தொழிலாளர் நல மையம் 11–1–94 அன்று திறக்கப்பட்டது.

(5) வாரியத்தின் நிதிநிலையைப் பொறுத்து, இராமேஸ்வரம், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5.10. இவ்வாரியம் நடைமுறைப்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் பயன் பெற்றவர்களின் விவரம் இணைப்புகள் 8 முதல் 10 வரையில் தரப்பட்டுள்ளது.

அத்தியாயம்-6

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்.

6.1. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிலையம் 1978 ஆம் ஆண்டு முதல்தர நிலையமாக உயர்த்தி அமைக்கப்பட்டது. 1-4-88 முதல் தன்னாட்சி நிறுவனமாக இயங்கி வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஆட்சிமன்றக் குழு இந்நிலையத்தின் நிர்வாகத்தினைக் கவனித்து வருகிறது. தொழிற்சங்கங்களிடையே ஆரோக்கியமான செயல்பாடுகளை உருவாக்குதல். நிர்வாகத்தினருக்குத் தொழிலாளருடன் இணக்கமான நெருக்கத்தினை தோற்றுவித்தல், தொழிலாளர் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல், தொழிலாளர் நிர்வாகத்தில் வெளியீட்டுகள் மூலம் கல்வியைப் பரப்புதல் மற்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல் ஆகியவை இந்நிலையத்தின் நோக்கங்கள் ஆகும்.

6.2. இக்கல்வி நிலையம் பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள், இயல்பாக்க பயிற்சிகள், புத்தாக்கப் பயிற்சிகள் ஆகியவற்றைக் காலமுறையாக நடத்தி வருகிறது. இந்தப் பயிற்சிகள் தொழிலாளர் களுக்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், தொழிலகங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களுக்கும், நிர்வாகப் பணியாளர் களுக்கும், தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் துறை அலுவலர்களுக்கும், பிற துறை அலுவலர்களுக்கும் பயன்படும் வகையில் நடத்தப்பட்டு வருகின்றன.

6.3. 1993ஆம் ஆண்டு 34 பயிற்சிகள் நடத்தப்பட்டு இதன் மூலம் 1,282 பயிற்சியாளர்கள் பயனடைந்தனர். இவ்வாண்டு சர்வதேச அளவில் குழந்தைத் தொழிலாளர் நீக்குதல் செயல்திட்டம் தொடர்பாக 'குழந்தை தொழிலாளர் பிரிவு' ஒன்றும் துவக்கப்பட்டது. இந்த செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் துறை ஆய்வாளர்களுக்கு குழந்தை தொழிலாளர் சட்ட விதிகளை சிறந்த பயனுள்ள முறையில் அமுலாக்கம் செய்வது தொடர்பாக சர்வதேச குழந்தை தொழிலாளர் நீக்குதல் செயல்முறை திட்ட நடவடிக்கையின் கீழ் தேசீயத் தொழிலாளர் கல்வி நிலையத்துடன் சேர்ந்து இக்கல்வி நிலையம் புத்தறிவுப் பல்வேறு பயிற்சியினை நடத்த ஒப்பந்தம் செய்துள்ளது.

6.4. 1993–94 ஆம் ஆண்டு இதுபோன்ற மூன்று பயிற்சிகள் சென்னை, பெங்களூர் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. இப்பயிற்சியினால் 86 அலுவலர்கள் பயன் பெற்றுள்ளனர்.

6.5. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் பின்வரும் பயிற்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

(1) தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் செயல் அலுவலர்களுக்கு 'மனிதவள மேம்பாடு' என்பது பற்றிய பயிற்சி.

(2) தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் நடுத்தர நிலை செயல் அலுவலர்களுக்கு 'தொழில் உணவு மற்றும் உற்பத்தி திறனைப் பெருக்குதல்' என்பது பற்றிய பயிற்சி.

(3) தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் நடுத்தர நிலை செயல்அலுவலர்களுக்கு 'மேற்பார்வை செயல் திறமையை வளர்ச்சியடைதல்' என்பது பற்றிய பயிற்சி.

(4) கூட்டுறவு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 'தொழிலாளர் நல அலுவலரின் பங்கு' என்பது பற்றிய பயிற்சி.

(5) தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு சமரச நடவடிக்கைகள் நீதிதுறை சார்பு மற்றும் அமுலாக்கப் பணித் தொடர்பான பயிற்சி.

6) 'நல்ல தொழிற்சங்க மற்றும் தொழிற்சங்க தலைவர்களை உருவாக்குதல்' என்பது பற்றிய பயிற்சி.

7) தொழிலாளர்கள் மற்றும் அவர்களது இல்லத்தரசிகளுக்கு 'தரமிகு வாழ்வு' என்பது பற்றிய பயிற்சி.

6.6. இக்கல்வி நிலையம் பகுதி நேர தொழிலாளர் நிர்வாகம் சம்பந்தமான ஓராண்டு முதுநிலைப் பட்டயப் படிப்பு 1979 முதல் நடத்தி வருகிறது. இதுவரை 372 மாணவர்களுக்கு பட்டயம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 61 மாணவர்கள் சேர்ந்துள்ளார்கள்.

6.7. 1994 ஜனவரி முதல் 'தொழிலாளர் நிர்வாகம்' சம்பந்தமான ஓராண்டு முதுநிலை பட்டயப் படிப்பு 'அஞ்சல்வழி' கல்வி மூலம் நடத்தப்படவுள்ளது. இப்பட்டய படிப்பிற்கு சுமார் 250 மாணவர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

6.8. சென்னைப் பல்கலைக் கழகம் இக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் மூன்று ஆண்டு தொழிலாளர் நிர்வாக இளங்கலை (பி.எல்.எம்.) பட்டப்படிப்பில் 50 மாணவர்கள் பயிலவும், மூன்று ஆண்டு தொழிலாளர் நிர்வாக முதுகலை (எம்.எல்.எம்.) பட்ட மேற்படிப்பில் 30 மாணவர்கள் பயிலவும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

1994 ஏப்ரல் 30]

இது சம்பந்தப்பட்ட வல்லுநர்களைக் கொண்டு, சிறப்பு விரிவுரைகளும், 'பிரச்சினைகள் முடிக்கப்பட்ட முறை', நிறுவனங்களுக்கு சென்று நேரிடை பயிற்சி பெறுதல் ஆகிய பயிற்சிகளும் நல்ல முறையில் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன.

6.9. 1993-ஆம் ஆண்டு இக்கல்வி நிலையத்தில் பட்ட மேற்படிப்பு முடித்துச் செல்லும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பற்றிய அறிவு அளிப்பதற்காக 'மாணவர் ஆலோசனை மையம்' ஆரம்பிக்கப்பட்டது.

6.10. இக்கல்வி நிலையத்தால் வழங்கப்படும் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிலாளர் நிர்வாகப் பட்டம் மேற்படிப்பு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்குத் தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நல அலுவலர்களாகவும், தமிழ்நாடு தொழிலாளர் துறையில் தொழிலாளர்கள் அலுவலர்கள் மற்றும் உதவி தொழிலாளர் அலுவலர்களாகவும் நியமனம் பெற அதிக வாய்ப்புகள் உள்ளன.

'உழைப்பவர் உலகம்' இதழ் வெளியீடு:

6.11. இக்கல்வி நிலையத்திலிருந்து *1978*-ஆம் ஆண்டு முதல் 'உழைப்பவர் உலகம்' என்ற 'தமிழ் மாத இதழ்' வெளியிடப்பட்டு வருகிறது. இந்த இதழில் தொழிலாளர்களுக்குப் பயன்படும் வகையில் தொழிற் தகராறுகள் தொடர்பான உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்புகளும், நுகர்வோர் விலைவாசி குறியீட்டெண் தொடர்பான புள்ளி விவரங்களும், குறைந்தபட்ச ஊதிய அறிவிக்கைகளும், தொழிற் தகராறுகள் முடிவிற்கு வந்தது சம்பந்தமாக முக்கியமான நடப்பு ஒப்பந்தங்களும், தொழில் நல்லுறவு தொடர்பான கட்டுரைகளும், கேள்வி-பதில், முதலியனவும் வெளியிடப்படுகின்றன. தொழிலாளர் ஆணையரைத் தலைவராகக் கொண்டு இவ்விதழிற்கு 'ஆசிரியர் குழு' ஒன்று செயல்பட்டு வருகிறது.

அத்தியாயம்-7

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை:

7.1.1. தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர பதின்மூன்று தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் அமுல்படுத்தப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் அமுலாக்கத்தினால் பதிவுபெற்ற தொழிற்சாலைகளில் பணியாற்றும் சுமார் 10 லட்சம் தொழிலாளர்களின் சுகாதாரம், தொழிலாளர் நலம், பாதுகாப்பு ஆகியவை பேணப்படுகின்றன.

7.1.2. தமிழகத்தில் 31.12.1993 அன்று 20589 தொழிற்சாலைகள் பதிவு பெற்று உத்தேசமாக 9,72,975 தொழிலாளர்கள் உள்ளனர். 1993 ஆம் ஆண்டு ரூ.3,43,65,283 உரிமத்தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

7.1.3. தொழிலாளர் சட்டங்களினைச் செயல்படுத்தி நிர்வகிக்கும் இத்துறையின் முழு பொறுப்பும் தொழிற்சாலைகள், தலைமை ஆய்வாளரைச் சாரும்.

7.1.4. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளருக்கு உறுதுணையாக ஒரு தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளர், 4 தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள், 28 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள், 47 தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள், 44 தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்கள், ஒரு அறுவை சிகிச்சை மருத்துவர், 8 உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள், ஒரு கணக்கு அலுவலர், மற்றும் ஒரு நிர்வாக அலுவலர் உள்ளனர்.

தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய சார்புள்ள சட்டங்களை நிர்வகித்தல் :

7.2.1. 13 சட்ட அமுல் நடத்தும் கோட்டங்கள் தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தொடர்புள்ள தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்துகின்றன. பயன் தரத்தக்க முறைகள் இத்துறையினரால் மேற்கொள்ளப்படுவதால் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சிறப்பான பணி சூழ்நிலை உறுதிப்படுத்தப்படுகின்றது. மேற்கூறிய சட்டங்களில் குறிப்பாக ஊதியம் வழங்குதல் சட்டம் 1936, குறைந்த பட்ச ஊதியச் சட்டம் 1948 ஆகியவற்றின் கீழ் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் ஆணைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

7.2.2. மாநிலத்தில் தொழிற்சாலை துணை ஆய்வாளர் தலைமையில் ஒவ்வொரு பிரிவும் இயங்குகிறது. 10 சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்கள் செயலாற்றுகின்றன. அழுத்த இயந்திர சோதனை,

பாதுகாப்பு பற்றிய வெளியீடுகள் தயாரித்தல் ஆகியவை இக்கோட்டங்களின் பணிகளாகும்.

7.2.3. 1993 ஆம் ஆண்டில் 28,541 முறையான ஆய்வுகள் மேற்கொண்டதோடு விடுமுறை, சிறப்பு, திடீர், இரவு ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதின் மூலம் 7,263 ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

7.2.4. 1993 ஆம் ஆண்டில் 1948 தொழிலாளர் சட்டத்தின் கீழ் 1,858 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இதுவரை வெவ்வேறு தொழிற்சாலைகள் சட்டங்களின் கீழ் 237 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அபராதத் தொகையாக ரூ. 10,28,215 வசூலிக்கப்பட்டுள்ளது.

7.2.5. தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாதந்தோறும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் மாநில அளவிலும், காலாண்டுதோறும் தொழிற்சங்க பிரதிநிதிகளைக் கூட்டி தொழிலாளர்களின் குறைகளை அறிந்து அவைகள் உடனுக்குடன் கவனிக்கப்படுகின்றன. நடப்பு ஆண்டில் 705 புகார்கள் பெறப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளன. முரண்பாடுகள் காணப்பட்ட நேரத்தில் அவைகளைக் களைய நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட்டுள்ளன

7.2.6. வரைபடங்கள் ஒப்புதல் அளிப்பதைக் துரிதப்படுத்த வரைபடங்கள் ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் சார்நிலை-அலுவலர்களுக்குக் கீழ்க் கண்ட முறையில் பகிர்ந்து அளிக்கப் பட்டுள்ளது :-

(அ) அபாயகரமான உற்பத்தி முறை உள்ள தொழிற்சாலைகள் தவிர்த்து 200 தொழிலாளர்களுக்குக் குறைவாக உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்களை தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள் ஒப்புதல் அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அபாயகரமான உற்பத்தி முறை உள்ள தொழிற்சாலைகள் தவிர்த்து 200க்கு மேற்பட்ட 1000க்குக் குறைவாக உள்ள தொழிலாளர்கள் உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள் ஒப்புதல் அளிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) அபாயகரமான உற்பத்தி முறையில் மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய முறையில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் 1000 தொழிலாளர்களுக்கு மேற்பட்டு உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் ஒப்புதல் அளிக்கப்படுகின்றன.

7.2.7. 1993 ஆம் வருடம் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் 540 வரைபடங்களும், தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்களால் 300 வரைபடங்களும் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் 2,300 வரைபடங்களும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டத்திற்கான திருத்தங்கள் :

7.3.1. சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு தொழிற்சாலை சட்டத்தில் மின் சக்தியுடன் 25 தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற தொழிற்சாலைகளையும் மின்சக்தியின்றி 50 தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற தொழிற்சாலைகளையும் சிறு தொழில் நிறுவனங்களாக வரையறுக்க சட்டத்திருத்தம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

7.3.2. 31.12.93 தேதியில் உள்ளவாறு, 1948ம் ஆண்டைய தொழிற்சாலைகள் சட்டத்தின்படி, 20,589 தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் 10,573 தொழிற்சாலைகள் சிறு தொழில் பிரிவாகும்.

7.3.3. சதாரணமாக 1948 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்பட வேண்டும். மாநிலத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் தொழில் வளர்ச்சி கருதி ஆய்வுப் பணிக்கால அளவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட ஆய்வு பணிக்கால அளவினைக் கீழ்க்கண்டவாறு கடைபிடிக்க சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்.	தொழிற்சாலைகள் வகைப்பாடு	தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டிய காலமுறை
(1)	சிறு தொழில் நிறுவனங்கள் கேடு விளைவிக்கக் கூடிய மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடுபடாதவை (சிறு தொழில் நிறுவனச் சான்று பெற்ற தொழிற்சாலைகள்) ஆய்வு செய்ய வேண்டும்.	இச்சிறு தொழில் நிறுவனங்களை தொழிலாளர்கள் அல்லது தொழிற் சங்கங்களிடமிருந்து புகார் பெறப்பட்டால் மட்டும் அவ்வாறு புகார்கள் பெறப்படாத நிலையில் எப்போதாகிலும் ஒருமுறை ஆய்வு மேற்கொள்ளலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30]

2)	(1) 1950ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி அட்டவணை 1 முதல் 32 முடிய உள்ள அட்டவணை (அட்டவணை 24 தவிர) படி கேடு விளைவிக்கக்கூடிய மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள சிறுதொழில் நிறுவனங்கள்.	இத்தொழிற்சாலைகள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்பட வேண்டும்.
2)	(2) சிறு தொழில் நிறுவனங்கள் (வகைப்படுத்தாத இதர தொழிற்சாலைகள் மட்டும் இதில் அடங்கும்.)	இத்தொழிற்சாலைகள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்பட வேண்டும்.
3)	அட்டவணை 24ற்கு உட்பட்ட தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகள், (அவைகள் சிறு தொழில் நிறுவனமாக வகைப் படுத்தப்பட்டாலும்)	இத் தொழிற்சாலைகள் நான்கு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப் பட வேண்டும்.

7.3.4. தற்போது 1948ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் உரிமத் தொகையினை அசல் செலுத்துச் சீட்டு மூலமாகச் செலுத்தி வருகின்றன. இந் நடைமுறையினை எளிதாக்கும் பொருட்டு உரிமக் கட்டணத்தை கேட்பு வரைவு ஓலை மூலமாகச் செலுத்த 1950-ம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது தற்போது நடைமுறையில் உள்ளது.

7.3.5. தொழிற்சாலைகள் உரிமையாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் உரிமத்தினை புதுப்பித்தலுக்கு பதிலாக அவர்கள் விருப்பம் போல் முதல் உரிமத்தினையோ அல்லது புதுப்பிக்கப்படவேண்டிய உரிமத்தினையோ ஓராண்டுக்கோ அல்லது ஐந்தாண்டுக்கோ உரிமம் பெற்றுக் கொள்ள 1950ம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

7.3.6. அதிக வேலைப்பளு காரணமாக மிகை நேர வேலை பார்க்க ஆண் தொழிலாளர்களுக்கு விதிவிலக்கு ஓராண்டுக்கு அளிக்கப்பட்டு வந்தது. தற்போது தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளுக்கு அளிக்கப்படுகிறது. இது தொடர்பாக சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

7.3.7. பெண் தொழிலாளர்களுக்கு இரவு 10.00 மணி வரை பணியாற்ற தொழிற்சாலை சட்டம் பிரிவு 66–ஐ தளர்த்தி ஓராண்டுக்குப் பதிலாக இரண்டு ஆண்டாக மாற்றி அரசு விதிவிலக்கு அளித்துள்ளது.

7.3.8. டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத்திட்டத்தில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் பணியில் ஈடுபடுத்துவதை அகற்றுவது என்பது ஒன்றாகும். இக்குறிக்கோளை அடைய தீவிர ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறு தொழில் நிறுவனங்களுக்கான குழு :

7.4.1. சிறு தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்கள் செயல்படுத்துவது சம்பந்தமாக கண்காணிக்க மாநில அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை செயலர் குழுத் தலைவராகவும் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினர் செயலாளராகவும் உள்ளனர். இக்குழு அவ்வப்போது கூடி சிறு தொழில் நிறுவனங்களின் குறைகளை கவனித்து அதற்கான நிவர்த்தி வழிகளைத் தெரிவிக்கும்.

7.4.2. சிறு தொழில் நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் தொழிலாளர்கள்/தொழிற்சங்கங்கள் மூலம் புகார்கள் ஏதும் பெறப்பட்டாலோ அல்லது விபத்து ஏதும் நேர்ந்தாலோ ஆய்வு மேற்கொண்டால் போதுமானது எனவும், மேற்படி சிறு தொழில் நிறுவனங்கள் முறையாக ஆய்வு மேற்கொள்வதைத் தவிர்த்து எப்போதாவது ஆய்வு மேற்கொண்டால் போதுமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அபாயம் மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழிற்சாலைகள் சிறு தொழில் நிறுவனங்களாக இருப்பினும் இவைகளை ஆண்டிற்கு இருமுறை ஆய்வு மேற்கொள்ள அரசு தெரிவித்துள்ளது.

7.4.3. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் அத்தொழிற்சாலைகளின் இடையூறு தன்மையினை கருத்திற்கொண்டு நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு மேற்கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது.

7.4.4. குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு உச்ச நீதிமன்றத்தின் கட்டளைக்கிணங்க 10 தொழிலாளர்களுக்குக் குறைவாக பணியாற்றுகின்ற தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளை தொழிற்சாலைச் சட்டத்தின் பிரிவு 85 (1)-ன் கீழ் பதிவு செய்ய நடவடிக்கைகள் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டம் 1981 :

7.5. இச்சட்டம், தொழிலாளர்கள் 24 மாதங்களில் தொடர்ச்சியாக 480 நாட்கள் தொழிற்சாலையில் பணிபுரிந்திருப்பின் அவர்கள் நிரந்தரம்

1994 ஏப்ரல் 30]

செய்யக்கோரும் தகுதியை அளிக்கிறது. 2,577 தொழில் நிறுவனங்கள் இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு 26,021 தொழிலாளர்கள் இந்த ஆண்டு பணியில் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி அளித்தல்.

7.6.1. தொழிலாளர் உடல் நலனை பாதுகாக்கவும், அபாயகரமான விளைவுகளால் உடல் நலம் பாதிக்கப்படும் நிலைமை இருப்பின் அதனின்று பாதுகாத்துக் கொள்ள உரிய பாதுகாப்பு நடைமுறைகளை சேர்த்தும் தொழிற்சாலைகள் சட்டத்திற்கு 1987 ஆம் ஆண்டு இந்திய அரசு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்தது. தொழில் பாதுகாப்பு என்ற குறிக்கோளை விரிவுப்படுத்தி தொழிற்சாலைக்குள் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை மட்டும் அல்லாமல் அத்தொழிற்சாலைகளின் சுற்றுப்புறத்தில் குடியிருக்கும் பொதுமக்களின் நலனையும் பாதுகாப்பையும் கருத்திற் கொள்ள வேண்டும் என்பதும் திருத்தச் சட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

7.6.2. பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான பணிச் சூழ்நிலையை உறுதி செய்யும் பொருட்டு, தொழிற்சாலையின் வரைபடங்கள், கட்டிட ஸ்திரத்தன்மை, காற்றோட்டம், வெளிச்சம், தட்பவெப்பம், பணிச்சூழ்நிலை, குறிப்பாகச் செயல்முறைகள், அபாயப்பணி, இயந்திரங்கள் நிறுவுதல் மற்றும் பொருட்களைக் கையாளுதல் ஆகிய கோணங்களில் தொழிலாளர் ஆய்வகத்தால் ஏற்பளிக்கப்பட வேண்டும்.

7.6.3. நம் மாநிலத்தின் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் இயங்கும் ஆறு பகுதிகளை அடையாளம் கண்டுள்ளோம். அவையாவன : மணலி, நெய்வேலி, கடலூர், ராணிப்பேட்டை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களாகும். இந்த இடங்களைப் பொறுத்தவரை அபாயகரமான உற்பத்தி முறைகளைக் கையாளும் தொழிற்சாலைகளுக்கு விபத்து ஏற்பட்டால் தடுக்கும் முறைகளும், அவ்வாறு விபத்து ஏற்பட்டால் அதனைச் சமாளித்துக் கட்டுப்படுத்தும் திட்டங்களும் (Major Disaster Control Measures) தொழிற்சாலையை சுற்றியுள்ள பகுதியில் எந்தவிதமான பாதிப்பு ஏற்படும்பொழுது மக்களை பாதிப்புக்கு உள்ளாக்காமல் பாதுகாப்பாக வெளியேற்றும் திட்டம், பாதுகாப்பு நடைமுறைகள் (Safety Measures) ஆகியவை திட்டமிடப்பட வேண்டும்.

7.6.4. பெரும் அபாய விபத்துக்களைத் தடுக்கின்ற முறையில் உரிய கருவிகளுடன் கூடிய ஒரு தனிப்பிரிவு சென்னையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது அபாயகரமான உற்பத்தி முறைகளைக் கையாளும் தொழிற்கூடங்களில் ஏற்படும் திடீர் விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு முனையும் சோதனை மற்றும் பாதுகாப்பு பிரிவுடன்

(Testing and Safety Cell) இணைந்து இத்திட்டங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

7.6.5. ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர் தலைமையிலும் அபாயகரமான உற்பத்தி முறைகளைக்கையாளும் தொழிற்சாலைகளைப் (Highly Hazardous Industries) பொறுத்தவரை மாவட்ட அளவில் அவசர கால நிலைமையைச் சமாளிக்க ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்க ஒரு குழு உள்ளது. சோதனை மற்றும் பாதுகாப்பு பொறுப்பில் உள்ள கோட்டத் துணைத் தலைமை ஆயவாளர்கள் இக்குழுவுடன் இணைந்து செயல்படுகிறார்கள்.

தொழிற்சாலைகளுக்கான மனைமதிப்பீட்டுக்குழு :

7.7 தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு *41* (எ)ன்படி அரசு ஒரு மனை மதிப்பீட்டுக்குழு (Site Appraisal Committee) அமைந்துள்ளது. இக்குழு, கேடுவிளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகளின் உரிம விண்ணப்பங்கள் அல்லது இது போன்ற தொழிற்சாலைகளின் விரிவு குறித்தான விண்ணப்பம் ஆகியவற்றினை பரிசீலித்து அரசிற்கு ஆலோசனை நல்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் இக்குழுவின் தலைவராவர். கேடு விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகள் இம்மனை மதிப்பீட்டுக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசின் ஒப்புதல் பெறுதல் வேண்டும். இக்குழு இத்தொழிற்சாலைகளின் வரைபடங்களை பரிசீலித்து அதன் சுற்றுப்புற சூழ்நிலையினை கருத்திற்கொண்டு மனையின் தகுதியினை பரிந்துரைக்கும்.

தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கான பயிற்சி நிலையம்:

7.8.1. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் கையாளுதல், செயல்படுத்துதல், ஏற்றிச் செல்லுதல், சேமித்து வைத்தல் போன்ற பணிகளின் பாதுகாப்பு முறைகளைப் பற்றி தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் தகுதியில் ஒரு அலுவலரைக் கொண்டு பயிற்சி நிலையம் ஒன்று சிவகாசியில் நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. இந்நிலையம் *2–4–93* முதல் செயல்பட்டு வருகிறது. நாளடைவில் விபத்துக்கள் குறைய இந்நிலையம் உதவும்.

7.8.2. அபாயகரமான இரசாயனப் பொருள்களை மூலப் பொருளாக கொண்டு செயல்படும் *59* தொழிற்சாலைகள் இம்மாநிலத்தை பொறுத்தவரை இருக்கின்றன. சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்ட

ஆய்வாளர்கள், தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கு தொழிற்சாலையின் பல்வேறு மட்டத்தில் கையாள வேண்டிய பாதுகாப்பு முறைகளைக் கற்பிக்க பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகிறார்கள்.

7.8.3. 265 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் 227 தொழிற்சாலைகளில், இந்த ஆண்டு நடைபெற்று அதன் மூலம் 7,283 தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளனர். அதிக விபத்துக்கள் நடக்கும் தொழிற்சாலைகளைத் தேர்ந்தெடுத்து அத்தொழிற்சாலைகளை பொருத்தவரை பாதுகாப்பு அளவீடுகள் (Safety Survey) 40 தொழிற்சாலைகளில் நடத்தப்பெற்று, அதன் முடிவுகள், சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு, தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுப்பட்டுள்ளன. 40 தொழில் சார்ந்த சுகாதார அளவீடுகள் (Health Survey) நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7.8.4. தொழிற்பாதுகாப்பு குறித்து சோதனை மற்றும் பாதுகாப்பு பிரிவின் உதவி மருத்துவர்கள் சுகாதார அளவீடு, சோதனை ஆகியவற்றை செய்து சான்றிதழும் வழங்குவர்.

7.8.5. விபத்துக்களின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

ஆண்டு	மரண விபத்து	மரணமில்லாத விபத்து
1989	49	12,471
1990	35	13,062
1991	106	9,341
1992	99	10,099
1993	73	11,334

மாநிலப் பாதுகாப்பு பரிசுகள் மற்றும் 'சிரம்வீர்' பரிசுகள் :

7.9.1. தொழிற்சாலையில் சிறந்த பாதுகாப்பு செயல்களை தெரிந்து கொள்ளவும், தொழில் பாதுகாப்பில் ஆழ்ந்த பற்று கொண்டு இயங்கச் செய்யவும், நிர்வாகத்தினருக்கு, தமிழக அரசு, மாநில பாதுகாப்பு பரிசுகள் வழங்குகிறது. இந்த பரிசு வழங்கும் நோக்கத்திற்காக தொழில் நிறுவனங்கள் கீழ்க்கண்ட மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளன.

தொகுதி-அ.	10 இலட்சம் மனித நேரத்திற்குக் குறைவில்லாமல் வேலை செய்த தொழிற்சாலைகள்.
தொகுதி-ஆ.	5 முதல் 10 இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற் சாலைகள்.

தொகுதி-இ.	2 முதல் 5 இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்.

கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் செயலில் உள்ளன.

திட்டம்-1.	முந்தைய ஆண்டை ஒப்புநோக்கையில் விபத்து விகிதத்தை மிக அதிகமாகக் குறைத்து காண்பிக்கும் தொழிற் சாலைக்கு பரிசினை வழங்குதல்.
திட்டம்-2.	அதே வகைப்பட்ட மற்ற தொழிற்சாலைகளுடன் ஒப்பிடும்போது நிறையிட்ட அதிர்வு எண் விகிதத்தை (Lowest Weighted Frequency) அந்த ஆண்டில் மிகக் குறைந்து காண்பிக்கும் தொழிற்சாலைக்கு பரிசினை வழங்குதல்.
திட்டம்-3.	பரிசுக்குரிய ஆண்டில் விபத்தின்றி அதிக மணி நேரம் செயல் புரிந்த தொழிற்சாலைக்கு பரிசு வழங்குதல்.

7.9.2. அரசால் நியமிக்கப்பட்ட ஒரு குழு, பரிசுக்கேடயங்கள், சான்றிதழ்கள் அளிப்பதற்காக தகுதியான தொழிற்சாலைகளைத் தேர்வு செய்கின்றது.

7.9.3. 1991 முதல், அளிக்கப்படும் பரிசுத்தொகை, கீழ்க்கண்டவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாநில "சிரம்வீர்" பரிசுகள் :

வகையினம் 'அ' :	ரூ.5,000/– வீதம் மூன்று ரொக்கப் பரிசுகள் (முன்பு ரூ.1,000/–வீதம் கொடுக்கப்பட்டது.)
வகையினம் 'ஆ' :	ரூ.3,000/– வீதம் ஆறு ரொக்கப் பரிசுகள் (முன்பு ரூ.500/–வீதம் கொடுக்கப்பட்டது.)
வகையினம் 'இ' :	ரூ.1,000/– வீதம் 15 ரொக்கப் பரிசுகள் (முன்பு ரூ.250/–வீதம் கொடுக்கப்பட்டது.)

அழுத்த இயந்திரங்கள் சோதனை

7.10.1 தமிழ்நாட்டில் 17,731 அழுத்த இயந்திரங்கள் உள்ளன. தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அழுத்த

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இயந்திரத்தையும் தகுதியுள்ள நபர்களால் காலமுறைதோறும் முழுமையாக ஆராய்ந்து அதன் பாதுகாப்பான வேலைத் தன்மைக்கு தகுதிச் சான்று வழங்க வேண்டுமென 1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 1950-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்சாலை ஆய்வகத்துறையே இப்பணியினை செய்து வருகின்றது. அழுத்த இயந்திரங்களை சோதனை செய்யும் பணி, சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

7.10.2. 1993-ம் ஆண்டில் சோதனை செய்யப்பட்ட கலங்களின் விபரம் கீழே வருமாறு :

வெளிப்புறம் (External)	*36,984*
உட்புறம் (Internal)	*307*
நீர்மநிலையியல் (Hydro Static)	*6,062*
கதிர் அதிர்வாய்வு (Ultra sonic)	*1,433*

இந்த நோக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட கட்டணத் தொகை ரூ.*76,19,589* ஆகும்.

தொழிலாளர் உடல் நலம் பேணுதல் :

7.11.1. கடும் விபத்து தடுப்புப் பிரிவுடன் (Major Accident Hazard Control Cell) இணைந்துள்ள தொழிற்சாலை துப்புரவு சோதனைக் கூடத்திற்கு அறுவை சிகிச்சை மருத்துவர் ஒருவர் பொறுப்பிலுள்ளார். இவ்வாய்வகத்துறையில், சென்னை, கோவை, வேலூர், சேலம், திருச்சி, திருநெல்வேலி, கடலூர் மற்றும் மதுரை ஆகிய *8* இடங்களில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

7.11.2. 1993-ல் *11* தொழில் சார்ந்த சுகாதார ஆய்வுகள் தொழிற்சாலை துப்புரவு சோதனைக்கூடத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குளோரின், சல்பர்-டை-ஆக்ஸைடு, சல்பூரிக் ஆசிட் மிஸ்ட், கார்பன்-டை-ஆக்ஸைடு, கார்பன் மோனாக்ஸைடு, மெர்குரி போன்ற நச்சுப்பொருள்களால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் உடல் மற்றும் மனக்கேடுகள், இவற்றைப் பரிசோதித்து, கண்டுபிடிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்டதைவிட அதிகமாக நச்சுத்தன்மை இருப்பின், அதனைக்குறைத்து தொழிலாளர்கள் பயன்படுவதற்காகத் தகுந்த பாதுகாப்பினை அளிப்பதற்காக வழிமுறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

7.11.3. 1993-ம் ஆண்டு அறுவை சிகிச்சை மருத்துவர்களால், *45* தொழிற்சாலைகள் (குறிப்பாக அபாயகரமான தொழிற்சாலைகள்) பார்வையிடப்பட்டுள்ளன. *684* தொழிலாளர்கள், தொழிற்சார்ந்த அபாயங்கள் இருப்பதைக் கண்டு அறிய, பரிசோதிக்கப்பட்டுள்ளனர்.

7.11.4. ஆய்வின்பொழுது, நிர்வாகம், மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு தொழிற்கூட நலம் மற்றும் தனி நபர் நலம் பற்றி தெளிவாக்கப்பட்டது. சிறப்பு மருத்துவ சிகிச்சை தேவைப்படும் தொழிலாளர்களை மருத்துவ வல்லுநர்களிடம் ஆலோசனை பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

7.11.5. சுயபாதுகாப்பு சாதனங்கள், பொது இருப்பிடப் பராமரிப்பு பெரிய விளைவுகளின் பொகய பாதிப்புகள், புகைப்பிடித்தல், மதுப்பழக்கத்திற்கு அடிமையாகுதல் மற்றும் கெட்ட வழக்கங்கள் பற்றி தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. மருத்துவ சோதனை மற்றும் ஆய்வுகள் ஆகிய இரண்டிற்கும் சிறப்பான ஆலோசனைகள், மருத்துவ கருத்துக்கள், தொழிலாளர்களின் தேவைக்கேற்ப அளிக்கப்பட்டுள்ளன.

7.11.6. அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் உதவி சிகிச்சை மருத்துவர்களின் பணிகள் :

1. 1993-ம் ஆண்டில் பார்வையிட்ட தொழிற்சாலைகள்.	...	1,505
2. அபாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பரிசோதிக்கப்பட்ட எண்ணிக்கை.	...	14,304
3. நடப்பு ஆண்டில் சான்றளிக்கப்பட்டவை :		
(அ) அபாயத் தொழில்.	...	14,304
(ஆ) இளம் வயதினர்	...	8,624
(இ) சிற்றுண்டி விடுதி	...	3,517
(ஈ) வசூலிக்கப்பட்ட பரிசோதனை கட்டணம்	...	10,21,311

உற்பத்தி திறன் குழு :

7.12.1. ஆலோசனை நல்கும் அமைப்பான உற்பத்தி திறன் குழு. உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், அதிக ஆதாரங்களைப் பயன்படுத்துதல், வீணாவதை நீக்குதல், கால ஆய்வு/இயக்க ஆய்வு, நடத்துவதன் மூலம் பணிக்கோட்பாடுகளை வரையறுத்தல், வேலை பகுப்பாய்வு, வேலை பாதுகாப்பு, பகுப்பாய்வு நடத்துதல், பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வருதல், தொழிலாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் முறையாக பயிற்சி அளித்தல் போன்ற பணிகளையும் புரிகிறது.

7.12.2. சென்னை உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக் குழுமத்தில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரும், கோவை, மதுரை, சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள பிராந்திய உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக்குழுமத்தில் அங்குள்ள

தொழிற்சாலைகள் இணை/துணை தலைமை ஆய்வாளர்கள் உறுப்பினராகச் செயலாற்றுகின்றனர்.

7.12.3. 1993-ம் ஆண்டு இந்த உற்பத்தி திறன் பிரிவு 32 பயிற்சி வகுப்புகள் நடத்தி 779 தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளார்கள்.

தொழிலாளர் நலம் பேணுதல்.

தமிழ்நாட்டில் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் தொகுதி தனி நபர் விபத்து ஆயுள் ஈட்டுறுதித் திட்டம் :

7.13.1. 1986-ம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து காமராசர் மாவட்டத்தில் பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கென தொகுதி தனி நபர் விபத்து ஈட்டுறுதி திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. பின்னர் இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

7.13.2. இத்திட்டம் ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களுக்கு பார்வை அல்லது கை, கால்கள் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதி செய்யப்பட்ட தொழிலாளர்கள் பணியல் ஈடுபட்டிருக்கும் போது மட்டுமின்றி மற்ற சமயங்களில் ஏற்படும் விபத்துக்களுக்கும் ஈட்டுறுதிப் பயன் கொடுக்கப்படும்.

7.13.3. இத்திட்டத்தினால் 10 வயது முதல் 65 வயது வரையிலான தீப்பெட்டி, பட்டாசு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பயனடைவர். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொழிலாளிக்கும் காப்பீட்டுத் தொகையாக உயர்ந்தபட்சம் ரூ.50,000/-க்கு சந்தா தொகை வருடத்திற்கு ரூ. 6/- ஆக வசூலிக்கப்பட்டது.

7.13.4. இத்திட்டம் 1-7-1992 முதல் 30-6-1993 வரையில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளுக்கு ஒருங்கிணைந்த திட்டமாக நேஷனல் இன்ஸ்யூரன்ஸ் நிறுவனத்தால் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டது. 50,006 தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர். ரூ. 15,50,000 சந்தா தொகையாக வசூலிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் ரூ.11,00,000 இழப்பீட்டுத் தொகையாக சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

7.13.5. 1993-94ம் ஆண்டில் 118 தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் 31,953 தொழிலாளர்களும், 150 பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் 20,341 தொழிலாளர்களும் நியு இந்தியா அசூரன்ஸ் கம்பெனியின் காப்பீடு திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

தேசிய குழந்தை தொழிலாளர் வேலைத் திட்டம் :

7.14.1. இந்த திட்டம் 1986 ஏப்ரல் திங்களில் மைய அரசினால் சிவகாசியில் ஆரம்பிக்கப்பட்டது. 14 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்களை தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரிவதைத் தடுத்து நீக்குதலும், அவர்களது குடும்ப வருமானத்தைப் பெருக்குதலும், கல்வி, சுகாதாரம், பொழுதுபோக்கு முதலான அடிப்படை வசதிகளை அளிப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். தேசீய குழந்தைகள் வேலைத் திட்டச் சங்கத்தினால் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

7.14.2. காமராசர் மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் இந்த சங்கத்தின் தலைவர். கோட்ட வளர்ச்சி அலுவலர் நிலையில் ஒரு திட்ட அலுவலர் இச்சங்கத்தின் உறுப்பினர் செயலராகப் பணியாற்றுகின்றார். இத்திட்டத்தின் கீழ், அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதற்கு ஒரு ஒழுங்கு முறைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

குழந்தை தொழிலாளர் தடுப்பு :

7.15. 1993ம் ஆண்டு நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்ட டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நல திட்டத்தில், குழந்தை தொழிலாளர்கள் பணியில் ஈடுபடுத்துவதை ஒழிப்பது என்பது ஒரு நல திட்டமாகும். குழந்தை தொழிலாளர்களைத் தடுப்பதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது.

தொழிலாளர் நலச் சட்ட முறைப்படுத்துதல் பிரிவினை வலிமையாக்குதல்:

7.16.1. குழந்தை தொழிலாளர் தடுப்பு முறையைச் செயலாக்குவதற்கு தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் இராமநாதபுரத்தில் இருந்து சிவகாசிக்கு மாற்றப்பட்டுள்ளது. தொழிற்சாலை ஆய்வாளர் சரகம்-2 தூத்துக்குடியில் இருந்து கோயில்பட்டிக்கு மாற்றப்பட்டுள்ளது.

7.16.2. மேலும், இந்த திட்டத்தின் செயல்முறையை பலப்படுத்துவதற்காக குழந்தை தொழிலாளர் தடுப்புக்குழு அமைக்க மூன்று உதவி தொழிற்சாலை ஆய்வாளர் பதவிகளை சிவகாசி, மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களுக்கு மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

நலநிதி:

7.17.1. குறிப்பாகத் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்கு மருத்துவ வசதி, பொழுதுபோக்கு வசதி, கல்வி வசதி அளிக்கக்கூடிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் பொருட்டு

ஒரு நல நிதியை அரசு 1-1-1991 முதல் தீப்பெட்டி தொழிற்சாலை தொழிலாளர்களுக்கென உருவாக்கியுள்ளது. இத்திட்டம் 1-4-1992 முதல் பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலை அதிபர்கள் ஒரு தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.10/- வீதம் 1--4-1992 முதல் செலுத்துவதுடன் அரசும் இதற்கு இணையாக மானியம் வழங்கியுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு ஒரு மாவட்டக் குழு இந்த தொழிலாளர் நல நிதியை நிர்வகிக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது.

7.17.2. உச்ச நீதிமன்ற நீதிப்பேராணை எண். 465/86 (W.P.No.465/86)-ன்படி மாவட்டக்குழு ஒன்று மாவட்ட நீதிபதி தலைமையில், மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இக்குழு உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளை அமுல்படுத்துவதைக் கண்காணிக்கும்.

1950-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை சட்ட விதிமுறைகள் திருத்தியமைத்தல்:

7.18.1. தொழிற்சாலை ஆய்வகத்துறை குழந்தை தொழிலாளர் பணிபுரிவதைத் தடுப்பதற்கு தொழிற்சாலை சட்ட விதிமுறைகளின் கீழ் வகுக்கப்பட்ட வழிமுறைகள் செவ்வனே செயல்பட நடவடிக்கை எடுத்து வருகிறது. 14 வயதுக்குக் கீழ் குழந்தைகள் வேலைக்கு அமர்த்துவதைக் கண்டிப்பதைத் தவிர குழந்தைத் தொழிலாளரின் சுகாதாரம், பாதுகாப்பு போன்ற நலத் திட்டங்களில் சட்டமீறு செயல்கள் நடந்தால் அதன் மீது கடுமையான நடவடிக்கையை இவ்வரசு மேற்கொள்கிறது. அத்தகைய செயல்களுக்கு அபராதமும் விதிக்கப்படுகிறது.

7.18.2. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளின் பேரில் 1950--ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் மாற்றியமைக்கப்பட்டன.அதன்படி ஒரு குழந்தையின் பிறந்த தேதியை தினக்கூலி வருகைப்பதிவேட்டில் (Muster-Roll) குறிப்பிட வேண்டும். தீப்பெட்டி தயாரிக்கும் இடத்தில் இருந்து தொலைவில் தீப்பெட்டிகளில் குச்சி அடைக்கும் பணியைத் தனியாக வேறு ஒரு இடத்தில் அமைக்க வேண்டும் என்ற நிபந்தனையும் சேர்க்கப்பட்டுள்ளது.

7.18.3 10 தொழிலாளர்களுக்கும் குறைவாகப் பணிபுரியும் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளும் பிரிவு 85(1)ன் கீழ் தொழிற்சாலை சட்டம் 1948-க்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

1986 ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம்:

7.19. 1986-ம் ஆண்டு குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தினை சீரிய முறையில் அமுல்படுத்துவதற்கு மாநில அரசு விதிகளை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக அரசு ஆணை எண். 225, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 27-12-93-ல் முதல் நிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சர்வதேச குழந்தை தொழிலாளர் தடுப்புத் திட்டம்:

7.20 சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் சார்பில் இத்திட்டம் செயல்படுகிறது. தொண்டுள்ளம் கொண்ட அரசு சார்பற்ற 8 சங்கங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் மூலமாக குழந்தை தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண, கல்வி, பொழுதுபோக்கு வசதி, வேலையளிப்போர், பெற்றோர் ஆகியோருக்கு பயிற்சி ஆகிய பல பணிகளுக்குப் பொருளுதவி அளிக்கப்படுகிறது.

மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக்குழுவின் 1993-ம் ஆண்டின் செயல் :

7.21.1. 18 உறுப்பினர்கள் மூலம் மூன்று குழுக்களாக, 59 கேடுவிளைவிக்கும் தொழிற்சாலைகளில் விரைவு கணக்கெடுக்கும் பணி (Rapid Survey Programme) மேற்கொள்ளப்பட்டது. இக்குழு, அரசின் ஒப்புதலுக்காக ஒரு அறிக்கையினை அனுப்பி, அதனை அரசின் ஒப்புதலுடன், மாநில அளவிலான பணிக்குழுவின் உறுப்பினர்களின் பார்வைக்கு அனுப்பியது.

7.21.2. தோல் பதனிடும் தொழிற்சாலை, சிமெண்ட் மற்றும் காகிதத் தொழிற்சாலைகளில் உள்ள பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவற்றை அறிந்து அதன் சுற்றுப்புற முன்னேற்றத்திற்கான விதிமுறைகளை வகுக்க ஒரு குழு தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு 54 தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு அறிக்கை கொடுத்துள்ளது.

7.21.3. தொழிற்சாலைகள், தொழிலாளர்கள், உரிமத்தொகை பெறப்பட்டது பற்றிய விவரங்கள் இணைப்புக்கள் 11 முதல் 14 வரை கொடுக்கப்பட்டுள்ளன.

அத்தியாயம் 8

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்:

8.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், மத்திய அரசின் தொழிலாளர் அமைச்சகத்தின் நிர்வாகத்தின் கீழ் அமைக்கப்பட்டு, தன்னுரிமையோடு இயங்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால், நிர்வகிக்கப்படும் பங்களிப்புத் திட்டமாகும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் வரையறை செய்யும் விழுக்காட்டின்படி தொழிலாளர்களிடமும், வேலையளிப்போரிடமிருந்தும் பெறப்படும் பங்குத் தொகையிலிருந்து இத்திட்டத்திற்கான நிதி கிடைக்கிறது.

8.2. மின் சக்தியைப் பயன்படுத்தி 10-க்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் மின்சக்தியை பயன்படுத்தாமல் 20-க்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைக்கும் இத்திட்டம் பொருந்தும். மாதம் 3,000 ரூபாய்க்கு மிகாமல் ஊதியம் பெறும் ஈட்டுறுதித் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்கள் கிடைக்கும். இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் விரிவாக்கப்பட்டுள்ளது.

8.3. 1955-ம் ஆண்டு இம்மாநிலத்தில் இத்திட்டம் முதன்முதலில் செயல்படுத்தப்பட்டது. இம்மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் 62 மையங்களுக்கு இத்திட்டம் தற்போது விரிவாக்கப்பட்டுள்ளது.

8.4. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பயன்கள் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்கப்படுகின்றன:-

1. மருத்துவ உதவி	மருத்துவமும், மருத்துவப் பொருட்களாகவும் அளித்தல்.
2. உடல் நலமின்மைக்காக உதவி 3. நீடித்த உடல் நலமின்மைக்காக உதவி 4. பேறுகால உதவி 5. தற்காலிக இயலாமையுற்றோருக்கான உதவி 6. நிரந்தரமாக இயலாமையுற்றோருக்கான உதவி 7. சார்ந்துள்ளோர் நல உதவி 8. இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை 9. உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி	பணமாக அளித்தல்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

8.5. இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட 6 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் அவற்றிற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள படுக்கை எண்ணிக்கையுடன் செயல்பட்டு வருகின்றன.

1.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம் ...	*616*
2.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கோயம்புத்தூர் ...	*540*
3.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை. ...	*209*
4.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர் ...	*50*
5.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சிவகாசி ...	*50*
6.	தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சேலம் ...	*50*

8.6. இவையன்றி, இம்மாநிலத்தில் சென்னை, கோவை, மதுரை, சேலம் ஆகியவற்றின் *4* மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்களின் நிர்வாகத்தின் கீழ் *144* நிலைத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களும், *6* நடமாடும் மருந்தகங்களும், *2* பயன்பாட்டு (Utilisation Dispensary) மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

8.7. இம்மாநிலத்திலுள்ள ஈட்டுறுதி தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டப் பயன்பெறுவோரின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

1.	ஈட்டுறுதித் தொழிலாளர்களின் எண்ணிக்கை	*8,05,000*
2.	இத்திட்டத்தின் கீழ் உள்ள குடும்ப அலகுகளின் எண்ணிக்கை ..	*8,05,000*
3.	இத்திட்டத்தின் பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை ..	*31,23,400*

8.8. *1993-94*ஆம் ஆண்டில் இத்திட்டம் கீழ்க்கண்ட இடங்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

வரிசை எண்களும் பகுதியின் பெயரும்	மாவட்டம்	திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நாள்
(1)	(2)	(3)
1. கடப்பேரி, மெட்ராஸ் எக்ஸ்போர்ட் ப்ராசசிங் ஜோன் (MEPZ)	செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்.	1–9–1993
2. கே.ஜி. சாவடி மற்றும் நவக்கரை, கோயம்புத்தூர் புறநகர்.	கோயம்புத்தூர் மாவட்டம்.	1–12–1993

8.9. ஒசூரில் ரூ. 1.732 கோடி திட்ட மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட ஈட்டுறுதி தொழிலாளர்கள் மருத்துவமனையின் கட்டிடம் முடியும் தருவாயில் உள்ளது. கருவிகள் மற்றும் மரச்சாமான்கள் வாங்க ரூ. 42.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

8.10. 1992-93 ஆம் நிதியாண்டின் சாதனைகள்:

திட்ட விரிவாக்கமும் புதிய மருந்தகத்துவக்கமும்.,

(1) மறைமலை நகர் (சென்னை மண்டலம்) புதிய மருந்தகம் துவக்கம்.

மறைமலை நகர் மற்றும் கூடுவாஞ்சேரி பகுதிகளில் உள்ள காப்பீடு செய்யப்பட்ட 2,000 நபருக்கும் அதிகமானவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 2 மருத்துவர் வகை மருந்தகம் 1992-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் துவக்கப்பட்டது.

(2) பூவிருந்தவல்லி (சென்னை மண்டலம்) அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம்.

பூவிருந்தவல்லியில் ஒரு மருத்துவர் வகை அரசு ஈட்டுறுதி மருத்துவமனை துவக்குவதற்கு மருத்துவ ஏற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1948-ம்ஆண்டு தொழிலாளர் ஈட்டுறுதி சட்டத்தின் விதி 1(3)ன் கீழ் மைய அரசின் முறையான அறிவிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(3) கும்மிடிப்பூண்டி (சென்னை மண்டலம்) தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம்.

கும்மிடிப்பூண்டியில் உள்ள சிப்காட்டில் 2 மருத்துவர் வகை மருத்துவமனை துவக்குவதற்காக மருத்துவ ஏற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன. 1948-ம் ஆண்டு தொழிலாளர் ஈட்டுறுதி சட்டத்தின் விதி 1(3)ன் கீழ் மைய அரசின் முறையான அறிவிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(4) கன்னியாகுமரி மாவட்டம் (மதுரை மண்டலம்) ஆரல்வாய் மொழி சிறிய அரசினர் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை துவக்குதல்

8.11. 740 ஈட்டுறுதி செய்த நபர்கள் பயன் பெறும் வகையில் ஆரல்வாய்மொழியில் ஒரு மருத்துவர் வகை அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை 15-10-1993 முதல் செயல்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 9

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித் துறைகள்) சட்டம், 1952.

9.1. 1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (பல்வகை விதித் துறைகள்) சட்டத்தில் உள்ள மூன்று திட்டங்களில், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டமும் ஒன்றாகும். இத்திட்டம் 1952ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளிலிருந்து செயற்பாட்டுக்கு வந்தது. வருங்கால வைப்பு நிதி என்பது, தொழிலாளரும், வேலை அளிப்பவரும் சேர்ந்து பங்கு கட்டணம் கட்டாயமாகச் செலுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். துவக்கத்தில் 6 பெரிய தொழில்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இத்திட்டம் படிப்படியாக அதிகமான தொழிலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இன்றளவில் 177 தொழிலகங்களில் உள்ள தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். 1971 ஆம் ஆண்டு குடும்ப நல ஓய்வூதியத் திட்டம், 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைந்த காப்பு நிதித் திட்டம் ஆகிய வேறு இரு திட்டங்களும் இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன.

நிதி நிர்வாகம்:

9.2. இந்த மூன்று திட்டங்களும் மைய பொருட்பாட்சி குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. இக்குழுவில் மைய அரசினால் நியமிக்கப்படும் தலைவர், உபதலைவர், மைய தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையர் (அலுவல் தொடர்பாக), மைய அரசின் 5 பிரதிநிதிகள், மாநில அரசுகளின் 15 பிரதிநிதிகள், தொழிலாளர் சங்கங்களின் 10 பிரதிநிதிகள், வேலை அளிப்பவர் சங்கங்களின் 10 பிரதிநிதிகள் கொண்ட முத்தரப்பு குழுவாகும். இக்குழுமம், மைய அரசினால் 1990 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 28ம் நாள் திருத்தி அமைக்கப்பட்டது.

இச்சட்டம் பொருந்துதல் பற்றி:

9.3. இருபதும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களையும் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் தொழிற் நிறுவனங்களுக்கும் இச்சட்டமும் அதன் திட்டங்களும் பொருந்தும். இச்சட்டம் புதிதாகத் தொடங்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குப் பொருந்தாது.

பங்கு கட்டணத் தொகை அளவு:

9.4. அகவிலைப்படி மற்றும் அடிப்படைச் சம்பளம் (உணவு சலுகை அளிக்கப்பட்டிருப்பின் அவற்றின் ரூபாய் மதிப்பையும் சேர்த்து) ஆகியவற்றில் 8 1/3 சதவீதம் விழுக்காடுத் தொகையினை ஒவ்வொரு தொழிலாளரும் வேலை அளிப்போரும் இத்திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய பங்கு கட்டண அளவாகும். 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட சில குறிப்பிடப்பட்ட 98 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள் தொழில் நிறுவனங்களைப் பொருத்தவரை பங்கு கட்டணத் தொகை 10 சதவிகிதம் என 1-6-1989 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

9.5. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகள், தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் இணைப்புகள் 15,16 மற்றும் 17-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 30]

அத்தியாயம் 10

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககம்

வேலைவாய்ப்புப் பணிகள்:

10.1. தமிழ்நாட்டில் இயங்கி வரும் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் எண்ணிக்கை வருமாறு:-

1.	மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள்	..	24
2.	துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள்	..	3

சிறப்பு அலுவலகங்கள்

3.	தொழிற் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை	..	1
4.	உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை 40	..	1
5.	மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோர்), சென்னை–20.	..	1
6.	மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள், (தொழில் நுட்பப் பணியாளர்கள்)	..	4
7.	பழங்குடியினருக்கான தொழில் நெறி வழிகாட்டும் சிறப்பு நிலையங்கள் (உதகமண்டலம், சங்கராபுரம், சேலம், திருவண்ணாமலை)	..	4
8.	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றிவிப்பு மற்றும் வழிகாட்டு நிலையங்கள், (திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, மற்றும் வேலூர்)	..	4
9.	பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டு நிலையங்கள்.	..	3
	மொத்தம்		**45**

10.2.-இவை தவிர கீழ்க்காணும் சிறப்புப் பிரிவுகளும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. அவை சாதாரண வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன:-

1.	சுய வேலைவாய்ப்பு மேம்பாட்டுப் பிரிவுகள் வேலூர் மற்றும் கோயம்புத்தூர்	..	2
2.	உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகள்	..	13

10.3. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளைக் கண்காணிக்கும் பொருட்டு சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நான்கு மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.

வேலை நிலவரத் தகவல் திட்டம் :

10.4. கட்டாய காலியிட அறிவிப்புச் சட்டம் 1959ன்படி எல்லா பொதுத்துறை நிறுவனங்களும் 25 மற்றும் அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தனியார் துறை நிறுவனங்களும் (வேளாண்மை நீங்கலாக) ஒவ்வொரு காலாண்டிலும் தங்கள் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை, தோன்றிய மற்றும் நிரப்பப்பட்ட காலியிடங்கள், தகுந்த பணியாளர்கள் கிடைக்காததால் அந்தக் காலாண்டில் காலியாக இருந்த பணியிடங்கள் முதலான விவரங்களை குறிப்பிட்ட படிவத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அளிக்க வேண்டும். இது தவிர, இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இந்நிறுவனங்களிலிருந்து தொழில் வாரியாக உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை பற்றிய விபரங்களும் திரட்டப்படுகின்றன.

தொழில் நெறி வழிகாட்டுதல்/வேலைவாய்ப்பு ஆலோசனை:

10.5. தமிழ்நாட்டில் இயங்கி வரும் தொழில் நெறி வழிகாட்டும் பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு:-

1.	மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்ட தொழில் நெறி வழிகாட்டும் பிரிவுகள் ..	19
2.	பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் ..	3
3.	பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டு நிலையம், உதகமண்டலம், சங்கராபுரம், சேலம் மற்றும் திருவண்ணாமலை ..	4
4.	தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டு நிலையங்கள் ..	4

10.6. மேலும் ஒரு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையத்தினை 1993-94ஆம் நிதியாண்டில் கடலூரில் துவங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இது தாட்கோ நிதி உதவித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் விரைவில் துவங்கப்பட உள்ளது.

1994 ஏப்ரல் 30]

வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம்:-

10.7. இதுவரை இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றோர் எண்ணிக்கை மற்றும் நிவாரணமாக அளிக்கப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் வருமாறு:-

	பயன்பெற்றோர் எண்ணிக்கை.	செலவழிக்கப்பட்ட தொகை.
(1)	*6,67,348 (1-7-80 முதல் 30-9-93 வரை) (பார்வையற்றோர் தவிர)*	*ரூ. 74.02* கோடி
(2)	*பார்வையற்றோர் : 2,346 (1-10-81 முதல் 30-11-93 வரை)*	*ரூ. 81.68* இலட்சம்

10.8. அரசாணை எண். *548*, கல்வித் துறை, நாள் *9–6–93*-ம் வாயிலாக அரசு இத்திட்டத்தினைக் கல்வித் துறைக்கு மாற்ற ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டம் "படித்த இளைஞர் தன்னார்வதொண்டு திட்டம்" என அழைக்கப்படும்.

10.9. பின்னர் *30-6-93* மற்றும் *30-9-93* காலாண்டுகளுக்கு மட்டும் ஏற்கனவே வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் பெற்று வந்த நபர்களுக்கு இத்துறை மூலமாகவே வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்குமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி, *66,035* பேர்களுக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணமாக மொத்தம் ரூ. *2.36* கோடி *1993-1994* ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

சுய வேலைவாய்ப்பு மேம்பாட்டுப் பிரிவுகள்:

10.10. தமிழ்நாட்டில் வேலூரில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு சுய வேலைவாய்ப்பு மேம்பாட்டுப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இப்பிரிவுகள் மூலமாக பயன்பெற்றோர், வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் தொகை ஆகிய விவரங்கள் வருமாறு:-

1.	இந்த பிரிவுகளின் வேலையால் பயன்பெற்றோர் *(31-12-1993-ல்)* அமைந்தவாறு	..	*5,077*
2.	நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளால் வழங்கப்பட்ட நிதி கடன் தொகை	..	*6.39* கோடி

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

10.11. ஐ.டி.ஐ./ஐ.எஸ்.சி: சான்றிதழ் பெற்றோருக்கான சுய வேலைவாய்ப்பு:-

1.	கடனுதவி பெற்றோரின் எண்ணிக்கை 31-12-93 வரை ..	494
2.	கடனாக வழங்கப்பட்ட தொகை ..	39.00 இலட்சம்
3.	அரசால் மானியமாக விடுவிக்கப்பட்ட தொகை ..	8.54 இலட்சம்

10.12. ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள்:

பணியாளர் தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே பணியாளர் தேர்வு வாரியம் போன்ற நிறுவனங்கள் 1993-94-ல் நடத்திய போட்டித் தேர்வுகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மனுதாரர்களின் எண்ணிக்கை.	8,792

10.13. வேலைவாய்ப்புப் பணியை கம்ப்யூட்டர் மயமாக்குதல்:

1.	இத்திட்டத்தின் கீழ் இதுவரை கம்ப்யூட்டரைஸ் செய்யப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் எண்ணிக்கை ..	10
2.	1993-94-ல். கம்ப்யூட்டரைஸ் செய்யப்பட இருக்கும் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் எண்ணிக்கை..	2

10.14. சிறப்புக் குழு அமைத்தல்:

அரசாணை நிலை எண். 1371, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 10-7-89-ன் படி வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள் தொடர்பாக தெரிவிக்கப்படும் கடுமையான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் பொருட்டுச் "சிறப்புக் குழு" அமைக்கப்பட்டது.

1.	சிறப்புக் குழுவால் நடத்தப்பெற்ற விசாரணைகளின் எண்ணிக்கை	..	71
2.	சிறப்புக் குழுவின் அறிக்கையின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட அலுவலர்கள்/ பணியாளர்களின் எண்ணிக்கை	..	7

10.15. பலவகைப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, வேலை காலியிடங்கள் அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை முதலிய விபரங்கள், இணைப்புகள் *18, 19* மற்றும் *20*-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 11

கைவினைஞர் பயிற்சித் திட்டம்:

11.1. தொழில் வளர்ச்சிக்கு அவசியமான முன் தேவைகளில் திறமை வாய்ந்த மனித ஆற்றல் ஒன்றாகும். இதில் கைவினைஞர் பயிற்சி மற்றும் தொழில் பழகுநர் பயிற்சித் திட்டங்கள் ஒருங்கிணைந்த திறமை வாய்ந்த தொழில் நுட்பப் பணியாளர்களை உருவாக்குவதில் இன்றியமையாத செயல் புரிகின்றன. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் பல்வேறு பொறியியல் மற்றும் பொறியியலல்லாத தொழில் பிரிவுகளில் தொழிற் பயிற்சி அளிக்கின்றன. பயிற்சியாளர்கள், தேசிய திறனாய்வு தேர்வுகளில் கலந்துகொள்ளவும், நாட்டில் எப்பகுதியிலும் அவர்கள் வேலை வாய்ப்பினை பெறும் வகையில் தொழிற் கல்வியின் தரம் ஒரே சீராக இருப்பதற்காகவும், தொழிற்பிரிவுகள், தேசீய வாழ்வியல் பயிற்சிக் குழுவினால் வடிவமைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

11.2. தேசிய வாழ்வியல் பயிற்சிக் குழுவின் அங்கீகாரம் பெற்ற 311 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களைத் தவிர 51 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் மாநிலத்தில் இயங்குகின்றன. இவற்றில் மகளிருக்கென 10 தொழிற் பயிற்சி நிலையங்களும், தாழ்த்தப் பட்டவர்களுக்கென சிதம்பரத்தில் ஒன்றும், மற்றும் பழங்குடியினருக்கென சங்கராபுரத்தில் ஒன்றும் இயங்குகின்றன. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் 13,678 மாணவரும், 3,118 மகளிரும் மேலும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 18,882 பேரும் தொழில் பயிற்சி பெறுகின்றனர். மேலும் 2,092 இருக்கைகளுடன் 51 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்க தேசீய வாழ்வியல் பயிற்சிக் குழுவின் அங்கீகாரத்திற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு எளிதில் வேலை கிடைக்க அவர்கள் தொழிற் கல்வி பயிற்சி பெற போதிய வாய்ப்புகள் அதிக அளவில் அளிக்கும் நோக்கமுடன், தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் துவங்க அங்கீகாரம் வழங்கப்படுகிறது. இதில் ஐம்பது விழுக்காடுகள் அரசு பங்காக ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டு, அவற்றில் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் தற்போது அமுலில் உள்ள இனவாரி விகித சுழற்சி முறையில் பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

11.3. மகளிருக்கு வேலை வாய்ப்புகள் உள்ள புதிய தொழிற் பிரிவுகளை அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்த அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. இக்குறிக்கோளுடன் ஸ்கிரின் பிரிண்டிங் மற்றும் ஏற்றுமதி ஆடை, தையற்களை போன்ற குறுகியகால தொழிற் பிரிவுகள் ஆகஸ்ட் 1993 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஸ்கிரின் பிரிண்டிங் தொழிற் பிரிவு ஈரோடு தொழிற் பயிற்சி நிலையத்திலும், ஏற்றுமதி ஆடை தையற்கலை தொழிற் பிரிவு கிண்டி தொழிற் பயிற்சி நிலையத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் அறுபது மகளிர் பயிற்சியாளர்கள் ஆண்டுதோறும் இத்தொழில் பிரிவுகளில் பயிற்சி பெறுவர்.

தொழிற் பழகுநர் பயிற்சி திட்டம்:

*11.4. 1961*ஆம் ஆண்டில் தொழில் பழகுநர் பயிற்சி சட்டத்தின்படி, *1974* தொழில் நிறுவனங்களில் தொழில் பழகுநர் பயிற்சி முறைப்படுத்தப்பட்டு கட்டுப்பாட்டுடன் அளிக்கப்படுகிறது. சட்டத்தின்படி ஆண்டுதோறும், குறிப்பிட்ட பயிற்சியாளர்கள் தொழிற்பழகுநர் பயிற்சி பெற ஒதுக்கீடு செய்வதற்கு வசதிகள் உள்ள தொழில் நிறுவனங்களைக் கணக்கெடுத்து அவைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது *12,340* தொழிற் பழகுநர்கள் பயிற்சி பெறுகிறார்கள். தொழிற் பழகுநர்கள், தொழிற் நிறுவனங்களில் செய்முறைப்பயிற்சியுடன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பதினொரு தொடர் அறிவுரை மையங்களில் முக்கிய தொழிற் பிரிவுகளில் வகுப்பறை பாட பயிற்சியும் பெறுகின்றனர். தொழிற் பழகுநர் சட்டத்தின் கீழ் இதுவரை *1,13,088* பயிற்சியாளர்கள் பழகுநர் பயிற்சி பெற்றுள்ளனர்.

தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்:

